கருநாடக அரசு

சமூக அறிவியல்

பாகம் 2

7

ஏழாவது வகுப்பு
7th Standard

@KTBS NOT TO BE REPUBLISHED

கர்நாடக பாடநூல் சங்கம் (ஆர்.)
6 வது குறுக்கு தெரு மல்லேஸ்வரம்
பெங்களூரு - 560 003.

பொருளடக்கம்

Q6T7S6

வ.எண்	வரலாறு	பக்க எண்
15	சமுதாயம் மற்றும் சமய சீர்திருத்தம்	1
16	இந்தியாவின் முதல் சுதந்திரப் போராட்டம் (1857-58)	16
17	சுதந்திர போராட்டங்கள்	26
18	கருநாடகத்தின் ஒருங்கிணைப்பு மற்றும் எல்லைப் பிரச்சனைகள்	70
19	கருநாடகத்தின் சமூக சார்பு இயக்கங்கள்	82
20	கருநாடகம்-பொருளாதாரம் மற்றும் சமுதாய மாற்றங்கள்	95
21	வெவ்வேறு துறைகளில் முன்னேற்றம்	102
	குடிமையியல்	
22	நீதித்துறை	113
23	நமது பாதுகாப்புப் படைகள்	120
24	இந்தியா மற்றும் அண்டை நாடுகள்	130
25	ஐக்கிய நாடுகள் அமைப்பு **(U.N.O)**	142
	புவியியல்	
26	ஆஸ்திரேலியா	152
27	அண்டார்டிகா	172

NOT TO BE REPUBLISHED @KTBS

Z1F2A2

பாடம் 15 சமுதாயம் மற்றும் சமய சீர்திருத்தம்

பாட அறிமுகம்

மேற்கத்திய கல்வி முறையின் அறிமுகம் இந்தியர்களிடையே ஒரு புதிய விழிப்புணர்வை ஏற்படுத்தியது. இந்தியர்கள் தங்கள் சமுதாயத்தில் மாற்றங்களை ஏற்படுத்த பல வழிகளை தேடத் தொடங்கினார்கள். இந்த திசையில் பல அமைப்புகளை நிறுவுவதன் மூலம் இந்திய சமுதாயத்தை சீர்திருத்துவதில் ஈடுபட்ட 19ஆம் நூற்றாண்டின் சீர்திருத்தத் தலைவர்களின் பணிகளைக் குறித்து இப்பாடத்தில் காணலாம்.

திறன்கள்:

1. *19 ஆம் நூற்றாண்டில் இந்திய சமுதாயத்தின் விழிப்புணர்விற்குக் காரணமானவற்றையும், சிந்தனையாளர்களின் முயற்சிகளையும் அறிந்து கொள்ளுதல்.*
2. *சமுதாய விழிப்புணர்வை ஊட்டும் அமைப்புகள் மற்றும் சீர்திருத்தவாதிகள் அளித்த பங்களிப்பை நினைவு கூறுதல்.*
3. *சமுதாய சீர்திருத்த போராட்டத்தால் ஏற்பட்ட விளைவுகளை அறிந்துக் கொள்ளுதல்.*

©TNTBS NOT TO BE REPUBLISHED

தற்கால மேற்கத்திய சிந்தனைகளின் விளைவாக இந்தியாவில் ஒரு புதிய விழிப்புணர்வு உண்டானது. மேற்கத்திய கலாச்சாரம், நடை, உடை, சமுதாயம், சமய சிந்தனைகள், நம்பிக்கைகள், மற்றும் ஆங்கில சமுதாயத்தின் இலட்சியங்கள் இந்தியர்கள் மீது ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியது. குறிப்பாக இந்தியர்கள் மேற்கத்திய அறிவியல் சிந்தனைகள், மனிதநேயம் மற்றும் பகுத்தறிவுவாதம் போன்றவற்றின் தாக்கத்திற்கு உள்ளானார்கள் இந்த வளர்ச்சி காலனி ஆட்சிக் காலத்திய இந்தியாவில்

மறுமலர்ச்சிக்கு வித்திட்டது. சமத்துவ எண்ணத்தை விதைப்பதே இந்த மறுமலர்ச்சிப் போராட்டத்தின் நோக்கமாக இருந்தது. இதை சமய மற்றும் சமூக சீர்திருத்தம் என்று அழைக்கிறார்கள். இந்தப் போராட்டம் தலித்தர்கள் மற்றும் பெண்களின் எழுச்சிக்கு அதிக அழுத்தம் கொடுத்தது. ஆங்கிலக் கல்வியானது இந்தியர்களின் விடுதலை வாழ்விற்கு வித்திடும் என்று எண்ணி காலனி சித்தாந்தத்தை இந்தியர்கள் மீது திணித்தனர்.

பிரம்ம சமாஜம் (1828)

நவீன காலத்து இந்தியாவில், சமூக விழிப்புணர்வை ஏற்படுத்தியவர்களில் முதன்மையானவர் ராஜா ராமமோகன்ராய். இவரை ரபீந்திரநாத் தாகூர் “இந்திய மறுமலர்ச்சியின் தந்தை” என்று அழைத்திருப்பது பொருத்தமானது.

நொடிந்த இந்திய சமூகத்திற்கு புத்துயிர் ஊட்டும் நோக்கத்துடன் ராஜா ராம் மோகன் ராய் பொ.ச 1814 இல் ‘ஆத்மிய சபா’ என்ற அமைப்பை நிறுவினார். இது பொ.ச 1819 இல் நிறுத்தப்பட்டது. பின்னர் பொ.ச 1828 இல் ‘பிரம்ம சபாவை’ நிறுவினார். அது மறுவருடம் ‘பிரம்ம சமாஜம்’ என்று அழைக்கப்பட்டது. ராஜா ராம் மோகன் ராய் கிழக்கத்திய மற்றும் மேற்கத்திய சிந்தனைகளை ஓரினப்படுத்தும் பிரதிநிதியாக இருந்தார். சதி வழக்க ஒழிப்பு, சாதி ஒழிப்பு, சிலை வழிபாடு, பலதார மணம், குழந்தை திருமணம் போன்ற மூடநம்பிக்கைகளையும் பிரம்ம சமாஜம் வலுவாக எதிர்த்தது. ராஜா ராம் மோகன் ராய் மற்றும் அவருடைய கூட்டாளிகள் பெண்கள் உடன் கட்டை ஏறும் வழக்கத்தை ஒழிக்க ஆங்கில அரசிடம் கோரினார்கள். இதனால் அப்போதைய கவர்னர் ஜெனரலாக இருந்த வில்லியம் பென்டிங்க் சதி வழக்கத்தை சட்டவிரோதமானது என்று அறிவித்தார் (பொ.ச 1829).


இராஜ ராம் மோகன் ராய்

© TNTB NOT TO BE REPUBLISHED

மேற்கத்திய கல்வி முறையை ஆதரித்த ராஜா ராம் மோகன் ராய் அதன் மூலமாக மனிதாபிமானமற்ற வழக்கங்களை ஒழிக்க முடியும் என்று உறுதியாக நம்பினார். விதவை மறுமணம் மற்றும் ஒரு கடவுள் வழிபாட்டு முறைக்கு ஆதரவாக இருந்த ராம் மோகன்ராய் 'சம்வாத கௌமுதி' என்ற பத்திரிக்கையின் வாயிலாக சமுதாய சீர்திருத்த இயக்கத்தை ஆரம்பித்தார்.

ராஜா ராம் மோகன் ராய், இந்து மதத்தை பகுத்தறிவு வாதத்தின் மூலம் தூய்மைப்படுத்த முயன்றார். தங்கள் கருத்தை நியாயப்படுத்த அவர் ஐந்து உபநிடதங்களை சமஸ்கிருதத்திலிருந்து வங்காள மொழிக்கு மொழிபெயர்த்தார்.

ராஜா ராம் மோகன ராய் ஆங்கிலக் கல்வியை முதன் முதலில் ஆதரித்தவர்களில் ஒருவர். அவருடைய செலவில் ஆங்கிலப் பள்ளியை நடத்தினார். அவர் வேதாந்தக் கல்லூரியையும் நிறுவினார். ராஜா ராம் மோகன் ராய் இந்திய பத்திரிக்கைத் தொழிலின் முன்னோடிகளில் ஒருவராக இருந்தார். பல பத்திரிக்கைகளை அவர் வெளியிட்டார். வாழ்க்கை முழுவதும் பல சமூக சீர்கேடுகளுக்கு எதிராகப் போராடினார். அவருடைய சமூகப் பணிகளை தேவேந்திரநாத் தாகூர் மற்றும் கேசவசந்திர சேன் தொடர்ந்து செய்தார்கள்.

@KTBS NOT TO BE REPUBLISHED

தெரிந்துக் கொள்வோம் : 'ராஜா' என்பது பொ.ச 1829இல் முகலாயப் பேரரசரால் ராம் மோகன் ராய்க்கு வழங்கப்பட்ட பட்டம் ஆகும்.

பிரார்த்தனை சமாஜம் (பொ.ச 1867)

பிரார்த்தனை சமாஜம் ஆத்மராம் பாண்டுரங்கரால் தொடங்கப்பட்டது. பிரம்ம சமாஜத்திற்குப் பிறகு வலுவாக வளர்ந்த இயக்கம் இது. இது மும்பையில் நிறுவப்பட்ட மிக முக்கியமான சமூக சீர்திருத்த அமைப்பாகும். பால் வாக்லே,

என்.ஜி.சந்தாவர்கர், எம்.ஜி. ரானடே மற்றும் பலர் அதன் முக்கிய தலைவர்கள் ஆவர். சமூக சீர்திருத்தமே அவர்களின் முதன்மை அக்கறையாக இருந்தது. விதவை திருமணம், கலப்புத்திருமணம், பெண்களின் முன்னேற்றம் மற்றும் தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் மேம்பாடு ஆகியவற்றில் அவர்கள் கவனம் செலுத்தினர். அவர்கள் கைவிடப்பட்டோர் மற்றும் அனாதைகளுக்காக ஆசிரமங்களைத் தொடங்கினர். விதவைகளின் நலனுக்காக கல்வி நிறுவனங்களையும் தொடங்கினர்.

மகாதேவ்
கோவிந் ரானடே

சத்ய ஷோதக சமாஜம் (பொ.ச 1873)

மகாத்மா ஜோதிபா புலே (பொ.ச 1827-1890) மகாராஷ்டிராவில் ஒரு பிராமணரல்லாத இயக்கத்தைத் தொடங்கினார். தாழ்த்தப்பட்ட வகுப்பினரிடையே விழிப்புணர்வை எற்படுத்தும் நோக்கத்துடன் அவர் சத்ய ஷோதக் அமைப்பை நிறுவினார். தீண்டத்தகாதவர்கள், அனாதைகள் மற்றும் விதவைகளுக்கான பள்ளிகளைத் தொடங்கினார். பிராமண புரோகித வகுப்பைக் கண்டித்து 'குலாமகிரி' (அடிமைத்தனம்) என்னும் நூலில் தனது தத்துவத்தை விளக்கினார். தனது மனைவி சாவித்ரிபாயுடன் இணைந்து புனேயில் பெண்களுக்காக ஒரு பள்ளியைத் திறந்தார். பொ.ச 1863 ஆம் ஆண்டில் குழந்தை விதவைகளுக்கான மறுவாழ்வு மையங்களைத் தொடங்குவதன் மூலம் பெண் சிசுக்கொலை நிகழ்வுகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க முயன்றார். அவர் விதவை மறுமணங்களை ஊக்குவித்தார். பி. ஆர். அம்பேத்கர் அவர்கள் மகாத்மா ஜோதிபா புலேவைத் தமது தத்துவ வழிகாட்டியாக கண்டார்.

மகாத்மா
ஜோதிபா புலே

©KTBS NOT TO BE REPUBLISHED

வங்காள இளைஞர் இயக்கம்:

ராஜா ராம் மோகன் ராயின் சீர்திருத்த கிளர்ச்சி வங்காளத்தில் பல இளம் சிந்தனையாளர்களை ஊக்கப் படுத்தியது. இது ‘இளம் வங்காள இயக்கத்திற்கு’ வழி வகுத்தது. ஆங்கிலோ-இந்திய இளைஞர் ஹென்றி விவியன் டெரேசியோ இந்த இயக்கத்தின் தலைவராக இருந்தார். இளைஞர்கள் தங்கள் சிந்தனையில் சுதந்திரமாகவும் விவேகத்துடனும் சிந்திக்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார். இருப்பினும் அவரது அழைப்பிற்கு இந்தியர்கள் சரியான முறையில் பதிலளிக்கவில்லை.

ஆர்ய சமாஜம் (பொ.ச 1875)

சுவாமி தயானந்த சரஸ்வதி (பொ.ச 1824-1883) ஆர்ய சமாஜத்தை நிறுவினார். இவரது இயற்பெயர் மூலசங்கரர். வேத காலத்தில் இருந்ததுபோல இந்தியாவின் முன்மாதிரியான சமுதாயம் தற்காலத்திலும் நிறுவப்பட வேண்டும் என்பது அவருடைய விருப்பமாக இருந்தது. இச்சூழலில் சுவாமி தயானந்த சரஸ்வதி அவர்கள் ‘வேதங்களுக்குத் திரும்பு’ என்று அழைப்பு விடுத்தார். சிலை வழிபாடு, தீண்டாமை, குழந்தை திருமணம், சாதி முறை ஆகியவற்றைக் கண்டித்தார். சுவாமி தயானந்த சரஸ்வதி அவர்கள் கலப்புத் திருமணம் மற்றும் விதவை மறுமணத்தை ஆதரித்தார். அவர் ஏகத்துவ வழிபாட்டை ஆதரித்தார்.

சுவாமி தயானந்த சரஸ்வதி

தயானந்த சரஸ்வதி தனது புகழ்பெற்ற படைப்பான ‘சத்யார்த்த பிரகாஷ்’ என்ற புத்தகத்தில் தனது எண்ணங்களை வெளிப்படுத்தினார். ஆர்ய சமாஜம் இந்தியாவில் கல்வி வளர்ச்சிக்காக பாடுபடுவதோடு தேசிய சுதந்திர இயக்கத்திற்கும் உத்வேகம் அளித்தது. ஆர்ய சமாஜத்தின் தலைவரான லாலா ஹம்சராஜ் லாகூரில் ‘தயானந்த ஆங்கிலோ வேதிக் பள்ளி’யை (D.A.V.1886) நிறுவினார். தேசிய தலைவர்களான திலகர், லாலா லஜபத்ராய் மற்றும் பிறரிடையே ஆர்ய சமாஜத்தின் தத்துவம் மற்றும் போதனைகள் பெரும் செல்வாக்கு பெற்றன. தயானந்த சரஸ்வதியின் சீடர் ஷிரத்தானந்தா மற்ற மதங்களுக்கு மாறிய அனைவரையும் மீண்டும் இந்து மதத்திற்கு கொண்டு வர ‘சுத்தி இயக்கத்தைத், (சுத்திகரிப்பு இயக்கம்) தொடங்கினார்.

©KTBS NOT TO BE REPUBLISHED

தயானந்தர், பிறப்பின் அடிப்படையில் மட்டும் பிராமணர்கள் அதிகாரம் பெறுவதை நிராகரித்தார். பெண்கள் உட்பட அனைவருக்கும் வேதம் கற்க உரிமை உண்டு என்று அறிவித்தார். பசு பூசையை ஆதரித்தார். சுருக்கமாக சொன்னால், ஆரிய சமாஜம் சுயராஜ்ஜியம் மற்றும் சுதேசி உணர்வுகளை தூண்டிய ஒரு இயக்கமாக இருந்தது.



@KTBS NOT TO BE REPUBLISHED

சமுதாய மற்றும் சமய சீர்திருத்த இயக்கத்தின் மையங்கள்.

இராமகிருஷ்ணா மிஷன் (பொ.ச. 1897)

எழுந்து நில் ! விழித்துக்கொள் ! இலக்கை அடையும் வரை நிற்காதே!'' இதுவே இந்திய இளைஞர்களுக்கு சுவாமி விவேகானந்தர் விடுத்த அழைப்பு. இவரது இயற்பெயர் நரேந்திரநாத் தத்தா. இவர் பொ.ச. 1863 ஜனவரி 12 அன்று கோல்கத்தாவில் பிறந்தார். இவர் ராமகிருஷ்ண பரமஹம்சரின் சீடராக இருந்தார். பின்னர் துறவியானார். ராமகிருஷ்ண பரமஹம்சரின் சீடர்கள் அனைவரையும் ஒருங்கிணைத்து அவர்களை வழிநடத்தும் பொறுப்பு நரேந்திரநாத்தின் தோள்களில் விழுந்தது. பொ.ச. 1892 ஆம் ஆண்டில் கேத்ரி மன்னர் அஜித் சிங் அவரின் ஆலோசனைக்கு செவிசாய்த்து நரேந்திரநாத் தத்தா தனது பெயரை 'சுவாமி விவேகானந்தர்' என்று மாற்றிக்கொண்டார். அவர் சிகாகோவில் நடந்த முதல் உலக சமய மாநாட்டில் (பொ.ச. 1893) இந்து சமய பிரதிநிதியாகக் கலந்துக் கொண்டார். அங்கு அவர் வேதாந்தத்தைக் குறித்து சொற்பொழிவாற்றியது உலக அளவில் அவரை பிரபலப்படுத்தியது. மேற்கத்திய கலாச்சாரத்தின் சில சாதனைகள் மற்றும் பெண்களுக்கு வழங்கப்பட்ட சமத்துவத்தால் ஈர்க்கப்பட்டார்.

©KTBS NOT TO BE REPUBLISHED

ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர்

சுவாமி விவேகானந்தர்

இந்தியா முழுவதும் நடைப்பயணம் செய்த விவேகானந்தர், இந்தியாவின் அன்றைய சமூக நிலைமையைக் கண்டு நெகிழ்ந்தார். உலகில் பசி, வறுமை மற்றும் அறியாமை இருக்கும் வரை ''மீண்டும் மீண்டும் பிறந்து அப்பிரச்சனைகள் அனைத்தையும் ஒழிக்க முயற்சிப்பேன்'' என்று கூறினார்.

பண்டித ஈஷ்வர்சந்திர வித்யாசாகர் பிராமணர் அல்லாத பிற மாணவர்களுக்காக சமஸ்கிருத கல்லூரியைத் துவக்கினார். பொ.ச. 1856 இல் முதன் முறையாக உயர் சாதி விதவை மறுமணம் சட்டபூர்வமாக கோல்கொத்தாவில் விதியாசாகர் அவர்களின் தலைமையில் நடத்தப்பட்டது.

விவேகானந்தர் தனது மனிதாபிமானப் பணிகளையும் சமூக சேவையையும் தொடர ராமகிருஷ்ணா மிஷனை நிறுவினார். பெண்கள் மீது மிகுந்த மரியாதையும் அக்கறையும் கொண்டிருந்தார். ''பெண்களின் முன்னேற்றம் தேசத்தின் எழுச்சி' என்று அவர் வலியுறுத்தினார். ஏழைகளுக்கு அனைவரும் உதவ வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். சுருக்கமாக, இந்தியாவின் சிறப்பைப் பற்றி அவர் கனவு கண்டார்.

சுவாமி விவேகானந்தரை, 'தேசிய வாதத்தின் உண்மைத் தந்தை' என்று பாலகங்காதர திலகர் வர்ணித்தார். சுபாஷ் சந்திரபோஸ் உட்பட பல தேசிய தலைவர்கள் சுவாமி விவேகானந்தரின் எழுத்தாக்கங்களினால் ஈர்க்கப்பட்டனர்.

உலக சமய மாநாட்டுக்குச் செல்வதற்கு முன்பு, சுவாமி விவேகனந்தர் மைசூர் மாகாணத்திற்கு சென்றார். விவேகானந்தரை அரண்மனைக்கு வரவேற்றிய பத்தாம் சாமராஜ உடையார், மாநாட்டில் கலந்துகொள்ள அவருக்கு நிதியுதவியும் வழங்கினார். விவேகானந்தரின் அலோசனையின் பேரில், மைசூரு உடையார். தலித்துகளுக்காக மூன்று தனிப் பள்ளிகளைத் தொடங்கினார்.

©KTBS NOT TO BE REPUBLISHED

செயல்பாடு : சிகாகோவில் நடந்த உலக சமய மாநாட்டில் விவேகானந்தர் ஆற்றிய உரை பற்றிய தகவல்களைச் சேகரிக்கவும்.

தியோசஃபிகல் சொசைட்டி (பொ.ச. 1875)

தியோசஃபிகல் சொசைட்டி (பிரம்ம வித்யா சமாஜம்) யை நியூயார்க்கில் ரஷ்ய பெண்மணியான (அமெரிக்க ஆன்மீகவாதி) மேடம் எச்.பி. பிளாவட்ஸ்கி மற்றும் அமெரிக்க கர்னல் ஹெச்.எஸ். ஒல்காட் அவர்கள் நிறுவினர். இந்தியா வந்து சென்னைக்கு அருகே அடையாறில் பன்னாட்டு மையத்தை நிறுவினார். பின்னர் டாக்டர் அன்னி பெசன்ட் அதன் தலைவரனார். அவர் இந்திய கலாச்சாரங்களால் ஈர்க்கப்பட்டு பகவத்கீதையை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். அவர் 'நியூ இந்தியா' மற்றும் 'காமன்வீல்' செய்தித்தாள்களை வெளியிட்டார். இந்தியாவில் தியோசபிகல் இந்த இயக்கத்தை ஒரு மைய சக்தியாக வழி நடத்தினார்.

@KTBS NOT TO BE REPUBLISHED

தியோசஃபிகல் சொசைட்டியின் நோக்கங்கள்

1. வேற்றுமைகளை அகற்றி உலக சகோதரத்துவத்தை நிலைநாட்டுவது.
2. சமயம், தத்துவ அறிவியல் மற்றும் விஞ்ஞானம் இவைகளை ஒப்பிட்டுப் படித்து அறிவது.
3. இயற்கையின் இரகசிய தத்துவங்கள் மற்றும் மனிதனில் அடங்கியிருக்கும் ஆழமான சக்திகளைக் குறித்து பரிசோதனை செய்வது.

அன்னி பெசன்ட் பனாரஸில் 'சென்ட்ரல்' இந்து கல்லூரியை நிறுவினார். பிறகு இக்கல்லூரி பனாரஸ் இந்து பல்கலைக் கழகம் (B.H.U.) என்ற பெயரைப் பெற்றது அன்னி பெசன்ட் ஹோம் ரூல் போராட்டத்தையும் துவங்கினார். பிறகு இந்திய காங்கிரஸின் முதல் பெண் தலைவர் ஆனார் (பொ ச. 1917).

அலிகர் போராட்டம் மற்றும் சர் சையத் அகமது கான்



சர் சையத் அகமது கான்

பெரும் பாலான இஸ்லாமியர்கள் மேற்கத்திய கல்வி முறையை சந்தேகத்துடன் பார்த்தார்கள் மற்றும் அது தமது சமய நன்மைக்கு பாதகமானது என்றும் நம்பினார்கள். ஆரம்பத்தில் நவாப் அப்துல் லத்தீப் அவர்கள் பொ.ச. 1863 இல் 'மகமதன் லிடரரி சொசைட்டி'யை நிறுவினார். இந்த அமைப்பின் வழியாக இஸ்லாமியரில் ஆங்கிலக் கல்வியை பரப்ப முயன்றார். கூடவே இந்து இஸ்லாமிய ஒருமைப்பாட்டை ஏற்படுத்தும் முயற்சியிலும் ஈடுபட்டார். இந்த முயற்சிகளுக்கு இயக்கம் என்ற உருவத்தைத் தந்தவர் சர் சையத் அகமது கான் அவர்கள். பொ.ச 1817 இல் டெல்லியில் பிறந்த இவர் பிரிட்டிஷ் ஈஸ்ட் இந்தியா கம்பெனியில் நீதித் துறை அதிகாரியாக நியமிக்கப்பட்டார். தன் சமுதாய மக்கள் ஆங்கிலக் கல்வி இல்லாமல் வஞ்சிக்கப்பட்டு பொருளாதார மற்றும் சமூக வளர்ச்சிக்கான வாய்ப்புக்களை இழந்துவிட்டார்கள் என்று எண்ணினார். மேற்கத்திய கல்வி கற்பதன் வழியாக இஸ்லாமிய சமுதாயத்திற்கு முறையான பிரதிநிதித்துவம் கிடைக்கும் என்பது அவருடைய மகத்தான ஆசையாக இருந்தது.

ஒரு சமுதாய சீர்த்திருத்தவாதியாக, சர் சையத் அகமதுகான் பர்தா வழக்கம், பலதார மணம் மற்றும் விவாகரத்து முறைகளை எதிர்த்தார். ஆங்கிலம், விஞ்ஞானம் மற்றும் இலக்கிய நூல்களை உருது மொழிக்கு மொழிபெயர்க்க 'டிரான்ஸ்லேஷன் சொசைட்டி' யை ஆரம்பித்தார். பிறகு இந்த அமைப்பிற்கு 'சைன்டிஃபிக் சொசைட்டி' என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது. விஞ்ஞான சிந்தனைகளை இஸ்லாமியர்களிடம் பரப்புவதற்கு 'அலிகார் இன்ஸ்டியூட் கெசட்' என்ற பத்திரிக்கையை ஆரம்பித்தார். இந்தப் பத்திரிக்கை ஆங்கிலம் மற்றும் உருது மொழியில் வெளியிடப்பட்டது.

©KTBS NOT TO BE REPUBLISHED

பொ.ச 1857 இல் சர் சையத் அகமது கான் ‘மகமதன் ஆங்கிலோ - ஓரியண்டல் கல்லூரியை’ ஆரம்பித்தார். இந்த நிறுவனம் பொ.ச. 1920 இல் அலிகார் இஸ்லாமிய பல்கலைகழகம்’ என்று மாற்றப்பட்டது.

ஸ்ரீ நாராயண குரு



ஸ்ரீ நாராயண

ஸ்ரீ நாராயண குரு ஒரு துறவி மற்றும் சமூக சீர்திருத்தவாதி என்று நன்கு அறியப்பட்டவர். இவர் பொ.ச. 1854 ஆம் ஆண்டு திருவாங்கூரில் உள்ள ஈளவ சமுதாயத்து குடும்பத்தில் பிறந்தார். பொ.ச 1903 இல் ‘ஸ்ரீ நாராயண தர்ம பரிபாலனா யோகம்’ என்ற அமைப்பை நிறுவினார். அதன் மூலமாக ஈளவ சமுதாயத்தின் கல்வி, பொருளாதார மற்றும் கலாச்சார மேம்பாட்டிற்காக உழைத்தார். சாதி முறையையும், மிருக பலியையும் எதிர்த்தார். சமஸ்கிருத பள்ளிகளைத் திறந்து அங்கே சாதி மத வேற்றுமையின்றி எல்லோருக்கும் அனுமதி அளித்தார். அவர் சுமார் முப்பது கோயில்களை நிறுவினார். கேரளாவின் தீண்டத்தகாதவர்கள் உள்பட அனைத்து சாதியினரும் கோயிலுக்குள் செல்ல அனுமதிக்கப்பட்டனர். கோவில்களில் அனைத்து மதங்களின் நூல்களும் அடங்கிய நல்ல நூலகம் இருக்க வேண்டும் என்று விரும்பினார். ஸ்ரீ நாராயண குருவின் விருப்பம் ‘ஒரே கடவுள், ஒரே சமயம், ஒரே சாதி’ (One God, One Religion, One Caste) என்ற அறிக்கையின் மூலம் வெளிப்படுகிறது. இதன் விளைவு, கருநாடகத்தின் மீது ஏற்பட்டிருப்பதை கவனத்தில் கொள்ளலாம். நாராயண குரு அவர்கள் பொ.ச. 1928இல் மரணமடைந்தார்.

செயல்பாடு: ஸ்ரீ நாராயண குரு மற்றும் பெரியார் அவர்களைக் குறித்த தகவல்களை சேகரிக்கவும்.

©KTBS NOT TO BE REPUBLISHED

பெண் சமூக சீர்திருத்தவாதிகள்:

மேடம் எச்.பி. பிளாவட்ஸ்கி, ஆனிபெசன்ட், சாவித்ரிபாய் புலே, தாராபாய் ஷிண்டே, பண்டித் ரமாபாய் முதலானவர்கள் இந்தியாவின் முக்கிய சமூக சீர்திருத்தவாதிகள் ஆவர்.

சாவித்ரிபாய் புலே :

சாவித்ரிபாய் புலே

சாவித்ரிபாய் புலே இந்தியாவின் புகழ்பெற்ற சமூக சீர்திருத்தவாதி, கல்வியாளர் மற்றும் கவிஞர். அவருடைய கணவர் ஜோதிபா புலே அவர்களுடன் இணைந்து புனேயில் பெண்களுக்கான பள்ளியை ஆரம்பித்தது மட்டுமல்லாமல் அவரே ஆசிரியராகவும் பணியாற்றினார். குழந்தை விதைவைகளுக்காக மறு வாழ்வு மையங்களை திறப்பதன் மூலம் நடந்துகொண்டிருந்த சிசுக்கொல வதைகளை முறியடிக்க முயன்றார். சாதி முறை மற்றும் பாலின சமத்துவமின்மையை எதிர்த்துப் போராடினார். அதன் விளைவாக அவர் சமூக எதிர்ப்புகளுக்கு ஆளானார்.

கணவர் ஜோதிபா புலேயின் சமூகப் போராட்டங்களில் பெருந்துணையாக நின்றார். அவருடைய மரணத்திற்குப் பிறகு 'சத்திய சோதக சமாஜம்' என்ற அமைப்பை தொடர்ந்து நடத்தினார். பிளேக் நோய் தாக்கப்பட்டவர்களுக்கு தன் மகனுடன் சேர்ந்து சேவை செய்துகொண்டிருக்கும் போதே அவரும் பிளேக் நோய்க்கு பலியானார்.

தாரா பாய் ஷிண்டே :

தாராபாய் ஷிண்டே

தாரா பாய் ஷிண்டே மகாராஷ்ட்ராவின் முதல் பெண் போராளியாவார் ஜோதி பா புலே அவர்களின் சத்திய சோதக சமாஜ வின் உறுப்பினராக சமூகப் போராட்டங்களில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டார். குழந்தை விதவைகளின் பாதுகாப்பு மற்றும்

NOT TO BE REPUBLISHED © KTBS

விதவைகளின் மறுமணத்திற்கு ஊக்கமளித்தார். தனது நூலான 'ஸ்த்ரீ புருஷ துலனா' வில் பெண்கள் மீதான வன்முறையை தீவிரமாக எதிர்த்தார்.

பண்டித் ரமா பாய்:


பண்டித் ரமா பாய்:

பண்டித் ரமா பாய் இந்தியாவின் புகழ் பெற்ற கிறித்துவ சமூக சீர்திருத்தவாதி ஆவார். அனந்த சாஸ்த்ரி டொங்சே மற்றும் லக்ஷ்மி பாய் அவர்களின் மகளான இவர் மேற்குமலைக் கணவாய் பகுதியின் கங்காமூலா என்ற இடத்தில் பிறந்தார். அன்றைய சமூக நிலைமைக்கு எதிராகக் கல்வி கற்றார். இங்கிலாந்தில் படிக்கும்போது கிறித்துவ மதத்திற்கு சேர்ந்தார். இந்திய பெண்களின் மேன்மைக்காக வாழ்க்கையையே பணயம் வைத்து பொ.ச. 1889இல் 'முக்தி மிஷன்' அமைப்பை தொடங்கினார். இந்த அமைப்பும் விதவைகள், அனாதைகள் மற்றும் குருடர்களின் வாழ்க்கைக்கு வழிவகுத்து இன்றும் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

பயிற்சிகள்

I. விடுபட்ட இடங்களைப் பொருத்தமான சொற்களால் நிரப்புக:

1. சம்வாத கௌமுதி பத்திரிக்கையை --------------------- அவர்கள் துவங்கினார்.
2. 'குலாம கிரி' என்ற நூலை இயற்றியவர் ---------------------------------
3. லாகோரில் 'தயானந்த ஆங்கிலோ வேதிக் பள்ளியை' நிறுவியவர்--------------------
4. பெண்களின் மேன்மைக்கு முக்திமிஷன் அமைப்பை தொடங்கியவர்-------------------

NOT TO BE REPUBLISHED @KTBS

II. கீழ்காணும் கேள்விகளுக்கு ஒரே வாக்கியத்தில் விடை அளிக்க:

5. இந்தியாவின் மறுமலர்ச்சியின் தந்தை என்று யாரை அழைத்தார்கள்?
6. மகாதேவ கோவிந்த ரானடே யார்?
7. சத்யஷோதக அமைப்பை நிறுவியவர் யார்?
8. 'எழுந்து நில்! விழித்துக்கொள், இலக்கை அடையும்வரை நிற்காதே,' இது யாருடைய அழைப்பாக இருந்தது?
9. டாக்டர் ஆனி பெசன்ட் யார்?
10. அலிகர் போராட்டத்தின் தலைவர் யார்?
11. ஸ்ரீ நாராயணா குரு தொடங்கிய அமைப்பு எது?
12. 'ஸ்த்ரீ புருஷ துலனா' நூலை எழுதியவர் யார்?
13. இந்தியாவின் புகழ்பெற்ற கிருத்துவ சமூகத்தின் சீர்திருத்தவாதி யார்?

III. கீழ் காணும் கேள்விகளுக்கு குழுக்களில் விவாதித்து விடை எழுதுக:

14. ராம் மோகன் ராய் அவர்களின் சமூக மற்றும் தார்மீக சீர்திருத்த முறைகளை கூறுக.
15. சமூக சீர்திருத்தத்தில் ஜோதி பா புலே அவர்களின் பங்கு என்ன?
16. தியோசாபிகல் சொசைட்டியின் குறிக்கோள் என்ன?
17. முஸ்லீம் சமுதாயத்தை சீர்திருத்துவதில் சய்யத் அகமது கான் அவர்களின் பங்கு என்ன?
18. பின்தங்கிய சமுதாயத்தை சீர்திருத்துவதில் நாராயண குரு எடுத்த முயற்சிகள் என்ன?
19. மகளிர் சீர்திருத்தத்தில் பண்டித் ரமா பாய் அவர்களின் பங்கு என்ன?

@KTBS NOT TO BE REPUBLISHED

IV. கீழ்க்காணும் ஏ பட்டியலில் கொடுக்கப்பட்ட அம்சங்களை பி பட்டியலில் கொடுக்கப்பட்டுள்ள ஏற்ற அம்சங்களுடன் பொருத்துக:

ஏ	பி
சுவாமி விவேகானந்தா	அலிகர் போராட்டம்
சுவாமி தயானந்த சரஸ்வதி	சத்ய சோதக சமாஜம்
சய்யத் அகமது கான்	தியோசஃபிகல் சொசைட்டி
ஜோதிபா புலே	ராமகிருஷ்ணா மிஷன்
அன்னிபெசன்ட்	ஆரிய சமாஜம்

V. விவாதி :

பெண்கள் உயர்வே நாட்டின் உயர்வு என்ற சுவாமி விவேகானந்தரின் இந்த அறிக்கை இன்றைக்கும் பொருந்தமானதா? குழுவினருடன் ஆய்வு செய்க.

செயல்பாடு:

- எம்.ஜி.ரானடே, ஜோதி பா புலே, ராஜா ராம் மோகன் ராய், சுவாமி விவேகானந்தர், சுவாமி தயானந்த சரஸ்வதி, சர் சய்யத் அகமது கான் மற்றும் ஸ்ரீ நாராயண குரு இவர்களின் வாழ்க்கை வரலாற்றைப் படிக்கவும்.

@KTBS NOT TO BE REPUBLISHED

***

பாடம் 16	இந்தியாவின் முதல் சுதந்திரப் போராட்டம் (1857-58)

QZE4G9

பாட அறிமுகம்

பொ.ச 1857, ஆம் ஆண்டு இந்திய வரலாற்றில் ஒரு மகத்துவமான கட்டமாகும். ஆங்கிலேயர் இந்த வரலாற்று நிகழ்வை வெறும் சிப்பாய் கிளர்ச்சி என்று வர்ணித்தனர். இந்தியாவின் தேசியவாதிகள் இந்தியாவின் முதல் சுதந்திர போராட்டம் என்று முழங்கினர். உண்மையாகவே இது பிரிட்டிஷ் ஏகாதிபத்தியதிற்கு எதிரான போராட்டம் ஆகும். சிப்பாய்களும் குடிமக்களும் காலனித்துவ ஆட்சியாளர்களை நாட்டை விட்டு வெளியேற்ற விரும்பினர். இப்பாடத்தில் இந்த நிகழ்விற்கான காரணங்கள், இயல்புகள் மற்றும் விளைவுகள் விளக்கப் பட்டுள்ளன.

@KTBS NOT TO BE REPUBLISHED

திறன்கள் :

1) மாணவர்கள் பொ.ச. 1857 ன் கிளர்ச்சி அல்லது இந்தியாவின் முதல் சுதந்திர போராட்டத்திற்கு காரணமான அம்சங்களைப் புரித்துக் கொள்ளுதல்.

2) முதல் சுதந்திர போரில் ஈடுப்பட்ட வீரர்களின் போராட்டத்தின் விவரங்களை அறிந்துக் கொள்ளுதல்

3) முதல் சுதந்திர போராட்டத்தின் விளைவுகளைப் புரிந்து கொள்ளுதல்.

பொ.ச. 1857 இன் முதல் சுதந்திரப் போராட்டத்தின் இயல்பு :

பிரிட்டிஷ் வரலாற்றாசிரியர், பொ.ச. 1857ல் நடந்த இந்தியர்களின் போராட்டத்தை சிப்பாய் கிளர்ச்சி என்று மட்டுமே கருதினர். ஆனால் இந்திய அறிஞர்கள் இது மக்களின் பெருங்கிளர்ச்சி என்று அறிவித்தது, அது மட்டுமல்லாமல் இதை 'இந்தியாவின் முதல் சுதந்திர போராட்டம்' என்றும் அழைத்தனர்.

முதன் முதலில் விநாயக தாமோதர் சவர்க்கர் இப்போராட்டத்தை முதல் சுதந்திர போர் என்று குறிப்பிட்டார். பட்டாபி சீதாராமைய்யா அவர்களும் இதை சுதந்திரத்திற்கான முதல் போர் என்று அழைத்தார். சிப்பாய் கலகமானது குறுகிய காலத்தில் மக்கள் கிளர்ச்சியாக மாறியது என்று ஜவஹர்லால் நேரு அவர்கள் கருதினார். நாட்டின் பெரும்பாலான மக்கள் இணைந்து நடத்திய போராட்டம் இது.

பொ.ச 1857 இன் போராட்டம் இந்தியர்களிடையே ஒரு புதிய அரசியல் விழிப்புணர்வை உண்டாக்கியது. இதன் விளைவாக இந்திய அரசியலில் தேசிய உணர்வு வளர்ந்தது. இப்போராட்டத்தில் இறந்த மக்கள் மிக வேகமாக நாட்டில் பிரபலமாயினர். அவர்களுடைய தியாகத்தை நாம் இன்றளவும் நினைக்க வேண்டியுள்ளது.

1857ன் முதல் சுதந்திரப் போராட்டத்திற்கான காரணங்கள் :

ஆங்கிலேயர்களின் நீண்டகால ஆட்சி இந்தியாவின் பொருளாரதார நிலைமையை பலவீனப்படுத்தியது. பல்வேறு தரப்பு மக்கள் கடும் சிரமத்திற்குள்ளானார்கள். விவசாயிகள் வரிக் கொடுமையால் நொறுங்கிப் போனார்கள். கைவினைத் தொழில்கள் அழியத்தொடங்கின. பரம்பரை பரம்பரையாக மக்கள் சார்ந்திருந்த தொழில்கள் வலுவிழந்து மக்கள் வீதிக்கு வந்தார்கள். இதற்கு உந்துதலாக இருந்த காரணிகளை அரசியல், பொருளாதாரம், சமூகம், சமயம், நிர்வாகம் மற்றும் இராணுவம் என வகைப்படுத்தலாம். இவற்றில் சில நேரடிக் காரணங்களாகும் மற்றும் சில இரண்டாம் நிலைக் காரணங்களாகும்.

1. அரசியல் காரணம்:

ஆங்கிலேயரின் வெற்றிகள் மற்றும் திட்டமிட்ட ஆக்கிரமிப்பு கொள்கையும், இங்குள்ள ஆளும் வர்க்கம் மற்றும் பொதுமக்களின் உணர்வுகளை ஆழமாகக் காயப்படுத்தியது. லார்ட் வெலெஸ்லியின் துணைப் படைதிட்டம் மற்றும் லார்ட்

NOT TO BE REPUBLISHED ©KTBS

டல்ஹௌசியின் தத்துப் பிள்ளைகளுக்கு உரிமையில்லாத திட்டங்கள், பல அரசர்களையும் நவாப்களையும் பதவி இழக்கச் செய்தது. சதாரா, ஜெய்பூர், சம்பல்பூர், உதய்பூர் ஜான்சி, அவத் முதலியவை டல்ஹௌசியின் திட்டத்திற்கு பலியான இராஜ்ஜியங்கள் ஆகும். இந்த இடைக்கால அரசின் அரசியல் அழுத்தங்களின் காரணமாக முகலாய மன்னர் பகதூர் ஷா அரசியல் அதிகாரியாக பெயரளவு மட்டுமே பேரரசர் ஆனார் அதுமட்டுமல்லாமல் சில அரசர்களின் ஒய்வூதியம் முடக்கப்பட்டன மற்றும் சில அரசர்களின் விருதுகள் ரத்து செய்யப்பட்டன.

பகதூர் ஷா

@KTBS NOT TO BE REPUBLISHED

2. நிர்வாகக் காரணம் :

அனைத்து உயர் மற்றும் இராணுவப் பதவிகளும் ஐரோப்பியர்களுக்கு மட்டுமே ஒதுக்கப்படும் வகையில் ஆங்கிலேயர்கள் தங்கள் புதிய நிர்வாக அமைப்பை வடிவமைத்தனர். இவ்வமைப்பின் தன்மை பொது மக்களுக்கு பதிலளிக்க தவறியதை வெளிப்படுத்தியது. நிர்வாகத்தில் இடைத்தரகர்களின் பங்கு முக்கியமாக இருந்தது. சட்ட நிர்வாகம், சமூகப் படிநிலையின் வீழ்ச்சிக்கு (அடக்குமுறை) வழிவகுத்தது. பாரசீக மொழிக்கு பதிலாக ஆங்கிலம் நீதிமன்ற மொழியானது. இவை மக்களுக்கும், இந்தியாவை ஆளும் வர்க்கத்தினருக்கும் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

3. பொருளாதார காரணம்:

ஆங்கிலேயர்கள் தங்கள் இலாபத்திற்காக இந்திய பொருளாதார வளங்களையும், செல்வத்தையும் சூரையாட தங்கள் அரசியல் அதிகாரத்தை பயன்படுத்திக்கொண்டார்கள். ஆங்கிலேயரின் வியாபார ஆர்வத்தினால், இந்தியர்களின் குடிசைத் தொழில் மற்றும்

உள்ளூர் தொழில்கள் நாசமடைந்தன. நிலவரிச் சட்டம் அதிக சுரண்டலாக இருந்தது. தாலூக்காகாரர்கள் மற்றும் ஜமீன்தார்களின் பதவி மற்றும் வருமான மூலங்கள் பறிக்கப்பட்டன. பெரிய அளவில் செல்வம் வெளியேறும் நிலைமை உண்டானது. வணிகவிவசாயத்தால் விவசாயிகளின் பொருளாதார வலிமை குறைந்தது. அன்றைய கொடிய வறட்சி இலட்சக் கணக்கான மக்களைப் பழிவாங்கியது. இது போன்ற நிகழ்வுகள் இந்தியாவை ஏழ்மைக்குத் தள்ளின.

4. சமூக மற்றும் சமய காரணம்:

பல சமூக மற்றும் சமய அம்சங்களும் கிளர்ச்சி உண்டானதற்கான காரணங்களாகும். ஆங்கிலேயர்கள் தாங்கள் 'மேலினத்தோர்' என்ற பெருமையில் மிதந்தனர். இந்தியர்கள் 'வெள்ளைக்காரனின் சுமை' என்றம் கோட்பாட்டைப் பரப்பினார்கள். இந்தியர்களை கலாச்சாரம் மற்றும் பண்பாடில்லாத காட்டுமிராண்டிகள் என்று வர்ணித்தனர். இந்தியர்களைப் 'பன்றி', 'கருப்பு மனிதர்கள்' என்று அழைத்தார்கள். ஐரோப்பியர்களின் மேற்பார்வையில் இருந்த உணவு விடுதிகளுக்கும், கிளப்புகளுக்கும் இந்தியர்கள் அனுமதிக்கப்படவில்லை. 'நாய்களுக்கும் இந்தியர்களுக்கும் அனுமதி தடைசெய்யப்பட்டுள்ளது' என்று எழுதப்பட்ட பெயர் பலகையை கதவுகளில் தொங்கவிட்டிருந்தார்கள். அதுமட்டுமல்லாமல், சதி வழக்கத் தடை, குழந்தை திருமணத் தடை மற்றும் விதவை மறுமணத்தை ஊக்குவிப்பது போன்றவற்றை இந்தியர்கள் தங்கள் சமூக நடைமுறைகளில் ஆங்கிலேயர்கள் குறிக்கிடுவதாக கருதினர். ஆங்கிலேயரின் புதிய ரயில் பாதை மற்றும் டெலிகிராப் தந்திகளின் கட்டுமானம் இந்தியர்களுக்கு சந்தேகத்தை ஏற்படுத்தியது.

NOT TO BE REPUBLISHED ©KTBS

இந்தியர்கள் நாகரிகமற்றவர்களாக இருப்பதே வெள்ளையர்களின் மீதுள்ள சுமை என்றும் அவர்களை நாகரிகப்படுத்துவது வெள்ளையர்களின் பொறுப்பு என்பது ஏகாதிபத்தியவாதிகளின் தந்திரமான நுணுக்கமுறையாக இருந்தது. இந்தக் கோட்பாட்டைப் பரப்பியவர் ருட்யார்ட் கிப்ளிங்.

பல இந்தியர்கள், ஆங்கிலேயர்களின் மதம் மாற்றும் முயற்சிகளைக் கண்டு பீதியடைந்தனர். கிறித்துவ மிஷனரிகள் இந்து மற்றும் முஸ்லிம் கொள்கைகளை வெளிப்படையாக விமர்சிக்கத் தொடங்கினர். பள்ளிகளில், மருத்துவமனைகளில், சிறைகளில் மற்றும் சந்தைகளில் அவர்கள் மதமாற்றம் செய்வதைக் காண முடிந்தது. 'மதத் தகுதி நீக்கச் சட்டம்' மூலம் இந்து நடைமுறைகள் திருத்தப்பட்டன. அதன் படி வேறு மதத்திற்கு மதம் மாறிய மகனுக்கு, பரம்பரை உரிமைக் கோரலில் இருந்து விலக்கு இல்லை. இது கிறித்துவ மதத்திற்கு மாறுவதை ஊக்குவிக்கும் ஒரு திட்டம் என்பதை மக்கள் உணர்ந்தனர். பல அனாதைகள் கிறித்துவர்களாக மதம் மாற்றப்பட்டனர்.

© KTBS NOT TO BE REPUBLISHED

5. இராணுவக் காரணம் :

இந்திய படை வீரர்களிடையே பல நிறைவற்ற நிலைகள் இருந்தன. சிப்பாய்கள் பரம்பரையாக பயன்படுத்தி வந்த சமய சின்னம் மற்றும் தலைப்பாகைகளை அணியக்கூடாதென்று தடை செய்தனர். இந்திய சிப்பாய்களுக்கு மிகக் குறைந்த ஊதியம் கொடுத்தார்கள். பதவி உயர்வுக்கான அவகாசங்களும் இல்லாமல் போனது. ஆங்கிலேய சிப்பாய்களுக்கு மட்டும் அதிக ஊதியம் மற்றும் இதர வசதிகள் வழங்கப்பட்டன. இந்திய சிப்பாய்களுக்கு அதிகப்படியான ஊதியத்தைக் கொடுக்காமல், மிகத் தொலைவான இடங்களுக்கு அனுப்பினார்கள். லார்ட்கானிங்கின் 'பொது இராணுவ சேவை சட்டத்தின்' படி எல்லா சிப்பாய்களும் ஆங்கிலேயரின் கட்டளைப்படி, அவர்கள் கூறும் இடங்களுக்கு எல்லாம் வேலை நிமித்தமாக செல்ல வேண்டியிருந்தது.

6. உடனடி காரணம்:

பொ.ச. 1857, மக்கள் சமூகத்தின் கிளர்ச்சிக்கு ஏற்ற காலமாக இருந்தது. அவர்களைத் தூண்ட ஒரே ஒரு தீப் பொறி போதுமாக இருந்தது. பொ.ச. 1857 இல் ஒரு புதிய மாதிரி துப்பாக்கியை (என்பீல்ட் ரைபல்) படையில் அறிமுகப்படுத்தியது சிப்பாய் கிளர்ச்சிக்கு உடனடி காரணமானது. என்பீல்ட் துப்பாக்கிகளுக்கு தோட்டா (காட்ரிட்ஜ்) நிரப்புவதற்கு முன்பு, அதனைச் சுற்றியிருக்கும் காகிதத்தை பல்லால் கடித்து கிழிக்க வேண்டியிருந்தது. இந்தக் காகிதத்திற்கு பன்றி மற்றும் பசுவின் கொழுப்பை உபயோகித்திருக்கும் செய்தியானது காட்டுத்தீ போல சிப்பாய்களிடையே பரவியது. இது முஸ்லீம் மற்றும் இந்துக்களின் சமய நம்பிக்கைகளுக்கு பங்கம் ஏற்படுத்துவதாக அமைந்தது. அவைகளைப் பயன்படுத்த மறுத்த சிப்பாய்கள் ஆங்கிலேயர்களின் தண்டனைக்கு ஆளாக வேண்டியிருந்தது.

முதல் சுதந்திரப் போராட்டத்தின் நிலை :

மங்கல் மான்டே

பொ.ச. 1857 ஆம் ஆண்டு, மே 10 ஆம் நாள் மீரட்டில் கிளர்ச்சி ஆரம்பமானது. பிறகு வட இந்திய மாநிலங்களில் பரவலாக தீவிரமடைந்தது. மீரட்டில் கிளர்ச்சி வெடிப்பதற்கு முன்பே பாரக்பூரின் (வங்காளம்) இந்திய சிப்பாய் ஆன மங்கல் பாண்டே, கொழுப்பு தடவிய துப்பாக்கியைப் பயன்படுத்த மறுத்தார். வெளிப்படையாக ஆங்கில அதிகாரி ஒருவரை சுட்டுக் கொன்றார், பிறகு அவரும் கொல்லப்பட்டார். அப்போது மீரட்டில் கண்களுக்குத் தென் பட்ட ஒவ்வொரு ஐரோப்பிய சிப்பாய்களையும் கொன்றார்கள். 'மாரோ ஃபரங்கிகோ' (வெளிநாட்டவர்களை கொல்லுங்கள்) என்ற முழக்கத்துடன் தில்லிக்கு சென்றார்கள். தில்லியில் மூத்த மற்றும் உடல் நலம்

NOT TO BE REPUBLISHED @KTBS

சரியில்லாத முகலாய மன்னரான இரண்டாம் பகதூர் ஷாவை இந்திய சக்ரவர்த்தி என்று அறிவித்தனர்.



பெருங் கிளர்ச்சியின் இடங்கள்

பரங்கி : *(பரங்கியர்) இச்சொல் பாரசீக மொழியிலிருந்து வந்தது, பிறகு இதை உருது மற்றும் இந்தி மொழிகளில் ஐரோப்பியர்களை இழிவாகக் குறிப்பிட உபயோகிக்கப்பட்டது.*

குறுகிய காலத்திலேயே வட இந்தியா முழுவதும் கிளர்ச்சி பரவியது. கிளர்ச்சியின் முக்கிய மையங்கள் தில்லி, கான்பூர், லக்னோ, பரேலி, ஜான்சி மற்றும் பிகாரின் ஆரா ஆகும்.

ஆங்கிலேயருக்கு எதிரான இந்தியர்களின் போராட்டம்

ஜான்சி ராணி லட்சுமி பாய்

தில்லியில் படைத்தளபதியான பக்த்கான், கான்பூரில் நானா சாகிப் மற்றும் தாந்தியா தோபே, லக்னோவில் பேகம் ஹஜரத் மஹல், ஜான்சியில் லட்சுமி பாய் மற்றும் பீகாரில் குன்வர் சிங் இவர்களின் தலைமையில் கிளர்ச்சிகள் நடந்தன. ஆங்கிலேயர்கள் கிளர்ச்சியை ஒவ்வொன்றாக ஒடுக்கினார்கள். இக்கிளர்ச்சி வட இந்தியாவில் மட்டுமல்லாமல் மகாராஷ்டிரா, கருநாடகம் ஆந்திர பிரதேசம், தமிழ்நாடு, கேரளம், கோவா மற்றும் பாண்டிச்சேரி ஆகிய இடங்களிலும் பரவியது. கர்நாடகாவில் முண்டர்கி என்ற இடத்தில், பீமாராவ், ஹலகலி வேட்டைக்காரர்கள், சூரபூராவின் வேங்கடப்ப நாயக்கர், நரகுந்தின் நானா சாஹேப் ஆகியோர் கிளர்ச்சியின் முக்கிய தலைவர்கள் ஆவர். வட மற்றும் தென்னிந்தியாவின் அனைத்து இடங்களிலும் கிளர்ச்சி பரவலாக நடந்த போதிலும், சிறிது காலத்திற்குள் அவை ஆங்கிலேயர்களால் ஒடுக்கப்பட்டன.

© KTBS NOT TO BE REPUBLISHED

செயல்பாடு: ஜான்சி ராணி லக்ஷ்மியாய் ஆங்கிலேயரை எதிர்த்து போராடிய தகவல்களை சேகரிக்கவும்.

குன்வர் சிங்க்

நானா சாஹேப்

©KTBS NOT TO BE REPUBLISHED

விளைவுகள்

இப் போராட்டம் தோல்வியுற்றாலும், இது நீண்டகால விளைவுகளை ஏற்படுத்தியது. இந்தியாவின் அரசியல், பொருளாதார மற்றும் கலாச்சார துறைகளில் கடுமையான விளைவுகளை ஏற்படுத்தியது. இந்த போராட்டத்தின் விளைவாக கிழக்கிந்திய கம்பெனியின் நிர்வாகம் முடிவடைந்து அதன் கையில் இருந்த இந்திய ஆட்சி பிரிட்டீஷ் ராணியின் நேரடி ஆட்சிக்குள் வந்தது. பொ.ச. 1858 இல் பிரிட்டனின் ராணி விக்டோரியா ஒரு அறிவிப்பை வெளியிட்டார். இந்த அறிவிப்பு இந்தியர்களின் உரிமைகள், பாரம்பரியங்கள் மற்றும் பழக்க வழங்களை மதிக்கும் என்று உறுதியளித்தது. மக்களின் சமய சுதந்திரத்தில் எத்தகைய தலையிடுதலும் இருக்காது என்பதையும் வலியுறுத்தியது.

பொ.ச. 1857-58 ல் நடந்த போரானது நவீன தேசியவாத இயக்கத்தின் தோற்றத்திற்கு வழிவகுத்தது. இதுவே பின்னர் சுதந்திரப் போராட்டத்திற்கான நிரந்தர தூண்டுதலாயிற்று.

பயிற்சிகள்

I. வெற்றிடங்களைப் பொருத்தமான சொற்களால் நிரப்பவும்.

1. பொது இராணுவ சட்டத்தை அமலுக்குக் கொண்டு வந்தவர் ________ .
2. பாரக்பூரில் கொழுப்பு தடவிய துப்பாக்கியைப் பயன்படுத்த மறுத்த இந்திய சிப்பாய் ________ .
3. பீகாரில் ________ தலைமையில் கிளர்ச்சிகள் நடந்தன.
4. பொ.ச. 1857ல் நடந்த போராட்டத்தை இந்தியாவின் முதல் சுதந்திரப் போராட்டம் என்று அழைத்தவர் ________ .

II. ஒரு சொல் அல்லது ஒரு வாக்கியத்தில் பதிலளிக்கவும்.

5. பொ.ச. 1857 சுதந்திரப் போராட்டத்திற்கான உடனடி காரணம் என்ன?
6. பொ.ச. 1857ன் பெருங்கிளர்ச்சியின் விளைவுகளைக் குறிப்பிடவும்?
7. துணைப்படைத் திட்டத்தின் மூலம் ஆங்கிலேயர் ஆட்சிக்கு உட்பட்ட மாநிலங்கள் யாவை?

III. சிறு குறிப்புகளை எழுதவும்.

8. சுதந்திரப் போராட்டத்திற்கான காரணங்கள்
9. ஜான்சி ராணி லக்ஷ்மிபாய்.
10. இரண்டாம் பகதுர்ஷா.

©KTBS NOT TO BE REPUBLISHED

செயல்பாடுகள் :

மங்கல் பாண்டே, ஜான்சி ராணி லக்ஷ்மிபாய், தாந்தியா தோபே, நானா சாகிப், பேகம் ஹஜரத் மஹல், குன்வர்சிங் முண்டர்கி பீம்ராவ் மற்றும் பிற புரட்சியாளர்களின் வாழ்க்கை வரலாறுகளைப் படிக்கவும். (பாரத-பாரதி தொடர் புத்தகங்களைப் பார்க்கவும்.)

***

பாடம் 17	சுதந்திரப் போராட்டங்கள்

W5X7S5

1 - சுதந்திரப் போராட்டங்கள் (பொ.ச. 1885-1919)

பாட அறிமுகம்:

19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில், ஆங்கிலேயர்களின் சுரண்டல் கொள்கையின் விளைவாக, இந்தியர்களிடையே தேசியவாத உணர்வு எழுச்சியடைந்தது. ஆங்கில கல்வி அறிவு பெற்ற புதிய வர்க்கம், ஆங்கிலேய ஆட்சியின் உண்மையான நோக்கத்தை புரிந்துக்கொண்டது. விவசாயிகள் ஆதிவாசிகள் மற்றும் பல வர்க்கங்களும் ஆங்கிலேயரால் தீவிரமாக பாதிக்கப்பட்டதால், ஆங்கிலேயருக்கு எதிராகப் போராடுவதற்கான வாய்ப்பிற்கு காத்திருந்தனர். இப்பாடத்தில், இந்தியர்களிடையே தேசிய உணர்வு எழுவதற்கு காரணமான முக்கிய அம்சங்கள்: அகில இந்திய தேசிய காங்கிரஸின் ஸ்தாபனம், தேசிய இயக்கங்களில் மிதவாதிகள் மற்றும் அமிதவாதிகளின் பங்கு மற்றும் பிற முக்கியமான அம்சங்கள் விளக்கப்பட்டுள்ளன.

காந்தியடிகளின் அரசியல் மற்றும் பொருளாதார சிந்தனைகள் உலகம் முழுவதும் அங்கீகாரம் பெற்றுள்ளது. அவருடைய தலைமையில் அரசியல் போராட்டங்கள் நடந்த இந்த காலகட்டம் 'காந்தி யுகம்' (பொ.ச. 1919-1947) என்று அழைக்கப்படுகிறது. இப்பாடத்தில் பொ.ச. 1919-1947 காலகட்டத்தில் நடந்த சுதந்திர இயக்கங்களை பற்றிய அறிமுகம் கொடுக்கப்பட்டுள்ளது.

சுதந்திர போராட்டத்தின் போது பெண்கள் ஆக்கப்பூர்வமாக சுதந்திர போராட்டத்தில் தங்களை ஈடுபடுத்திகொண்டனர். மேலும் சுதந்திரத்தில் அவர்களுக்கும் பங்கு உள்ளது என்பதை வெளிபடுத்தினர். இதில் கருநாடகத்தின் பெண்களின் பங்கை பற்றி அறியலாம்.

திறன்கள்

1. மாணவர்கள் 19 ஆம் நூற்றாண்டில் தேசியவாதத்தின் வளர்ச்சிக்கு வழிவகுத்த முக்கிய அம்சங்களைப் பற்றி அறிந்துக் கொள்ளுதல்.

©KTBS NOT TO BE REPUBLISHED

2. மிதவாதிகள், அமிதவாதிகள் மற்றும் புரட்சியாளர்களின் கொள்கைகள் மற்றும் சித்தாந்தங்களைப் புரிந்துக் கொள்ளுதல்.
3. பிரிட்டிஷர்கள் 'பிரித்தாளும் கொள்கை' மூலம் இந்தியர்களை எவ்வாறு ஆட்சி செய்தார்கள் என்பதை அறிதல்.
4. கரந்தியடிகளின் ஆரம்ப வாழ்க்கை மற்றும் அவர் பயன்படுத்திய அகிம்சை மற்றும் சத்தியாகிரக கோட்பாடுகளைப் பாராட்டி பெருமைப்படுவது.
5. காந்தியடிகளின் தலைமைத்துவம், குறிக்கோள்கள், உண்மைத்தன்மை, எளிமை, மனிதாபிமான அணுகுமுறை மற்றும் பணிவு ஆகியவற்றைப் பாராட்டுதல்
6. சுபாஷ் சந்திர போஸ் மற்றும் டாக்டர். பி.ஆர். அம்பேத்கர் ஆகியோரின் பங்களிப்புகளைப் பாராட்டுதல்.
7. சுதந்திர போராட்டத்தில் பெண்கள் ஆற்றிய பங்கை அறிந்து கொள்ளுதல்.
8. சுதந்திரத்திற்கு பிறகு கர்நாடகாவின் வளர்ச்சியில் பெண்களின் பங்கை அறிந்துகொள்வது.

@KTBS NOT TO BE REPUBLISHED

தேசீயத்தின் வளர்ச்சி:

இந்தியா வெவ்வேறு கலாச்சாரங்களைக் கொண்ட நாடாகும். நமக்கு நீண்ட கலாச்சார மற்றும் வரலாற்றுப் பரம்பரியம் உள்ளது. இது 19வது நூற்றாண்டின் பிற்பகுதியில் தேசீயத்தின் வளர்ச்சிக்கு ஒரு தத்துவஞ்சார்ந்த அடித்தளத்தை அமைத்தது. 'தேசியம்' என்பது ஒரு குறிப்பிட்ட பூகோள நிலப்பரப்பின் மக்கள் மனதில் 'நாம் அனைவரும் ஒன்று' என்ற பரந்த எண்ணத்தை அப்பிரதேசம் கொண்டிருப்பதை உணர்த்துவதாகும்.

பொ.ச. 1857இல் முதல் சுதந்திர போராட்டம் தளர்வடைந்த போராட்டமாக இருந்ததால் அது தோல்வி கண்டது. இது விழிப்புணர்வு கொண்ட இந்தியரிடம் ஒற்றுமையின் தேவையை உணர்த்தியது. படிப்படியாக தேசீய போராட்டம் உருவானது. தேசீயத்தின் வளர்ச்சிக்கு பல அம்சங்கள் ஊக்கமளித்தன. அவைகள் கீழே குறிப்பிடப்பட்டிருக்கின்றன.

1. மேற்கத்திய கல்வி மற்றும் நவீன அறிவியல், அறிவுதிறனின் அறிமுகம்: ஆங்கிலக் கல்வி கற்ற இந்தியர்கள் ஐரோப்பியர்களின் தத்துவப் படைப்புகளைப் படித்து தேசிய அரசியல் மனப்பான்மையை அறிந்துக் கொண்டனர். ஐரோப்பாவில் தொடங்கிய கருத்துக்களான சுதந்திரம், சமத்துவம் மற்றும் சகோரத்துவம் இவர்களை அரசியல் ரீதியாக ஊக்குவித்தது, சுதந்திர ஆசைக்கு தூண்டுதலானது. ஆங்கிலம் பயின்ற இந்தியர்கள் தமக்கு ஆதரவாக இருப்பார்கள் என்ற ஆங்கிலேயரின் கணிப்பு ஏமாற்றத்திற்கு உரியதாகிவிட்டது.

2. சீரான நிர்வாக முறை : ஆங்கிலேயர்கள் இந்தியாவை, சீரான நிர்வாக முறையின் கீழ் கொண்டுவந்தார்கள். இதனால் ஒரே வகையான சட்டங்களுக்கு உட்பட்ட இந்தியர்கள் நாம் அனைவரும் சமமானவர்கள் என்ற எண்ணத்தை வளர்த்துக் கொள்ள முடிந்தது. அதே போல ஆங்கிலேயர்கள் அமலுக்கு கொண்டு வந்த மக்களுக்கு எதிரான சட்டங்களை எல்லோரும் ஒரே குரலில் எதிர்க்க ஆரம்பித்தார்கள். இது இந்தியர்களிடம் தேசீயத்தை வளர்க்க உதவியது .

3. பொருளாதார சுரண்டல் : ஆங்கிலேயர்கள், தங்களது பொருளாதார சட்டங்களின் மூலமாக இந்தியர்களின் வியாபாரம், விவசாயம் கைத்தொழில்களின் வீழ்ச்சிக்கு காரணமானார்கள். நிலத்தை விற்பனைக்குரிய பொருளாகக் கருதினார்கள். தாதாபாய் நௌரோஜி இந்திய செல்வத்தை ஆங்கிலேயர்கள் கொள்ளையடிக்கும் முறையை அவருடைய 'செல்வச் சுரண்டல் சித்தாந்தம்' (Theory of Drain of Wealth) மூலம் முன்மொழிந்தார்.

4. பரம்பரையின் அறிமுகம் : சர் வில்லியம் ஜோன்ஸ், கோல் புரூக், மாக்ஸ் முல்லர், கன்னிங்ஹாம் போன்ற வெளிநாட்டு அறிஞர்கள் இந்திய வரலாறு மற்றும் கலாச்சார பரம்பரையை அவர்களின் ஆராய்ச்சியின் மூலமாக இந்தியர்களுக்கு அறிமுகப்படுத்தினார்கள். இதன் மூலம் இந்தியக் கலாச்சாரம் கிரீக் மற்றும் ரோம் கலாச்சாரத்திற்கு எந்த வகையிலும் குறைந்தது அல்ல என்பதை உறுதிப்படுத்தினார்கள். அதன் மூலமாக தேசீயவாதத்தின் வேர்கள் அறிவின் வடிவில் மறுபடியும் இந்தியர்களின் மனதின் ஆழத்திற்கு இறங்கத் தொடங்கின.

NOT TO BE REPUBLISHED @KTBS

5. சமுதாய மற்றும் சமய சீர்த்திருத்த இயக்கங்கள் : 19ஆம் நூற்றாண்டில் இந்திய சமுதாய சீர்த்திருத்தவாதியான ஈஷ்வர சந்திர வித்யாசாகர், சுவாமி தயானந்த சரஸ்வதி, சுவாமி விவேகானந்தர் போன்றவர்கள் வஞ்சிக்கப்பட்ட மற்றும் சுரண்டப்பட்ட சமுதாயங்களுக்கு கல்வி அறிவின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தனர். தயானந்தர் சுயாட்சி மற்றும் சுதேசி சித்தாந்தங்களை விதைத்தபோது, விவேகானந்தர் மந்தமாக இருந்த சமுதாயத்திற்கு விழிப்புணர்வு ஊட்டும் பணியைச் செய்தார். இது தேசீயத்தின் வளர்ச்சிக்கு புது பரிமாணத்தை கொடுத்தது. படித்த இந்தியர்களை செயலூக்கம் மிகுந்தவர்களாக விளங்கச் செய்தது.

6. இந்தியாவின் முதல் சுதந்திர போராட்டத்திற்கு தூண்டுதல் : இந்த நிகழ்வு இந்தியர்களை அரசியல் ரீதியாக மேலும் ஒழுங்கமைக்க வேண்டுமென்று புரியவைத்தது. மேலும் இப்போராட்டத்தில் வீரமரணமடைந்த மங்கல் பாண்டே, லட்சுமிபாய், ஹஜ்ரத்மகல் போன்ற தலைவர்கள் அடுத்த தலைமுறை தலைவர்களுக்கு உத்வேகம் அளித்தனர்.

7. இனப் பாகுபாடு : ஆங்கிலேயர்கள் இந்தியர்களைவிட தாமே சிறந்தவர்கள் என்று எண்ணி, இந்தியர்களைக் காட்டு மிராண்டிகள் என்று அழைத்தார்கள். நிர்வாகத்தின் உயர்ந்த பதவிகளை ஆங்கிலேயருக்கு மட்டுமே ஒதுக்கிவைத்தார்கள். இல்பர்ட் சட்டத்திற்கு (பொ.ச. 1884) இந்தியாவில் உள்ள ஆங்கி லேயர்களின் எதிர்ப்பு, இந்த அறிக்கையின் உண்மையை எடுத்துரைக்கிறது.

இதன் மூலம் அதே சட்டத்தின் கீழ் சுரண்டப்பட்ட இந்தியர்கள், அனைவரும் ஒன்று என்று உணர்ந்தார்கள். ஆங்கிலேயர்கள் கொண்டுவந்த மக்கள் விரோத சட்டங்களை எல்லோரும் ஒரே குரலில் எதிர்க்கத் துவங்கினர். இது இந்தியர்களிடையே நாம் எல்லோரும் ஒன்று என்ற உணர்வு வளரக் காரணமானது.

இந்திய தேசிய காங்கிரஸ் (பொ.ச. 1885)

இந்திய தேசிய காங்கிரஸின், ஓய்வுபெற்ற சமூகப்பணி அதிகாரியான ஆலன் ஆக்டேவியன் ஹியூம் (A.0 Hume) அவருடைய கனவாக இருந்தது. இது பொ.ச. 1885 இல் மும்பையில் தொடங்கப்பட்டது. உமேஷ்சந்திர பானர்ஜி காங்கிரசின் முதல் தலைவரானார். மும்பையில் நடந்த முதல்

©KTBS NOT TO BE REPUBLISHED

காங்கிரஸ் மாநாட்டில், 72 பிரதிநிதிகள் பங்கேற்றார்கள். அதில் பெரும்பாலோர் வக்கீல்கள், பத்திரிக்கையாளர்கள் மற்றும் சமுதாயத்தின் உயர்ந்த வர்க்கத்தை சேர்ந்தவர்கள். உண்மையில் இது தேசிய காங்கிரஸ் போராட்டத்திற்கு தூண்டுதலளித்த முதல் அரசியல் மேடையானது.

ஏ.ஓ. ஹ்யூம் - காங்கிரசு நிறுவனர்.

உமேஷ் சந்திர பானர்ஜி முதல் சபைக்கூட்டத் தலைவர்

©KTBS NOT TO BE REPUBLISHED

இந்திய தேசிய காங்கிரசின் நோக்கங்கள்.

* நாட்டின் வெவ்வேறு பகுதிகளில் இருக்கும் அரசியல் தொண்டர்களின் இடையே நட்பை உருவாக்குவது.
* தேசிய ஒற்றுமையை ஏற்படுத்துவது.
* மக்களுடைய விண்ணப்பங்களை அரசாங்கத்தின் முன் வைத்து மக்கள் கருத்துகளை வடிவமைத்தல்.
* தனி மாநில எண்ணத்தை விடுத்து தேசிய எண்ணத்தை உருவாக்குவது.

மிதிவாதிகளின் காலம் (1885-1905)

இந்திய தேசிய காங்கிரசின் தொடக்ககாலத் தலைவர்களை மிதிவாதிகள் என்று அழைத்தார்கள். பொ.ச. 1885-1905 இன் காலக்கட்டம் மிதிவாதிகளின் காலம் என்று குறிப்பிடப்பட்டது. அவர்கள் அரசியல் அமைப்புக் கொள்கைகளை நம்பினர். அவர்கள் கோரிக்கை, மனு மற்றும் எதிர்ப்பு போன்ற வழிகளைக் கடைபிடித்தார்கள். கூடவே அரசியல், சமூக மற்றும் பொருளாதார

துறைகளில் சீர்திருத்தத்தை கொண்டுவர ஆங்கிலேயர்களை வற்புறுத்தினார்கள். தாதாபாய் நெளரோஜி, சுரேந்திரநாத் பானர்ஜி, கோபால கிருஷ்ண கோகலே, மகாதேவ கோவிந்த ரானடே மற்றும் பலர் முக்கிய மிதவாத தலைவர்கள் ஆவர்.

மிதவாதிகளின் போராட்டங்களின் பயனாக இந்தியர்கள் சட்டமன்றங்களில் நுழைய முடிந்தது. அதுமட்டுமல்லாமல் மிதிவாதிகளின் முயற்சியால் இந்தியாவின் ஏழ்மைக்கு ஆங்கிலேயர்களே காரணம் என்பது தெரிந்தது. அது மட்டுமல்லாமல் இக்காலக்கட்டத்தில் போராட்டத்திற்குத் தேவையான பயிற்சி பெறுவதன் மூலம் பிரிட்டிஷர்களுக்கு எதிரான போராட்டத்திற்கு ஒரு தேசிய நோக்கு எல்லையை உருவாக்கிக் கொண்டனர்.

தாதாபாய் நௌரோஜி


சுரேந்திரநாத் பானர்ஜி

கோபால கிருஷ்ண கோகலே

முக்கிய மிதிவாதத் தலைவர்கள்

NOT TO BE REPUBLISHED

மிதிவாதிகளின் கோரிக்கை

பேச்சு மற்றும் எழுத்துச் சுதந்திரம், நிர்வாகத்திலிருந்து நீதித் துறையை வேறுபடுத்துவது, இராணுவ செலவைக் குறைப்பது, ஆரம்ப உயர் மற்றும் தொழிற் கல்விகளை நிறுவுவது. ஆயுத தடுப்பு சட்டத்தை ரத்து செய்வது, வங்கி, நீர்பாசனம், மருத்துவம் மற்றும் ஆரோக்கிய சேவைகளை வழங்குவது, உப்பு வரியை முழுவதுமாக ரத்து செய்வது, இங்கிலாந்து மற்றும் இந்தியாவில் ஒரே காலத்தில் ஐ.சி.எஸ் தேர்வுகளை நடத்துவது, மத்திய மற்றும் மாநில மன்றங்களில் இந்தியர்களுக்கு பங்களிப்பது, உயர் பதவிகளுக்கு இந்தியர்களை நியமிப்பது போன்றவைகள்.

அமிதவாதிகள் காலம் (பொ.ச. 1905-1919) :

மிதவாதம் அதிகமாக மக்களிடம் சென்றடையவில்லை. அவர்கள் பின்பற்றியகோரிக்கை மற்றும் வேண்டுகோள் முறைகளை 'யாசக முறை' (Politics of Mendicancy) என்று இழிவாகப் பேசினார்கள். மிதவாதிகளின் செயல் முறைகள் இளைஞர்களைக் கவரவில்லை. இவர்களுடைய பொறுமையான வழிமுறையைக் கண்டிக்கும் ஒரு புதிய தலைவர் கூட்டம் காங்கிரஸில் உருவானது. அவர்களே அமிதவாதிகள். லாலா லஜ்பத் ராய், பாலகங்காதர திலக் மற்றும் பிபின்சந்திர பால் அமிதவாதிகளின் தலைவர்களாகிய 'லால்-பால்-பால்' (Lal, Bal, Pal) என்றே புகழ் பெற்றார்கள். பொ.ச. 1905-1919 இன் காலகட்டம் அமிதவாதிகளின் அரசியல் காலம் என்று குறிப்பிடப்படுகிறது.

லாலா லஜபத் ராய்
(Lal)

பாலகங்காதர திலக்
(Bal)

பிபின் சந்திர பால்
(Pal)

NOT TO BE REPUBLISHED

அமிதவாதிகள் வளர்ச்சிக்குக் காரணங்கள்

* இந்தியர்களுக்கு நிர்வாகத்தில் உயர்ந்த பதவி அளிக்காதது.
* பொ.ச. 1905 இல் லார்ட் கர்ஜன் வங்காளப் பிரிவினையால் மதவாத அரசியலுக்கு முயற்சித்தது.
* பொ.ச. 1905 இல் இரஷ்ய நாட்டை சிறிய நாடான ஜப்பான் தோற்கடித்த நிகழ்வு ஐரோப்பியர்களை ஆசியர்கள் தோற்கடிக்க முடியும் என்ற நம்பிக்கையை அளித்தது.
* அயர்லாந்து, ரஷ்யா, சீனா, துருக்கி, எகிப்து போன்ற நாடுகளில் நடந்து கொண்டிருந்த தீவிரவாத போராட்டங்கள் இந்தியர்களுக்கு ஊக்கமளித்தது.

பாலகங்காதர திலக் பெரிய தேசபக்தர். 'சுகந்திரம் எனது பிறப்புரிமை, அதை நான் அடைந்தே தீருவேன்', என்ற அவரது முழக்கத்தில் அவரிடமிருந்த சுதந்திர வெறியை நம்மால் அறிந்துக்கொள்ள முடியும். இந்தியர்களை ஒன்றிணைக்கும் எண்ணத்தில் திலகர், விநாயகர் மற்றும் சிவாஜி (உற்சவங்களை) அறிமுகப் படுத்தினார். மராட்டா(ஆங்கிலம்) மற்றும் கேசரி (மராட்டி) பத்திரிகைகளை வெளியிடுவதன் மூலம் மக்களை அரசியல் ரீதியாக ஊக்கப்படுத்தினார். பிபின் சந்திர பால், 'நியூ இந்தியா' என்ற பத்திரிக்கையையும், அரவிந்தர் 'வந்தே மாதரம்' என்ற பத்திரிக்கையையும் வெளியிட்டனர். லாலா லஜ்பத்ராய் 'பஞ்சாபின் சிங்கம்' என்றே புகழ்பெற்றார்.' அவர் ''நாங்கள் சுயராஜ்ஜியத்தை உரிமையுடன் பெறுவோம், யாசகம் செய்து அல்ல'' என்று கூறினார். பிபின் சந்திர பால் வங்காளத்தில் கூட்டு எதிர்ப்புகளை ஆரம்பித்தார். தீவிரவாதத்தை கடைபிடித்த மற்றொரு தலைவர் அரவிந்த கோஷ். வெளிநாட்டு பொருட்களுக்குத் தடை, சுதேசிப் பொருட்களை மட்டுமே உபயோகிப்பது மற்றும் தேசிய பள்ளிகளை நிறுவுவது இவர்களின் போராட்டத் திட்டமாக இருந்தது. அமிதவாதிகள் தேசிய போராட்டத்திற்கு வலுவூட்டினர்.



அரவிந்த கோஷ்

NOT TO BE REPUBLISHED @KTBS

வங்கப் பிரிவினை (பொ.ச. 1905):

அமிதவாதிகளின் தேசிய போராட்டங்களைத் தூண்டிய முக்கிய நிகழ்வு பொ.ச. 1905 இல் நடந்த வங்கப் பிரிவினையே ஆகும்.

வங்காளத்தில் தேசீயவாதம் தீவிரமாவதைக் கண்டு ஆங்கிலேயர்கள் அதிர்ச்சிக்குள்ளானார்கள். அதனால் வங்காளத்தை இந்து மற்றும் இஸ்லாம் என்ற சமய வேறுபாட்டின் அடிப்படையில் பிரிப்பதன் மூலமாக தேசீய வாதத்தின் தீவிரத்தை ஒடுக்க, லார்ட் கர்ஜன் முயற்சித்தார். இப்பிரிவினையை எதிர்த்து பொ.ச. 1905 ஆம் ஆண்டு அக்டோபர் 16 ஆம் நாள் வங்காளத்தில் 'தேசிய துக்க நாளாக' அனுசரித்தார்கள். ரவீந்தரநாத் தாகூர் 'அமர்

சோனார் பாங்களா' என்ற பாடலை இயற்றி, தேசிய கீதமாகப் பாடினார். பங்கிம் சந்திரரின் 'வந்தே மாதரம்' இந்தியர்களின் முழக்கமாக இருந்தது. வங்கத்தின் ஒற்றுமையை வெளிப்படுத்த இந்துக்களும் இஸ்லாமியர்களும் ஒருவருக்கொருவர் 'இரட்சா பந்தன்' கட்டிக்கொண்டார்கள். மக்களின் தீவிர எதிர்ப்பிற்கு பணிந்து பொ.ச. 1911 இல் ஆங்கிலேயர்கள் பிரிவினையை ரத்து செய்தார்கள்.

லார்ட் கர்ஜன்

பங்கிம் சந்திர சட்டர்ஜி

@KTBS NOT TO BE REPUBLISHED

முஸ்லிம் லீக் தொடக்கம் (பொ.ச. 1906):

ஆங்கிலேயர் தமது பிரித்து ஆளும் கொள்கையினால் தேசியப் போராட்டத்திலிருந்து இஸ்லாமியர்களை ஒதுக்கி வைக்க முயற்சி த்தார்கள். இந்திய தேசிய காங்கிரசு தொடங்கிய காலத்திலிருந்தே தங்கள் சமுதாய நலனின் பின்னணியில் தனிப்பட்ட இயக்கத்தை அமைத்துக்கொள்ளும்படி ஆங்கிலேயர்கள் இஸ்லாமியர்களை ஊக்குவித்தார்கள். பொ.ச. 1906 இல் முஸ்லிம் பிரதிநிதிகள் இந்தியாவின் வைஸ்ராயாக இருந்த மிண்டோவைச் சந்தித்தார்கள். சந்திப்பின் விளைவாக சர் ஆகாகான், டாக்காவின் நவாப் சலீமுல்லா மற்றும் சிலர் இணை சேர்ந்து பொ.ச. 1906இல் 'இந்திய முஸ்லீம் லீக்' என்ற கட்சியை டாக்காவில் (இன்றைய வங்காள நாட்டின் தலைநகரம்) துவங்கினார்கள்.

சூரத் பிளவு (பொ.ச. 1907)

வங்கப் பிரிவின் விவாதத்தின் பின்னணியில் அமிதவாதிகள் நாடு முழுவதும் சுதேசி ஒத்துழையாமை மற்றும் அன்னியப் பொருட்களின் புறக்கணிப்பு போராட்டங்களை விரிவுப்படுத்தினார்கள். ஆனால் மிதவாதிகள் அதை வங்காளத்திற்கு மட்டும் உட்படுத்தினால் போதும் என்று விரும்பினார்கள். அதுமட்டுமல்லாமல் அவர்கள் அரசாங்கத்துடன் நேரடியான மோதலில் இறங்கத் தயாராக இருக்கவில்லை. அமிதவாதிகள் மற்றும் மிதவாதிகள் இடையிலான கருத்து வேறுபாடு தீவிரமடைந்து காங்கிரஸில் பிளவு ஏற்பட்டது. 1907 இல் சூரத்தில் நடந்த காங்கிரஸ் மாநாட்டில் காங்கிரஸ் மிதவாதிகள் மற்றும் அமிதவாதிகள் என இரண்டாக பிரிந்தது. அதன் பிறகு இந்திய தேசிய இயக்கம் அமிதவாதிகள் தலைமையில் பொ.ச. 1919 வரை தொடர்ந்தது.

பொ.ச. 1907ல் காங்கிரசில் நடந்த பிளவிற்குப் பிறகு ஆங்கில அரசாங்கம் அமிதவாதிகளுக்கு எதிராக அடக்கு முறையைக் கையாண்டது. அவர்களில் பலர் சிறைக்கு சென்றார்கள். சிலர் நாடு கடத்தப்பட்டனர். திலகரை நாடுகடத்தி பர்மாவில் உள்ள மாண்டலே சிறைச்சாலையில் அடைத்தனர். இதனால், அரசியல் நடவடிக்கைகள் சிறது காலம் மந்தமடைந்தன. திலகர் சிறைவாசத்தின் போது 'கீதையின் மர்மம்' (கீத ரகசியா) என்ற நூலை எழுதினார்.

NOT TO BE REPUBLISHED @KTBS

அமிதவாதிகளை அரசியல் ரீதியாக செயலிழக்கச் செய்ய ஆங்கிலேயர்கள் மிதவாதிகளுக்கும் இஸ்லாமியர்களுக்கும் சட்டசபையில் அதிகமான பிரதிநிதித்துவம் அளித்து அவர்களைக் கவர எண்ணினார்கள். இதற்காக மிண்டோ மார்லே சீர்திருத்தங்களை பொ.ச. 1909 இல் கொண்டுவந்தார்கள். இந்த சட்டத்தில் இஸ்லாமியர்களுக்குத் தனிப்பட்ட வாக்குத் தொகுதிகளை ஏற்படுத்தினார்கள். இச்சமயத்தில் முதல் உலகப் போர் (பொ.ச. 1914ல்) தொடங்கியது. இது தேசிய போராட்டத்திற்கு புதிய தெம்பைக் கொடுத்தது. பொ.ச. 1916 இல் லோகமான்ய திலகர் மற்றும் அன்னி பெசன்ட் தன்னாட்சி (ஹோம் ரூல்) போராட்டத்தைத் தொடங்கினார்கள்.

ரொளலத் சட்டம் (பொ.ச. 1919)

பொ.ச. 1919 டிசம்பரில் நீதிபதி ரௌலத் என்பவரின் வழிகாட்டலில் ஒரு குழு அமைக்கப்பட்டது. இதன் நோக்கம்

இந்தியாவில் புரட்சி இயக்கங்களை ஒடுக்குவது ஆகும். முடிவாக ரௌலத் சட்டம் பொ.ச. 1919 பிப்ரவரியில் அமலுக்கு கொண்டு வரப்பட்டது. இந்த சட்டத்தின் படி சந்தேகத்தின் பேரில் எந்த இந்திய நபரையும் பிணை ஆணை இல்லாமல் அரசாங்கம் கைது செய்யலாம். முன்னறிவிப்பு இல்லாமல் எந்த இடத்தையும் சோதனைக்கு உட்படுத்தலாம். கைதிக்கு வக்கீலை நியமிக்கும் உரிமைக்கூட கிடையாது. இந்த சட்டத்தை இந்தியர்கள் கடுமையாக எதிர்த்தனர். அனைவரின் உள்ளத்திலும் கோபம் பொங்கியது. இதற்கு எதிராக காந்தியடிகளும் சத்தியாகிரகம் மேற்கொண்டார்.

ஜாலியன்வாலா பாக் படுகொலை (1919):

ரௌலத் சட்டத்திற்கு எதிராக காந்தியடிகள் மேற்கொண்ட சத்யாகிரகத்தால் பஞ்சாபின் பல இடங்களில் கிளர்ச்சிகள் ஆரம்பமாயின. பொ.ச. 1919 ஏப்ரல் 13 அன்று பஞ்சாபின் அம்ரித்சரின் தங்கக் கோயிலில் இருந்து சிறிது தொலைவில் இருக்கும் ஜாலியன்வாலாபாக் என்ற பூங்காவில் பொதுக்கூட்டம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. பொதுக் கூட்டத்தில் தங்கள் தலைவர்களான டாக்டர் சைபுத்தீன் கிச்லூ மற்றும் டாக்டர் சத்யபால் இவர்களை கைது செய்ததை எதிர்த்து போராட்டம் நடத்துவதாக இருந்தது.

©KTBS NOT TO BE REPUBLISHED

ஜாலியன்வாலா பாக் படுகொலையின் கொடூரக் காட்சி

அம்ரித்சரின் காவல் அதிகாரியாக இருந்த ஜெனரல் டையர் போராட்டம் நடத்தும் மக்களுக்கு பாடம் கற்பிக்க பூங்காவில் இருந்த ஒரே ஒரு வாயிலை மூடி ஆயுதமின்றி இருந்த மக்களைத் துப்பாக்கியால் சுட கட்டளையிட்டார். படுபீதியால் மக்கள் கூக்குரலிட்டனர். அரசாங்க அறிக்கையின் படி, கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை வெறும் 379 பேர்களாக மட்டுமே இருந்தது. ஆனால் கொல்லப்பட்டவர்களின் உண்மையான எண்ணிக்கை அதைவிட அதிகம். இன்றும், பூங்காவின் சுவர்களை துளைத்த தோட்டாக்களின் அடையாளங்களை இன்றும் நாம் காணலாம். இந்த மனிதாபிமானமற்ற செயலுக்கு பலரும் கண்டனம் தெரிவித்தனர்.

புரட்சிகரமான தேசீயம் :

அமிதவாதிகளில் சிலர் ஆயுதப் புரட்சிக்கு முன்வந்தனர். இவர்களைப் புரட்சிகரமான தேசியவாதிகள் என்றார்கள். ஆங்கிலேய அதிகாரிகள் இவர்களை தீவிரவாதிகள் என்று அழைத்தனர். இந்தியாவிற்கு முழு சுதந்திரத்தை துரிதமாக கிடைக்கச் செய்வது இவர்களுடைய நோக்கமாக இருந்தது. ஆழமான தேசபக்தி மற்றும் தியாக மனப்பானமை புரட்சிகரமான தேசீய வாதிகளின் மூல தத்துவமாக இருந்தது.

இரகசிய இயக்கங்களை உருவாக்கிக்கொண்ட புரட்சியாளர்களில் வாசுதேவ பலவந்த பட்கே முதலாமவர். தாமோதர் மற்றும் பாலகிருஷ்ண சாபேகர் என்ற சகோதரர்கள் அவருடைய இரகசிய இயக்கங்களின் இரண்டு தூண்களாக விளங்கினர். இவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டு தூக்கிலிட்டப்பட்டனர்.

நம் நாட்டின் மற்ற புரட்சியாளர்கள் விநாயக தாமோதர சாவர்க்கர், குதிராம் போஸ், சந்திரசேகர ஆசாத் மற்றும் பகத்சிங் ஆவர். குதிராம் போஸ் போராட்டத்தில் தூக்குமேடை ஏறிய இந்தியாவின் முதல் தியாகி (பொ.ச. 1908) ஆவார். அப்போது அவருடைய வயது 19. இந்த சிறுவனின் தியாகத்தைப் பார்த்து நாடு முழுவதும் கண்ணீர் வடித்தது.

@KTBS
NOT TO BE REPUBLISHED

குதிராம் போஸ்


சந்திர சேகர் ஆசாத்

பகத்சிங்


விநாயக் தாமோதர் சாவர்க்கர்

விநாயக தாமோதர் சாவர்க்கர் மற்றொரு புரட்சியாளர். பொ.ச. 1899 இல் அவர் ‘நட்புக்கூட்டம்’ என்னும் இரகசிய இயக்கத்தை உருவாக்கினார். பின்னர் இது ‘அபிநவ பாரதம்’ என்று அழைக்கப்பட்டது அவருக்கு ஆங்கிலேயே அரசு ஆயுள் தண்டனை விதித்து, அந்தமான் சிறைக்கு அனுப்பியது. அவர் உடல்ரீதியாக கொடூரமாக சித்திரவதையை அனுபவித்தார். அந்தமான் சிறைச்சாலையில் இந்திய அரசாங்கம் அவருக்கு ஒரு நினைவு சின்னம் அமைத்துள்ளது.

சந்திரசேகர் ஆசாத் ‘ஹிந்துஸ்தான் சோஷியலிஸ்ட் குடியரசு’ அமைப்பில் (இந்துஸ்தான் சோசியலிஸ்ட் ரிபப்லிகன் அசோசியேசன்) சேர்ந்து காகோரி சதி, சட்டமன்றத்தில் குண்டு வீச்சு மற்றும் லாகூரில் பிரிட்டஷ் அதிகாரி ஆண்டர்சன் மீது குண்டு வீச்சு போன்ற பல நிகழ்வுகளில் ஈடுபட்டார்.

செயற்பாடு : ‘காகோரி சதி’ என்றால் என்ன? உங்கள் ஆசிரியரின் உதவியுடன் நிகழ்வைப் பற்றிய தகவல்களைச் சேகரிக்கவும்.

NOT TO BE REPUBLISHED @KTBS

பிரிட்டிஷ் சிப்பாய்களிடமிருந்து தப்பித்துக் கொள்ள ஆசாத் ஒரு சிறிய துப்பாக்கியைக் கொண்டு தனியாக போராடினார். ஒரு குண்டு மீதமிருக்கும் போது தன் கன்னத்தில் குறிவைத்து தன்னைத் தானே சுட்டுக்கொண்டு ‘நான் கைதாவதில்லை’ என்ற தமது சபதத்தை நிறைவேற்றினார். பகத்சிங்க், ராஜகுரு சுகதேவ், பகவதி சரண் மற்றும் கயாபிரசாத் போன்ற பலர் இந்தியாவின் விடுதலைக்காக தம்மையே அர்பணித்தனர்.

பகத்சிங், இந்துஸ்தான் சோசியலிஸ்ட் ரிபப்லிகின் அசோசியேஷன் அமைப்பில் சேர்ந்து அதன் முக்கிய செயலாளர் ஆனார். பொ.ச. 1929 இல் பகத்சிங்க், ராஜகுரு மற்றும் சுகதேவ் அவர்கள் தில்லி மத்திய சட்டமன்றத்தின் மீது குண்டு வீசினார்கள். லாகூர் மத்திய சிறைச் சாலையில் இந்த மூவரும் தூக்கிலிடப்பட்டனர். பகத்சிங் ‘இன்குலாப் சிந்தாபாத்’ (புரட்சி வாழ்க) என்ற முழக்கத்தை முதலில் முழங்கிய இந்தியர் ஆவார். மொத்தத்தில் மக்களிடையே அரசியல் விழிப்புணர்வை ஏற்படுத்துவதில் புரட்சியாளர்கள் வெற்றி பெற்றனர். இந்திய இளைஞர்கள் அவர்களால் ஈர்க்கப்பட்டனர்.

வெளிநாட்டில் குடியேறிய இந்தியர்களும் புரட்சிகர நடவடிக்கைகளில் ஈடுபடத் தொடங்கினர். சோஹன் சிங் பக்னா பொ.ச. 1913 இல் சான்பிரான்சிஸ் கோவில் கதர் இயக்கத்தை தொடங்கினார்.

மிதிவாதிகளால் நிறுவப்பட்ட காங்கிரஸ் கட்சி, படிப்படியாக மக்கள் இயக்கமாக மாறியது. காங்கிரஸ் அமைப்பு, படிப்படியாக வெவ்வேறு அரசியல் சார்பு வளர்ச்சிகளுக்கு உள்ளானது. அமிதவாதிகள் காங்கிரசுக்கு உணர்வுப் பூர்வமான வீரியத்தைக் கொடுத்தனர். ஆங்கிலேயர்கள் காங்கிரசை எதிர்ப்பதன் மூலம் அதை உடைக்க முயன்றனர். அவர்கள் குறுகலான வகுப்புவாதம் மற்றும் அரசியல் சூழ்ச்சிகளின் மூலம் தேசியப் போராட்டத்தின் உக்கிரத்தைக் குறைக்க முயன்றனர். இதனால் சுதந்திரப் போராட்டத்திற்கு தற்காலிகமாக இடையூறு ஏற்பட்டாலும் அதை முற்றிலுமாக நிறுத்த முடியவில்லை. பொ.ச. 1919க்குப் பிறகு காந்திஜியின் தலைமையில் காங்கிரசு புதிய வடிவம் பெற்றது.

2. காந்தி யுகம் (பொ.ச. 1919-1947)

மகாத்மா காந்தி

மோகன்தாஸ் கரம்சந்த் காந்தியைப் பற்றி அறிந்த அளவு எந்த ஒரு இந்தியரைப் பற்றியும் நவீன உலகில் அறிந்திருக்க முடியாது. அகிம்சையும் அமைதிப் போராட்டமும் காந்தியடிகளின் ஆயுதங்களாக இருந்தன. சுதந்திர போராட்டத்தை மக்கள் இயக்கமாக மாற்றினார். எளிமை, நற்குணம், உண்மை அவரது வெற்றியின் வலுவான சூத்திரமாக இருந்தது. இவையே பெண்கள் உள்பட அனைத்து சமூக வர்க்கத்தினரையும் சுதந்திர இயக்கத்தில் பங்கேற்கத் தூண்டிய முக்கிய கொள்கைகளாகும் .

ஆரம்ப வாழ்க்கை : காந்தியடிகள் 1869 ஆம் ஆண்டு அக்டோபர் 2ஆம் தேதி போர்பந்தரில், கரம்சந்த் காந்தி மற்றும் புத்தலிபாய் என்பவர்களுக்கு மகனாகப் பிறந்தார். இவரது தந்தை போர்பந்தர் மற்றும் ராஜ்கோட் மாகாணங்களின் திவானாக (முதலமைச்சர்) இருந்தார். அவரது தாயார் ஆழ்ந்த தெய்வ பக்தியுள்ள பெண்மணி. காந்தியடிகளுடைய மாண்புகளும் ஈடுபாடும் அவருடைய தாயாரிடமிருந்து அவருக்கு புகுத்தப்பட்டவை ஆகும்.

©KTBS NOT TO BE REPUBLISHED

மகாத்மா காந்தி அவர்களை நாம் அன்புடன் 'பாபு' என்று நினைவுகூறுகிறோம். இந்திய தேசிய போராட்டத்தில் அவர் சிறப்பான தலைவராக இருந்தார். சுரண்டல், தீண்டாமை ஒழிப்பு மற்றும் இந்து முஸ்லீம் நல்லிணக்கத்தில் தன்னை முழுவதுமாக அற்பணித்துக் கொண்டார். அவருடைய தலைமையிலான அரசியல் போராட்டங்களின் இக்காலகட்டம் 'காந்தி யுகம்' (பொ.ச. 1919-1947) என்று அழைக்கப்படுகிறது.

காந்தியடிகளின் வாழ்க்கையில் விளைவை ஏற்படுத்திய முக்கிய புத்தகங்கள் பகவத் கீதை, ஜான் ரஸ்கினின் இறுதி வரை' (அன்ட்டு திஸ் லாஸ்ட்)டால்ஸ்டாயின் (தி கிங்டம் அஃப் காட் லைஸ் வித்தின்யூ) மற்றும் 'சத்திய ஹரிச்சந்திரா' நாடகம் ஆகும்.

தென் ஆப்ரிக்காவில் காந்திஜி

காந்தியடிகளின் ஆரம்பக்கால கல்வி போர்பந்தரில் நடந்தது. அவர் உயர் கல்விக்காக இங்கிலாந்து சென்றார். அவர் ப்ரிட்டென்னில் சட்டத்தில் பட்டம் பெற்றார். பொ.ச. 1891 இல் இந்தியாவிற்குத் திரும்பினார், ராஜ்கோட் மற்றும் மும்பையில் வக்கீல் தொழிலை ஆரம்பித்தார். பிறகு தாதா அப்துல்லா நிறுவனத்தின் அழைப்பின் பேரில் சட்ட ஆலோசகராக தென் ஆப்ரிக்காவிற்கு சென்றார். அங்கு அவர் சக்தியாகிரகம் மற்றும் அகிம்சையைப் பயன்படுத்தி இந்தியர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு எதிராகப் போராடினார் தென்னாப்பிரிக்காவில் அவர் மேற்கொண்ட சோதனைகள் அவரது திறமைகளையும் உணர்வையும் மேம்படுத்தின. இன்று காந்தியடிகளின் எதிர்ப்பு முறை 'காந்திகிரி' என்று பிரபலமாகி வருகிறது.

தென்னாப்பிரிக்காவில் இந்தியர்கள் கீழ்த்தர குடிமக்களாக வாழ்வதைக் கண்டு காந்திஜி அதிர்ச்சியடைந்தார். அவர் நிறவெறி நடைமுறைக்கு எதிர்ப்பு தெரிவித்தார். சத்தியாகிரகம் மற்றும் அகிம்சை வழிகளைப் பயன்படுத்தி இனபேதங்களை மாற்றுவதில் கணிசமான வெற்றியைப் பெற்றார்.

'சத்யாகிரகம்' என்ற வார்த்தை இரண்டு சமஸ்கிருத வார்த்தைகளால் ஆனது. 'சத்யா' அதாவது 'உண்மை' மற்றும் 'அக்ரஹா' அதாவது 'வற்புறுத்துதல். சத்தியத்தின் பக்கம் நில்லுங்கள் என்பது தான் அந்த வார்த்தையின் பொருளாகும்.

NOT TO BE REPUBLISHED @TSCERT

செயல்பாடு : சத்தியாகிரகம் மற்றும் தென்னாப்பிரிக்காவில் காந்தியடிகள் நடத்திய அகிம்சைப் போராட்டம் பற்றிய கூடுதல் தகவல்களை சேகரிக்கவும்.

காந்தியடிகள் பொ.ச. 1915இல் இந்தியா திரும்பிய பிறகு, சபர்மதி ஆசிரமத்தை (பொ.ச. 1916) நிறுவினார். அவரது அரசியல் குருவான கோபால கிருஷ்ண கோகலேயின் ஆலோசனையின் பேரில், அவர் நாடு முழுவதும் சுற்றுப்பயணம் மேற்கொண்டு, இந்திய மக்களின் துன்பகரமான நிலைமையை பார்த்தார். இதுவே அவரது முதல் சமூக அனுபவம் ஆகும். இந்த வழியில் காந்தியடிகள் இந்தியாவின் சமூக அமைப்பைப் பற்றி அறியத் தொடங்கினார்.



தென்னாப் பிரிக்காவில் சட்ட ஆலோசராக காந்தியடிகள்

ஆரம்பக்கால அரசியல் வாழ்க்கை

சுதந்திரப் போராட்ட வரலாற்றில் பொ.ச. 1919 ஆம் ஆண்டு ஒரு மகத்துவமான இலக்குக் கட்டமாகும். காந்தியடிகள் அரசியல் அரங்கில் நுழைந்த ஆண்டு இதுவாகும் ஆங்கிலேயர்களை உடல் பலத்தால் வெளியேற்ற முடியாது என்ற உண்மையை அவர் உணர்ந்தார். 1919இல் காந்தியடிகள் ரௌலத் சட்டம் மற்றும் ஜாலியன்வாலா பாக் படுகொலைகளுக்கு எதிராக போராட்டம் நடத்தினார் மற்றும் கிலாபத் போராட்டத்தின் தலைமையை ஏற்றார். இதன் மூலம் இந்து மற்றும் முஸ்லீம்களின் இடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவது அவருடைய நோக்கமாக இருந்தது.

©KTBS NOT TO BE REPUBLISHED

கிலாபத் போராட்டம் என்றால் என்ன?

துருக்கி சாமிராஜ்ஜியம் கலீஃப்(சமயத் தலைவர் அவர்களின் கீழிருந்தது. 'கலீஃப்' அவர்களது சமூகத் தலைவர் என்று இஸ்லாமியர்கள் நம்பினர். முதல் உலகப் போரில் துருக்கியர் இங்கிலாந்தை எதிர்த்துப் போராடி தோற்றனர். துருக்கியின் பகுதியாக இருந்த அரேபியா, ஜோர்டான், ஈராக் போன்றவைகள் சுதந்திர நாடுகளாயின. பொ.ச. 1919 இல் கமல் பாஷா என்ற தலைவர் துருக்கி கலீஃப்களை ஆட்சியிலிருந்து நீக்கி அதிகாரத்திற்கு வந்தார். இதற்கான எதிர் விளைவு இந்திய முஸ்லீம்கள் கலீஃப்களின் சார்பாகவும் ஆங்கிலேயர்களின் எதிராகவும் கிளர்ச்சி செய்தார்கள். இதை கிலாஃபத் இயக்கம் என்றார்கள். காந்தி இவ்வியக்கத்தின் தலைவராக செயல்பட்டார். முகமது அலி மற்றும் சௌகத் அலி (அலி சகோதரர்கள்) இந்த கிளர்ச்சியின் முக்கிய தலைவர்களாவர்.

ஒத்துழையாமை இயக்கம் (பொ.ச. 1920-1922)

காந்தியின் தலைமையில் ஒத்துழையாமை இயக்கம் 1920 இல் தொடங்கியது. அவர் அரசாங்கத்துடன் ஒத்துழைக்கக்கூடாது என்றும் சுயராஜ்ஜிய (தன்னாட்சி)த்திற்காக ஆங்கிலேயரை வற்புறுத்த வேண்டும் என்றும் மக்களுக்கு அழைப்புவிடுத்தார். இப்போராட்டத்தின் ஆதரவாக நீதிமன்றங்கள், கல்வி நிறுவனங்கள், சட்டமன்றத் தேர்தல்கள் மற்றும் ஆங்கிலப் பொருட்களைப் புறக்கணித்தனர் அதுமட்டுமல்லாமல் அரசு நிகழ்ச்சிகளைப் புறக்கணித்தனர் மற்றும் அவர்களால் பெறப்பட்ட விருதுகள் மற்றும் பட்டப் பெயர்களைத் திரும்ப கொடுத்துவிட்டனர். சுதந்திரப் போராட்டத்தை மிக உயர்ந்த நிலைக்குக் கொண்டு செல்ல காந்தியடிகள் நேர்மறையான செயல்பாடுகளை வகுத்தார். இச்செயல்பாடுகள் நூற்பு, நெசவு, தீண்டாமை ஒழிப்பு மற்றும் இந்து- இஸ்லாமிய ஒற்றுமையை மேம்படுத்துதல் ஆகியவற்றின் அவசியத்தை வலியுறுத்தியது.

இக்காலக்கட்டத்தில் முக்கிய தலைவர்களான சித்தரஞ்சன் தாஸ், மோதிலால் நேரு, வல்லபாய் படேல், சுபாஷ்சந்திர போஸ் போன்றவர்கள் இயக்கத்தில் இணைந்தார்கள் அவர்களுடைய அகிம்சை மற்றும் சத்தியாகிரக வழிகளால் சமுதாயத்தின் அனைத்து தரப்பு மக்களும் கவரப்பட்டு இயக்கத்தில் பங்கேற்றார்கள். இந்த இயக்கத்தில் மாணவர்கள் விவசாயிகள் மற்றும் பெண்கள் இருந்தனர். இது இந்தியர்களுக்கு புதிய அனுபவமாக இருந்தது. ரவீந்திர நாத் தாகூர் தம் ‘நைட்ஹூட்’ விருதையும், காந்தி தம் ‘கைசர்-எ-ஹிந்த்’ பதவியை ஆங்கிலேயருக்கு திருப்பிக்கொடுத்தனர். இந்த நேரத்தில் அரசாங்கம், இயக்கத்தை ஒடுக்க பல அடக்கு வழிமுறைகளைப் பின்பற்றியது, இதற்கு பதிலடி கொடுப்பது போல உத்திர பிரதேசத்தில் சௌரி சௌராவில் வெகுண்டெழுந்த மக்கள் திரண்டு பல வன்செயல்களில் ஈடுபட்டனர். அங்கிருந்த காவல்நிலையத்தில் 22 காவலாளிகளை உயிருடன் எரித்தார்கள் (பொ.ச. 1922). காந்தி இந்த நிகழ்வை மிக தீவிரமாக கருதினார், மேலும் மக்கள் தமது அகிம்சை கொள்கைக்கு எதிரான வன்முறை வழிகளைப் பின்பற்றுவதைக் கண்டு மிகவும் வருந்தி, அவர் தனது ஒத்தழையாமை இயக்கத்தை திரும்பப் பெற்றார்.

©KTBS NOT TO BE REPUBLISHED

காந்தியடிகளின் முக்கிய நூல்கள் மற்றும் பத்திரிக்கைகள்

சந்திய சோதனை, ஹிந்த் சுவராஜ், தென்னாப்ரிக்காவில் சத்தியாகிரகம் இவை காந்தியடிகளின் நூல்கள் ஆகும். 'ஹரிஜன' மற்றும் 'யங் இந்தியா' செய்தித்தாள்களின் ஆசிரியரும் ஆவார்.

ஒத்துழையாமை இயக்கம் சுயராஜ்ஜியத்தை நிலை நாட்டத் தவறிய போதிலும், அது மக்களின் முதல் உலகப் புகழ்பெற்ற இயக்கமாகும். இதன் காரணமாக தேசிய உணர்வுகள் நாட்டின் மூலை முடுக்கெல்லாம் பரவின. காந்தியடிகள் பொ.ச. 1924 முதல் பொ.ச. 1929 வரை காதியை (கதராடை) மக்களிடம் பிரபலமாக்குவதிலும், ஹரிஜனங்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். சுயராஜ்ஜியவாதிகள் சி.ஆர். தாஸ் மற்றும் மோதிலால் நேரு அவர்களின்தலைமையில்தேசியபோராட்டச் செயல்களை தொடர்ந்தனர்.



மோதிலால் நேரு

மோதிலால் நேரு அறிக்கை (பொ.ச. 1927)

மோதிலால் நேரு அவர்கள் ஜவஹர்லால் நேருவின் தந்தையாவார். அனைத்து சமூகத்தினரும் ஏற்றுக்கொள்ளும் வகையில் அரசியலமைப்பை உருவாக்குமாறு ஆங்கிலேயர்கள் இந்திய அரசியல் தலைவர்களுக்கு சவால் விடுத்தனர். இந்திய அனைத்துக் கட்சி மாநாட்டில் மோதிலால் நேரு தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டது. அந்த குழு ஆங்கிலேயர்கள் வியக்கும் வகையில் அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்கியது. இது ஆங்கிலேய ஆட்சியின் கீழ் சுயாட்சி அந்தஸ்தை ஏற்றுக்கொண்டது மட்டுமல்லாமல் இறுதியில் முழுமையான சுதந்திரத்தைப் பெற்றுக் கொள்ளும் குறிக்கோளையும் வெளிப்படுத்தியது.

சைமன் ஆணையம் (பொ.ச. 1928)

ஒத்துழையாமை இயக்கம் இடையிலேயே நிறுத்தப்பட்டதன் காரணமாக அரசியல் போராட்டம் தற்காலிகமாக

©KTBS NOT TO BE REPUBLISHED

பலவீனமடைந்தது. பிரிட்டிஷ் அரசாங்கம், பொ.ச. 1919 இன் சீர்திருத்தங்களை இந்தியாவின் மாகாணங்களில் எவ்வாறு நிறைவேற்றுகிறது என்ற ஆய்வு நடத்தி அறிக்கை அளிக்க சைமன் ஆணையத்தை 1928 இல் இந்தியாவிற்கு அனுப்பியது. குழுவில் இருந்த எல்லா உறுப்பினரும் ஆங்கிலேயர்களாகவே இருந்தனர், இந்தியர்களுக்கு அதில் முக்கியத்துவம் இருக்கவில்லை.

சைமன் குழு எதிர்ப்பு காட்சிபடம்

அதனால் இந்தியர்கள் 'சைமன் திரும்பிப்போ' என்ற முழுக்கமிட்டு குழுவை எதிர்த்தனர். லாகூரில் நடந்த வெளிப்படையான எதிர்ப்பு தீவிர மடைந்தது. இந்த தருணத்தில் நடந்த லத்தி சார்ஜில், லாலா லஜ்பத்ராய் காயமடைந்து குணப்படுத்த முடியாமல் காலமானார் (பொ.ச. 1928). அவரது தியாகம் மக்களின் சகிப்புத்தன்மையை உடைத்தது.

ஆங்கிலேயர்களை இந்தியாவை விட்டு அனுப்புவது பற்றி லாலா லஜபத்ராயின் வார்த்தைகள் 'என் உடலில் அடிக்கப்படும் இலத்தியடிகள், ஆங்கிலேயர்களின் சவப்பெட்டியின் ஆணிகளாக இருக்கும்' என்பதாகும்.

முழு சுதந்திரம் (பொ.ச. 1929)

இந்திய தேசிய காங்கிரசின் இளைஞர் பிரதிநிதியாக இருந்த ஜவஹர்லால் நேரு மற்றும் சுபாஷ்சந்திர போஸ் ஆகியோர் மோதிலால் நேருவின் அறிக்கையில் குறிப்பிட்டிருந்த 'ஆங்கில அரசின் கீழான சுயாட்சி நிலையை' ஏற்றுக்கொள்ளவில்லை. இதன் விளைவாக பொ.ச. 1929 இல் லாகூரில் நடந்த காங்கிரசு

மாநாட்டில் 'முழு விடுதலை' என்ற முடிவு தாக்கல் செய்யப் பட்டது. பொ.ச. 1930 ஆம் ஆண்டு ஜனவரி 26 ஆம் தேதியை 'முழுசுயராஜ்ஜிய' தினமாக கொண்டாட மாநாட்டில் முடிவு செய்யப்பட்டது. இந்த வரலாற்றுக் கொண்டாட்டத்தின் நாள் நமது நினைவில் என்றும் இருக்க சுதந்திர இந்தியாவின் அரசியலமைப்புச் சட்டம் ஜனவரி 26, பொ.ச. 1950 இல் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அன்றிலிருந்து ஒவ்வொரு ஆண்டும் இந்த நாளைக் குடியரசு தினமாக கொண்டாடிக் கொண்டிருக்கிறோம்.

மக்கள் சட்ட மறுப்பு இயக்கம்

மக்கள் சட்ட மறுப்பு இயக்கத்தை பொ.ச. 1930 ஆம் ஆண்டு மார்ச் 12 அன்று காந்தியின் புகழ்வாய்ந்த தண்டி நடைப்பயணத்துடன் ஆரம்பமானது. தேர்ந்தெடுத்த 78 தொண்டர்களுடன் காந்தியடிகள் சபர்மதி ஆசிரமத்திலிருந்து குஜராத்தின் கடலோரத்தின் தண்டிவரை சுமார் 375 கி.மீ நடந்தார். மக்களே உப்பு தயாரிப்பதன் மூலமாக வரிச்சட்டங்களை எதிர்ப்பது இந்த நடைப்பயணத்தின் முக்கிய குறிக்கோளாக இருந்தது.

தண்டி யாத்திரை காட்சி

சட்ட மறுப்பு இயக்கம் நாட்டின் பிற பகுதிகளுக்கும் மிக வேகமாக பரவியது. மக்கள் போராட்டங்களில் ஈடுப்பட்டனர். வெளிநாட்டுப் பொருட்களைப் புறக்கணித்தனர். காதியின் (கதர்) பயன்பாட்டைப் பிரச்சாரம் செய்தனர். மது விற்பனைக்கு எதிர்ப்பு தெரிவித்தனர். வன சத்தியாகிரகம் மற்றும் வரி புறக்கணிப்பு ஆகியவற்றில் பங்கேற்றனர். அங்கோலாவில் நடைபெற்ற உப்பு சத்தியாகிரகம் இந்தியா முழுவதும் அதிக முக்கியத்துவம் பெற்றது.

இதே நேரத்தில் வடமேற்கு இந்தியாவில் ‘எல்லை காந்தி’ என்றழைக்கப்பட்ட கான் அப்துல் கபார் கான், ‘குதாயி கித்மத்காரா’ (கடவுளின் தொண்டர்கள்) என்ற அமைப்பை துவங்கினார். ஆரம்பித்தார். நாகாலந்தில் 13வயது சிறுமி ராணி காய்டின்லூ, ஆங்கிலேயருக்கு எதிராக கிளர்ச்சி செய்தாள். ஆதலால் அவர்கள் இந்தியர்களுக்கு சில அரசியல் உரிமைகளை வழங்க முன்வந்தார்கள்.

வட்ட மேசை மாநாடுகள் (பொ.ச. 1930-1932)

தண்டி நடைப்பயணத்திற்கு பிறகு ஆங்கில அரசு மூன்று வட்ட மேசை மாநாடுகளை லண்டனில் ஏற்பாடு செய்தது. காங்கிரசின் சார்பாக காந்திஜி இரண்டாம் வட்ட மேசை மாநாட்டில் பங்கேற்றார். ஆனால் அந்த மாநாடுகள் இந்திய அரசியல் பிரச்சனைகளுக்குத் தீர்வு காண்பதில் தோல்வியுற்றது.

பிரிட்டிஷ் அரசாங்கம் பொ.ச. 1935 இல் இந்தியர்களுக்கு அரசாங்கத்தில், அரசியல் மற்றும் நிர்வாகப் பொறுப்புகளை அதிகமாக ஏற்படுத்திக் கொடுக்கும் நோக்கத்துடன் ‘இந்திய அரசு சட்டத்தை’ நடைமுறைக்கு கொண்டு வந்தது.

‘இந்தியாவை விட்டு வெளியேறு’ இயக்கம் (பொ.ச. 1942)

கிரிப்ஸ் ஆணையத்தின் தோல்வி இந்தியர்களை கோபம் அடைய செய்தது. காந்திஜி பொ.ச. 1942, ஆகஸ்ட் 8 ஆம் தேதியன்று மும்பையில் காங்கிரசு மாநாட்டைக் கூட்டினார் அங்கு புகழ்பெற்ற ‘வெள்ளையனே வெளியேறு’ என்ற முடிவு ஏற்றுக் கொள்ளப்பட்டது. இந்தியர்களுக்கு ‘செய் அல்லது செத்து மடி’ என்ற அழைப்பை விடுத்தார். மறுநாளே காந்தியடிகளையும் இன்ன பிற தலைவர்களை அரசாங்கம் கைது செய்தது

©KTBS NOT TO BE REPUBLISHED

வெள்ளையனே வெளியேறு
இயக்கத்தில் பங்கேற்ற திரளான மக்கள்

கைதான செய்தி பரவியவுடன் நாடு முழுவதும் கடையடைப்பு, பள்ளி கல்லூரிகளில் மற்றும் தொழிற்சாலைகளில் ஆங்கிலேயருக்கு எதிரான போராட்டங்கள் நடந்தன. காவல் நிலையங்கள், அஞ்சல் அலுவலகங்கள், ரயில் நிலையங்கள் தாக்கப்பட்டன. மாணவர்கள், தொழிலாளிகள் மற்றும் விவசாயிகள் கிளர்ச்சியை ஆதரித்தார்கள்.

> உத்திரப் பிரதேசத்தின் பல்லியா, வங்காளத்தின் தாம்லுக், மும்பை மாகாணத்தின் சதாரா மற்றும் இந்தியாவின் பிற பகுதிகளில், புரட்சியாளர்கள் இணையான அரசாங்கங்களை நிறுவினர். இந்நேரத்தில், கருநாடகத்தின் ஷிவமொக்கா மாவட்டத்திலுள்ள ‘இசூரு’ கிராமம் முதலாவதாக தன்னை சுதந்திரத்தை அறிவித்துக்கொண்டது.

‘வெள்ளையனே வெளியேறு இயக்கமும்’ உடனடி அரசியல் நோக்கங்களை அடையத் தவறிவிட்டது. ஆனால் இந்தியர்கள் சுதந்திரம் அடைவதில் உறுதியாக இருந்தனர் என்ற செய்தி தெளிவாக இருந்தது. இது காந்திய காலத்து மக்களின் மிகபெரிய மக்கள் இயக்கமாக இருந்தது.

> ***காந்தியைப் பற்றி ஐன்ஸ்டைனின் நோக்கீடு :*** புதிய தலைமுறைகள் வரும், ஆனால், காந்தியடிகளைப் போல சதையாலும் இரத்தத்தாலும் உண்டான இத்தகைய மனிதர் ஒருவர் இந்த பூமயின் மீது நடமாடினார் என்பதை எதிர்கால சந்ததியினர் நம்பமாட்டார்கள்.

சோசியலிஸ்ட்கள்:

ஜவஹர்லால் நேரு

ஜெயபிரகாஷ் நாராயண்


ஆச்சாரியா நரேந்திரதேவ்

©KTBS NOT TO BE REPUBLISHED

பொ.ச. 1930 இல் காங்கிரசின் உள்ளும் புறமும் சோசியயிஸ்ட் சிந்தனைகள் வெளியிடப்பட்டன. பொ.ச. 1934 இல் காங்கிரசு மாநாட்டில், சோசியலிஸ்ட் கூட்டம் ஒன்று வெளிப்பட்டது. பெரும்பாலான சோசியலிஸ்டுகள் இளைஞர்களாக இருந்தனர். அவர்கள் குறுகிய காலத்திலேயே காங்கிரசு சோஷியலிஸ்ட் கட்சியை ஆரம்பித்தார்கள். அவர்களுடைய பொதுச்செயலாளர் ஜெயபிரகாஷ் நாராயணன். ஆச்சாரியா நரேந்திரநாத் தேவ் மற்றொரு முக்கியமான தலைவர் ஆவார். காங்கிரசிலிருந்த சோசியலிஸ்ட் தலைவர்களில் முக்கியமானவர்களில் புகழ்பெற்றவர் ஜவஹர்லால் நேரு மற்றும் சுபாஷ் சந்திர போஸ் ஆவர். நேரு தன்னை ஒரு சோசியலிஸ்ட் என்று குறிப்பிட்டாலும், கொள்கையின் அடிப்படையில் காந்தியோடு இருந்தார்.

சோஷியலிஸ்டுகள், பலர் விவசாயிகள் மற்றும் தொழிலாளர் இயக்கங்களை நிறுவுவதன் மூலம் இந்திய சமுதாயத்தின் பலவீன இனத்தின் நல் வளர்ச்சிக்காக பாடுப்பட்டனர், ஜெய்பிரகாஷ் நாராயண், ராம்மனோஹர் லோகியா, அருணா அசப் அலி போன்ற சோசியலிஸ்ட் தலைவர்கள் வெள்ளையனே வெளியேறு (குவிட் இந்தியா) இயக்கத்தில் பெரும் பங்காற்றி மக்கள் விரும்பும் தலைவர்களாகத் திகழ்ந்தனர்.

NOT TO BE REPUBLISHED ©KTBS

ஜெயபிரகாஷ் நாராயண் (ஜே.பி)

ஜெயபிரகாஷ் நாராயண், பொ.ச. 1902 இல் பீகாரில் பிறந்தார். உயர் கல்வியை ஏழு ஆண்டுகள் அமெரிக்க பல்கலை கழகங்களில் கற்றார். அங்கு பயிலும் போது அவருக்கு சோசியலிஸ்ட் (பொது நலக்கோட்பாடு) அறிமுகமானது. இந்தியாவிற்கு திரும்பிய பின் ஜவஹர்லால் நேருவின் வழிகாட்டுதலின் பேரில் காங்கிரசு கட்சியில் இணைந்தார். பொ.ச. 1934 இல் '**காங்கிரசு சோசியலிஸ்ட் கட்சி**'யை ஆரம்பித்தார். பொ.ச. 1941 இல் கைது செய்யப்பட்ட ஜெயபிரகாஷ் நாராயண் மறு ஆண்டு ஹஜாரிபாக் சிறைச் சாலையிலிருந்து தப்பித்து தலைமறைவானார். அவர் தலை மறைவாக இருந்த இடத்திலிருந்தே 'வெள்ளையனே வெளியேறு' இயக்கத்திற்கு ஆதரவு அளித்தார் பிறகு மாறுவேடத்தில் இந்தியா

முழுவதும் பயணம் செய்தார் பொ.ச. 1944 இல் ஆங்கில அரசு அவரை மறுபடியும் கைது செய்து லாகூர் கோட்டையில் அடைத்தது. பிறகு அங்கிருந்து விடுதலை அடைந்தார்.

சுதந்திரத்திற்குப் பிறகு அவர் வினோபா பாவேயின் ‘பூதான்’ இயக்கத்தில் தன்னை இணைத்துக் கொண்டார். பொ.ச. 1970 ஆம் தசாப்தத்தில் அரசியல், பொருளாதார மற்றும் சமூக ரீதியாக இந்தியா மாபெறும் மாற்றத்தை கண்டது. பொ.ச. 1975ல் செயல்படுத்தப்பட்ட அவசர நிலை இந்தியாவின் அரசியல் வரைபடத்தை மாற்றியது. ஊழல் என்பது அந்த காலத்தின் பெரும் பிரச்சனையாகப் பேசப்பட்டது. பொ.ச. 1974 இல் தம்மை முழுமையாக அரசியலில் ஈடுபடுத்திக் கொண்ட ஜெயபிரகாஷ் நாராயண் ‘முழுமையான புரட்சி’ என்ற இயக்கத்தை தொடங்கினார். இந்த இயக்கத்தின் விளைவாக பொ.ச. 1977 இல் ஜனதா கட்சி அதிகாரத்திற்கு வந்தது. கட்சியில் ஏற்பட்ட குழப்பங்களால், ஜனதா கட்சி இரண்டாக பிரிந்தபோது மிகவும் மனவேதனை அடைந்தார், பொ.ச. 1979 இல் காலமானார். மக்கள் அவரை ‘லோக நாயகா’ (உலக நாயகன்) என்று அன்புடன் அழைத்தார்கள்.

பழங்குடியினர் மற்றும் விவசாயிகளின் போராட்டம்

பழங்குடியினர் முதலில் விவசாயிகளாகவே இருந்தனர். விவசாயத்துறையில் தொடர்ந்து துன்புற்றதால் அதன் அடிப்படை பிரச்சனைகளுககு எதிராக தங்கள் போராட்டங்களை ஏற்பாடு செய்ததால், அவர்களின் போராட்டங்கள், விவசாயிகள் போராட்டத்தின் ஒரு முக்கிய பகுதியாக கருதப்பட்டது. ஆங்கிலேயர் ஆட்சியின் கீழ் விவசாயிகள் மிகவும் மோசமான வகையில் பாதிக்கப்பட்டனர். அவர்கள் அரசாங்கத்தாலும், நிலப்பிரபுக்கள், இடைத்தரகர்கள், உள்ளூர் வியாபாரிகள், அதிகாரிகள் ஆகியோராலும் சுரண்டப்பட்டனர். அவர்களின் அவலநிலை அவர்களை நிலப்பிரபுக்கள் மற்றும் அரசாங்கத்திற்கு எதிராக கிளர்ச்சி செய்யத் தூண்டியது.

NOT TO BE REPUBLISHED @KTBS

ஆங்கிலேயர்களுக்கு எதிராக, தைரியமாக போராடிய முதல் சமூகம் இந்தியப் பழங்குடியினர் ஆவர். அவர்களின் பெரும்பாலான சண்டைகளில், பிரிட்டிஷ் அதிகாரிகள் மட்டுமே அவர்களுடைய எதிரிகள் அல்ல. வெளியிலிருந்து வந்து அவர்களை சுரண்டிய உள்ளூர் நிலப்பிரபுக்கள், பணக்கார குத்திகைக்காரர்கள், கிறித்துவ மிஷனரிகள் அனைவரும் அவர்களுக்கு எதிரிகளே. வன்முறையைத் தொடர்ந்து இரத்தம் சிந்துவது ஆதிவாசிகளின் போராட்டத்தின் முக்கிய அம்சமாகும். கோலா, சாந்தலா, முண்டா மற்றும் நாகா பழங்குடியினர் கிளர்ச்சி செய்த முக்கிய குழுக்களாகும். ஆதிவாசி சமூகத்திலிருந்தே இப்போராட்டத்திற்கு தலைமைத்துவம் உருவானது அக்கிளர்ச்சியின் முக்கிய அம்சமாகும்.

19ஆம் நூற்றாண்டில் விவசாயிகள், போராட்டங்கள் மற்றும் கிளர்ச்சிகள் மூலம் தங்கள் கோபத்தை வெளிப்படுத்தினர். 20 ஆம் நூற்றாண்டில் அவர்கள் அரசியல் சக்திகளின் ஆதரவைப் பெற்றனர் மற்றும் தேசிய இயக்கங்கள் மூலம் தங்கள் வலிமையை மேம்படுத்தினர்.

சம்பாரன், கெடா (கைரா), பர்டோலி, வங்காளத்தின் அவுரி (இண்டிகோ) விவசாயிகள் போராட்டம், மாப்பிள்ளை கிளர்ச்சி ஆகியவை முக்கிய விவசாயி போராட்டங்கள் ஆகும். இவற்றில் மூன்று கிளர்ச்சிகளைப் பற்றி அறிந்து கொள்வோம்.

சம்பரன், கெடா மற்றும் மாப்பிள்ளை கிளர்ச்சிகள்

சம்பாரன்: சம்பாரன் (பீகார்) என்பது விவசாயிகளின் அதிருப்தி மற்றும் தோட்டகாரர்களுக்கு எதிரான போராட்டம் ஆகும். இது நீண்ட வாலாற்றைக் கொண்டது. அவுரி (இண்டிகோ) பயிரிடும்படி தோட்டக்காரர்கள் விவாசாயிகளை வற்புறுத்தி வந்தனர். காந்தியடிகள் பொ.ச. 1917 இல் சம்பரன் சத்தியாகிரகத்தைத் தொடங்கினார். இறுதியில் விவசாயிகளின் பிரச்சனைக்கு தீர்வு கிட்டியது. இதன் பிறகு பாபு ராஜேந்திர பிரசாத் இந்த இயக்கத்தின் தலைவரானார்.

@KTBS NOT TO BE REPUBLISHED

கெடா விவசாயிகள் போராட்டம்: கெடா குஜராத் மாநிலத்தில் உள்ள ஒரு முக்கிய மாவட்டம் ஆகும். பொ.ச. *1918* ஆம் ஆண்டு மக்சூல் குறைந்ததால் விவசாயிகள் கடுமையான பொருளாதார பாதிப்புக்குள்ளயினர். இதன் பின்னணியில் அவர்கள் வரி செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்க வேண்டும் என்று அரசுக்கு வேண்டுகோள் விடுத்தனர். அரசு அவர்களின் கோரிக்கையை நிராகரித்தது. அது மட்டுமல்லாமல் வரி செலுத்த வேண்டும் என்று வலியுறுத்தியது. இதன் விளைவாக கெடாவில் விவசாயிகள் போராட்டததைத் தொடங்கினர். காந்திஜி இப்போராட்டத்திற்கு முழு ஆதரவு அளித்து, விவசாயிகளை, வரி செலுத்த வேண்டாம் என்று வலியுறுத்தினார். இறுதியில் அரசு தனது முடிவை மாற்றிக் கொண்டு, விவசாயிகள் யாருக்கெல்லால் வரி செலுத்த முடியுமோ அவர்கள் மட்டும் செலுத்தலாம் என்று கூறியது. இதை ஏற்றுகொண்ட காந்திஜி தனது சத்தியாகிரகத்தை திரும்ப பெற ஒப்புக்கொண்டார். இப்போராட்டத்தின் மூலம் சர்தார் வல்லபாய் படேல் தேசியத் தலைவராக வளர்ந்தார்.

மாப்பிள்ளை கிளர்ச்சி (பொ.ச. 1921) : விவசாயி போராட்டங்களில் மலபாரில் நடந்த மாப்பிள்ளை கிளர்ச்சி பிரபலமானது. மலபார் முஸ்லீம்கள் மாப்பிள்ளைகள் (மோப்லாக்கள்) என்று அழைக்கப்பட்டனர். அவர்கள் முக்கியமாக விவசாயத்தைத் தவிர தேயிலை மற்றும் காபி தோட்டங்களில் கூலி வேலை செய்து வந்தனர். விவசாயத்தில் ஈடுபட்டிருந்தவர்களில் பலர் குத்தகைக்காரர்களாவர். ஒப்பந்தத் தொகை அடிக்கடி உயர்த்தப்பட்டுக் கொண்டிருந்தது இவர்களின் கிளர்ச்சிக்கு முக்கிய காரணமாக இருந்தது. *19* ஆம் நூற்றாண்டில் பல எதிர்ப்புகள் இருந்தன. ஆனால் கிலாஃபத் இயக்கம் மாப்பிள்ளைகளிடம் புதிய உற்சாகத்தை ஏற்படுத்தியது. உள்ளூர் மாப்பிள்ளைத் தலைவர்கள் இயக்கத்தை வழிநடத்தினர். அவர்கள் ஜமீன்தாரர்களுக்கு எதிராக வன்முறைப் போராட்டத்தில் இறங்கி அவர்களுடைய சொத்துக்களை அழித்தார்கள். வன்முறையைத் தடுக்க ஆங்கிலேயர்கள் தென் மலபாரில் இராணுவச் சட்டத்தை பிறப்பித்தனர். இயக்கம் குறுகிய காலமே நீடித்தது. போராட்டம்

© KTBS NOT TO BE REPUBLISHED

வகுப்புவாத மோதலாக மாறியது. இருப்பினும் குறுகிய காலத்தில் பலவீன மடைந்தது.

பெண் சுதந்திர போராளிகள்

ராணி அப்பக்கா தேவி :

ராணி அப்பக்கா தேவி

காந்திக்கு முன்தான சுதந்திரப் போராட்டத்தில் கித்தூர் ராணி சென்னம்மா, கெளதி சென்னம்மா இவர்களின் வரிசையில் நிற்கும் மற்றொரு பெண்மணி ராணி 'அப்பக்கா தேவி'. இவர் செளடா வம்சத்தை சேர்ந்தவர். இவருடைய சித்தப்பாவானதிருமலராயர் அப்பக்காதேவிக்கு போர் நுணுக்கங்களில் பயிற்சி அளித்து பிறகு உள்ளால ராணியாக அதிகாரத்தில் அமர்த்தினார். அப்பக்கா மங்களூருவின் 'பங்கா' பகுதியின் லக்ஷ்மப்பா அரசரை மணமுடித்தார். ஆனால் இவருடைய மணவாழ்க்கை வெகு காலம் நிலைக்கவில்லை. இப்படியாக மறுபடியும் உள்ளாலுக்கு திரும்பினார். போர்த்துக்கீசியர்கள் அப்பக்காவிற்கு கப்பம் கட்ட வற்புறுத்திய போது இவர் மறுத்தார். விளைவாக பொ.ச. 1555இல் போர்த்துக்கீசியர்கள் ராணி அப்பக்காவின் மீது போர் தொடுத்தார்கள். இப்போரில் அப்பக்கா வெற்றியடைந்தார். பிறகு பொ.ச. 1568இல் போர்த்துக்கீசியர் வைஸ்ராயான அந்தோனியோ மொராகா வின் தலைமையில் உள்ளாலாவிற்குள் நுழைந்தார்கள். ராணி அங்கிருந்து தப்பித்து 200 சிப்பாய்களுடன் போர்த்துக்கீசியர்களின் படையைத் தாக்கினார். ஜெனரல் பெக்செடோ இப்போரில் உயிர் நீத்தார். போர்த்துக்கீசிய சிப்பாய்கள் சிறைபிடிக்கப்பட்டனர். தொடர்ந்து மற்றொரு போரில் போர்த்துக்கீசியரின் அட்மிரல் மாஸ்காரன்ஸ் உள்ளால சிப்பாய்களால் மரணமடைந்தான். ராணி அப்பக்கா போர்த்துக்கீசியப் படையை மங்களூரு கோட்டையை விட்டு வெளியேற வேண்டுமென்று வற்புறுத்தினார். ஆனால் போர்த்துக்கீதியர்கள் உள்ளாலாவின் செல்வத்தால் கவரப்பட்டு அடிக்கடி போர் தொடுத்தார்கள். பொ.ச. 1570இல் பிஜாபுர சுல்தான் மற்றும் கள்ளிக்கோட்டையின் ஜாமோரினுடன் நட்பு ஒப்பந்தத்தை அப்பக்கா ஏற்படுத்திக்கொண்டார்.

© KTBS NOT TO BE REPUBLISHED

அரசன் ஜாமோரினின் சேனாதிபதியான 'குல்டிபோ மார்க்ககர்' அப்பக்க தேவியின் சார்பாக போர் புரிந்து மங்களூரு கோட்டையை வசப்படுத்திக்கொண்டு திரும்பி வரும்பொழுது போர்த்துக்கீசியர்களால் கொல்லப்பட்டார். அப்பக்க தேவியின் கணவரான லக்ஷ்மரசனின் ஒத்துழைப்பால் போர்த்துக்கீசியர்கள் அப்பக்கா தேவியை போரில் தோற்கடித்து சிறையில் அடைத்தார்கள். சிறச்சாலையிலேயே அவர் காலமானார்.

ராணி அப்பக்காவின் நினைவாக மங்களூரு அருகிலுள்ள உள்ளாலத்தில் 'வீர ராணி அப்பக்கா' விழா கொண்டாடப்படுகிறது. சாகசம் புரிந்த பெண்மணிக்களுக்கு வீர ராணி அப்பக்கா விருதை அளிக்கிறார்கள். 15 ஜனவரி 2003இல் ராணி அப்பாக்காவின் உருவப்படத்துடன் கூடிய தபால் அட்டையை இந்திய தபால் துறை வெளியிட்டுள்ளது.

பள்ளாரி சித்தம்மா : (பொ.ச. 1903 - 1981)

இவர் இன்றைய ஹாவேரி மாவட்டத்தின் துண்டசீ கிராமத்து பாரம்பரிய குடும்பத்தில் பொ.ச. 1903இல் பிறந்தார். தந்தை கொட்டெகே பசப்பா. இவருடைய தொழில் வியாபாரமானாலும் விடுதலைப் போராட்டத்தில் ஆர்வமுள்ளவராக இருந்தார். தந்தை சித்தம்மாவிற்கு அன்றைய நாளிதழ்களையும் மற்றும் இதழ்களையும் தருவித்து கொடுத்ததால் தேசியவாத கருத்துக்களையும் சிந்தனைகளையும் படித்துத் தெரிந்துகொள்டார். விடுதலைப் போராளியான பல்லாரி முருகப்பாவை மணந்ததும் கூட இவர் விடுதலைப் போராட்டத்தில் முழுவதுமாக ஈடுபடக் காரணமானது. பொ.ச. 1930இல் பழைய மைசூர் சமஸ்தானத்தின் விடுதலைப் போராட்டமும் தீவிரமாக நடந்துகொண்டிருந்தது. அப்போது எஸ். நிஜலிங்கப்பா, டி. சித்தலிங்கய்யா, சர்தார் வீரண்ண கௌடா போன்ற விடுதலைப் போராளிகள் முன்னணியில் இருந்தனர். பல்லாரி சித்தம்மா பொ.ச. 1938இல் நடந்த சிவபுர காங்கிரசு மாநாட்டில் பங்கேற்றிருந்தார். 13 ஏப்ரல் 1938இல் கொடியேற்றி கைதானார். ஒரு மாதக் காலம் சிறைத்தண்டனை அனுபவித்தார். சமஸ்தானத்தில் கொடி ஏற்றிய முதல் பெண்மணி என்ற பெருமைக்குரியவரானார். சமஸ்தானத்தின் செய்தித்தாள்கள் சித்தம்மாவின் விடுதலைப் போராட்டத்தில் அர்பணிப்பை பாராட்டி எழுதியது.

© KTBS NOT TO BE REPUBLISHED

சிறையிலிருந்து விடுதலையான பிறகு சித்தம்மா முழுமூச்சோடு விடுதலைப் போராட்டத்தில் தொடர்ந்து ஈடுபட்டார். பிறகு பொ.ச. 1939இல் சித்ர துர்கா வன சத்தியாக்கிரகத்தில் பங்கேற்றார். தாவணகெரே தாலூக்காவின் அனகோடு மற்றும் மாயகொண்டா காட்டு பிரதேசங்களில் பனைமரத்தை வெட்டும் இயக்கத்தில் பங்கேற்று சிறை தண்டனையை அனுபவித்தார். பிறகு பொ.ச. 1942இல் வெள்ளையனே வெளியேறு இயக்கத்தில் பங்கேற்றார். இந்தியாவிற்கு சுதந்திரம் வந்த பின்பும் மைசூர் சமஸ்தானத்தை இந்திய ஒருங்கிணைப்பில் சேரும் தீர்மானத்தை அறிவிக்காததால் 1947இல் அரண்மனை சத்தியாகிரகம் அல்லது 'மைசூர் சலோ' சத்தியாகிரகம் ஆரம்பமானது. இந்த இயக்கத்தில் பல்லாரி சித்தம்மா கலந்து கொண்டார். இந்தப் போராட்டத்திற்குப் பின் மைசூர் சமஸ்தானம் இந்தியா ஒருங்கிணைப்பில் இணைந்தது. இத்துடன் அக்டோபர் பொ.ச. 1947இல் புதிய அரசாங்கம் கே.சி.ரெட்டியின் தலைமையில் ஆட்சிக்கு வந்தது. சுதந்திரத்திற்குப் பிறகு தாவனகெரே தாலூக்காவின் எம்.எல்.எ. சேவை செய்தார். கிராம ஏழை பெண்களின் ஆரோக்கியம் காக்க மாத்ருமந்திரங்களை தொடங்கி அவர்களுக்கு புதிய ஒளியானார். இவருடைய இந்த சேவைக்கு மாநில அரசு தாமிரபத்திரத்தை வழங்கி கௌரவித்தது. இப்படி பள்ளாரி சித்தம்மா மைசூரின் சுதந்திரப்போராட்டத்தில் சுறுசுறுப்பாக பங்கேற்று பெண்களின் மதிப்பை அதிகப்படுத்தினார்.

கமலாதேவி சட்டோபாத்யாய (பொ.ச. 1903 - 1988)

கமலாதேவி

கமலாதேவி சட்டோபாத்யாய பொ.ச.1903 ஏப்ரல் 3ஆம் தேதி மங்களூரின் பணக்கார குடும்பம் ஒன்றில் பிறந்தார். தந்தை தாரேஷ்வரா அனந்தராயர், தாய் கிரிஜாபாய். பிரிட்டிஷ் காலனி நிர்வாகத்தில் உயர் அதிகாரியாக இருந்தார். கமலாதேவி காதோலிக் கான்வென்ட் மற்றும் சென்ட் மேரிஸ் பள்ளியில் கல்வி கற்றார். இவருக்கு பதினான்கு வயதில் திருமணமானது. பிறகு குறுகிய காலத்திலேயே விதவையானார். பணியில் இருந்த அப்பா மதராசுக்கு

©KTBS NOT TO BE REPUBLISHED

இடமாற்றம் செய்யப்பட்டபோது மதராசில் கல்வியைத் தொடர்ந்தார். பிறகு ஆங்கிலேயர்களின் புகழ்பெற்ற லண்டன் ஸ்கூல் ஆப் எகனாமிக்ஸில் பட்டம் பெற்று இந்தியாவிற்குத் திரும்பி, சமூக சீர்திருத்தத்தில் ஈடுபட்டார். இந்த தருணத்தில் கவிஞர், இலக்கியவாதி, நாடக கலைஞரான ஹரீந்தரநாத சட்டோபாத்யாயா அவர்கள் அறிமுகமானார்கள். பிறகு அவரை மறுமணம் புரிந்து கமலாதேவி சட்டோபாத்யாவானார்.

கமலாதேவி தேசிய அரசியலில் அடையாளம் கண்டுகொண்ட கர்நாடகத்தின் பன்முக திறமைகொண்ட பெண்மணி. இவர் காந்தி மற்றும் சரோஜினிதேவி நாயுடு அவர்களின் தாக்கத்திற்கு ஆளாகி ஒத்துழையாமை இயக்கத்தில் பங்கேற்றார். கர்நாடகா முழுவதும் பயணித்து இளைஞர்களை விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்க ஊக்குவித்தார். பொ.ச. 1929இல் அலகாபாத் நகரத்தில் தேசியக் கொடியைப் பிடித்து கோஷமிட்டுக்கொண்டு ஊர்வலம் வந்து பிரிட்டிஷ் ஆதிக்கத்தை கண்டித்தார். லாகூர் காங்கிரசு மாநாட்டின் தீர்மானத்தின் படி காந்திஜி 12 மார்ச் 1938இல் மது 78 தொண்டர்களுடன் சபர்மதி ஆசிரமத்திலிருந்து உப்பு சத்தியாகிரக்கத்தை ஆரம்பித்தார். மே 5 அன்று தண்டியை அடைந்து மே 6 அன்று உப்பு தயாரிப்பதன் மூலமாக பிரிட்டீஷ் உப்பு வரிச் சட்டத்தை எதிர்த்தார். இந்த தருணத்தில் நாட்டின் மக்களை உப்பு சத்தியாகிரகத்தில் பங்கேற்க அறைகூவல் இட்டார். கமலாதேவி காந்தியை சந்தித்து பெண்களும் உப்பு சத்தியாக்கிரகத்தில் பங்குபெற அனுமதி பெற்றார். கமலாதேவியும் அவந்திபாய் கோகலேயும் உப்பு சட்ட மறுப்பு இயக்கத்தில் பெண்களின் முதல் குழுப் பெண்மணிகளாகப் பங்கேற்றனர்.

''காந்தி உப்பை வாங்கவும் இதன் விலை ஆறு மாத சிறைத் தண்டனை'' என்று சொல்லி உப்பை விற்று கைதாகி எர்வாடா சிறையில் தண்டனை அனுபவித்தார். தண்டனை அனுபவித்து சிறையிலிருந்து விடுபட்ட பிறகும் கூட பாம்பேயின் கபகாபுரத்தில் சுதேசி பொருட்களை விற்பனை செய்தார். தேசிய அளவில் காங்கிர சின் சேவதள பெண்கள் பகுதியின் பொறுப்பை ஏற்று

NOT TO BE REPUBLISHED @KTBS

நாடு முழுவதும் பயணம் செய்து தொண்டர்களை சேர்த்தார். பாம்பே மற்றும் போரோவிலியில் பெண் தொண்டர்களின் பயிற்சி முகாம்களை திறந்தார். சேவாதளத்தின் இந்த செயல்களால் பிரிட்டிஷ் அரசாங்கம் சேவாதளத்திற்கு தடை விதித்து கமலாதேவியை கைது செய்து ஆர்தர் தெருச் சிறையில் அடைத்தார்கள். இங்கே மீராபெஹன் அவர்களின் அறிமுகமானது. பிறகு வேலூர் சிறைக்கு மாற்றப்பட்டார்.

காங்கிரசு கட்சியில் அநேக உட்குழுக்கள் இருந்தன. சித்தாந்த அளவில் சோஷியலிஸ்ட் தாக்கத்திற்கு உள்ளான நேரு, ராம் மனோகர் லோகியா, ஆச்சார்யா நரேந்திர தேவ போன்றவர்கள் காங்கிரசு கட்சியிலேயே காங்கிரசு சோசியலிஸ்ட் கட்சி என்ற உட்குழுவை தொடங்கினார்கள். கமலாதேவி சட்டோபாத்யாயா பொ.ச. 1934இல் இக்கட்சியின் உறுப்பினரானார். சோசியலிஸ்ட் தத்துவங்களின் பிரசாரத்திற்காக கர்நாடகாவிற்கு வந்து பொதுக்கூட்டங்களில் சொற்பொழிவாற்றி மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தினார். இதனால் பல சிரமங்களுக்கும் ஆளானார். கமலாதேவி விடுதலைப் போராளியாக மட்டுமல்லாமல் சமூக சீர்திருத்தவாதி, பெண்ணிய சிந்தனையாளர், இலக்கியவாதி மற்றும் சினிமா நடிகையாகவும் இருந்தார். இவர் பல துறைகளில் ஆற்றிய சேவைக்காக பொ.ச. 1955இல் பத்மபூஷனா, பொ.ச. 1962இல் வத்முல் பௌண்டேஷன் விருது, பொ.ச. 1966இல் ராமோஸா மியாகன்ஸே விருது, சாந்தி பாரத தெஸெட்டேகொத்தம் விருது, சென்ட்ரல் அகாதமி விருது மற்றும் பொ.ச. 1987இல் பத்மவிபூஷன் விருது அளித்து கௌரவிக்கப்பட்டார். இப்படி பன்முக திறமைசாலியான கமலாதேவி சட்டோபாத்யாய கர்நாடகத்தின் பெருமைக்குரியவராவர். 1988இல் இவர் காலமானார்.

யசோதரம்மா தாசப்பா (பொ.ச. 1905-1980)

யசோதரம்மா 28 மே பொ.ச. 1905இல் பெங்களூரில் பிறந்தார். தந்தை ராமய்யா, தாய் ரேவம்மா. தந்தை சீர்திருத்தவாதியாக

@KTBS NOT TO BE REPUBLISHED

இருந்தார் பெங்களூரில் ஆரம்பக் கல்வியை முடித்த பிறகு மதராசின் குவீன் மேரிஸ் கல்லூரியில் சேர்ந்து இன்டர் மீடியட் கல்வியை முடித்தார். பெங்களூருக்கு திரும்பிய பிறகு ராவ் பகதூர் சென்னய்யா அவர்களின் மூன்றாவது மகனான தாசப்பாவுடன் பொ.ச. 1926இல் திருமணமாகி மணவாழ்க்கையில் காலடி எடுத்து வைத்தார். தாசப்பா மற்றும் யசோதரம்மா தாசப்பா சமூக சேவகர்கள். காந்தியின் தாக்கத்திற்கு ஆளாகி தேசிய காங்கிரசின் சுறுசுறுப்பான தொண்டர்களானார்கள். வார்தா சேவா கிராமத்தில் சிலகாலம் சேவை செய்து தம்பதிகள் இருவரும் திரும்பினார்கள். மைசூரு சமஸ்தான விடுதலை இயக்கத்தில் நிரந்தரமாக ஈடுபடுத்திக்கொண்டு சுதந்திரத்திற்குப் பிறகு மைசூரை இந்தியாவுடன் ஒருங்கிணைத்ததற்கான சாட்சிகளாக இருந்தார்கள்.

மைசூர் நீதி மன்றத்திற்காக நடந்த தேர்தலில் தமது கணவர் எச்.சி.தாசப்பா பிரஜா சம்யுக்த கட்சியின் வேட்பாளராக இருந்தாலும் யசோதரம்மா காங்கிரசில் உறுப்பினராகவே இருந்தார். சமூக சேவகியாக தொடங்கிய யசோதரம்மா விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்று பொ.ச. 1938இல் சிவபுரா கொடியேற்ற சத்தியாக்கிரகத்தில் பங்கேற்றார். பொ.ச. 1942இல் வெள்ளையனே வெளியேறு. இயக்கத்தில் யசே ாதரம்மா தாசப்பாவின் வீடு சுதந்திரப் போராட்டத்திற்கு ஏற்ற இரகசிய செயல்பாட்டு மையமாக இருந்தது. இயக்கங்ளைக் குறித்த கட்டுரைகளை இரகசியமாக அச்சிட்டு ஜ்வாலே (தீப்பிழம்பு) என்ற பத்திரிகையில் வெளியிட்டார்.

மைசூரு சமஸ்தானத்தில் மக்கள் ஆட்சியை நிறுவ 1947இல் நடந்த மைசூர் சலோ இயக்கத்தில் யசோதரம்மா தாசப்பா மக்களை ஒன்று திரட்டுவதில் உதவியாக இருந்தார். மைசூரு அரண்மனைக்கு முன்பு வழி மறியலும் வேலைநிறுத்தப் போராட்டங்கள் நடந்தன. இந்த இயக்கத்தின் தீவிரத்தை அறிந்த மகாராஜா அதிகாரத்தை மக்களுக்கு கைமாற்றினார். சுதந்திர சமஸ்தானத்தில் சட்டமன்ற உறுப்பினராக, லோகசபா உறுப்பினராக, எஸ். நிஜலிங்கப்பா மந்திரி சபையில் சமூக நல மந்திரியாக மகத்தான சேவை செலுத்தினார். இந்த பன்முக ஆளுமை படைத்த யசோதரம்மா தாசப்பா புற்று நோயால் பொ.ச. 1980இல் காலமானார்.

© KTBS NOT TO BE REPUBLISHED

உமாபாய் குந்தாபுர (பொ.ச. 1892-1992)

உமாபாய் குந்தாபுரா

உமாபாய் குந்தாபுரா கர்நாடகத்தின் உடுப்பி மாவட்டத்தின் குந்தாபுராவில் பொ.ச. 1892இல் பிறந்தார். தந்தை கொலிகெரே கிருஷ்ணராயர், தாய் துங்காபாய். தம் 13ஆம் வயதில் விடுதலைப் போராட்டத்தில் ஈடுபாடு கொண்ட சஞ்சீவ்ராவை திருமணம் செய்துகொண்டார். கணவரின் ஊக்கத்தால் பொ.ச. 1921க்குப் பிறகு நடந்த விடுதலைப் போராட்டங்களில் பங்கேற்றார். காந்தி வழியில் காங்கிரசு செயல்பாடுகளில் சிறப்பாக ஈடுபட்டார். துரதிருஷ்டவசமாக பொ.ச. 1923இல் கணவரை இழந்த பின் ஹுப்பள்ளியில் வசித்துவந்தார்.

இவர் திலக், காந்தி மற்றும் ஹார்டேகர் அவர்களின் தேசிய சிந்தனைகளின் தாக்கத்திற்கு ஆளாகி மராட்டி மொழியில் 'சுதேசி 'விரதா' என்ற நாடகத்தினை இயற்றி சுதேசி தத்துவத்தின் பெருமைகளைப் பரப்பினார். மும்பையில் சாரஸ்வத 'சாகித்யிக சமாஜா' மற்றும் பகினி மண்டலியுடன் திலக் பள்ளியின் பொறுப்பை ஏற்றுக்கொண்டார். இவை மகளிரிடம் சுதேசி, காதி பிரசாரம், தேசியக் கல்வியைப் பற்றிய விழிப்புணர்வுகளை ஏற்படுத்தியது. திலகர் காலத்தில் விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்றார். காந்தியின் தலைமையிலான போராட்டங்களிலும் பங்கேற்றார். பொ.ச. 1923இல் என்.எஸ். ஹார்டேகர் துவங்கிய சேவாதளா மகளிர் குழுவின் தலைமை ஏற்று 1924இல் பெளகாவி காங்கிரசு மாநாட்டில் முக்கிய பங்கேற்றார். உப்பு சத்தியாக்கிரகத்தில் பங்கேற்றார். இதனால் நான்கு மாத காலம் ஹிண்டலகா மற்றும் எரவாட சிறைகளில் இருந்தார். சிறையிலிருந்து விடுதலை அடைந்த பின் அங்கோலா, சிரசி, சித்தாபுரா போன்ற இடங்களில் சத்தியாகிரகத்தில் பங்கேற்று சிறை தண்டனையை அனுபவித்தார். உமாபாய் குந்தாபுரா பல ஆதரவற்ற பெண்களுக்கு ஆதரவளித்தார். உடல்நிலை சரியில்லாத காரணத்தால் பொ.ச. 1942 இல் வெள்ளையனே வெளியேறு இயக்கத்தில் பங்கேற்காவிட்டாலும் இந்த இயக்கத்தில் பங்குகொண்டு தலைமறைவாக இருந்த தொண்டர்களுக்கு ஆதரவளிக்கும் வகையில் இயக்கத்திற்கு உதவியாக இருந்தார். காந்தியின் அறிவுரைக்கு இணங்கி கஸ்தூரி பா நிறுவனத்தின் பொறுப்பை ஏற்றுக்கொண்டு சமூக சீர்திருத்த வேலைகளை

© KTBS NOT TO BE REPUBLISHED

தொடர்ந்தார். இப்படி சுயநலமில்லா ஆளுமை இந்திய விடுதலைக்கு தன்னை முழுமையாக அர்ப்பணித்துக்கொண்டார் உமாதேவி குந்தாபுரா 1992இல் காலமானார்.

சுதந்திரத்தை நோக்கி

மகாத்மா காந்தி தலைமையில் மக்கள் இயக்கங்களின் அழுத்தம் மற்றும் இரண்டாம் உலகப் போர் சூழ்நிலைகளின் காரணத்தாலும், இந்தியர்களின் பிரச்சனைகளுக்குப் பொருத்தமான தீர்வைக் கண்டு கொள்வதற்கு ஆங்கிலேயர்கள் தங்களையே தயார் செய்து கொண்டனர். இதே சமயத்தில் உலகபோரின் விளைவாக ஆங்கிலேயர்களின் பொருளாதாரம் மற்றும் படைபலம் குன்றியது.

உலகப் போரின் முடிவில், (பொ.ச. 1945 இல்) இரண்டாம் இங்கிலாந்தில் ஆட்சிக்கு வந்த தொழில்கட்சி, இந்தியாவுடன் அரசியல் ஒப்பந்தத்தில் கையெழுத்திட விரும்பியது. இந்த இறுதி கட்டத்தில், இந்தியாவின் எதிர்காலம் தொடர்பாக முக்கியமான முடிவுகளை மௌலானா அபுல் கலாம் ஆசாத், ஜவஹர்லால் நேரு மற்றும் வல்லபாய் படேல் ஆகியோர் எடுத்துக்கொண்டனர்.

இந்தியாவிடம் ஆட்சியை ஒப்படைப்பதற்கான வழிகளைக் கண்டறிய, பிரிட்டிஷ் அரசாங்கம் பொ.ச. 1946 இல் ஒரு அமைச்சரவைக் குழுவை இந்தியாவிற்கு அனுப்பியது. ஆனால் ஜின்னா தலைமையிலான முஸ்லிம் லீக், பாகிஸ்தான் என்று அழைக்கப்படுகின்றது. முஸ்லீம்களுக்குத் தனி நாடு வழங்கபட்ட கோரிக்கையை வலியுறுத்தியது. இதனால் இந்தியாவின் பிளவு தவிர்க்க முடியாததாகி விட்டது. ஜூன் 3, பொ.ச. 1947 அன்று 34 வது மற்றும் கடைசி கவர்னர் ஜெனரலும், வைஸ்ராயுமான மவுண்ட்பேட்டன் பிரபு, இந்தியாவின் பிரிவிற்குப் பிறகு இந்தியர்களிடம் அதிகாரத்தை ஒப்படைக்கும் வரலாற்றுச் சிறுப்புமிக்க முடிவை அறிவித்தார்.

மௌலானா அபுல்கலாம் அசாத்



வல்லபாய் படேல்

© KTBS NOT TO BE REPUBLISHED

பொ.ச. 1947 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 14 அன்று பாகிஸ்தான் இந்தியாவிலிருந்து பிரிக்கப்பட்டது. இந்தியா பொ.ச. 1947 ஆகஸ்ட் 15 அன்று சுதத்திரம் அடைந்தது. ஜவாஹர்லால் நேரு சுதந்திர இந்தியாவின் முதல் பிரதம மந்திரியானார். ஆரம்பத்தில் வியாபார நோக்கத்துடன் வந்திருந்த பிரிட்டிஷர்கள், சுமார் இரண்டு நூற்றாண்டுகள் இந்தியாவை அரசியல் மற்றும் பொருளாதார ரீதியாக பலவீனப்படுத்தினார்கள். இந்தியர்கள் நடத்திய போராட்டங்களால் இறுதியில் ஆதிக்கவாதிகள், இந்தியாவிலிருந்து வெளியேற வேண்டியதாயிற்று. நீண்ட காலமாக நடந்த தேசியப் போராட்டம் முடிவுபெற்ற பொ.ச. 1947 ஆண்டு ஆகஸ்ட் 15ஆம் நாள் இந்தியவரலாற்றின் மறக்க முடியாத நாளாகும் . ஏனெனில் அது நீண்ட சுதந்திர போராட்டத்திற்கு முற்று புள்ளி வைத்தது. இந்த நாள் கோடிக்கணக்கான இந்தியர்களின் மனதில் நிரந்திரமாகப் பதிந்து விட்டது. ஒவ்வொரு ஆண்டும் சுதத்திர போராட்டத்தை நினைவு கூறும் நாளானது.

மவுண்ட்பேட்டன் பிரபு

@KTBS NOT TO BE REPUBLISHED

முகமது அலி ஜின்னா (பொ.ச. 1876-1948) மற்றும் முஸ்லீம் லீக்

சுதந்திரத்திற்கு முன்பு இந்தியாவின் அரசியல் வளரச்சியில் முகமது அலி ஜின்னா முக்கிய பங்கு வகித்தார். அவர் ஒரு வழக்கறிஞர் மற்றும் ஒரு தாராள தேசியவாதி. ஆரம்பத்தில் அவர் முஸ்லீம் லீக்குடன் தன்னை அடையாளப் படுத்திக்கொள்ளவில்லை மாறாக அவர் அதன் எதிரியாக இருந்தார். அந்நாட்களில் அவர் இந்து இஸ்லாமிய ஒற்றுமையின் பிரதிநிதியாகக் கருதப்பட்டார். பொ.ச. 1913 இல் அவர் முஸ்லீம் லீக்கில் உறுப்பினராக சேர்ந்ததினால் படிப்படியாக இந்தியாவின் இஸ்லாமிய சமூகத்தின் தலைவராக மாறினார்.



முகமது அலி ஜின்னா

பொ.சா. 1927 இல் ஜின்னா பதினான்கு கோரிக்கைகளை முன்வைத்தார். இது டெல்லி பிரகடனம் என்று அழைக்கப்படுகிறது. இந்த கோரிக்கைகள் வகுப்பு வாதத்திற்கு செரிவூட்டியது. இந்த பதினான்கு கோரிக்கைகள் பொ.ச. 1928 இல் ஜின்னாவால் தயாரிக்கப்பட்ட 14 கோரிக்கைகள் சாசனத்தின் ஒரு பகுதியாக இணைக்கப்பட்டன. இந்த '14 கோரிக்கை ஆவணம்' முஸ்லீம் லீக்கின் சமூக அரசியல் கோட் பாட்டின் வழிகாட்டியாக இருந்தது. பொ.ச. 1936க்குப் பிறகு ஜின்னா இரு தேச கோட்பாட்டின்'' ஆதரவாளரானார். பொ.ச. 1940 இல், முஸ்லிம் லீக்கின் இந்த முன்மொழி, லாகூர் மாநாட்டில் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இந்த மாநாட்டின் பின்னணியில் ஏற்பட்ட அரசியல் முன்னேற்றங்கள் இந்தியாவை பிளவுபடுத்துவதற்கும் பாகிஸ்தானை உருவாக்குவதற்கும் வழிவகுத்தன.

சௌத்ரி ரஹமத் அலி மற்றும் அவரது மூன்று நண்பர்களும், 1933 ஆம் ஆண்டு எழுதிய கடிதத்தில் தனித்துவப் பாகிஸ்தானை உருவாக்கக் கோரி முன்மொழிந்தனர். பஞ்சாப், ஆப்கான், காஷ்மீர் சிந்து மற்றும் பலுசிஸ்தான் மாகணங்களின், முதல் ஆங்கில எழுத்துகளை பயன்படுத்தி பாகிஸ்தான் என்று அழைக்கப்பட்டது. PAKISTAN பெயரின் கடைசி மூன்று எழுத்துக்கள் பலுசிஸ்தான் மாகாணத்தைக் குறிக்கின்றன.

சுபாஷ் சந்திர போஸ் மற்றும் இந்திய தேசியப்படை

சுதந்திரப் போராட்டத்தில் சுபாஷ்சந்திர போஸின் பங்கு முக்கியமானது. அவர் கல்கத்தா பல்கலை கழகத்தில் திறமைமிகுந்த மாணவராக இருந்தார். லண்டனில் ஐ.ஏ.எஸ் தேர்வில் நாலாவது இடத்தை அடைந்திருந்தார் . அவர் 'தேஷபந்து சித்தரஞ்சன் தாஸ்' அவர்களின் ஆளுமைத் திறமையால் கவரப்பட்டு அரசியலில் இறங்கினார். சுவாமி விவேகானந்தரின் வாழ்க்கை மற்றும் எழுத்தாக்கங்களினால் அவர் மேலும் ஊக்கமடைந்தார்.

@TNTB NOT TO BE REPUBLISHED

சுபாஷ், காந்தியடிகளின் மீது அதிக மதிப்பு கொண்டிருந்தார். ஆனால் அவருடைய அரசியல் கொள்கைகளை எதிர்த்தார். இறுதியில் காந்தியடிகளுடன் கடுமையான கருத்து வேறுபாட்டினால் பொ.ச. 1939 ஆம் ஆண்டு காங்கிரஸ் தலைமைப் பதவியை இராஜினாமா செய்து கட்சியிலிருந்து, வெளியேறினார். பின்னர் ஃபார்வர்டு பிளாக்'' என்ற புதிய கட்சியை நிறுவினார்.

சுபாஷ்சந்திர போஸ்

அப்போது இரண்டாம் உலகப் போர் நடைபெற்றுக் கொண்டிருந்தது. (பொ.ச. 1939-1945) ஆங்கிலேயர்கள், போஸின் புரட்சி எண்ணத்தை கவனத்தில் கொண்டு, அவர் அபாயமானவர் என்று எண்ணி வீட்டுக் காவலில் வைத்திருந்தனர். ஆனால் போஸ் இரகசியமாக தப்பிச் சென்று பெஷாவர் மற்றும் காபூல் (ஆப்கானிஸ்தான்) வழியாக, மாஸ்கோ செல்வதற்கான கடினமான பயணத்தை மேற்கொண்டார். அங்கிருந்து விமானத்தின் மூலமாக பர்லினுக்கு சென்றார். ஆங்கிலேயர்களின் எதிரியான ஜெர்மனியின் சர்வாதிகாரி ஹிட்லருடன் ஒப்பந்தம் செய்துகொண்டார். இந்தியாவிலிருந்து ஆங்கிலேயர்களை வெளியேற்றுவதே அவரது மிகப் பெரிய திட்டமாக இருந்தது. (அந்த நேரத்தில் ஆங்கிலேயர்கள் ஜெர்மனிக்கு எதிராக இரண்டாம் உலகப் போரில் ஈடுபட்டனர்.)

©KTBS NOT TO BE REPUBLISHED

இதற்கு இடையில் ஜப்பான் ஆங்கிலேயருக்கு எதிராக இரண்டாம் உலகப்போரில் நுழைந்தது. போரில் ஆங்கிலேயர்களின் சார்பாகப் போராடிய சுமார் 40,000 இந்திய சிப்பாய்கள் ஜப்பானின் போர் கைதிகளானார்கள். அவர்கள் மோகன் சிங் தலைமையில் இந்திய தேசிய இராணுவம் (ஐ.என்.எ- இன்டியன் நேஷனல் ஆர்மி) அல்லது ஆசாத் ஹிந்த ப்வுஜ் என்ற பெயரில் ஒழுங்கமைக்கப்பட்டன. காங்கிரஸ், மகாத்மா காந்தி மற்றும் ஜவஹர்லால் நேரு ஆகியோருடன் கருத்து வேறுபாடுகள் இருந்த போதிலும் அவர் தனது இராணுவப் பிரிவுகளுக்கு மகாத்மா காந்தி ஜவஹர்லால் நேரு மற்றும் மௌலான ஆஜாத்

ஆகியோர் பெயர்களை வைத்தார். இது சுபாஷ் சந்திரபோஸின் ஆளுமை மற்றும் இந்திய சுதந்திர போராட்டத்தின் பெருமையைப் பிரதிபலிக்கும். பொ.ச. 1943 இல் சுபாஷ் சந்திர போஸ் சிங்கப்பூர் வந்து ஐ.என். ஏவின் தலைமைப் பொறுப்பை ஏற்றார். சுபாஷ் 'நேதாஜி' என்று அழைக்கப்பட்டார். விரைவிலேயே நேதாஜி சிங்கப்பூரில் சுதந்திர இந்தியாவின் இடைக்கால அரசாங்கத்தை நிறுவினார். ஜெர்மனி, ஜப்பான், இத்தாலி ஆகியவை இந்த அரசாங்கத்திற்கு அங்கீகாரம் அளித்தன. ''சலோ டில்லி'' என்ற முழக்கத்துடன், பர்மாவின் தற்போதைய (மியான்மார்) எல்லையிலிருந்து இந்தியா (இன்றைய மணிப்பூர்) வரை, சுமார் 150 மைல்கள் வரை போஸ் தலைமையில் ஐ என் ஏ முன்னேறியது. அங்கு இந்திய மண்ணில் இந்தியாவின் மூவர்ணக் கொடியை ஏற்றினார். ஆனால் வெகுவிரைவிலேயே ஆங்கிலேய இராணுவம் பர்மாவின் தலைநகரமான ரங்கூனை கைப்பற்றியதால் ஐ என் ஏ க்கு பின்னடைவு ஏற்பட்டது. ஐ என் ஏ வீரர்கள் நிராயுதராக்கப்பட்டு குற்றவாளிகளாக நடத்தபட்டனர். ஜப்பான் எதிரியிடம் சரணடைந்த பிறகு (1945) நேதாஜி டோக்கியோவுக்கு செல்லும்போது விமான விபத்தில் இறந்ததாக் கூறப்படுகிறது. இருப்பினும் விமான விபத்து குறித்த வதந்தியை இப்போதும் சந்தேகத்திற்குரியதாகவே கருதப்படுகிறது.

ஐ என் எ தனது உடனடி இலக்கை அடைவதில் தோல்வி யுற்றது உண்மையே, ஆனால் இந்திய சுதந்திர போராட்டத்தில் அதற்கு ஒரு முக்கிய இடம் உண்டு. நாட்டிற்கு அவர் விடுத்த தைரியமான அழைப்பு, ''எனக்கு இரத்தம் கொடுங்கள், நான் உங்களுக்கு சுதந்திரம் தருகிறேன்'' என்பதாகும். நேதாஜியின் ஒப்பற்ற திறமைகளுக்கு ஐ என் ஏ ஒரு எடுத்துக்காட்டு ஆகும். இந்த இக்கட்டான நாட்களில் கொல்கத்தாவிலிருந்து மாஸ்கோ மற்றும் ஜெர்மனியிலிருந்து ஜப்பானுக்கு அவர் செய்த பயணம் இந்திய வரலாற்றில் முன்பு எங்கும் காண முடியாத சாதனையானது. ஆங்கிலேயர்களின் எதிரிகளின் உதவியால் இந்தியாவை விடுதலை அடைய செய்வது சுபாஷின் ஒரே குறிக்கோளாக இருந்தது துணிச்சல், சாகச மனப்பான்மை மற்றும் தேச பற்று என்ற இணையற்ற பாரம்பரியத்தையே இந்திய மக்களுக்கு அவர்விட்டுச் சென்றுள்ளார்.

NOT TO BE REPUBLISHED @KTBS

ஐ.என்.எ. தனது இலக்கை அடைவதில் தோல்வியுற்றாலும் அதற்கே உரிய வரலாற்று சிறப்பைப் பெற்றுள்ளது. அவர்களுடைய போராட்டங்கள் இந்திய வாலாற்றில் அழிக்க முடியாத இடத்தைப் பிடித்துள்ளது.

அம்பேத்கர் மற்றும் அவரது சீர்திருத்தங்கள்

டாக்டர் பி.ஆர். அம்பேத்கர்

டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் (பொ.ச. 1891-1956) தலித்துகள் மற்றும் பிற சமூகத்தின் பிற்படுத்தப்பட்ட பிரிவினரின் நலனுக்காக போராடியவராவார். அவர் ஏப்ரல் 14, 1891 அன்று, மத்திய பிரதேசத்தின் இந்தோ மாவட்டத்தில் உள்ள மஹோ கிராமத்தில் ராம்ஜி சக்பால் மற்றும் பீமாபாய் சக்பால் ஆகியோருக்கு மகனாக பிறந்தார். அவர் மிகவும் திறமையானவர். அயராத கடின உழைப்பின் மூலம் அவர் ஒரு சிறப்பான ஆளுமையை வளர்த்துக்கொண்டார். புகழ் பெற்ற லண்டன் ஸ்கூல் ஆப் எகனாமிக்ஸில் முனைவர் பட்டம் (Ph.D) மற்றும் அமெரிக்காவின் கொலம்பியா பல்கலைகழகத்தில் எல்.எல்.டி. (LLT) பட்டம், பெற்றார். பார்-அட்-லா பட்டமும் பெற்றார். அவர் பெற்ற கல்விசார்ந்த பட்டங்கள் அனைத்தும் அவரது உயர்ந்த அறிவுத் திறன்களைப் பிரதிபலிக்கிறது. அரசியலமைப்பு வழிகாட்டுதலின் கீழ் சமூக மாற்றத்தைக் கொண்டு வருதுதற்கான உறுதியும் செலாற்றலும் அவருடைய சிறப்புப் பண்புகளாகும்.

©KTBS NOT TO BE REPUBLISHED

சமூக சமத்துவமின்மையை அகற்ற அரசியலமைப்பு மட்டுமே ஒரே வழி என்று நம்பினார். மேலும் தலித்துகள் மற்றும் ஒடுக்கப்பட்டவர்களுக்கும் அரசியல் பிரதிநிதித்துவம் கிடைத்தால் மட்டுமே அவர்களின் விடுதலை சாத்தியமாகும் என்பது அவரது நிலைப்பாடு. அதற்காக தீண்டாமைக்கு எதிராக பல போராட்டங்களை உருவாக்கினார். அவற்றில் மகதா சத்தியாகிரகம் நாசிக்கில் கலாராமன் கோவில் நுழைவு போன்ற வெற்றிகரமான போராட்டங்களில் பங்கேற்றார். இவ்வாறு தலித் மக்களிடையே விழிப்புணர்வையும், சுயமரியாதையையும் ஏற்படுத்தினார்.

‘மூக்கநாயக் மற்றும் பஹிஷ்கிருத பாரத்’ இதழ்களின் பதிப்புகளின் வழியாக தலித்தர்கள், ஒடுக்கப்பட்டோர் மற்றும் தீண்டத்தகாத மக்களின் குரலாக மாறினார். ‘பஹிஸ்கிருத ஹிதகாரிணி சபா’ என்ற அமைப்பையும் நிறுவினார்.

பின்னர் சுதந்திர இந்தியாவின் அரசியலமைப்பின் வரைக்குழுவின் தலைவராக, அரசியல் சாசனத்தை உருவாக்கும் பொருப்பை ஏற்றார். அவர் அரசியலமைப்பின் சிற்பி என்று புகழ்பெற்றார்.

அம்பேத்கர் இந்திய தேசியத்தின் சற்று மாறுபட்ட கருத்தின் பிரதிநிதியாக இருந்தார். காந்தியடிகளுக்கு அரசியல் சுதந்திரம் பெறுவதே குறிகோள் என்றால், அம்பேத்கருக்கு சமூக சுதந்திரம் பெறுவது முதன்மையான நோக்கமாக இருந்தது. சமூகத்தில் ஒடுக்கப்பட்டவர்களை ஜனநாயக அமைப்பிற்குள் கொண்டு வருவது என்பதே அவரது குறிக்கோளாகும். இதனால் அவர் ஒடுக்கப்பட்ட இலட்சக்கணக்கான இந்தியர்களின் பிரதிநிதியாக இருந்தார். அவர் தீண்டப்படாத சாதியைச் சேர்ந்தவர் என்பதால் அவர் அனைத்து வகையான அவமானங்களையும், சமூகப்புறகணிப்புகளையும் அனுபவித்தார். தலித்துகள் மற்றும் ஒடுக்கப்பட்டவர்கள் அரசியல் பிரதிநிதித்துவம் பெற்றால் மட்டுமே அவர்களின் விடுதலை சாத்தியம் என்பதே அவருடைய உறுதியான நம்பிக்கையாக இருந்தது.

> **செயல்பாடு :** பி. ஆர். அம்பேத்கர் எழுதிய நூல்களின் பட்டியலைத் தயாரித்து, அவர் உருவாக்கிய “ஹிந்து கோட் பில்” பற்றிய தகவல்களை சேகரிக்கவும்

டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் தலித் இனத்தின் பிரதிநிதியாக லண்டனில் நடந்த மூன்று வட்ட மேஜை மாநாட்டுகளில் பங்கேற்றார். ஆங்கிலேயர்களால் அறிவிக்கப்பட்ட சமயத் தீர்ப்பு (கம்யூனல் எவார்ட் - பொ.ச. 1932) தலித் இனத்தவர்க்குத் தனித் தேர்தல் தொகுதியை உருவாக்கியது. இந்த தீர்ப்பை ஏற்றுக்கொள்ளாத காந்தியடிகள் எரவாடா (புனே) சிறையில் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தினார். இறுதியாக காந்திக்கும் அம்பேத்கருக்கும் இடையே செய்த பூனா ஒப்பந்தத்தின் (பொ.ச. 1932) மூலம்

NOT TO BE REPUBLISHED @KTBS

பிரச்சனை முடிவுக்கு வந்தது. அம்பேத்கர் சுதந்திர இந்தியாவின் முதல் சட்ட அமைச்சராக இருந்தார். டிசம்பர் 6, பொ.ச. 1950 இல் இறந்தார். அவர் இறப்பதற்கு சில மாதங்களுக்கு முன்பு புத்த மதத்திற்கு மாறினார். பொ.ச. 1990 இல் அவருடைய மரணத்திற்குப் பிறகு பொ.ச. 1990 இல் அவருக்கு பாரதரத்னா விருது வழங்கப்பட்டது.



©KTBS
NOT TO BE REPUBLISHED

இந்தியப் பிரிவினை 1947

முக்கிய ஆண்டுகள்

இந்திய தேசிய காங்கிரஸ் ஸ்தாபனம்	1885
மிதவாதிகள் யுகம்	1885-1905
அமிதவாதிகள் யுகம்	1905-1919
வங்காளத்தின் பிரிவு	1905
முஸ்லிம் லீக் ஸ்தாபனம்	1906
சூரத் பிளவு	1907
ஜாலியன் வாலாபாக் படுகொலை	1919
காந்திஜி பிறந்த நாள்	1869, அக்டோபர் 2
ஒத்துழையாமை இயக்கம்	1920-1922
சௌரி சௌரா துன்பம்	1922
முழு சுயராஜ்ஜிய பிரகடனம்	1929
முழு சுயராஜ்ஜிய தின நாள்	1930, ஜனவரி 26
உப்பு சத்தியாகிரகம்	1930, மார்ச் 12
இரண்டாம் உலகப் போர்	1939-1945
வெள்ளையனே வெளியேறு இயக்கம்	1942
இந்தியாவிற்கு உரிமைமாற்றத்தின் பிரகடனம்	1947, ஜூன் 3
சுதந்திர பாகிஸ்தான் உருவாக்கம்	1947, ஆகஸ்ட் 14
சுதந்திர இந்தியா உருவாக்கம்	1947, ஆகஸ்ட் 15

©KTBS NOT TO BE REPUBLISHED

பயிற்சிகள்

I. கோடிட்ட இடங்களை சரியான சொற்களால் நிரப்புக :

1. பொ.ச. 1938 ல் யசோதரம்மா ________ ல் பங்கேற்றார்.
2. சுதேசி விரத்தா நாடகத்தை இயற்றியவர் ________ .
3. காந்தியடிகளின் அரசியல் குரு ________ .
4. சௌரி சௌரா நிகழ்வு ________ இல் நடந்தது.
5. ‘‘முழுமையான சுயராஜ்ஜியம்’’ அறிவிப்பு ________ இல் அங்கீகரிக்கப்பட்டது.
6. சுதந்திர இந்தியாவின் முதல் பிரதமர் ________ .

7. இந்தய தேசிய காங்கிரசை நிறுவியவர் ________.
8. 'ஹோம் ரூல்' இயக்கத்தை தொடங்கியவர் ________ .
9. இந்திய தேசியப் படையின் தலைமையை ஏற்றவர் ________ .
10. அரசியல் அமைப்பின் வரைவுக் குழுவின் தலைவர் ________.

II. கீழ் காணும் வினாக்களுக்கு ஒரு வார்த்தை அல்லது ஒரு வாக்கியத்தில் விடையளிக்க :

11. ''சுயராஜ்ஜியம் எனது பிறப்புரிமை நான் அதை அடைந்தே தீருவேன்.'' இது யாருடைய முழுக்கமாகும்?
12. சுதந்திரப் போராட்டத்தில் 'காந்தியுகம்' எப்பொழுது தொடங்கியது?
13. ''ஃபார்வர்ட் பிளாக்'' கட்சியைத் தொடங்கியவர் யார்?
14. ''எனக்கு இரத்தம் கொடுங்கள், உங்களுக்கு சுதந்திரம் தருகிறேன்'' என்ற அழைப்பு விடுத்தது யார் ?
15. அரசியலமைப்பின் வரைவுக் குழுவின் தலைவர் யார்?
16. ''இந்தியாவின் இரும்பு மனிதர்'' என்று பிரபலமானவர் யார்?

II. ஒவ்வொன்றிற்கும் இரண்டு அல்லது மூன்று வாக்கியங்களில் விடையளிக்கவும்.

NOT TO BE REPUBLISHED @KTBS

17. உள்ளாலத்தைப் பாதுகாப்பதில் போர்த்துகீசியர்ளுக்கு எதிராக ராணி அப்பக்கா தேவியின் போராட்டத்தை விவரிக்கவும்.
18. 'பன்முக திறமை பெற்ற கமலாதேவி சட்டோபாத்யாய கர்நாடகத்தின் பெருமைக்குரியவர்'. நியாயப்படுத்துக.
19. விடுதலைப் போராட்டத்தில் உமாதேவி குந்தாபுராவின் பங்களிப்பை பட்டியலிடுவும்.
20. இந்திய தேசிய காங்கிரஸின் ஏதேனும் இரண்டு நோக்கங்களை எழுதவும்.
21. ''லால், பால், பால்'' என்று பிரபலமாக அறியப்பட்ட தேசியத் தலைவர்கள் யார்?
22. ஜாலியன் வாலாபாக் படுகொலை எப்போது நடந்தது அதற்கு காரணமான பிரிட்டிஷ் போலீஸ் அதிகாரி யார்?
23. காந்திஜியின் தண்டி யாத்திரையின் முக்கியத்துவம் என்ன?

24. ‘வெள்ளையனே வெளியேறு’ இயக்கம் பற்றி எழுதுக.

25. முக்கியமான பழங்குடியினர் மற்றும் விவசாயிகளின் இயக்கங்களைக் குறிப்பிடவும் ?

III. சிறு குறிப்புகளை எழுதுக :

26. இந்திய தேசிய வாதத்தின் வளர்ச்சிக்குப் பங்களித்த காரணிகள்

27. ரௌலத் சட்டம்

28. சுபாஷ் சந்திர போஸ்

29. டாக்டர் பி.ஆர்.அம்பேத்கர்.

செயல்பாடுகள்.

- தாதாபாய் நௌரோஜி மற்றும் பாலகங்காதர திலகரின் வாழ்க்கை வரலாற்றைப் படித்தறிக.
- புரட்சியாளர்களின்படங்களையும்தகவல்களையும் சேகரித்து ஒரு ஆல்பம் செய்க.
- கீழே கொடுத்துள்ள புரட்சியாளர்களின் வாழ்க்கை வரலாற்றைப் படித்து, அவர்களைப் பற்றி ஒரு கட்டுரை எழுதி அறிவிப்புப் பலகையில் காட்சிப்படுத்துக.

  வாசுதேவ் பலவந்த் பட்கே, குதிராம் போஸ், சந்திர சேகர் ஆசாத், பகத் சிங், மேடம் காமா.
- சுதந்திரப் போராட்டத்தில் காந்தியடிகளின் பங்கு குறித்து விவாதிக்கவும்.
- இந்திய குடியரசுத் தலைவர்கள் மற்றும் துனண குடியரசுத் தலைவர்களின் பெயர்களைப் சேகரித்து பட்டியலிடவும்.
- சுதந்திரப் போராட்டத்தில் முக்கிய பங்காற்றிய பெண்களின் வாழ்க்கை வரலாற்றைப் படியுங்கள்.
- சுதந்திரத்திற்குப் பிறகு கர்நாடகாவின் வளர்ச்சியில் பெண்களின் பங்கு என்ற தலைப்பில் பேச்சுப்போட்டி நடத்தவும்.

©KTBS NOT TO BE REPUBLISHED

***

Z3I4N8

பாடம் 18	கருநாடகத்தின் ஒருங்கிணைப்பு மற்றும் எல்லைப் பிரச்சனைகள்

பாட அறிமுகம்.

கன்னட நாட்டிற்கு சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் அதிகமான வரலாறு உள்ளது. வெவ்வேறு அரசியல் ஆட்சிகளின் கீழ் கன்னட மக்கள் வாழ்ந்துள்ளனர். விஜயநகரப் பேரரசின் வீழ்ச்சிக்குப் பிறகு, மராத்தியர் பேஷ்வர், பாளையக்காரர்கள், ஆங்கிலேயர்கள், சுல்தான்கள் நவாப்கள் முதலிய 20 பல்வேறு ஆட்சிகளின் கீழ் கன்னடம் பேசும் மக்கள் பிரிந்திருந்தனர், இப்பிரிவின் காரணமாக கன்னட மக்கள் தங்கள் நாட்டிலேயே அந்நியர்களைப் போல வாழ்ந்தனர். ஆங்கிலேயர்கள், மொழி மற்றும் கலாச்சாரத்தின் அடிப்படையில் பிரதேசங்களைப் பிரிக்காமல் வரி வசூலிப்பதற்கு ஏதுவான வகையில் அவற்றைப் பிரித்திருந்தனர். இப்பாடத்தில், கருநாடக ஒருங்கிணைவு இயக்கத்தின் வெவ்வேறு நிலைகளும் ஒருங்கிணைப்பால் உண்டான எல்லைப் பிரச்சனைகளும் விளக்கப்பட்டுள்ளன.

திறன்கள் :

1. கருநாடக ஒருங்கிணைப்பு இயக்கத்தின் பின்புலத்தையும் முக்கியமான நிலைகளையும் மாணவர்கள் அறிந்துக் கொள்ளுதல்.
2. கருநாடக ஒருங்கிணைப்பு இயக்கத் தலைவர்களின் பங்களிப்பைப் பற்றி அறிதல்.
3. பொ.ச.1956க்குப் பிறகு வெளிப்பட்ட எல்லைப் பிரச்சனைகளைப் பற்றி அறிந்து அதற்கு தீர்வுகளையும் காணுதல்.

@KTBS NOT TO BE REPUBLISHED

ஒருங்கிணைப்பு இயக்கத்திற்கான வரலாற்று பின்புலம்

'கவிராஜமார்க்கம்' என்னும் நூலில், 'கன்னட நாடு காவேரி முதல் கோதாவரி வரையில் பரந்திருக்கிறது என்று விவரிக்கப்பட்டுள்ளது. பல கன்னட அரச வம்சங்கள் இப்பிரதேசத்தை ஆண்டனர். விஜயநகரப் பேரரசின்

வீழ்ச்சிக்குப் பிறகு கன்னட மொழி பேசும் மக்கள் வாழ்ந்த பிரதேசங்கள் பல அரசியல் ஆட்சிமுறைகளின் கீழ் வந்தன. அரசியல் ரீதியான அதிகாரமுள்ள படைகள், கன்னடத்தையும் கன்னட மக்களையும் ஒன்றுமில்லாத நிலைமைக்கு ஒடுக்கியது. திப்புவின் மறைவிற்குப் பிறகு ஆங்கிலேயர்கள் கன்னடப் பகுதிகளை வெவ்வேறு மொழிகளுள்ள அரசியல் அதிகாரங்களின் கட்டுப்பாட்டிற்கு மாற்றினர். கன்னட மக்கள் அந்நியர்களைப் போல மராத்தியர்கள், நிஜாம்கள் முதலியவர்களின் கீழ் வாழ வேண்டிய கட்டாயத்திற்குள் தள்ளப்பட்டனர். கன்னட மக்கள் இத்தகைய சூழலிலிருந்து வெளியேறி ஒரு மாநிலத்தை உருவாக்கவும், ஒரே நிர்வாகத்தின் கீழ் இருக்கவும் போராட்டங்களை நடத்தினர். இதுவே ஒருங்கிணைப்பு இயக்கம் என்று அழைக்கப்படுகிறது.

ஒருங்கிணைப்பிற்கான முதல் அழைப்பு மும்பை கருநாடக மக்களிடமிருந்து வந்தது. பொ.ச. 1890இல் துவக்கப்பட்ட 'கர்நாடக வித்யா வர்த்தக சங்கம்', ஆர். கே. தேஷ் பாண்டேயின் தலைமையில் ஒருங்கிணைப்பு என்ற கருத்துருவிற்கு அமைப்பு சார் உருவத்தைக் கொடுத்தது. ஆரம்பக் கட்டங்களில், வேங்கட ரங்கோ கட்டி போன்ற தலைவர்கள் ஒருங்கிணைப்பிற்காக அரும்பாடுபட்டு தொண்டுச் செய்துள்ளனர்.

செயல்பாடு : மும்பை-கருநாடக பகுதிகளில் கன்னடப் பள்ளிகளை நிறுவுவதற்கு அரும்பாடுபட்ட டெப்யூட்டி சென்னபசப்பா அவர்களைப் பற்றிய விவரத்தை சேகரிக்கவும்.

இந்த ஒருங்கிணைப்பு இயக்கத்தை பொ.ச.1915 இல் அமைக்கப்பட்ட கன்னட சாஹித்ய பரிஷத் மற்றும் பொ.ச. 1916 இல் அமைக்கப்பட்ட கர்நாடகா சபா தொடர்ந்து நடத்தின. பொ.ச. 1924 ஆம் ஆண்டு பெளகாவியில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டில், ஹுயிலகோளா நாராயண ராவ் அவர்கள் 'உதயவாகலி நம்ம செலுவ கன்னட நாடு' என்ற வரவேற்புப் பாடலைப் பாடி, ஒருங்கிணைப்பு இயக்கத்திற்குத் தேவையான தூண்டுகையைக் கொடுத்தார். இந்த மாநாட்டின் தலைவரான காந்தியடிகள் இவ்வொருங்கிணைப்பிற்கு தனது ஆதரவை அளித்தார். ஒருங்கிணைப்பு இயக்கம் சுதந்திர இயக்கத்துடன் இணைந்து முன்னேறியது.

NOT TO BE REPUBLISHED ©KTBS

செயல்பாடு : (1)ஒருங்கிணைப்பிற்காக அயராது உழைத்த எழுத்தாளர்களின் பெயர்களின் பட்டியலை உருவாக்குக.

(2) B. M. ஸ்ரீ கண்ட்டைய்யா அவர்களைப் பற்றிய விவரங்களைச் சேகரிக்க.

கருநாடகத்தின் இருபது நிர்வாக மையங்கள் :

1 **மதராஸ் கருநாடகம் :** பள்ளாரி, தென் கன்னட, நீலகிரி மாவட்டங்கள் மற்றும் பிற மாவட்டங்கள் (ஆங்கங்கிலேய நிர்வாகம்)

2. **மும்பை-கருநாடகம் :** வட கன்னட, தார்வாட், விஜயபுரா, பௌகாவி மாவட்டங்கள் மற்றும் மேலும் மூன்று மாவட்டங்கள் (ஆங்கிலேய நிர்வாகம்)

3. **குடகு :** தலைமை ஆணையரின் நிர்வாகம் (ஆங்கிலே நிர்வாகம்)

4. **கருநாடகம் கென்டோன்மெண்ட் (பாளையம்)** பௌகாவி மற்றும் பெங்களூரு இவை படைத்துறை பாளையங்களாகும் அல்லது கன்ட்டோன்மென்டுகளாகும் - (ஆங்கிலேய நிர்வாகம்)

5. **மைசூர் :** மைசூர், மண்டியா, ஹாசன், சிவமொகா, துமகூரு, சிக்கமங்களூரு சித்ரதுர்கா, கோலார் மற்றும் பெங்களூரு (மைசூர் மாநிலம்)

6. **ஹைதராபாத் மாநிலம் :** கலபுரகி, பீதர் மற்றும் ராய்ச்சூர் மாவட்டங்கள் (ஹைதராபாத் மாநிலம்)

7. 14 சிறிய மாநிலங்கள் மொத்தம் 20 நிர்வாக மையங்கள்.

ஒருங்கிணைப்பு இயக்கத்தில் செய்தித்தாள்களின் மற்றும் இலக்கியங்களின் பங்கு :

செய்தித்தாள்கள், வார இதழ்கள் மற்றும் இலக்கியப் படைப்புகள் ஒருங்கிணைப்பு இயக்கத்திற்கு எழுச்சி ஊட்டின - மும்பை-கருநாடகம், மைசூர் மாநிலம் மற்றும் கருநாடக கடலோரப் பகுதிகளில் பல செய்தித்தாள்கள் வெளியிடப்பட்டன.

@KTBS NOT TO BE REPUBLISHED

புகழ்பெற்ற செய்தித்தாள்கள்

பாம்பே கருநாடகம் : 'விஜயா', 'ராஜஹம்சா, கன்னட கேசரி', கருநாடக வைபவா.

மைசூர் மாநிலம்: 'சூர்யோதயா பிரகாஷிகா', 'ஹிதபோதினி' 'விருத்தாந்த சின்தாமணி', 'மைசூர் ஹெரல்ட்'.

கருநாடக மாநிலத்தின் வளர்ச்சி, கன்னட மொழி மற்றும் கன்னட கலாச்சரத்தின் மேம்பாட்டிற்காக உழைத்த மிக முக்கியமான நபர் ஆலூர் வெங்கட்ராவ் அவர்கள் ஆவார். அப்போது கருநாடகத்தின் அவல நிலைமையைக் கண்டு வியந்து அவர் கூறியது - ''கருநாடகம் எங்குள்ளது? .... நான்காறு திசைகளில் கிழித் தெரியப்பட்ட கருநாடகத்தை தைத்து, அதை ஒருங்கிணைந்த மாநிலமாக மாற்றும் பணியை யார் செய்வார்கள்? இந்த மாநிலத்தின் மீது இவ்வளவு பற்று யார் கொள்வார்கள்?



கருநாடக குலபுரோஹிதா ஆலூர் வெங்கட்ராயர்

ஹுயல கோள நாராயணா ராவ்



தேசிய கவிஞர் குவெம்பு



ராஷ்டிர கவி கோவிந்த பை

கன்னட மக்களுக்கு அவர்களது நிலம் மற்றும் மொழியின் பெருமையைப் பற்றி உணர்த்துவதே வெங்கட்ராயர் அவர்களின் நோக்கமாக இருந்தது. அதற்காக அவர் தனது சொந்த செலவில் ''கருநாடகத்தின் கடந்தகால பெருமை' (கர்நாடகத கத வைபவ)என்ற நூலை வெளியிட்டார். அது ஒரு எழுச்சி மிகு நூலாக இருந்தது. ஹைதராபாத் கன்னட மக்கள் அவருக்கு (பொ.ச.1941) 'கர்நாடகா குலபுரோஹிதா' என்ற விருதை வழங்கி கௌரவித்தார்கள். மும்பை கன்னட மக்களிடையே

NOT TO BE REPUBLISHED ©KTBS

விழிப்புணர்வு ஏற்படுத்தியதில் கவிஞர் சாந்தகவியின் பங்களிப்பு மகத்தானது. கன்னட சாஹித்ய சம்மேளனா (இலக்கிய மாநாடு) விற்குத் தேவையான நிதியை சேகரிப்பதற்காக, அவர் வீடு வீடாகச் சென்று ‘பேடலு கன்னட தாசைய்யா பந்திஹா, நீடிரம்மா தடமாடதலே’ என்ற பாடலைப் பாடினார். குவெம்பு அவர்களின் ‘ஜெயஹே கர்நாடக மாதே’, ‘நீ மெட்டுவ நெல அதே கர்நாடகா’ என்ற பாடல்கள் பல இலட்ச மக்களின் உள்ளங்களைத் தொட்டது. ஹுயிலகொளா நாராயண ராவ் அவர்களின் ‘உதயவாகலி நம்ம செலுவ கன்னட நாடு’ என்ற பாடல் மிகவும் புகழ் பெற்றது. கருநாடகத்தின் முதல் ராஷ்டிர கவி மஞ்சேஷ்வர் கோவிந்த பை, தமது வாழ்நாள் இறுதி வரையிலும் காசர்கோடை கர்நாடகாவுடன் இணைக்க வேண்டும் எனப் பேராடினார். மேலும் பல கவிஞர்களும், எழுத்தாளர்களும் கன்னட மக்களைப் பெரிதும் ஊக்கப்படுத்தினர்.

@KTBS NOT TO BE REPUBLISHED

சுதந்திரத்திற்குப் பிந்தைய ஒருங்கிணைப்பு இயக்கம்.

அரை நூற்றாண்டுக்கும் அதிகமான காலத்திற்குப் பிறகு, அதுவும் சுதந்திரம் அடைந்த பிறகே ஒருங்கிணைப்பின் கனவு உண்மையானது. அது மூன்று நிலைகளில் நடைபெற்றது.

முதல் நிலை (பொ.ச.1947-48)

பொ.ச.1947 க்கு முன்பு நமது நாட்டில் இரண்டு வகையான மாநிலங்கள் இருந்தன : ஆங்கிலேயர்களால் ஆட்சி செய்யப்பட்ட இந்திய மாகாணங்கள் மற்றும் 562 சுதேச அரசுகள். அரசியலமைப்புச் சட்டப் பேரவை, மொழியின் அடிப்படையில் இந்தியாவைப் பிரிப்பதற்குப் பதிலாக,இந்தியாவை நான்கு வகையான நிர்வாகத் தொகுதிகாளப் பிரித்தது. அவை A,B, C மற்றும் D எனப்படும் தொகுதிகளாகும். இதன்படி, கருநாடகத்தின் இருபது நிர்வாகத் தொகுதிகளும் ஐந்து பிரிவுகளாக அமைக்கப்பட்டன. இவ்வைந்து பிரிவுகளாவன. மும்பை, மதராஸ், ஹைதராபாத், மைசூர் மற்றும் குடகு. இது கருதாடக ஒருங்கிணைப்பின் முதற்கட்ட நிலையாகும்.

இரண்டாம் ஆம் நிலை (பொ.ச.1953)

பொ.ச. 1951-52 இல் மக்களவையின் முதல் பொதுத் தேர்தல் நடந்தது. தேர்தலுக்குப் பிறகு, 'ஒருங்கிணைந்த கருநாடக மாநில கட்டுமான பரிஷத்' என்ற கட்சி போராளி இயக்க உணர்வோடு உருவாகியது (பொ.ச. 1952). இக்கட்சியை ஒருங்கிணைப்பதற்க்காக சத்தியாகிரகம் மேற்கொணடனர். அதில் சுமார் 5000 பேர் கைது செய்து சிறையில் அடைக்கப்பட்டனர். அந்நாள் முதல் அமைச்சரான கெங்கல் ஹனுமன்தைய்யா அவர்கள் இந்த ஒருங்கிணைப்பு இயக்கத்தை ஆதரித்தார். இந்த ஒருங்கிணைப்பு தொடர்பாக மாநிலம் முழுவதும் பயணம் செய்தார்.

> பொ.ச. 1952 இல், ஆந்திரப் பிரதேசத் தலைவர், பொட்டி ஸ்ரீராமுலு, ஆந்திரப் பிரதேச மாநிலத்தின் ஒருங்கிணைப்பைக் கோரி 58 நாட்கள் உண்ணாவிரதம் மேற்கொண்டு பிறகு இறந்து போனார். ஆந்திராவில் பரவலாக கலவரம் ஏற்பட்டது. ஸ்ரீராமுலு அவர்களின் மறைவிற்குப் பிறகு ஆந்திரப் பிரதேச மாநிலத்தை அமைக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளதாக பிரதமர் நேரு அறிவித்தார். அதன்படி ஆந்திர மாநிலம் பொ.ச. 1953 இல் உருவாக்கப்பட்டது.

ஆந்திர பிரதேஷ் மாநிலம் உருவாக்கப்பட்ட போது பள்ளாரி மாவட்டத்தின் ஏழு தாலுக்காக்கள் மைசூர் பிராந்தியத்துடன் இணைக்கப்பட்டன. இது ஒருங்கிணைப்பின் இரண்டாம் நிலையாக இருத்தது.

இறுதி நிலை (பொ.ச.1956)

ஆந்திரப் பிரதேசம் அமைக்கப்பட்ட பிறகு, மொழியின் அடிப்படையில் இந்தியா மறுசீரமைக்கப்பட வேண்டும் என்று மக்கள் கோரினர். மத்திய அரசு, மாநில மறுசீரமைப்பு குழு (எஸ். ஆர். சி) ஒன்றை நியமித்து அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்குமாறு கேட்டது. இக்குழுவின் தலைவர் ஃபாஜல் அலி, எனவே குழுவின் பெயர் ஃபாஜல் அலி குழு. குழுவின் மற்ற உறுப்பினர்கள் H.N. குஞ்ச்ரு மற்றும் K.M. பணிக்கர் ஆவர். பொ.ச.1955ல் இல் குழு தனது அறிக்கையை சமர்பித்தது. அதற்கேற்ப மொழி மற்றும் நிர்வாக வசதியின் அடிப்படையில் மாநிலங்களின் மறுசீரமைப்பு நடந்தது. அனைத்து கட்சிகளும் இக்குழுவின் அறிக்கைக்கு

© KTBS NOT TO BE REPUBLISHED

சம்மதமும் மரியாதையும் தெரிவித்தன. ஆனால் காசர் கோட்டை கேரள மாநிலத்துடன் இணைத்தற்கும், பெல்லாரி மாவட்டம் குறித்த பரிந்துரைகளுக்கும் கன்னடர்கள் ஒரு மனதாக எதிர்ப்பு தெரிவித்தனர். பெல்லாரியை மைசூரிலிருந்து பிரிக்கப்படக்கூடாது என்றும் இப்புதிய மாநிலம் மைசூர் மாநிலம் என்று அழைக்கப்பட வேண்டும் என்றும் மைசூர் பேரவை முடிவு செய்தது. ஃபாஜல் அலி அறிக்கை, பெல்லாரியின் பெரும்பாலான பகுதிகள் ஆந்திர மாநிலத்துடன் இணைக்க வேண்டும் என்று பரித்துரைத்தது. மத்திய அரசு, பெல்லாரி மாவட்டத்திற்குத் தொடர்பான மைசூர் பேரவையின் முடிவை எற்றுக் கொண்டது, இந்த ஒருங்கிணைந்த கருநாடக மாநிலம் பொ.ச.1956 நவம்பர் 1 அன்று, 'விஷால மைசூர் மாநிலம்' என்ற பெயரில் உருவாக்கப்பட்டது.

ஒருங்கிணைப்பிற்குப் பிறகு மைசூர் மாநிலத்தில் கீழ்கண்ட மாவட்டங்களை இணைக்கப்பட்டிருந்தன.

@KTBS NOT TO BE REPUBLISHED

1. பழைய மைசூர்-9 சம்ஸ்தான மாவட்டங்கள்	மைசூர், மண்டியா, பெங்களூரு கோலார் , ஹாசன், துமகூரு சிக்கமகளூரு, சிவமொக்கா மாகாணம், மற்றும் சித்ரதுர்கா
2. மும்பை மாநிலத்தின் நான்கு மாவட்டங்கள்.	பௌகாவி, தார்வாட் விஜயபுரா வட கன்னட மாவட்டம்
3. ஹைதராபாத் மண்டியா மாகாணத்தின் 3 மாவட்டங்கள்	கலபுரகி, ராய்ச்சூர், பீதர்.
4. மதராஸ் மாநிலங்கள்	தென் கன்னட மாவட்டம் கொள்ளேகால் (தாலுக்கா) பெல்லாரி . (பல்லாரி பொ.ச.1953 ஆந்திரபிர்தேசத்தில் இணைந்த போது)
5. சிறிய மாவட்டம்	குடகு

அப்பொழுது 19 மாவட்டங்கள் இருந்தன. (இன்று 31 மாவட்டங்கள் உள்ளன.)



©KTBS NOT TO BE REPUBLISHED

கருநாடக ஒன்றியம் (1956)

கர்நாடகா ஒருங்கிணைப்பு (பொ.ச.1956)

செயல்பாடு : முப்பத்தொரு மாவட்டங்களின் பெயர்களை எழுதுக.

மைசூர் மாநிலத்தின் முன்னாள் முதல்வரான ஸ்ரீ கெங்கல் ஹனுமந்தய்யா அவர்கள் கன்னட மக்களுக்கு ஒருங்கிணைந்த மாநிலம் குறித்த விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்த முயன்றார். எல். நிஜலிங்கப்பா அவர்கள் பொ.ச.1956 இல் உருவாக்கப்பட்ட மைசூர் மாநிலத்தின் முதல் முதலமைச்சரானவர். பொ.ச.1973 நவம்பர் 1 அன்று அன்றைய முதல் அமைச்சர் தேவராஜ் அரஸ் அவர்கள் பரந்த மைசூர் மாநிலத்திற்கு கருநாடகம் என்று பெயர் சூட்டினர்.

கெங்கல் ஹனுமன்தைய்யா முதல் அமைச்சர்

எஸ் . நிஜலிங்கப்பா மைசூர் மாநிலத்தின் முதலாம் முதல் அமைச்சர்.

டி.தேவராஜ் அரஸ், முதல் அமைச்சர்

© KTBS NOT TO BE REPUBLISHED

எல்லைப் பிரச்சனைகள் : தேசிய அளவில், அவர்களின் மொழிகளின் அடிப்படையில், மாநிலங்கள் அமைக்கப்பட்டதால், எல்லைப் பகுதிகளில் கன்னட மக்கள் அநீதிக்குள்ளாயினர். மொழிவாரியாக அவர்கள் பெரும்பான்மையினராக இருந்த போதிலும், அவர்களது பகுதி வேற்று மொழி மாநிலத்துடன் இணைக்கப்பட்டதால் அவர்கள் அங்கு சிறுபான்மையினராக மாறினர். இதனால் கருநாடக அரசும் கன்னட மக்களும் இப்பகுதிகளை மீண்டும் கருநாடகத்துடன் இணைக்க வேண்டும் என்று இன்றும் நம்பிக்கையோடு போராடி வருகின்றனர்.

முக்கியமாக இப்பிரச்சனைகளுக்குத் தொடர்பான மகாராஷ்டிரம், கேரளம், ஆந்திரப் பிரதேசம் மற்றும் தமிழ் நாடுடன் அடிக்கடி மோதல்கள் நடந்துகொண்டுதான் இருக்கின்றன. இருப்பினும் இவ்விவகாரங்களுக்குத் தீர்வு காணும் அதிகாரம் மத்திய அரசிடம் மட்டுமே உள்ளது.

செயல்பாடு: கன்னடத்தின் மீது பற்றை அதிகரிக்கும் கவிதைகளைச் சேகரிக்க.

1. கருநாடகம் மற்றும் மகாராஷ்டிரம் இடையிலான பிரச்சனை.

பெரும்பாலாள கன்னட மக்கள் வாழும் மகாராஷ்டிரப் பகுதிகள் பல இன்றும் உள்ளன. இவற்றில், அகல்கோட்டே, தென் ஷோலாப்பூர் மற்றும் ஜத் தாலுக்காக்கள் முக்கியமானவை. ஆனால் முக்கியமாக பெளகாவி நகரத்திற்காகவே போராட்டம் நடந்துகொண்டு இருக்கிறது. மகாராஷ்டிர அரசு பெளகாவியை தனது பிரதேசமாக மாற்ற மீண்டும் மீண்டும் கேட்டுக் கொண்டே இருக்கிறது.

கருநாடக அரசும், கன்னட ஆதரவு அமைப்புகளும் மகாராஷ்டிராவின் கோரிக்கைகளைத் திட்டவட்டமாக நிராகரித்து வருகின்றன. மகாராஷ்டிர ஏக்கீகரண் சமிதி, பெளகாவி மற்றும் சில பகுதிகளை மகாராஷ்டிராவிற்கே மீண்டும் வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டே இருக்கிறது.

1966 இல், மகாராஷ்டிரா மற்றும் கருநாடகத்திற்கிடையே உள்ள எல்லைப் பகுதிகளை ஆய்வு செய்து, பரிந்துரைகளை வழங்க, மெஹர் சந்த் மகாஜன் தலைமையிலான மத்திய அரசால் ஒரு உறுப்பினர் குழு நியமிக்கப்பட்டது. அறிக்கை பெளகாவி கருநாடகத்தின் ஒரு பகுதியாக இருக்க வேண்டும் என்று பரிந்துரைத்தது. மகாஜன் அறிக்கையின் பரிந்துரைகளை ஏற்று, கருநாடக அரசு பெளகாவியில் சுவர்ண சௌதாவை நிறுவி ஆண்டுக்கு ஒரு முறை சட்டமன்றக் கூட்டங்களை அங்கு நடத்தி வருகிறது. பெளகாவி, கருநாடகத்தின் ஒருங்கிணைந்த பகுதியாக உள்ளது.

2. கருநாடகம் மற்றும் கேரளவுடனான பிரச்சனை

இங்குள்ள பிரச்சனை காசர்கோட் பகுதியைக் குறித்தது ஆகும். வரலாற்று ரீதியாக, காசர்கோட் கன்னட அரசர்களின்

@KTBS NOT TO BE REPUBLISHED

ஆட்சியின் கீழ் இருந்தது. கௌதி மாகாணத்தின் அரசரான சிவப்ப நாயக்கர் மற்றும் இன்ன பிறர் இப்பகுதியின் மீது தங்கள் கட்டுபாட்டை வைத்திருத்தனர். பேக்கல் கோட்டை, இக்கேரி மன்னர்களால் நிறுவப்பட்டது என்பதைப் பதிவுகள் நிரூபிக்கின்றன. ஆகவே கருநாடகத்துடன் கலாச்சாரத்தில் இணக்கமாக விளங்கும் காசர் கோட், இக்கட்டான சூழ்நிலையில் சிக்கியுள்ளது. இதற்கான முக்கியக் காரணம் கேரளத்துடன் காசர்கோடை இணைக்கும் மாநில மறுசீரமைப்பு ஆணையத்தின் (பொ.ச. 1955) பரிந்துரையேயாகும். இந்த முடிவை எதிர்த்துப் போராட கருநாடகக் குழு உள்பட பல குழுக்கள் அமைக்கப்பட்டன. இன்றும் காசர்கோடை கருநாடகத்திற்கு வழங்க வேண்டும் என்று கோரி அனைத்து தரப்பு மக்கள் அதாவது மாணவர்கள், பெண்கள், அரசு ஊழியர்கள் மற்றும் பலர் போராட்டம் செய்தனர். இந்த எதிர்ப்புத் தீயானது இன்றும் பிரகாசமாக எரிந்து கொண்டு தான் இருக்கிறது. கைய்யார கின்ஞண்ணா ரை அவர்களும் அவருடைய கூட்டாளிகளும் தமது அறிவுதிறன் மற்றும் செயல்களால் காசர்கோடு கருநாடகத்திற்கே சேரவேண்டும் என்ற இப்போராட்டத்தை இன்றும் உயிர்பித்து வருகிறார்கள்.

@KTBS NOT TO BE REPUBLISHED

பயிற்சிகள்

I. வெற்றிடங்களை பொருத்தமான வார்த்தையால் நிரப்புக.

1. கர்நாடக வித்யாவர்தக சங்கத்தின் முதல் தலைவர் ________ .
2. கர்நாடகத்தின் குலபுரோஹிதா என்று ________ அழைக்கப்படுகிறார்.
3. கன்னடத்தின் முதல் தேசியகவிஞர் ________
4. ஒருங்கிணைந்த கர்நாடகத்தின் முதலாம் முதல் அமைச்சர் ________

II. ஒரு வார்த்தையில் அல்லது வாக்கியத்தில் விடையளிக்க.

5. ஹைதராபாத் சமஸ்தானத்தில் இருந்த கன்னட மாவட்டங்களின் பெயர்களைக் குறிப்பிடுக.

6. கருநாடகத்தின் ஒருங்கிணைப்பிற்குப் பங்களித்த இரண்டு அமைப்புகளைக் குறிப்பிடுக

III. இரண்டு அல்லது மூன்று வாக்கியங்களில் விடையளிக்க.

7. ஃபாஜல் அலி ஆணையத்தின் எப்பரிந்துரையை எதிர்த்து கன்னட மக்கள் போராடினர்?

8. கருநாடகத்தின் ஒருங்கிணைப்பிறகு போராடிய தலைவர்கள் பெயர்களை பட்டியல் செய்யவும்.

IV. சிறு குறிப்பு வரைக :

9. ஆலூரு வெங்கட் ராவ், ஃபாஜல் அலி ஆணையம்.

V. கலந்துரையாடுக:

10. கருநாடகம், கேரளம் மற்றும் மகாராஷ்டிரத்தின் இடையே உள்ள எல்லைப் பிரச்சனைகளுக்குத் தீர்வுகளை பரிந்துரைக்கவும். (உங்கள் ஆசிரியரின் உதவியைப் பெறவும்.) இத்தலைப்பின் கீழ் கருத்தரங்கை நடத்துக.

NOT TO BE REPUBLISHED @KTBS

செயல்பாடுகள்

- ஒருங்கிணைந்த கருநாடகத்தின் (1956) எல்லைகளை இந்திய நிலவரைப்படத்தின் மீது குறிப்பிடுக.
- ‘உதயவாகலி நம்ம செலுவ கன்னட நாடு’ மற்றும் கோவிந்த பை அவர்களின் ‘கன்னடிகர தாயி’ என்ற பாடலைக் குழுவாகப் பாடி மகிழ்க.

***

பாடம் 19 கருநாடகத்தின் சமூக சார்பு இயக்கங்கள்

V9K3G9

அறிமுகம்

சமூகத்திற்கோ அல்லது சுற்றச்சூழலுக்கோ தீங்கு விளைவிக்கும் திட்டங்களைச் செயல்படுத்த அதிகாரிகள் முற்படும்போது, அவற்றிற்கு எதிராகப் போராட்டம் நடத்த மக்களுக்கு உரிமை உண்டு. கருநாடகத்தில் இத்தகைய சூழ்நிலைகள் எழும்போது குடிமக்கள் அவற்றிற்கு எதிராக கிளர்ச்சி செய்துள்ளார்கள். அதே நேரத்தில், நலிவுற்ற, ஒடுக்கப்பட்ட மற்றும் பிற்படுத்தப்பட்ட மக்கள் தங்கள் பொருளதார, சமூக மற்றும் கலச்சார மேம்பாட்டிற்காக போராடியுள்ளனர். கருநாடகாவில் சுற்றுச்சூழல் ஆர்வலர்கள், பெண்கள், விவசாயிகள், தலித்துகள் மற்றும் கன்னட சார்பு அமைப்புகள் நடத்திய இயக்கங்களைப் பற்றி இந்தப் பாடத்தில் விளக்கப்பட்டுள்ளது.

திறன்கள்:

1. சில எடுத்துக்காட்டுகளின் உதவியோடு சுற்றுக்சூழல் இயக்கத்தைப் பற்றி அறிந்துக் கொள்ளுதல்.
2. பெண்களுக்கு அதிகாரம் வழங்கும் நோக்கில் அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கைகளைப் போற்றுதல்.
3. தன்னலத்தைப் பாதுகாக்க விவாசயிகள் நடத்தும் போராட்டத்தைப் பற்றி அறிதல்.
4. தலித் இயக்கங்களைப் பற்றி அறிதல்.
5. கன்னட மொழியைப் பாதுகாப்பதில், அவர்களிடையே ஆர்வத்தை வளர்க்க தொடங்கப்பட்ட இயக்கங்களைப் பற்றி அறிந்துக் கொள்ளுதல்.

© KTBS NOT TO BE REPUBLISHED

சுற்றுச்சூழல் இயக்கங்கள்:

விலங்குகள், பறவைகள், தாவரங்கள் மற்றும், மனிதர்கள் உள்பட மற்ற உயிரிகள் அனைத்தும் பூமியின் பகுதிகளான ஒளி காற்று, நீர் மற்றும் மண்ணை சார்ந்து வாழ்கின்றன. இயற்கையில் ஒரு இயல்பான சமநிலை உள்ளது. நாகரீகமுள்ளவனாக வளர வளர தனது அளவிலா இலட்சியங்களை அடையவும் பேராசைக் காகவும் சுற்றுச்சூழலையே தியாகம் செய்துவிட்டான். மனிதன் இயற்கையைப் படைப்பின் அதிசயமாகக் கருதாமல் அதை மூலப்பொருளாகவே கருதினான். நம் வீட்டுகளில் அன்றாடம் பார்த்த சிட்டுகுருவிகளைப் பார்க்க ஊரின் வெளிப்புறத்திற்கு செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

> சுற்றுச்சூழல் என்பது பூமியிலுள்ள உயிருள்ள மற்றும் உயிற்ற அம்சங்கள் ஆகும்.

@KTBS NOT TO BE REPUBLISHED

தொழில் புரட்சி, வர்த்தகம் மற்றும் வணிகப் புரட்சிகள் சுற்றுச்சூழலை அதிக அளவில் பாதித்துள்ளன.

பெருந்தொழில் அதிபர்கள் இயற்கை வளத்தின் மீது தம்முடைய அதிகாரத்தை நிலைநாட்ட தீவிரமாக முயற்சிக்கின்றனர். இதன் விளைவாக புதிய பிரச்சனைகள் உருவாகி உள்ளன. மக்கள் சமூகம் கடுமையான உடல்நலப் பிரச்சனைகளுக்கு உள்ளாகியுள்ளது. இயற்கை வளங்கள். அழிந்து வருவதால் ஏராளமான குடிமக்கள் கடும் இன்னல்களை சந்தித்து வருகின்றனர்.

சுற்றுச்சூழலின் முக்கியத்துவத்தை பற்றி மக்களுக்குத் தெளிவுபடுத்துவதற்காக, 20 ஆம் நூற்றாண்டின் இரண்டாம் பகுதியில், சுற்றுச்சூழல் விழிப்புணர்வு இயக்கங்கள் தொடங்கப்பட்டன. பொ.ச. 1970களில் இச்சுற்றுச்சூழல் இயக்கமானது உலகளாவிய பிரச்சாரமாகத் தொடங்கி கருநாடகத்தை வந்து அடைந்தது.

> காந்தியடிகள் சொல்வது போல 'பூமி' 'மனிதனின் அனைத்து தேவைகளை நிறைவேற்றவல்லது, ஆனால் அவனது பேராசையை அல்ல'.

மேற்குக் தொடர்ச்சி மலையில் சுரங்க வேலை தொடங்கியவுடன், சுற்றுச்சூழல் பாதுகாப்பு இயக்கங்களின் துவக்கமும்

தவிர்க்க முடியாததாகி விட்டது. குதுரேமுக் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் நடந்து கொண்டிருந்த சுரங்க வேலைகளை ‘சஹ்யாத்ரி சுரங்க எதிர்ப்பு மன்றம்’ எதிர்த்தது. மத்திய அரசு இரும்புத் தாது செயலாக்கப் பிரிவைத் தொடங்கியுள்ளது. இதன் காரணமாக பத்ரா நதியின் பிறப்பிடமே மாசு அடைந்து விட்டது.இப்போராட்டத்தின் விளைவாக, அரசாங்கம் சில சுற்றுச்சூழல் பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

சாலுமரத திம்மக்கா: காடு வளர்ச்சிக்காகப் போராடும் சாலுமரத திம்மக்கா, *284* மரங்களின் தாயாவார். கல்வியறிவற்றவராக இருந்தாலும், சுற்றுச்சூழல் பாதுகாப்பைப் பற்றி தன்னைச் சுற்றியுள்ள அனைவருக்கும் கற்பித்தார். *2019* இல் நான்காவது உயரிய விருதான ‘பத்ம ஸ்ரீ’ விருதைப் பெற்றார்.

©KTBS NOT TO BE REPUBLISHED

சஹ்யாத்ரி மலைத்தொடரின் முக்கிய நதியான துங்கா நதியின் பிறப்பிடம் மாசுபடுவதை மக்கள் உணர்ந்ததைக் தொடர்ந்து, ‘‘துங்கா நதி பாதுகாப்பு இயக்கப் போராட்டம்’’ தொடங்கியது. சஹ்யாத்ரி மலைத்தொடரின் வனப்பகுதிகள் படிப்படியாக மறையத் தொடங்கின. மரங்களை வளர்த்து பாதுகாக்கவும், அவை அழியாமல் பாதுகாக்கவும் பல்வேறு பகுதிகளில் ‘சிப்கோ’ மற்றும் ‘அப்பிகோ’ போன்ற இயக்கங்கள் தொடங்கின. - சிப்கோ இயக்கத்திற்காக தன் வாழ்நாள் முழுவதையும் அர்பணித்த சுந்தர்லால் பஹுகுணா அவர்களின் பங்கை நாம் மறக்கவே முடியாது.

செயல்பாடு : அப்பிகோ இயக்கத்தின் நோக்கங்களையும் இலக்குகளையும் பட்டியலிடுக.

நீலகிரி மற்றும் அகேசியா போன்ற இறக்குமதி செய்யப்பட்ட செடிகளை வனத்துறையினர் நடவு செய்தனர். இத்திட்டம் ‘சமூக வனவியல்’ என்று அழைக்கப்படுகிறது. நீலகரி மரங்களை நடவு செய்தால் நிலத்தடி நீர்மட்டம் மேலும் குறைந்து விடும் என்று சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் இந்த நடவடிக்கைகளை எதிர்த்தனர்.

தாவணகெரே மாவட்டத்தின் ஹரிஹரா பாலிஃபைபர் தொழிற் சாலையின் கழிவுப் பொருட்கள் துங்கா ஆற்றில் கலந்து நீர் மாசடைந்ததால் அங்கு அதை எதிர்த்து ஒரு போராட்டம் நடந்தது. கார்வார் கடற்படைத் தளத்தை எதிர்த்து போராட்டம், கிழக்கு கடலோரப் பகுதியிலிலுள்ள கொஜென்ட்ரிக்ஸ்ஸின் நாகர்ஜுனா மின்திறன் திட்டத்தை எதிர்த்து போராட்டம், 'ஏரிகளைப் பாதுகாக்கவும்' இயக்கம், பத்ரா மேல் கால்வாய் திட்டத்தை எதிர்த்து போராட்டம், 'கப்பன் பூங்காவைப் பாதுகாக்கவும்' போராட்டம், கார்கில் விதை கம்பெனியை எதிர்த்து போராட்டம் மற்றும் தொழில் நகரங்களுக்கு எதிரான போராட்டங்கள் போன்றவை இன்ன பிற போராட்டங்களாகும்.

கருநாடகத்தில் சமீப காலத்தில் தேசிய மற்றும் சர்வதேச அளவில் விவாதத் திற்குள்ளானது ஆகும். சுரங்கத் தொழிலுக்கு எதிரான இயக்கங்கள் ஆகும் பள்ளாரி, துமகூரு சித்ரதுர்கா, சிக்கமகளூரு, வட கனரா, தாவனகெரே, பெங்களூரு தெற்கு (ராமநகர) போன்ற மாவட்டங்களில், இயற்கைச் செல்வங்கள் கொள்ளையடிக்கப்படுவதற்கு எதிரான போராட்டங்கள் (சுரங்க செல்வங்களை சுரண்டும் சக்திகளுக்கு எதிரான போராட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன ஆகும். சமூக காலத்தில் தேசிய மற்றும் சர்வதேச அளவில் விவாதத்திற்குள்ளானது. இந்திய உச்ச நீதிமன்றம் சுற்றுச் சூழல் பிரச்சனைகளைக் கடுமையாக விசாரித்து அதற்கேற்ற நீதியையும் வழங்கியுள்ளது.

கருநாடக லோக் ஆயுக்தாவின் பல்வேறு பொது நல வழக்குகளின் தீவிர பரிந்துரைகளும், பொது நலனுக்காக சட்டவிரோத சுரங்கம் குறித்து நடத்திய விரிவான விசாரணைகளும் நீண்ட அறிக்கைகள் உண்மையில் முன்னுதாரணமானவை மற்றும் குறிப்பிடத் தக்கவை ஆகும். இத்தகைய தீவிர முயற்சிகளின் விளைவாக இயற்கையின் சுரண்டல் கணிசமாகக் குறைந்து வருகிறது. இன்னும் பல போராட்டங்கள் நடந்து கொண்டுதான் இருக்கின்றன. இரசாயன உரங்களின் பயன்பாட்டை விடுத்து இயற்கை உரங்களைப் பயன்படுத்துவது, புரட்சியின் ஒரு பங்கெனக் கருதலாம். இது மிகவும் திருப்திகரமான கட்டமாகும். கரிம வேளாண்மையை ஊக்குவிப்பதற்காக கர்நாடாகவில் 'இயற்கை வேளாண்மை திட்டம்' அமைக்கப்பட்டது. இயற்கை விவசாயத்தினால் பல விவசாயிகள் பயனடைந்து வருகின்றனர். இந்த விடயத்தில் இந்தியாவிலேயே கருநாடக மாநிலம் முன்னிலையில் உள்ளது. ஆயினும் நாம் கடக்க வேண்டிய பாதை வெகுதூரம் உள்ளது.

NOT TO BE REPUBLISHED ©KTBS

பெண்கள் இயக்கங்கள்

பெண்கள் இயக்கம் குறிப்பாக பெண் கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்தது. கருநாடகத்தில், ஸ்ரீரங்கம்மா மற்றும் ருக்மணம்மா என்போர் பி.ஏ. ஹானர்ஸ் பட்டம் பெற்ற முதல் பெண்மணிகளாவர். இந்திரம்மா அவர்கள் பெங்களூரின் முதல் மேயரானார். இருந்தாலும் பெண்களுக்கு அதிகாரம் கொடுப்பது என்பது தொலைதூரக் கனவாகவே இருந்து வருகிறது. - பெண்களுக்கு சொத்தில் பங்கு கிடைக்கவில்லை, பல்வேறு சமயங்களைச் சேர்ந்த பெண்கள் பல்வேறு வகையான சுரண்டல்களுக்கு உள்ளாகின்றனர்.

செயல்பாடு: பல்வேறு துறைகளில் சாதனை புரிந்த பெண்மணிகளின் பெயர்களைப் பட்டியலிடுக.

குடும்பக் கட்டுப்பாடுகளைத் தாண்டி பல பெண்கள் சுதந்திரப் போராட்டத்தில் கலந்து கொண்டனர். கமலாதேவி சட்டோபாத்யாயா, சரோஜினி நாயுடு, அருணா அசஃப் அலி, டாக்டர் முத்துலக்ஷ்மி ரெட்டி முதலியோரை இங்கே நினைவு கூறுவது இன்றியமையாததாகும்.

கமலாதேவி சட்டோபாத்யாயா

அருணா அசஃப் அலி

1975 ஆம் ஆண்டில், மார்ச் 8ஆம் தேதியை அகில உலக பெண்கள் தினமாக கொண்டாடும் வழக்கம் துவங்கியது. கருநாடக அரசு பல்வேறு பெண்கள் மேம்பாட்டுத் திட்டங்களையும் அமைத்து செயல்படுத்த திட்டமிட்டது. படிப்படியாக,

©KTBS NOT TO BE REPUBLISHED

பெண்கள் நல அமைப்புகளும் நிறுவப்பட்டுள்ளன. இடதுசாரி அமைப்புகள் வேலை செய்யும் பெண்களை ஒருங்கிணைக்கத் தொடங்கின. பெண்கள் நல அமைப்புகள் வரதட்சணை, துன்புறுத்தல் மற்றும் குடும்ப வன்முறைகளை எதிர்கின்றன. இதேபோல, பெண்கள் உரிமைகளை வலியுறுத்தம் சட்டத்தின் முன்மொழிதலுக்கும் தற்போதைய சட்டங்களில் சில மாற்றங்களைக் கொண்டு வருவதற்கும் பல அமைப்புகள் வலியுறுத்துகின்றன. சட்டப் பேரவையில் பெண்களின் குரல் எழுந்தோங்க, அவர்களுக்கு 33% இட ஒதுக்கீடு கொடுக்கப்பட வேண்டும் என்றும் பல அமைப்புகள் போராடி வருகின்றன.

இப்போராட்டத்கின் பயனாக, அரசு அநேக சீர்த்திருத்தங்களைக் கொண்டு வந்தது. உள்ளாட்சி அமைப்புகளில் பெண்களுக்கு 50% இடஒதுக்கீடு அறிவித்த முதல் மாநிலம் கருநாடக அரசாகும். அரசுப் பணி நியமங்களில் 33% இட ஒதுக்கீட்டுக் கொள்கையின் மூலம், பெண்களுக்கு ஓரளவிற்கு நீதி கிடைத்துள்ளது. அரசாங்கம், சிறுமிகள் மற்றும் பெண்களின் நலனுக்காகவும் மேம்பாட்டிற்காகவும் மகளிர் ஆணையத்தை நியமனம் செய்துள்ளது. சுரண்டலுக்கு எதிராகப் பெண்களுக்கு நீதி கிடைக்க இந்த ஆணையம் முயற்சி செய்கிறது.

@KTBS NOT TO BE REPUBLISHED

விவசாயப் போராட்டம் :

பழங்காலத்திலிருந்தே, விவசாயிகள் நாட்டின் முதுகெலும்பு என்று அழைக்கப்படுகிறார்கள். ஆயினும் இந்த முதுகெலும்பை வலுவாக்கத் தேவையான வசதிகள் அவர்களுக்கு வழங்கப்படுவதில்லை. அரசு ஆதரவு இல்லாமல் இன்றும் விவசாயிகள் வாழ இயலாத நிலைமையில் உள்ளனர். தொழில் அதிபர்கள் தாங்கள் உற்பத்தி செய்யும் பொருட்களின் விலையை அவர்களே நிர்ணயிக்கின்றனர். ஆனால் விவசாயிகள் இன்றுவரை தங்கள் விளைப்பொருட்களின் விலையை நிர்ணயிக்கும் நிலைக்கு வளரவில்லை. அவர்கள் வருணபகவானின் கருணை அல்லது பரிதாப நிலைக்கு ஆளாகின்னர். விவசாயிகளை பாதுகாக்க வேண்டிய அரசாங்கம் அவர்களுடைய துன்ப நாட்களில் உதவிக்கு வராத காரணத்தால் விவசாயிகள் இப்போராட்டங்களில் ஈடுப்பட்டு, பல விவசாயிகள் உயிரை அர்பணித்து தியாகிகளாகியுள்ளனர்.

பலநூற்றாண்டுகாளாக போராடிகொண்டே வந்திருந்தாலும் அவர்களுடைய வாழ்க்கையின் கனவு இன்னும் தூரத்தில் உள்ளது.

விவசாய போராட்டங்கள் முக்கியமாக நில உரிமையாளர்களுக்கு எதிராக நடந்தது. சுதந்திரத்திற்கு பிறகு கர்நாடகத்தில் நாம் காணும் முதல் விவசாய போராட்டம் 1951ல் ஷிமோகா மாவட்டத்திலுள்ள காகோடு என்னுமிடத்தில் நடைபெற்றது. விவசாயிகள் தங்கள் பொருளை அளக்கப் பயன்படுத்தும் அளவை(கொளகா) பழக்க முறைக்கு எதிராக போராட்டத்தைத் தொடங்கினர் விவசாயிகளின் கடன் வசூல், பங்குதாரர்களின் துன்புறுத்தல் போன்ற முக்கிய பிரச்சனைகளுக்கு எதிராக விவசாயிகள் படிப்படியாக போராடி வந்தனர். சமாஜ்வாதி கட்சி சேர்ந்த சாந்தவேரி கோபால கௌடா என்பவர் போராட்டத்தின் முன்னணியில் இருந்தார். டாக்டர். இராமமனோஹரா லோஹியா அவர்கள் நேரில் சென்று இப்போராட்டத்திற்குப் புதிய உத்வேகத்தைக் கொடுத்தார்.

செயல்பாடு: நா. டிசோசா அவர்களின் 'கொளகா' என்ற நாவலைப் படித்து, விவசாயிகளின் நிலைமையைக் குறித்து ஒரு கட்டுரை எழுதுக.

பொ.ச.1950 இல், சமாஜ்வாதி விவசாயிகள் வட கன்னட மாவாட்டத்தில் விவசாயி போராட்டம் செய்தனர். பொ.ச.1972 ஆம் ஆண்டு கோலாரில் நில ஆக்கிரமிப்பு கிளர்ச்சி நடத்தது. பொ.ச.1980 இல், மலப்பிரபா நதிப் பகுதியின் விவசாயிகள், பருத்தி பயிர் கருகிய போது ஒரு போராட்டத்தை நடத்தினர். போலீஸ் துப்பாக்கிச் சூட்டில் சில விவசாயிகள் கொல்லப்பட்டனர். அரசுக்கு எதிராக ஒத்துழையாமை இயக்கத்தைத் தொடர்ந்தனர். இந்நிகழ்வில் நவலகுந்த நரகுந்த மற்றும் சவதத்தியில் 20க்கும் அதிகமான விவசாயிகள் உயிர் இழந்தனர்.


எம். டி. நஞ்சுண்ட சுவாமி

இதன் பின்னணியில் விவசாயிகள் தமக்கே உரிய அமைப்புகளை நிறுவிக்கொண்டனர். கருநாடக மாநில விவசாய சங்கம், சிவமொக்கா மாவட்டத்தில் தொடங்கி, உள்ளூர் பிரச்சனைகளை அச்சங்கம் தனது கைகளில் எடுத்துக்கொண்டது. வெளிநாட்டு நிறுவனங்களின் நுழைவு, இந்திய மக்கள் மீது எதிர்மறையான விளைவை ஏற்படுத்தும் என்பதை அறிந்திருந்ததால் அதை எதிர்த்தது. கருநாடக மாகாண விவசாயிகள் சங்கம், கிசான் சபா, தலித் சங்கர்ஷ் சமிதி, விவசாயிகள் மற்றும் தொழிலாளர் சங்கங்கள் போன்ற இன்ன பிற அமைப்புகள் விவசாயிகளின் பிரச்சனைகளுக்கு குரல் கொடுத்தனர். விவசாயிகளின் போராட்டத்தில், M.D. நஞ்சுண்டசுவாமி, சுந்தரேஷ், புட்டண்ணையா, கடிதலு ஷாமண்ணா மற்றும் பிறர் முக்கியத் தலைவர்களாவர்.

செயல்பாடு: பாகூர் நவிலே இயக்கத்தைப் பற்றிய அதிக விவரங்களை சேகரிக்கவும்.

NOT TO BE REPUBLISHED @KTBS

தலித் இயக்கம் :

புகழ் பெற்ற உளவியலாளரான ஆர்.டி. லியாங், ஒரு அற்புதமான அறிக்கையைப் பதிவு செய்கிறார். 'நீங்கள் மற்றவர்களின் அனுபவங்களைப் புரிந்து கொள்ள முடியும், ஆனால் அதே அனுபவத்தை நீங்கள் அனுபவிக்க முடியாது'. தலித் மற்றும் பெண்களைப் பொறுத்த வரையில் இக்கூற்று உண்மையானது. சாதி அமைப்பிலும் தலித்துகள் இடம் பெறவில்லை. அவர்கள் தாழ்ந்தோரை விட மிகுந்த தாழ்வான நிலையில் இருந்தனர். சூத்திரர் இனத்தில் பிறந்த ஒரே காரணத்தால் சமூகத்தின் எந்த முக்கிய நிகழ்ச்சிகளிலும் அவர்களைக் கலந்துக்கொள்ள அனுமதிக்காமல் ஒதுக்கினர். இதற்கு எதிராக நடந்த பல போராட்டங்களை வரலாறு முழுவதிலும் நாம் காண்கிறோம். ஆனால் காலனித்துவ காலத்தில் தலித்துகள் தொடர்பான பிரச்சனைகள் தேசிய அளவில் விவாதிக்கப்பட்டன. காந்திஜி மற்றும் அம்பேத்கர் அவர்களிடையே நடந்த பொ.ச.1930 இன் சகாப்தத்தின் விவாதங்களே இதற்கான முக்கிய

சாட்சியங்களாகும். இருவருடைய குறிக்கோள் ஒன்றேயானாலும் கடந்து சென்ற பாதைகள் வெவ்வேறாக இருந்தன.

சுவாமி விவேகானந்தரின் வருகைக்குப் பிறகு, மைசூர் அரசரான பத்தாம் சாமராஜேந்திர உடையார், தலித் மக்களின் இப்பிரச்சனைகளைக் கருத்தில் கொண்டு அவர்களுக்கு தனிப் பள்ளிகளை நிறுவினார்.

பொ.ச.1936 இல் தென் இத்தியாவின் புகழ்பெற்ற தலித் தலைவரான எம்.சி ராஜா அவர்களின் தலைமையில் மைசூர் அரண்மனைக்குள் முதன் முதலில் தலித் மக்கள் அனுமதிக்கப்பட்டனர்.

கடந்த காலங்களில் தலித் இனத்தைச் சேராத பலபேர் தலித் மக்களுக்காக போராடியுள்ளனர். தற்காலத்தில் தலித் மக்களே தங்கள் உரிமைகளுக்காகப் போராடி வருகின்றனர். டா.பி.ஆர். அம்பேத்கரின் கருத்தியல் அவர்களுக்கு உள்ளுக்கத்தைக் கொண்டு வந்தது. கல்வி அமைப்பும், போராட்டமும் தலித் இயக்கங்களின் தாரக மந்திரங்களாக மாறியது. அவர்கள் வெகுவாக விழிப்படைந்தனர் மற்றும் அரசியல் சாதனைகளையே அவர்களுடைய பிரச்சனைகளின் தீர்வாகக் கருதினர்.

தலித் மக்களில் டா.பி.ஆர் அம்பேத்கர் அவர்கள் சுயமரியாதையின் அடையாளமாக திகழ்ந்தார். எனவே 'தலித் சூர்யா' என்று அவர் அழைக்கப்பட்டார். இவ்வனைத்து வளர்ச்சிகளின் எதிரொலி கருநாடகத்திலும் ஒலித்தது.

20 ஆம் நூற்றாண்டில் அமைக்கப்பட்ட பிராமணர், அல்லாத இயக்கத்தில் தலித் மக்கள் சேர்க்கப்படவில்லை. இந்த ஓர் இயக்கத்திற்கு எதிரான போராட்டம் பொ.ச.1970 இல் தொடங்கி ஆற்றல் மிகுந்த இயக்கமாக வளர்ந்தது. பொ.ச.1970 ஆம் ஆண்டு பி.ஷியாம்சுந்தர் அவர்கள் கல்யாண ஹைதராபாத் கருநாடக (தற்போதை கல்யாண கர்நாடகம்) மாகாணத்தில் பீமசேனா அமைப்பை நிறுவினார். பசவலிங்கப்பா பூசா இயக்கம். (பொ.ச.1973) தலித் இயக்கத்திற்கு ஒரு புதிய திருப்பத்தை ஏற்படுத்தியது.

©KTBS NOT TO BE REPUBLISHED

மைசூரில் ஒரு நிகழ்ச்சியில், அமைச்சர் பசவலிங்கப்பா அவர்கள் கன்னட இலக்கியம் தீவன இலக்கியமாக மாறிவிட்டது என்று கருத்து தெரிவித்தார். இந்த கருத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து கருநாடகம் முழுவதும் போராட்டம் நடந்தது. இறுதியாக பசவலிங்கப்பா பதவியை ராஜினாமா செய்ய வேண்டியதாயிற்று. இந்த சம்பவம் தலித் மக்களிடையே விழிப்புணர்வை வளர்க்க உதவியது.

பின்னர் **1976**இல் பத்ராவதியில் 'தலித் எழுத்தாளர்கள் மற்றும் கலைஞர்களின் சங்கம்' அமைக்கப்பட்டது. கருநாடக தலித் இயக்கத்தின் உறுதியான படிகளை இச்சங்கத்தில் காணலாம். அதன் பிறகு இச்சங்கத்தின் பாதுகாப்பின் கீழ் கருநாடக 'தலித் சங்கர்ஷா சமிதி' உருவானது. பேராசிரியர் B. கிருஷ்ணப்பா அவர்கள் இச்சமிதியின் கூட்டுநர் (கன்வீனர்) ஆனார். இந்த முறையில் DSS ஒரு நிறுவன வடிவமைப்பைப் பெற்றது.

NOT TO BE REPUBLISHED ©KTBS

படிப்படியாக தலித் சங்கர்ஷ் சமதி அதன் நோக்கத்தை விரிவுபடுத்தியது. மேலும் அதன் கிளை அமைப்புகளான தொழிலாளர்கள், பெண்கள், துப்புரவு தொழிலாளர்கள் மாணவர்கள், எழுதாளர்கள் மற்றும் கலைஞர்கள் சங்கங்கள் துவக்கப்பட்டன. பாரம்பரீயமாக நிலமே இல்லாதவர்கள், நிலத்தைப் பெற்றுக்கொள்வதற்கு போராட்டத்தைத் தொடங்கினர். கல்வியில் முன்னேரிச் செல்வதன் மூலம் அதிகாரப்பூர்வமான மையங்களுக்குள் அனுமதி பெறுவது தலித் கிளர்ச்சியின் மற்றொரு நோக்கமாக இருந்தது. இருப்பினும் காலப்போக்கில் தலித் சங்கர்ஷ் சமதியின் உறுப்பினர்களிடையே கருத்து வேறுபாடுகள் எழும்பத் தொடங்கின. புதிய அமைப்புகள் வெவ்வேறு பெயர்களில் தோன்றின.

செயல்பாடு: *தேவனூரு மஹாதேவா மற்றும் டாக்டர் சித்தலிங்கைய்யா அவர்களின் படைப்புகளைப் பற்றிய விவரத்தை சேகரிக்க.*

எழுத்தாளர்களான தேவனூரு மஹாதேவா மற்றும் டி.சித்தலிங்கைய்யா அவர்கள் தலித்தர்களின் வாழ்க்கையை தலித் அல்லாதவர்களுக்கு தமது படைப்புகளின் மூலம் உலகிற்கு வெளிப்படுத்தினார்கள். மற்ற தலித் எழுத்தாளர்கள் உலகமயமாக்கலின் பின்னனியில் இந்த சமூகங்கள் எதிர்

கொள்ளும் சவால்களை வெளிபடுத்துகிறார்கள் இன்று தலித்துகள் சமூகத்தின் அனைத்து நிகழ்வுகளிலும் குறிப்பிடத்தை பங்கை வகிக்கும் திறன் கொண்டவர்களாக உள்ளனர். ஆனால் செல்ல வேண்டிய தூரம் அதிகம்.

கன்னட பாதுகாப்பு இயக்கம் அல்லது கன்னடத்தைப் பாதுகாக்கும் இயக்கம் :

கருநாடக ஒருங்கிணைப்பு இயக்கம் கன்னட மக்களிடையே மன உறுதியையும், ஒற்றுமைமையும் வளர்த்தது. கன்னட எழுத்தாளர்கள் தம்முடைய இலக்கியப் படைப்புகளினால் மொழியை வளர்த்தனர். இந்த நிலையில் கன்னட கலாச் சாரம் மற்றும் கன்னட சார்பு நிறுவனங்களின் கொடைகள் மகத்துவமானவை. பொ.ச.1960 களில், எ.என். கிருஷ்ண ராவ், சிதானந்தமூர்த்தி, எம்.என். இராமமூர்த்தி, வாட்டாள் நாகராஜ் மற்றும் கருநாடக யுவஜன சபா, கன்னட ஜாக்ருதா பரிஷத் மற்றும் கன்னடசக்தி கேந்திரா இவைகள், பெங்களூரில் மாற்று மொழி சபாநாயகர்களின் எண்ணிக்கை அதிகமான போது கன்னடம், கன்னட மக்கள் கருநாடகம் என்ற சிறப்பைப் பெற்றுக் கொடுப்பதில் வெற்றி பெற்றனர். இவ்வமைப்புகள் மட்டுமல்லாமல் இன்னபிற அமைப்புகளும் கன்னட மண், நீர் மற்றும் மொழியைப் பாதுகாப்பதில் பெரும்பங்கு வகிக்கின்றன.

6. கோகாக் இயக்கம்.

பொ.ச.1980 ஆம் ஆண்டு கன்னட மொழியின் நிலைநாட்டத்திற்காக நடந்த போராட்டத்தின் காலம் ஆகும். பொ.ச. 1982 இல் கோகாக் அறிக்கை நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்பதற்காக ஒரு வரலாற்று புகழ் மிக்க கிளர்ச்சி தொடங்கியது. கன்னட சமூகம் முழுவதும் இப்போராட்டத்தை நடத்த ஒன்றுகூடினர். கருநாடகத்திலிருத்த மொழி சிறுபான்மையினர் கன்னட மொழியில் பயிலாமல் தங்கள் தாய் மொழியில் மட்டுமே கற்போம் என்று பிடிவாதமாக இருந்தனர். அன்றைய முதல் அமைச்சரான ஆர் குண்டுராவ் அவர்கள் உடுப்பி சென்ற போது அங்கிருந்த மடத் தலைவர், முதலமைச்சரிடம் சமஸ்கிருத மொழிக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்று கட்டாயமாகக் கூறினார். இதன் விளைவாக எந்த மொழி பயிற்று மொழியாக இருக்க வேண்டும் என்ற கேள்வி சிறிது காலம் வரை ஒத்தி வைக்கப்பட்டது. கல்வியில் வெவ்வேறு மொழிகளின் இடத்தை உறுதி செய்ய டா. விநாயக கிருஷ்ணா அவர்களின் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டது.

© KTBS NOT TO BE REPUBLISHED

இக்குழு கன்னட மொழிக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்றும், கன்னடத்தைக் கட்டாயமாகப் பயில வேண்டும் என்றும் பரிந்துரைத்தது. இக்குழு மும்மொழிக் கொள்கையைப் பரிந்துரைத்தது மற்றும் அதற்கு 350 மதிப்பெண்களை ஒதுக்கியது.மேலும் இந்த மும்மொழிக் கொள்கையில் கன்னடம் முதல் மொழியாகவும், 150 மதிப்பெண்களுக்குப் பயிற்றுவிக்கப்பட வேண்டும் என்றும் பரிந்துரைத்தது.

கோகாக் அறிக்கையை அக்கால அரசாங்கம் ஏற்றுக் கொள்ளவில்லை. கன்னட திரைப்படக் கலைஞர் டா. இராஜ்குமார் தலைமையில் மாநிலம் முழுவதும் ஒரு முக்கியமான போராட்டம் நடைப்பெற்றது. மூத்த இலக்கியவாதிகளான குவெம்பு, பாடில் புட்டப்பா மற்றும் பிறர் இப்போராட்டத்திற்கு தமது ஆதரவை வெளிப்படுத்தினர்.

விநாயக கிருஷ்ணா கோகாக்

டா. இராஜ் குமார்

NOT TO BE REPUBLISHED @KTBS

கோகாக் போராட்டத்தின் முக்கிய முழக்கம் “கருநாடகத்தின் பெயர் ஓங்கட்டும், கன்னடம் உயிராகட்டும்”, என்ன வந்தாலும் கன்னடம் நிலைக்கட்டும், “கோகாக் அறிக்கை செயல்படுத்தப் படட்டும்”, “கருநாடகத்தில் கன்னடத்தின் மூச்சு நிரம்பட்டும்,” முதலியவை.

பயிற்சிகள்

I. பொருந்தமான வார்த்தைகளால் வெற்றிடங்களை நிரப்புக.

1. சுந்தர்லால் பஹுகுணரால் தொடங்கப்பட்ட இயக்கம் ________.
2. தேசிய மகளிர் தினம் ________ ல் ஆரம்பமானது

3. தலித் சூர்யா என்று அழைக்கப்பட்டவர் ________

4. பாஷா சமிதி ________ தலைமையில் உருவாக்கப் பட்டது.

II. ஒரு சொல் அல்லது ஒரு வாக்கியத்தில் விடையளிக்க.

5. 'துங்கா நதி மூலத்தைப் பாதுகாக்கவும்' என்ற இயக்கம் ஏன் தொடங்கியது?

6. அப்பிகோ இயக்கம் என்றால் என்ன?

7. 'சமூக வனவியல்' என்றால் என்ன?

8. BA(ஹானர்ஸ்) பட்டம் பெற்ற முதல் கருநாடகப் பெண்மணிகள் யாவர்?

III. இரண்டு அல்லது மூன்று வாக்கியங்களில் விடையளிக்க.

9. பழங்கால ஏரிகளை நாம் ஏன் பாதுகாக்க வேண்டும்?

10. சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்குத் தொடர்பான முக்கிய இயக்கங்களைக் குறிப்பிடுக.

11. தலித் இயக்கம் ஏன் தொடங்கியது?

12. தலித் இயக்கம் வேரூன்ற உதவிய தாரக மந்திரங்கள் யாவை?

IV. கலந்துரையாடுக :

13. தலித் இயக்கத்தின் சாதனைகள்.

செயல்பாடுகள்.

- உங்கள் பகுதியில் உள்ள தலித் மக்களிடம் சென்று, அவர்களுடைய பொருளாதார, சமூக மற்றும் கலாச்சார நிலைமையைப் பற்றி கேட்டு அறிந்துக்கொள்க.
- கோகாக் அறிக்கையைப் பற்றி மேலும் சில விவரங்களைச் சேகரிக்க.

***

@KTBS NOT TO BE REPUBLISHED

பாடம் 20	கருநாடகம்-பொருளாதாரம் மற்றும் சமுதாய மாற்றங்கள்

B5C5C4

அறிமுகம்:

இப்பாடத்தில், சுதந்திரத்திறகுப் பிறகு கருநாடகத்தில் உண்டான சமுதாய மற்றும் பொருளாதார வளர்ச்சியின் அடிப்படைக் கூறுகளைப் புரிந்து கொள்வதற்கு ஒரு முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

முன்னேற்றத்திற்குத் தேவையான வளமூலங்களின் பெரும்பங்கு சில பிரிவினருக்குக் கிடைக்கப் பெறுகிறது. ஆனால் பல்வேறு காரணங்களால் மற்ற பிரிவுகள் எந்த முன்னேற்றமும் அடையாமல் அப்படியே உள்ளனர் இதன் விளைவு சமுதாய ஏற்றத்தாழ்வாகும். இந்த ஏற்றத்தாழ்வை அகற்ற, அரசாங்கம் அரசமைப்பின் கட்டமைப்பில் சில சீர்த்திருத்தங்கள், பிற்படுத்தப்பட்டோர் ஆணையங்களின் அமைப்பு முதலியவற்றைக் கொண்டு வந்துள்ளது.

திறன்கள்

1. சுதந்திரத்திற்குப் பிறகு நடந்த சமுதாய மற்றும் பொருளாதார முன்னேற்றத்தைப் பற்றி மாணவர்கள் அறிந்து கொள஌ல்.
2. நிலச் சீர்த்திருந்த இயக்கத்தின் நோக்கங்களையும் விளைவுகளையும் அறிதல்
3. பிற்பட்ட வகுப்பினர் ஆணையங்களின் கொடைகளைப் பற்றி பெருமிதம் கொள்ளுதல்.

NOT TO BE REPUBLISHED @KTBS

நிலச் சீர்த்திருத்தங்கள்:

நில உடைமைகளில் இருக்கும் பிரச்சனைகளைப் போக்குவதற்கு நடைமுறைப்படுத்தப்பட்ட வழிமுறைகளை நிலச் சீர்த்திருத்தம் என்றழைப்பார்கள். நிலம், மனித வாழ்க்கையின் பிரிக்க முடியாத பாகமாகும். மனிதன் தனது வாழ்க்கையை வடிவமைத்துக் கொள்வதற்கு நிலத்தை சார்ந்துள்ளாள். ஆனால் அனைத்து சமூகத்தினருக்கும் நிலம் சமமாக பகிரப்படவில்லை.

இந்த நில உரிமைத்துவத்தில் காணப்பட்ட சமமின்மையை நீக்கும் வகையில் நில சீர்த்திருத்தம் மேற்கொள்ளப்பட்டது.

பழங்காலத்தில் நிலச் சொந்தக்காரர்களுக்கு ஆதரவாக உரிமைகள் இருந்தனவே தவிர, குத்தகைக்காரர்களுக்கு அல்ல. இதனால் செல்வத்தின் அடர்வு மற்றும் பங்கீட்டில் ஏற்றத்தாழ்வு ஏற்பட்டது. இங்கு நாம் 1970 இல் ஒரு சமநோக்கு சமூதாயத்தை உருவாக்கும் முயற்சிகளைக் காண்கிறோம். நிலப் பங்கீட்டைப் பற்றி கூலி விவசாயிகள் மற்றும் தலித் இயக்கங்கள் பல வினாக்களை விடுத்துள்ளனர். நிலமற்ற தாழ்நிலை சமூதாயங்களுக்கு நிலம் வழங்கப்பட வேண்டும் என்று பல பேரராட்டங்கள் நடந்தன. இதன் விளைவாக நிலச் சீர்திருத்தங்கள் அமல் படுத்தப்பட்டன. இச்சீர்த்திருத்தங்களின் முக்கிய அம்சங்கள் இவைகளாகும்.

1. ஜமீன்தாரி முறையை ஒழித்தல்.

பூமியின் மீது நில உரிமையாளரின் பிடிப்பைக் கட்டுப்படுத்துவது இந்த நடவடிக்கையின் நோக்கமாகும். பொ.ச. 1955 இல், இந்தியாவின் முன்னாள் துணை குடியரசுத் தலைவர் பி.டி ஜத்தியவர்களின் கண்காணிப்பில் ஒரு அமைப்பு உருவாக்கப்பட்டது. இந்தக் குழு நிலச் சீர்திருத்தங்களைக் கொண்டுவருவதற்கு சில பரிந்துரைகளை வழங்கியது. ஒவ்வொரு குடும்பத்தினருக்கும் அதிகபட்சமாக 116 ஏக்கர் வறண்ட நிலம், அல்லது 27 ஏக்கர் பாசன நிலமும் கொண்டிருக்க வேண்டும் என்று குழு பரிந்துரைத்தது. இப்பரிந்துரைகள் செல்வந்தர்களுக்கு ஆதரவாக இருந்தது. பொ.ச. 1957 இல் செயல்முறைக்கு கொண்டுவரப்பட்டது. ஆனால் இப்பரிந்துரைகள் அப்போது இருந்த நிலைமையில், எத்தகைய தெளிவான மாற்றங்களையும் கொண்டு வரவில்லை. பொ.ச. 1974 இன் 'நிலச் சீர்த்திருத்த இயக்கம்' இம்முறையை ஒழிக்கும் ஒரு தெளிவான சட்டமாக இருந்தது.

> ஒரு ஏக்கர் 100 சென்ட்கள் அல்லது 40 குண்ட்டாக்களுக்கு சமம்.

2. குத்தகை முறையில் சீர்த்திருத்தங்கள்.

இந்திய குத்தகைக்காரர்கள் பல பிரச்சனைகளை சந்தித்தனர். குத்தகையாக ஒரு பெருத்தொகை செலுத்த வேண்டியது, பாதுகாப்பற்ற நில இருப்புக்கள், நில உரிமையில் சமத்துவமின்மை

NOT TO BE REPUBLISHED @KTBS

போன்றவை சில பிரச்சனைகளாகும். இப்பிரச்சினைகளுக்குத் தீர்வாக பொ.ச. 1947ல் கடுநாடகத்தில் முதல் அமைச்சராக இருந்த டி. தேவராஜ் அரஸ் அவர்கள் ஒரு சீர்த்திருத்த சட்டத்தை அமலுக்கு கொண்டு வந்தார். அச்சட்டம் கூறுவது என்னவெனில் ''நிலத்தை உழுபவரே அதன் உரிமையாளராவர்.'' என்பதாகும். நிலத்தை குத்தகைக்கு எடுத்து விவசாயம் செய்து வந்த பல நிலமற்ற மக்கள், நில உரிமையாளர்களாக மாறினர்.

1974 இன் நிலச்சீர்த்திருத்த சட்டத்தின் முக்கிய அம்சங்களாவன.

1) அனைத்து வகையான குத்தகைகளையும் அது ரத்து செய்தது.
2) உழவர் தாம் பயிரிட்ட நிலத்தில் தமது உரிமையை நிலைநாட்டுவதற்கு வாய்ப்பு வழங்கப்பட்டது.
3) வாடகை நிலங்கள் அனைத்தும் அரசு உடைமைகள் ஆயின. நிலத்தின் மீதான உரிமையை நிலைநாட்ட விரும்புவோர் மற்றும் இழப்பீடு கோருபவர்கள் தீர்ப்பாயங்களில் விண்ணப்பிக்க வேண்டியிருந்தது.
4) தீர்ப்பாயத்தின் முடிவே இறுதியானது. அதன் நீதியை உயர்நீதி மன்றத்தில் மட்டுமே முறையீடு செய்ய முடிந்தது

3) நில உடைமைகளின் அதிகபட்ச வரம்பு:

பொ.ச. 1957 க்கு பிறகு எடுக்கப்பட்ட முக்கிய முயற்சிகள் பொ.ச. 1970 இல் நடைமுறைப்படுத்தப்பட்டன. ஒரு குடும்பம் வைத்திருக்க வேண்டிய நிலத்தின் வரம்பை மாநில அரசு நிர்ணயித்திருந்தது.

பொ.ச. 1974 இல், அதிகபட்ச வரம்பு கீழ்வருமாறு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. ஒரு குடும்பம் தண்ணீர் வசதி இல்லாத 54 ஏக்கர் வளமான நிலத்தை மட்டும் பெற்றிருக்க வேண்டும். நிலத்தில் பாசன வசதி இருந்து ஒன்றைவிட அதிகமான பயிர்களை அதில் விளைத்தால், அக்குடும்பம் 10 இலிருந்து 18 ஏக்கர் நிலத்தைப் பெற்றிருக்கலாம். நிலத்தில் பாசன வசதி இருந்து ஒரு பயிரை மட்டுமே விளைத்தால் ஒவ்வொரு குடும்பமும் அதிக பட்சம் 27 ஏக்கர் நிலத்தை வைத்திருக்க வேண்டும். பொ.ச. 1977 இல், 'இனாம் ரத்து சட்டம்' அமலுக்கு வந்தது.

செயல்பாடு: இனாம் ரத்து சட்டத்தைப் பற்றிய விவரத்தை சேகரிக்க.

NOT TO BE REPUBLISHED @KTBS

4. பொருளாதார உடைமைகளின் உருவாக்கம்:

எந்த உடைமைகளிலிருந்து ஒரு விவசாயி தனது விவசாயச் செலவுகளைக் கழித்து தானும் தனது குடும்பமும் நிம்மதியாக வாழ்வதற்குத் தேவையான வருமானத்தை ஈட்ட முடியுமோ அத்தகைய வாழ்வாதர உடைமைகளைப் 'பொருளாதார உடைமை' என்பர். உடைமைகளின் தொகுப்பு மற்றும் உடைமைகளின் அதிகபட்ச வரம்பு வரையறுக்கப்பட்ட பிறகு பல விவசாயிகளின் வாழ்க்கைத் தரம் உயர்ந்தது.

5. கூட்டுறவு விவசாய மேம்பாடு :

விவசாயிகள் தமக்குத் தாமே கூட்டுறவு சங்கங்களை அமைத்துக் கொண்டு தம்முடைய நிலங்களை கூட்டு மேற்பார்வைக்கும் கூட்டுப் பயிரிடுதலுக்கும் ஒப்புக் கொடுத்தனர். பயிர் அறுவடை செய்யப்பட்டு விற்பனை செய்த பிறகு, நிலங்களின் நீண்ட கால மேம்பாட்டு செயல்பாடுகளுக்குத் தேவையான தொகையை விவசாயிகள் ஒதுக்கி வைத்துக் கொண்டு மீதமுள்ள தொகையை தமக்குள் பகிர்ந்துகொள்கிறார்கள். இதையே 'கூட்டுறவு விவசாயம்' என்கிறோம்.

NOT TO BE REPUBLISHED @KTBS

சிறிய அளவாக இருந்தாலும், நில சீர்த்திருத்தங்களினால், நிலமில்லாதவர்கள், நிலச் சொந்தக்காரர்களாக முடிந்தது. உழவர்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட்டன. கூட்டுறவு விவசாய முறையினால் விவசாயிகளுக்கு ஒரு சிறு தொகையாவது கிடைத்தது. ஆனால் இந்த அமைப்புக்குத் தேவையான ஆதரவை மக்கள் கொடுக்கவில்லை.

பிற்பட்ட வகுப்பினரின் ஆணையம் :

இந்திய சமுதாயத்தில் சமமின்மை மிகுத்திருத்தது. படிநிலை சாதி அமைவினால், பல இனத்தவர் பல்லாண்டுகாலம் வரையிலும் பின்தங்கியவர்களாகவே இருந்தனர். ஆங்கிலேயர்கள் இந்தியாவிற்கு வந்த பிறகு ஒரு புதிய சமூக நகற்றல் காணப் பட்டது.

ஆங்கிலேயர்களின் ஆட்சி முறையில், சாதி இனம் போன்ற வேறுபாடுகளின்றி அனைத்து மக்களுக்கும் ஆங்கிலம் பயிலும் வாய்ப்பு கிடைத்தது. ஆங்கிலம் படித்தவர்களுக்கும் ஆங்கிலேய அரசாங்கத்தில் புதிய வாய்ப்புகள் கிடைத்தது. பிராமணரல்லாத மற்ற இனத்தவர்கள், கல்வி கற்க விரும்பிய போது அவர்களில் ஒரு புதிய விழிப்புணர்வு ஏற்பட்டது. அவர்கள் பெரும்பான்மையோராக இருந்தாலும், அவர்கள்

பொருத்தமான பிரதிநிதித்துவம் பெறவில்லை. எனவே சாஹூகொர் சென்னைய்யா, எம்.பசவய்யா மற்றும் பிற பிராமணர் அல்லாதவர்கள் மைசூர் மாகாணத்தில் பிராமணரல்லாத இயக்கத்தைச் தொடங்கினர்.

நால்வடி கிருஷ்ணராஜ உடையார் காலத்தில் முதல் பிற்படுத்தப் பட்ட வகுப்பு ஆணையம் (நீதிபதி லெஸ்லி.சி. மில்லர் தலைமையில் பொ.ச. 1918 ஆண்டு) நியமிக்கப்பட்டது. ஒரு பிரிவினரில் ஐந்து சதவீதம் அல்லது அதைவிட அதிகமானோர் ஆங்கிலம் அறித்தவர்களாக இருந்தால், அப்பிரிவு முற்போக்குப் பிரிவாகும் என்ற கருத்தை அந்த ஆணையம் தெரிவித்தது. பொ.ச. 1921 இல், மைசூர் மாநிலத்தில் முதல் இட ஒதுக்கீடு விதி அமலுக்கு வந்தது.


எல். ஜி. ஹானூரு

பொ.ச. 1975 இல், எல்.ஜி.ஹாவனூரு அவர்களின் தலைமையில் முதல் அமைச்சர் டி.தேவராஜ் அரஸ் அவர்கள் பிற்படுத்தப்பட்ட வகுப்பு ஆணையத்தை நியமித்தார். பொ.ச. 1975 ஆம் ஆண்டு எஸ். எஸ். எல்.சி. தேர்வில் தேர்ச்சி பெற்ற பல்வேறு சாதி மாணவர்களின் சதவீதம் அந்த சாதியினரின் பின்தங்கிய நிலைமையை உறுதி செய்யும் அளவு கோலாகக் கருதப்பட்டது. ஹவனூரு அவர்களின் அறிக்கையின் அடிப்படையில் பொ.ச. 1977 இல் ஒரு அரசு சட்டம் அமலுக்கு வந்தது. இது ஒரு புரட்சிகரமான ஆணையாக மாறியது. இது பிற்படுத்தப்பட்ட வகுப்பினரைப் பொருளாதார ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் அதிக அளவில் வலுவடையச் செய்தது ஆனால் இந்த உத்தரவை எதிர்த்து உச்ச நீதி மன்றத்தில் வழக்கு தொடரப்பட்ட நிலையில், அறிக்கையில் இருந்த அனைத்து குறைபாடுகளும் சரிசெய்யப்படும் என்று கருநாடக அரசு உறுதி அளித்தது. இதற்காக டி. வேங்கட சுவாமி ஆணையம் பொ.ச. 1983 இல் நியமிக்கப்பட்டது. ஆனால் அரசியல் அழுத்தத்தின் காரணமாக வேங்கட சுவாமி அவர்களின் அறிக்கையை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவில்லை. முதல் அமைச்சர் இராமகிருஷ்ண ஹெகடே அவர்களின் பதவிக் காலத்தில் நடுவர். ஓ. சென்னப்பா ரெட்டியவர்களின் தலைமையில் ஒரு குழு நியமிக்கப்பட்டது. இவ்வறிக்கையின் பரிந்துரைகளும் அரசியல் அழுத்தத்தினால் அமல் படுத்தப்படவில்லை.

©KTBS NOT TO BE REPUBLISHED

இதுவரை பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்குத் தொடர்பாக வழங்கப்பட்ட இட ஒதுக்கீடு கொள்கைகளும் இணக்கத் தீர்வுக்கானவை மட்டுமே தவிர அறிவியல் ஆய்வின் பரிந்துரைகளின் அடிப்படையில் அமையப்பெறவில்லை.

பஞ்சாயத்து ராஜ் அமைப்பு : பஞ்சாயத்து ராஜ் அமைப்பை 'நிர்வாகத்தின் பரவலாக்கம், என்று வரையறுக்கலாம். உள்ளூர் மக்களுக்கு நிர்வாகத்தில் பங்கேற்பதற்கும், முடிவுகளை எடுப்பதற்கும் அதிகாரம் வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. பண்டைய காலத்து இந்தியாவில் பிறகு உள்ளாட்சி அமைப்பு முறை வழக்கம் இருந்தாலும், இந்த அமைப்பிற்கு அரசமைப்பு வழங்கப்பட்டது. வடிவம் கொடுக்கும் பணி தொடங்கப்பட்டது. பொ.ச. 1955 இல், மைய அரசு பல்வந்த ராய் மெஹ்தா அவர்களின் தலைமையில் ஒரு குழுவை அமைத்தது. இந்தக் குழு மூன்று அடுக்கு உள்ளாட்சி நிர்வாக முறையைப் பரிந்துரைத்தது

இந்த வளர்ச்சியின் பின்னணியில், அப்பொழுது கட்சியில் இருந்த மாநில அரசு ஜனநாயகப் பரவலாக்கத்தை செயல்படுத்துவதற்காக மைசூர் கிராம பஞ்சாயத்துகள் மற்றும் உள்ளாட்சி சபைகள் சட்டம் (Local Boards Act) பொ.ச. 1959 இல் வெளியிடப்பட்டது. இதன் மூலம் கருநாடகத்தில், அடிமட்ட நிலையில் ஜனநாயக அமைப்புகளின் தோற்றத்திற்கு உறுதியான அடித்தளத்தை அமைத்தது. புதிய சட்டத்தின் படி, நிர்வாக அமைப்பு முறையின் மூன்று நிலைகளாவன

* கிராம பஞ்சாயத்து
* தாலுக்கா பஞ்சாயத்து
* ஜில்லா பஞ்சாயத்து

1983 ஆம் ஆண்டு கருநாடகத்தில் ஆட்சிக்கு வந்த ஜனதா அரசு, பஞ்சாயத்து ராஜ் அமைப்பில் புரட்சிகரமான மாற்றங்களைக் கொண்டு வந்தது. இந்த அமைப்பை நிறுவியவர் பஞ்சாயத்து ராஜ் அமைச்சரான ஸ்ரீ. அப்துல் நஜீர் சாப் ஆவார். இந்த அமைப்பானது தலித் மக்களுக்கும், பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கும் பெண்களுக்கும் தன்னாட்சியில் பங்கு பெறுவதற்கான வாய்ப்பை உருவாக்கிக் கொடுத்தது.

ஸ்ரீ அப்துல் நஜீர் சாப்

@KTBS NOT TO BE REPUBLISHED

புதிய சொல் :

குத்தகை : நில உரிமையாளருக்கும் குத்தகைதாரருக்கும் இடையிலான ஒப்பந்தத்தின் விளைவாக மொத்த உற்பத்தியில், குத்தகைதாரர் பெறும் பங்கு.

பயிற்சிகள்

I. ஏற்ற சொற்களால் விடுப்பட்ட இடங்களை நிரப்புக.

1. பி.டி. ஜத்தி இந்தியாவின் _______ ஆக இருந்தார்
2. 1974 இல் _______ அவர்கள் கருநாடகத்தின் முதல் அமைச்சராக இருந்தார்.
3. 1915 இல் _______ அவர்கள் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்ஆணையத்தின் முதல் தலைவராக இருந்தார்.
4. கருநாடகத்தில் பஞ்சாயத் ராஜ் அமைப்பை நிறுவியவர் _______ .

II. இரண்டு அல்லது மூன்று வாக்கியங்களில் விடையளிக்க.

5. நிலச் சீர்த்திருத்தங்கள் என்றால் என்ன ?
6. கருநாடகத்தில் செயற்படுத்தப்பட்ட முக்கியமான நிலச் சீர்த்திருத்தங்கள் யாவை?
7. பொருளாதார உடைமைகள் என்றால் என்ன?
8. ஒரு குடும்பம் பெற்றிருக்கக் கூடிய அதிகபட்ச நில வரம்பைக் கருநாடக அரசு ஏன் நிலைப்படுத்தியது?.
9. கூட்டுறவு விவசாய முறை என்றால் என்ன?
10. எல்.ஜி. ஹானூரு ஆணையம் ஒரு சமூகத்தின் பின்தங்கிய நிலைமையை எவ்வாறு குறிப்பிடுகிறது?
11. பஞ்சாயத்து ராஜ் அமைப்பு ஏன் சிறப்பானது?
12. கருநாடக வரலாற்றில் பிற்பட்ட வகுப்பினர் இயக்கத்தின் முக்கியத்துவத்தைப் ப்றறி எழுதுக.

செயல்பாடுகள்

- பள்ளியில் கிராம பஞ்சாயத்து மாதிரியில் ஒரு சபையை அமைத்தல் (ஆசிரியரின் உதவியைப் பெறுக)
- உங்கள் ஊர் எந்த கிராம பஞ்சாயத்து அட்சி வரம்பிற்குள் வருகிறதோ அந்த கிராம பஞ்சாயத்தின் அமைப்பு முறையையும் செயல்பரப்பைப் பற்றியும் விவரங்களைச் சேகரிக்க.

***

©KTBS NOT TO BE REPUBLISHED

பாடம் 21	வெவ்வேறு துறைகளில் முன்னேற்றம்

Q4R2W3

பாட அறிமுகம்:

சமூக பொருளாதார வளர்ச்சி முறையில் செய்திக் தொடர்பின் பங்கு அளப்பரியது. கருநாடகத்தின் முன்னேற்றத்தில், வேளாண்மை, தகவல் தொழில் நுட்பம் மற்றும் உயிரி தொழில் நுட்பவியலில் நடந்த சீர்த்திருத்தங்களில் குறிப்பிடத்தக்க பங்கு வகிக்கிறது. இதைப் பற்றி இப் பாடத்தில் சுருக்கமான அறிமுகம் கொடுக்கப் பட்டுள்ளது.

திறன்கள்

1. சமூக மற்றும் பொருளாதார முன்னேற்றத்தில் தகவல் தொழில் நுட்பத்தின் பங்கினைப் பற்றி அறிதல்.
2. தகவல்தொழில்நுட்பம்மற்றும்உயிரிதொழில்நுட்பவியலின் சீர்த்திருத்தத்தின் விளைவாக, அரசியல் சமூக மற்றும் பொருளாதார துறைகளில் உண்டான மாற்றங்கன் குறித்த செய்திகளை சேகரித்தல்
3. வேளாண்மை, தொழில், அடிப்படை வசதிகளில் உண்டான வளர்ச்சியைப் பற்றி பெருமிதம் கொள்ளுதல்.

© KTBS NOT TO BE REPUBLISHED

திரள் தகவல் முறை (Mass communication)

ஒருவரிடமிருந்து மற்றொருவருக்கு அல்லது ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு ஒரு செய்தியையோ அல்லது தகவலையோ அனுப்பும் முறை தகவல் தொடர்பு முறை ஆகும். நமது முன்னோர்கள் வெவ்வேறு காலக்கட்டங்களில் வெவ்வேறு தொடர்பு வடிவங்களைப் பயன்படுத்தினர். எடுத்துக்காட்டாக பண்டைய காலத்தில், புறாக்கள், ஒட்டகங்கள் முதலியவை தகவல் தொடர்பு ஊடகங்களாகப் பயன்படுதப்பட்டன.

நவீன நாட்களில், தகவல் தொடர்பு முறையில் புரட்சிகரமான மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இப் புரட்சியானது மேற்கத்திய நாடுகளிலிருந்து இந்தியாவிற்கு வந்தது. தபால் மற்றும் தந்தி அமைப்பு முறை 20 ஆம் நுற்றாண்டின் முடிவிலிருந்தே அதிகமாக

பயன்பாட்டில் இருந்தது மற்றும் தகவல் தொடர்பு ஊடகமாகவும் பயன்பட்டது. இன்று ரேடியோ, தூர்தர்ஷன், மொபைல், வலைத்தளம் போன்ற தொடர்பு ஊடகங்கள் பெரும்பாலும் அனைத்து சமூகத்தினருக்கு சென்றடைந்துள்ளது. இவையின்றி மக்கள் வாழக்கையை நம்மால் சிந்தித்துப் பார்க்கவும் இயலாது.

சமூக ஊடகங்களை முக்கியமாக மூன்று வகைகளாகப் பிரிக்கலாம். அவையாவன

* தட்டச்சு ஊடகம்
* மின்னணு ஊடகம்.
* பொழுதுபோக்கு ஊடகம்

1) தட்டச்சு ஊடகம்:

தற்காலத்தில் ஆங்கிலம் மற்றும் பிற உள்ளூர் மொழிகளில் எண்ணற்ற பத்திரிக்கைகள் வெளியாகின்றன. தினப்பத்திரிக்கைகள் (நாளிதழ்கள்) வரலாற்றுப் பதிவுகளாகக் கருதப்படுகின்றன. இப்பத்திரிக்கைகள் நகரம், கிராமம் என்ற வேறுபாடின்றி, எல்லோரையும் சென்றடைகின்ற ஒரு ஆற்றல் வாய்ந்த ஊடகமாக விளங்குகிறது.

செயல்பாடு : கன்னட/ஆங்கில நாளிதழ்கள் வாரப் பத்திரிக்கைகளைப் பட்டியலிடுக.

கன்னட மொழியில் முதன் முதலில் வெளியான பத்திரிக்கை ‘மங்களூரு செய்திகள்’ ஆகும். பத்திரிக்கைகளில் தினப்பத்திரிக்கை, வாரப்பத்திரிக்கை, பிறைப் பத்திரிக்கை, மாதாந்திரப் பத்திரிக்கை, அரையாண்டு பத்திரிக்கை, வருடாந்திரப் பத்திரிக்கைகள் உள்ளன.

© KTBS NOT TO BE REPUBLISHED

2) மின்னணு ஊடகம்

20 ஆம் நூற்றாண்டின் கடைசிப் பகுதிகளில் மின்னணுப் புரட்சி தொடங்கியது. ‘தூர்தர்ஷன்’ மக்களின் முக்கிய பொழுதுபோக்காக இருந்தது. இந்த ஊடகம் நமக்குத் தேவையான விவரங்களைக் கொடுப்பதோடு பொழுதுபோக்கையும் கொடுக்கிறது.

மின்னணுத் துறையில் கடுமையான போட்டி நிலவுவதால் பல்வேறு தனியார் நிறுவனங்கள் ஒருவர் இன்னொருவரை முந்திச் சென்று விவசாயிகள், தொழிலாளர்கள், முதலீட்டாளர்கள், பல்வேறு வாடிக்கையாளர்கள், மாணவர்கள் மற்றும் பிற

வகுப்பினருக்குத் தேவையான செய்தித் திரளைக் கொடுக்க முன்வந்துள்ளன. எந்த இடத்தில் எந்த நிகழ்ச்சி நடந்தாலும், தொலைக்காட்சி ஒரு நொடிப் பொழுதில் அதை நம் கண் முன்னே கொண்டு வந்து விடுகிறது. மேலும் நிலநடுக்கங்கள், வெள்ளம், விபத்துகள் போன்ற பேரிடர்களைப் பற்றிய செய்திகளையும். ஒளிபரப்புகிறது. வானிலை சீர்குலைவுகள் பற்றிய செய்திகளை சரியான நேரத்தில் வழங்குவதற்கு இது பெரும் உதவியாக இருப்பதால், உயிரிழப்புகளைப் குறைக்கப் பயன்படுகிறது. தொலைக்காட்சி உள்பட, வானொலி, மொபைல் (கைப்பேசி) மற்றும் இணையதளம் நல் விளைவுகளை உண்டாக்கும் மின்னணு ஊடகங்களாகும். இது பலபேருடைய வாழ்க்கையின் இணைபிரியாத அங்கமாகிவிட்டது. நகரப்புறங்களில் இணையம் அதிகமாகப் பயன்படுத்தப்படுகிறது.

மொபைல், படிப்பறிவுள்ள மற்றும் படிப்பறிவில்லாத மக்களைச் சென்றடையும் ஒரு ஆற்றல் மிகுந்த ஊடகமாகும். வானொலியும் அத்தகைய ஒரு குறிப்பிடத்தக்க ஊடகமாகும். இது தகவலையும் பொழுதுபோக்கையும் வழங்கக்கூடிம ஒலி ஊடகமாகும்.

இணையதளம் முழு உலகத்தையும் மிக நெருக்கமான வகையில் இணைத்துள்ளது. உலகின் ஒரு மூலையிலிருந்து இன்னொரு மூலைக்கு செய்திகளை நொடிப்பொழுதில் அனுப்புவதற்கு இது ஒரு வலிமை வாய்ந்த ஊடகமாகும். இன்று துவங்கப்படுகின்ற பல இயக்கங்களுக்கு இணையதளத்தில் கிடைக்கப்பெறும் ஃபேஸ் புக், டுவிட்டர் முதலியன ஊடகங்களாகின்றன. இவ்வகையில் மின்னணு ஊடகம் நமது சமுதாயத்தை மாற்றுவதில் பெரும் பங்கு வகிக்கிறது. இது ஒரு தொடர் செயல் முறையாகும்.

@KTBS NOT TO BE REPUBLISHED

3 . பொழுதுபோக்கு ஊடகம் :

பொழுதுபோக்குத் துறையில் திரைப்படங்கள் பெரிய ஊடங்களாகும். திரைப்படங்களுடன் மிக நெருங்கிய தொடர்புடையது நாடக ஊடகம் ஆகும்.

திரைப்படம் ஒரு காட்சி ஊடகமாகும் மற்றும் அனைத்து வகுப்பு மக்களை ஈர்க்கும் ஆற்றல் மிக்கதாகும். திரையரங்குகளில் நாம் முக்கியமாக வணிகப் படங்களைப் பார்க்கிறோம். அதுமட்டுமல்லாமல், கலைத் திரைப்படம் (ஆர்ட்சினிமா) என்னும் ஒரு இணைத் திரைப்படமும் உண்டு. திரைப்படங்கள்

குறிப்பிட்ட தலைப்புகளில் உள் நோக்கு கண்ணோட்டத்தைக் கொண்டுள்ளது மற்றும் சமூக முடநம்பிக்கைகளை உடைக்க முயற்சிக்கிறது. பலபேர் அவற்றை பார்க்க வேண்டும்.

தகவல் தொடர்பு ஊடகம் நாட்டின் முன்னேற்றத்தில் இன்று முதன்மைப் பங்கு வகிக்கிறது. அவை நாட்டின் ஒற்றுமை, நேர்மை மற்றும் இறையாண்மையை நிலைநாட்ட உதவுகிறது. அது மட்டுமல்லாமல், தகவல் தொடர்பு ஊடகம், வணிகம் மற்றும் பொருளாதார துறைகளின் மேம்பாட்டில், முக்கிய பங்கு வகிக்கிறது. பெரிய நிறுவனங்கள் தனியுரிமைக்காக மற்றவர்களோடு போட்டிப் போடுகின்றன,

தகவல் தொழில் நுட்பத்தில் புரட்சி

தற்போதைய காலம் 'தகவலின் காலம்' என்று அழைக்கப்படுகிறது - தொழில்நுட்பத்தின் உதவியுடன் தகவல்களைஉருவாக்குவதும் பரப்புவதும் தகவல் தொழில்நுட்பம் எனப்படும்.

பொ.ச. 1990 இல், கணினி மென்பொருளும் தொலைவரித் தகவல் தொடர்பும் (telegraphic communication) ஒரு பெரிய புரட்சியை உருவாக்கியது. தகவல் ஒரு விளைப்பொருளாகக் கருதப்படத் தொடங்கியது. மென் பொருன் தயாரிப்பில் பெங்களூரின் பெரிய நிறுவனங்களான இன்ஃபோசிஸ், விப்ரோ போன்ற நிறுவனங்களின் பங்கு மகத்தானது. பெங்களூரு இந்தியாவின் சிலிகான் பள்ளதாக்கு (Silicon Valley) என்றழைக்கப்படுகிறது.

NOT TO BE REPUBLISHED ©KTBS

ஐ.டி. பார்க் பெங்களூரு

பொ.ச. 1997 இல், தகவல் தொழில் நுட்பத்தின் தொடர்பாக கருதாடக அரசு ஒரு புதிய திட்டத்தை அமைத்துள்ளது. தொழில், விவசாயம், வர்த்தகம், வணிகம், கல்வி, சுகாதாரம், நிர்வாகம், கன்னட மொழி மேம்பாடு போன்ற துறைகளுக்கு, தகவல் தொழில் நுட்பத்தின் உதவியோடு, ஒரு புதிய வடிவத்தைக் கொடுப்பதே இத்திட்டத்தின் நோக்கமாக

இருந்தது. இப்புரட்சி பல வேலை வாய்ப்புகளை உருவாக்கிக் கொடுத்தது. இத்தொடர்பில் இணையதள தொழில்நுட்பம் ஒரு முக்கியமான பங்கு வகிக்கிறது.

பொ.ச. 2000 ஆம் ஆண்டில் மத்திய அரசும், கருநாடக அரசும் இணைந்து தொடங்கிய சைபர் பார்க் திட்டம் மற்றொரு முக்கியமான வளர்ச்சியாகும். ஏழு மையங்களில் யுவாடாட்காம்ஸ் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டன. கன்னட மொழியின் வளர்ச்சிக்கான மென்பொருளை செயல்படுத்த, குறிப்பிட்ட குறியீடுகளுள்ள விசைப்பலகை கண்டுபிடிக்கப்பட்டது.

தகவல் தொழில்நுட்பத்தின் உதவியுடன், இன்று பல்வேறு தரப்பு மக்களுக்கு சமூக அதிகாரம் வழங்கப்படுகிறது. இன்று நாம் உலகம் முழுவதும், தகவல் தொழில் நுட்பத்தின் இன்றியமையாத பயன்பாட்டைக் காண்கிறோம்.

செயல்பாடு : கருநாடகத்தில் தகவல் தொழில் நுட்ப நிறுவனங்களின் பட்டியலைத் தயாரிக்க.

@KTBS NOT TO BE REPUBLISHED

உயிரியல் தொழில் நுட்பத்தின் புரட்சி

20 ஆம் நூற்றாண்டின் முடிவில் தகவல் தொழில்நுட்பம் மற்றும் உயிரியல் தொழில் நுட்பத்தில் உண்டான மாற்றங்கள் மிகவும் புரட்சிகரமானவை. ஆயினும், 20 ஆம் நூற்றாண்டில் மட்டுமே அறிவியல் ஒரு தனிக் கிளையாக வளர்ந்தது. உயிரியல் தொழில் நுட்பம் பல்வேறு கிளைகளாக வளர்ந்து கொண்டே வருகிறது வளர்பியல் தொழில் நுட்பம், டி.என்.எ (டி ஆக்ஸி ரைபோ நியூக்லிக் ஆஸிட்) விரல் ரேகைப் பதிவு நுட்பம், (DNA Finger Printing) திசு வளர்ப்பு, படியாக்கம் (கிளோனிங்க்) முதலியன. பொ.ச. 1997 இல் வில்மட் என்ற ஒரு விஞ்ஞானி, படியாக்கம் செய்யப்பட்ட முதல் செம்மறி ஆட்டை (டாலி) உருவாக்கினார். அதைத் தொடர்ந்து மேலும் பல படியாக்கங்கள் செய்யப் பட்டன.

பயோகான் கம்பெனி

எரிபொருள் தட்டுப்பாடு இன்றைய கடுமையான பிரச்சனையாகும். வானளவு உயர்ந்த விலையுள்ள இந்த எரிபொருளை மக்களால் வாங்க முடியாது. ஆகவே மாற்று உயிரிவாயுவை தயாரிக்கும் ஆராய்ச்சி முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வேளாண்மையில் உயிரி தொழில் நுட்பத்தை ஒருங்கிணைக்கும் முயற்சிகள் மிக வேகமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கருநாடகத்தில் இவ்வனைந்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. உயிரி தொழில் நுட்ப பூங்காக்கள், பெங்களூரிலும் தார்வாடிலும் நிறுவப்பட்டுள்ளன. இதுபோல, கடலோரப் பகுதிகளில் கடற்சார் வளமூலங்களைப் பயன்படுத்தி, கார்வாரில் ஒரு உயிரியல் தொழில்நுட்ப மையம் நிறுவப்பட்டுள்ளது. தார்வாடில், ஒரு வேளாண் உயிரி தொழில் நுட்ப நிறுவனம் அமைக்கப்பட்டுள்ளது. பயோகான் போன்ற பெரிய நிறுவனங்கள் தனியார் துறையில் செயல்படுகின்றன. இந்த முன்னேற்றங்கள் நமது பொருளதார, சமூக மற்றும் அரசியல் அமைப்புகளில் நெடுநாள் விளைவுகளை ஏற்படுத்துகின்றன.

செயல்பாடு : எரிபொருள் நெருக்கடி பற்றிய தகவல்களை சேகரிக்க.

கருநாடகத்தில் வேளாண்மை வளர்ச்சி

நிலமானது மண், நீர், கனிமங்கள், காடுகள், அணு மற்றும் ஆற்றல் மூலங்கள் போன்ற இயற்கை வளங்களைக் கொண்டுள்ளது, இவை அனைத்தையும் சரியாகப் பயன்படுத்தினால் முன்னேற்றம் அடைய முடியும். இந்தியாவில் பல குடும்பங்கள் தமது வாழ்வாதாரத்திற்கு விவசாயத்தையே சார்ந்திருக்கின்றனர். கருநாடகமும் இதற்கு விதி விலக்கல்ல.

விவசாயம் நம்மை உயிரோடு வைத்துக்கொள்ளத்தக்க உணவு தானியங்களை நமக்குக் கொடுக்கிறது. இது தொழிற்சாலைகளுக்கு மூலப் பொருட்களை வழங்குகிறது. மேலும் வேலை வாய்ப்புகளை உருவாக்கித் தருகிறது. தொழில் துறைப் பொருட்களுக்கு சந்தையை உருவாக்கித் தருகிறது மற்றும் தனிநபர் வருமானத்தையும் தேசிய வருமானத்தையும் அதிகரிப்பதற்குக் காரணமாகிறது. விவசாயம் அன்னியச் செலாவணிக்கு பங்களிப்பதன் மூலம்

©KTBS NOT TO BE REPUBLISHED

வணிக மேம்பாட்டிற்கு உதவுகிறது. அனைத்து கோணங்களில் பார்க்கும் போது, விவசாயம் இந்தியப் பொருளாதாரத்தின் முதுகெலும்பு என்று கூறலாம்.

கருநாடகத்தின் மொத்த பரப்பளவு சுமார் 1,91,791 ச.கிமீ ஆகும். புவியியல் அடிப்படையில் கருநாடகம் இந்தியாவின் ஏழாவது பெரிய மாநிலமாகும்.

நாம், நிலத்தைப் பல்வேறு நோக்கங்களுக்காகப் பயன்படுத்துகிறோம். கருகாடகம் சுமார் 19,060,620 (19 மில்லியன்) ஹெக்டேர் நிலத்தைப் பெற்றுள்ளது. ஆயினும், இதில் 11 மில்லியன் ஹெக்டேர் நிலம் மட்டுமே விவசாயத்திற்கு ஏற்றதாக உள்ளது. மொத்த நிலத்தில் 58% மட்டுமே பயிர் செய்யத்தக்க நிலமாக உள்ளது. வேளாண்மைச் சாரா நிலம் 13.23%, காடுகளின் பரப்பு 16.1% ஆகும்.

©KTBS NOT TO BE REPUBLISHED

செயல்பாடு : *கருநாடகத்தில் 19% நிலம் தரிசு நிலமாகும். இந்த நிலத்தின் நற்பயனுக்கான வழிமுறைகளைப் பற்றி கலந்தாய்வு செய்க.*

விவசாய வளர்ச்சிக்கான துறையில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்

1. நீர் பாசன முறை : கருநாடகத்தில் விவசாய விளைப் பொருட்களின் மேம்பாட்டிற்காக அரசாங்கம் பல நீர் பாசன திட்டங்களை செயல்படுத்துகிறது. இவற்றில் முக்கியமானவை துங்கபத்ரா திட்டம், கிருஷ்ணா நதி மேற்கரைத் திட்டம், பத்ரா, கட்டபிரபா, மலப்பிரபா, ஹேமாவதி, ஹாரங்கி, வாணி விலாசா, கரஞ்சா, வராஹி, பென்னெதொரெ, ஹிப்பராகி மற்றும் பிற திட்டங்கள் ஆகும். ஆயினும், கிடைக்கப் பெறும் நீரின் அறிவியல் பூர்வப் பயன்பாட்டிற்காக இன்னும் பல சீர்த்திருத்தங்கள் தேவைப்படுகின்றன.

2011 ஆம் ஆண்டு பொருளாதார ஆய்வின்படி, கருநாடகம் விவசாய உற்பத்தியில் ஐந்தாம் நிலையில் உள்ளது.

2. மண் பாதுகாப்பிற்கான முக்கியத்துவம் : காற்று, மழை, வெள்ளம் போன்ற இயற்கை செயல்முறைகளினால் வளமான மண்ணின் மேல் அடுக்கு அடித்துச் செல்லப்படுவதே

‘மண் அரிப்பு’ ஆகும். காடுகளை அழிப்புதாலும் தவறான சாகுபடி முறைகளைப் பயன்படுத்துவதாலும் மண் அரிப்பு உண்டாகிறது. மண் அரிப்பைத் தவிர்க்க கருநாடக அரசு விவசாயிகளுக்கு பல வழிகாட்டல்களை வழங்கியுள்ளது.

3. இயற்கை உரம் வேளாண்மையின் ஊக்குவிப்பு : நவீன வேளாண் முறைகளைப் பயன்படுத்தி வேளாண் உற்பத்தியின் அளவு அதிகமாக்கப்படுகிறது. இரசாயன உரங்கள் மற்றும் பூச்சிக் கொல்லிகளின் மிகைப் பயன்பாட்டினால் உண்டாகும் தீங்கான விளைவுகளை மக்கள் கண்டுள்ளனர். அண்மையில் நடந்த சுற்றுச் சூழல் பாதுகாப்பு இயக்கங்கள் அரசாங்கத்தின் கண்களைத் திறக்கும் முயற்சியாகும். கரிம உரங்களின் பயன்பாட்டிற்கு அதிக ஊக்கம் தர அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இயற்கை வேளாண்மை முறையின் நிலம்

2011 ஆம் ஆண்டில் விவசாயத்தைச் சார்ந்து வாழ்ந்த மக்களின் எண்ணிக்கை 49% ஆகும்.

செயல்பாடு : பாரம்பரிய பூர்வீக சாகுபடி முறைகைளை நவீனஅறிவியல் சாகுபடி முறைகளுடன் ஒப்பிடுக. ஒவ்வொன்றின் நன்மைகளைப் பட்டியலிடுக. கருநாடகத்தின் முன்நோக்கு விவசாயி என்று கருதப்படும் ஸ்ரீ பிரஃபுல்லா சந்திரா அவர்களைப் பற்றிய விவரங்களைச் சேகரிக்க.

தொழில்துறை வளர்ச்சி:

ஒரு மாநிலத்தின் பொருளாதார மேம்பாட்டில் தொழில் துறையின் பங்கு மிகவும் முக்கியமானது. தொழில் துறையை

மூன்று வகைகளாகப் பிரிக்கலாம். சிறு தொழில் துறை, இடைநிலைத் தொழில் துறை, பெருந்தொழில் துறை. பல்வேறு தொழிற்சாலைகளையும் தொழிலகங்களையும் நிறுவும் செயல்முறையையும், இத்தொழிலகங்களின் மேம்பாட்டிற்காக போக்குவரத்து மற்றும் செய்தித் தொடர்பு வசதிகளை அமைத்துக் கொடுப்பது 'தொழில்மயமாக்கல்' எனப்படும். இது ஒரு தொடர்ச்சியான செயலாகும். புதிய தொழிற்சாலைகள் மற்றும் தொழிலகங்கள் நிறுவப்படுவதால், அவற்றிற்குத் தேவையான அடிப்படை வசதிகளை (எ.கா. மின்மாற்றிகளை அமைத்தல், போக்குவரத்து செய்தித் தொடர்பு முதலியன) அமைத்துக் கொடுத்தல் முதலியவற்றில் கருநாடகம் நல்ல முன்னேற்றதைக் கண்டுள்ளது. இருப்பினும் மின் தேவையை நிறைவேற்றுவதில் பின்தங்கியுள்ளது.

சமீப நாட்களில் கருநாடகத்தில் பலவிதமான தொழிற்சாலைகள் நிறுவப்பட்டுள்ளன. கருநாடகத்தின் முக்கியத் தொழிற்சாலைகளாவன

* இரும்பு மற்றும் எஃகு தொழிற்சாலை
* பருத்தி மற்றும் நெய்பொருள் தொழிற்சாலை
* சர்க்கரைத் தொழிற்சாலை
* மின்னணுத் தொழிற்சாலை
* அலுமினியம் தொழிற்சாலை
* பட்டு தொழிற்சாலை
* காகிதத் தொழிற்சாலை
* சிமென்ட் தொழிற்சாலை முதலியன.

இத்தொழிற்சாலைகள் வேலை வாய்ப்புகளை உருவாக்கிக் கொடுப்பதோடு, அந்நியச் செலாவணியையும் பெற்றுத் தருகிறது. தொழிற்சாலைகள் மற்றும் வேளாண் வளர்ச்சியில் நல்லிணக்கமும் சமநிலைப்பாடும் அடைய வேண்டிய அவசியமும் உள்ளது.

குடிசை மற்றும் சிறு தொழில்துறைகளின் முக்கியத்துவம்

குடிசை மற்றும் சிறு தொழில் துறைகள், கருநாடகப் பொருளாதாரத்தின் முதுகெலும்புகளாகும். இத்தொழிற் சாலைகள் மாநிலப் பொருளாதார வளர்ச்சிக்கான படிகட்டுகளாகும். மகாத்மா காந்தியடிகளின் கூற்றின் படி, குடிசைத் தொழில்கள் ஒரு நாட்டை முன்னேற்றப் பாதையில் வழி நடத்தும் விளக்குகள் ஆகும். கருநாடக அரசு குடிசை மற்றும் சிறு தொழில் துறைகளுக்கு ஊக்கமும் உதவியும் வெவ்வேறு வழிகளில் வழங்குகிறது. இதன் நோக்கில் பல அரசு மேம்பாட்டு வாரியங்களை நிறுவியுள்ளது.

© KTBS NOT TO BE REPUBLISHED

எ.கா. தேங்காய் நார் வளர்ச்சி வாரியம், முந்திரி பருப்பு வளர்ச்சி வாரியம் முதலியன.

செயல்பாடு : *குடிசைத் தொழில்களை வலுப்படுத்துவதற்கு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளைப் பற்றி கலந்தாய்வு செய்க.*

தொழில் துறைக் கொள்கை

பொது மற்றும் தனியார் துறைகளில் தொழிற் சாலைகளை நிறுவுதல், மூலதன முதலீடு, தொழிலாளிகளின் நியமனம் முதலிய அனைத்துக் கூறுகளும் தொழில் துறைக் கொள்கையின் கீழ் வருகின்றன. பொ.ச. 1948 ஆம் ஆண்டின் மத்திய அரசின் கொள்கைகளின் பின்னணியில், கருநாடகத் தொழில் துறைக் கொள்கைகள் வகுக்கப்பட்டுள்ளன, மத்திய அரசு முக்கியமான தொழில் துறைக் கொள்கைகளை பொ.ச. 1956, 1977, 1980 ஆம் ஆண்டுகளில் நடைமுறைப்படுத்தியுள்ளது.

செயல்பாடு: *உங்கள் நகரத்திற்க்கருகே உள்ள தொழில் துறை மையம் ஒன்றிற்கு சென்று அங்குள்ள நடவடிக்கைகளை கவனித்து அது குறித்து ஒரு சிறு குறிப்பு எழுதுக.*

©KTBS NOT TO BE REPUBLISHED

பொ.ச. 1996 ஆம் ஆண்டில் கருநாடக அரசு தனக்கே உரிய தொழில் துறை கொள்கையை அமைத்துள்ளது . அது அடிப்படை வசதிகளின் மேம்பாட்டில் தொழிற்சாலைகளின் ஆக்கப்பூர்வமான பங்கேற்பிற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கிறது.

அடிப்படை வசதிகளான தொழில் நுட்பவியல் பூங்கா, விமான நிலையம் போன்றவற்றை அமைக்க அரசாங்கம் திட்டங்களை வகுக்கிறது. பிறகு 2001 ஆம் ஆண்டு, புதிய தொழில்துறைக் கொள்கையை நடைமுறைக்கு கொண்டு வந்தது. இதன் மூலம் சந்தைகளின் வளர்ச்சி, தொழில்நுட்பத் தொழிற்சாலைகளின் முன்னேற்றம், தோட்டக்கலை, கால்நடை வளர்ப்பு, கனிமங்கள் மற்றும் மனித வளங்களின் மேம்பாடு முதலியவற்றிற்கு ஊக்கமளிக்கிறது. தற்போதைய கருநாடக தொழில் துறை சட்டம் 2020-2025 இல் அமலாக்கப்பட்டது.

இயற்கை மூலங்களை அழிக்காமல், சுற்றுச்சூழலை மாசு படுத்தாமல் இயற்கை வளங்களை சுரண்டாமல்

அவ்வனைத்தையும் நல்ல வகையில் பயன்படுத்திக்கொள்ளும் தொழிற்சாலைகள் சமுதாய மேம்பாட்டிற்கு உதவுகின்றன. இவற்றை எல்லாம் பொருட்படுத்தாமல் நடைபெறுகின்ற தொழில்துறை வளர்ச்சிகள் குன்றிப் போகும்.

பயிற்சிகள்

I. ஏற்ற சொற்களால் விடுப்பட்ட இடங்களை நிரப்புக.

1. பெங்களூரை ________ நகரம் என்று அழைப்பர்
2. படியாக்கம் செய்யப்பட்ட முதல் உயிரி ________ உருவாக்கினார் .
3. கருநாடக அரசு ________ ஆம் ஆண்டு தொழிற்துறைக் கொள்கையை நடைமுறைப்படுத்தியது.
4. ‘‘குடிசை தொழில்கள் ஒரு நாட்டை முன்னேற்றப் பாதையில் வழி நடத்தும் விளக்குகள் ஆகும்,’’ என்று கூறியவர் ________ ஆவார்.

II. இரண்டு அல்லது மூன்று வாக்கியங்களில் விடையளிக்க.

5. தகவல் தொடர்பு முறை என்றால் என்ன?
6. தகவல் தொடர்பின் மூன்று முக்கியமான ஊடகங்கள் யாவை ?
7. தகவல் தொழில் நுட்பம் என்றால் என்ன?
8. உயிரியல் தொழில் நுட்பம் என்றால் என்ன?
9. கருநாடகத்தில் உயிரியல் தொழில் நுட்ப பூங்காக்கள் உள்ள மாவட்டங்கள் யாவை?
10. இயற்கை உரம் வேளாண்மையின் முக்கியத்துவத்தை விளக்குக.
11. மண் அரிப்பு என்றால் என்ன?

செயல்பாடு :

◆ பொ.ச. 1996 ஆம் ஆண்டில் கருநாடகத்தின் தொழில் துறை கொள்கையைப் பற்றி அதிகமான விவரங்களை சேகரிக்க.

***

@KTBS NOT TO BE REPUBLISHED

குடிமையியல்	
பாடம் 22	நீதித்துறை

F1D8X9

பாட அறிமுகம் :

இப்பாடம் நமது நீதியமைப்பைப் பற்றியதாகும். உச்ச நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி மற்றும் உயர் நீதி மன்றத் தலைமை நீதிபதி ஆகியோரின் தகுதிகள் மற்றம் செயல்பாடுகள், துணை நீதிமன்றங்கள் மற்றும் லோக் அதாலத்தின் செயல்பாடுகள் ஆகியவை இப்பாடத்தில் விளக்கப்பட்டுள்ளன.

நிறன்கள் :

1. மாநில நிர்வாகத்தில் நீதித்துறையின் பங்கைப் பாராட்டுதல்
2. நீதித்துறையானது, சட்டமன்றம் மற்றும் ஆட்சித்துறை செயலகத்தின் கட்டுப்பாட்டிற்குள் வராமல், நடுநிலைமை வகித்து செயல்படுகிறது என்பதை அறிதல்.
3. இந்தியாவின் நீதித்துறை அமைப்பைப் பாராட்டுதல்.
4. மக்கள் நீதிமன்றத்தின் பங்கை அறிந்து அதைக் குறித்து பெருமிதம் கொள்ளுதல்.

©KTBS NOT TO BE REPUBLISHED

சட்டங்களின் அடிப்படையில் நீதித்துறை நீதி வழங்குகிறது. நீதித்துறையும் சட்டங்களும் மாநில நிர்வாகத்தில் பெரும்பங்கு வகிக்கின்றன.

* ஓரிடத்தில் மக்கள் ஒன்றாக வாழும் போது அவர்களுக்குள் மோதல்கள் ஏற்படுவது இயல்பு.அவர்களுடைய மறுப்பீடுகளுக்கு அவர்களால் ஒரு தீர்வைக் காண இயலவில்லை என்ற பட்சத்தில், மூன்றாவது நபர் அவர்களுடைய முறையீட்டைக் கேட்டு அவர்களுக்கு நீதி வழங்கலாம்.

* இத்தகைய மறுப்பீடுகளுக்குத் தீர்வு காண்பதற்கு அடிப்படையாகச் செயல்பட சட்டங்கள் அமைக்கப்பட்டுள்ளன. சட்டங்கள் ஒரு தனி நபரின் வெளிப்புற நடத்தையை சீர்ப்படுத்துகின்றன. சமுதாயத்தில் அமைதியையும் ஒழுங்கையும் பேணிக்காக்க சட்டங்கள் வழிவகுக்கின்றன. அதுமட்டுமல்லாமல், அவை தனிமனிதனின் உரிமைகளையும் பாதுகாக்கின்றன.

நீதிமன்றத்தின் செயற்பாடுகள்: சட்டமன்றத்தால் உருவாக்கப்பட்ட சட்டங்களை நீதிமன்றங்கள் விளக்குகின்றன. தனிநபர்களிடையேயான மறுப்பீடுகள், தனிநபர்கள் மற்றும் அரசாங்கத்திற்கிடையே உள்ள மறுப்பீடுகளுக்கு அவை நீதி வழங்குகின்றன. குடிமக்களின் வாழ்வை, உடைமைகளைப் பாதுகாக்கும் முக்கியமான பணியை நீதிமன்றங்கள் செய்கின்றன. நீதிமன்றங்கள் சட்டமன்றம் அல்லது ஆட்சிமுறை செயலகத்தின் கட்டுப்பாட்டிற்குள் இருப்பதில்லை, அவை பாரபட்சம் இன்றியும் சுதந்திரமாகவும் செயல்படுகின்றன.

உச்சநீதி மன்றம்

நமது அரசியலமைப்பு, நாட்டின் ஒற்றுமையை நிலைநாட்டும் நோக்கில், நாட்டிற்குப் பொருந்தக்கூடிய நீதித்துறை முறையை ஏற்றும் கொண்டுள்ளது. இந்தியாவின் மிக உயர்ந்த நீதி மன்றம் உச்ச நீதிமன்றம் (Supreme Court) ஆகும். அது இந்தியாவின் தலைமை நீதிபதியுடன் 34 நீதிபதிகளை பெற்றுள்ளது. இவர்கள் அனைவரையும் நமது நாட்டின் குடியரசுத் தலைவர் நியமிக்கிறார். உச்ச நீதி மன்றம் புது தில்லியில் உள்ளது.

உச்ச நீதி மன்றம், புது தில்லி

உச்ச நீதி மன்ற நீதிபதியின் தகுதிகள்

* குறைந்தபட்சம் ஐந்தண்டுகள் வரை உயர்நீதி மன்ற நீதிபதியாக இருந்திருக்க வேண்டும்.
* குறைந்த பட்சம் பத்தாண்டுகள் வரை உயர்நீதி மன்றத்தில் வழக்கறிஞராக இருந்திருக்க வேண்டும்.

* குடியரசுத் தலைவரின் கருத்தில் ஒரு புகழ்பெற்ற சட்ட வல்லுநராக இருக்க வேண்டும். உச்ச நீதி மன்ற நீதிபதியின் ஓய்வு வயது 65 ஆகும்.

உச்ச நீதி மன்றத்தின் செயற்பாடுகள் :

* மைய அரசு மற்றும் மாநிலங்களுக்கிடையே உள்ள மறுப்பீடுகளைத் தீர்ப்பது.
* குடிமக்களின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாக்க சட்ட ஆவணங்களை வழங்குவது.
* அரசமைப்பு விதிகளை விளக்குவது.
* தேவைப்படும் போது குடியரசுத் தலைவருக்கு ஆலோசனையையும் கருத்துகளையும் கூறுவது.
* தேவையான ஒழுங்கு முறைகளை உருவாக்குவது.

உயர்நீதி மன்றங்கள்.

உயர் நீதி மன்றம் மாநிலத்தின் உச்ச நீதிமன்றம் ஆகும். கருநாடக உயர் நீதி மன்றம் பெங்களூரில் உள்ளது. அது தலைமை நீதிபதியையும், மற்ற நீதிபதிகளையும் பெற்றுள்ளது. நமது நாட்டில் 25 உயர் நீதி மன்றங்கள் உள்ளன.

©KTBS NOT TO BE REPUBLISHED

கருநாடக உயர்நீதி மன்றம்,பெங்களூரு

உயர் நீதி மன்ற நீதிபதியின் தகுதிகள்:

* இந்திய குடிமகனாக இருக்க வேண்டும்

* இந்திய நீதித்துறையின் கீழ் குறைந்தது பத்து ஆண்டுகள் பணியாற்றியிருக்க வேண்டும் அல்லது உயர் நீதி மன்றத்தின் வழக்கறிஞராக பத்து ஆண்டுகள் பணியாற்றியிருக்க வேண்டும். இந்தியக் குடியரசுத் தலைவர், உச்ச நீதி மன்றத் தலைமை நீதிபதி மற்றும் ஆளுநருடன் கலந்தாலோசித்து உயர் நீதி மன்றத் தலைமை நீதிபதியை நியமிக்கிறார்.

உயர் நீதி மன்றத் தலைமை நீதிபதி ஒய்வு பெறும் வயது 62. உயர் நீதி மன்றத்தில் ஆங்கிலம் அல்லது பிற பிராந்திய மொழிகளைப் பயன்படுத்தலாம்.

உயர்நீதி மன்றத்தின் செயற்பாடுகள்

* குடிமக்களின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாக்க சட்ட ஆவணங்களை வழங்குவது.

* சார்பு நீதி மன்றாங்களின் செயற்பாடுகளைக் கண்காணிப்பது மற்றும் அவற்றின் சரியான செயற்பாட்டிற்கான விதிகளை உருவாக்குவது.

NOT TO BE REPUBLISHED @KTBS

வெவ்வேறு நிலைகளில் நீதிமன்றங்கள்
உச்ச நீதிமன்றம் : தேசிய அளவில் (புது தில்லி)
உயர் நீதி மன்றங்கள் : மாநில அளவில்
சார்பு நீதிமன்றங்கள் : மாவட்ட நீதிமன்றம், குற்றவியல் நடுவரின் நீதிமன்றம், துணைக் குற்றவியல் நடுவரின் நீதிமன்றம், மக்கள் நீதி மன்றம். (லோக் அதாலத்).

சார்பு நீதி மன்றங்கள்

உச்சநீதி மன்றம் மற்றும் உயர்நீதி மன்றங்களைத் தவிர பல சார்பு நீதிமன்றங்களும் உள்ளன. உச்ச நீதி மன்றத்தின் கீழ் உயர் நீதி மன்றங்கள் செயல்படுகின்றன. உயிர் நீதி மன்றங்களின் கீழ் செயல்படும் சார்பு நீதிமன்றங்களாவன: மாவட்ட நீதிமன்றங்கள், வட்டாட்சி மன்ற நீதிமன்றங்கள், நகர நீதிமன்றங்கள்அடங்கும்.

சார்பு நீதிமன்றங்கள் இரு வகைப்படும் : உரிமையியல் வழக்கு மன்றங்கள் (Civil Court) மற்றும் குற்றவியல் வழக்கு மன்றங்கள் (Criminal Court).

* உரிமையியல் வழக்கு மன்றங்கள், பணப் பரிவர்த்தனைகள், உடைமைகள் மற்றும் ஒப்பந்தங்களுக்குத் தொடர்பான விஷயங்களைப் பற்றிய மறுப்பீடுகளை விசாரித்து நீதி வழங்குகின்றன.

* குற்றவியல் வழக்கு மன்றங்கள் கொலை, கொள்ளை திருட்டு முதலிய விஷயங்களுக்குத் தொடர்பான மறுப்பீடுகளை விசாரித்து நீதி வழங்குகின்றன.

சில சூழ்நிலைகளில், சார்பு நீதிமன்றங்கள் கொடுத்த தீர்ப்புகளுக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்யலாம். அதுபோல உயர் நீதி மன்றத்தின் தீர்பிற்கு எதிராக உச்ச நீதி மன்றத்தில் முறையீடு செய்யலாம்.

லோக் அதலாத் (மக்கள் நீதிமன்றம்)

குறைந்த விலையில் வேகமாக செயல்படுகின்ற மற்றும் சமரசம் மூலம் மறுப்பீடுகளைத் தீர்க்க, அரசாங்கம் பல்வேறு சட்ட நிறுவனங்களை அமைத்துள்ளது. அத்தகைய ஒரு நிறுவனமே லோக் அதாலத் (மக்கள் நீதிமன்றம்) ஆகும்.

மாநில மற்றும் மாவட்ட அளவிலான அலுவலர்கள் மக்களுக்கு வசதியான இடங்களில் அவ்வப்பொழுது லோக் அதாலத்களை நடத்துகின்றனர். இரு தரப்பினரும் சமரசமாக விரும்பும் வழக்குகளை எடுத்து நடத்தி நல்ல முறையில் தீர்ப்பு வழங்குகின்றன. அதனுடைய தீர்ப்பு, நீதிமன்றத் தீர்ப்பைப் போலவே சிறப்பானது. மக்கள் நீதிமன்றத்தின் தீர்ப்பு இறுதியானது, இதற்கு இரண்டு தரப்பினரும் கட்டுப்பட வேண்டும். இதனால் பணம் மற்றும் நேர விரயம் குறைகிறது. இதன் தீர்ப்பிற்கு எதிராக எத்த நீதிமன்றத்திலும் மேல் முறையீடு செய்ய முடியாது. சமரசரத்திற்கு சம்மதிக்குமாறு யாராவது மிரட்டினால், காவல் துறையில் புகார் கொடுத்து வழக்கு பதிவு செய்யலாம்.

மக்கள் நீதிமன்றங்கள் இதுவரை பல வழக்குகளுக்குத் தீர்ப்பு கொடுத்துள்ளன. சரியாகப் பயன்படுத்தினால் மக்கள்

@KTBS NOT TO BE REPUBLISHED

நீதிமன்றங்கள் மிகவும் பயனுள்ள நீதிமன்றங்களாக விளங்குகின்றன.

புதிய சொற்கள் : வழக்கு-சண்டை, சச்சரவு, கலகம்

அறிந்துக் கொள்க :

- குடியரசுத் தலைவரை அவருடைய ஆட்சிக்காலத்தில் கைது செய்ய முடியாது.
- அவருக்கு எதிராக குற்றவியல் வழக்கைப் பதிவு செய்யவும் முடியாது.
- தமது அதிகாரத்தைப் பயன்படுத்தி நிகழ்த்திய எந்த செயல்பாட்டையும் கண்டித்து நிதிமன்றம் நடவடிக்கை எடுக்க முடியாது.

பொது நல வழக்குகள்: அரசு துறையோ, பொது மக்கள் அதிகாரிகளோ, சட்டத்தை மீறினாலும் அடக்குமுறை அநீதி, சுரண்டல் போன்ற செயல்பாடுகளினால் அவதிக்குள்ளான எந்த ஒரு நபரும் நீதிமன்றத்தில் நேரடியாக புகார் கொடுக்கலாம். அப்புகார் கடிதத்தையே ஒரு ரிட் மனுவாகக் கருதி கட்டணம் இல்லாமல் நீதிமன்றமே வழக்கை நடத்தும்.

© KTBS NOT TO BE REPUBLISHED

பயிற்சிகள்

I. ஏற்ற சொற்களால் விடுப்பட்ட இடங்களை நிரப்புக.

1. இந்தியாவின் மிக உயர்ந்த நீதி மன்றம் ________
2. உச்சநீதி மன்ற நீதிபதியின் ஓய்வு வயது ________ ஆகும்.
3. நமது நாட்டில் ________ உயர் நீதி மன்றங்கள் உள்ளன.
4. உச்சநீதி மன்ற நீதிபதிகளை ________ நியமிக்கிறார்.

II. குழுக்களில் கலந்துரையாடி எழுதுக.

5. நீதித்துறையின் முக்கியப் பணிகள் யாவை ?
6. தேசிய அளவில் மிக உயர்ந்த நீதிமன்றம் யாது?
7. உச்ச நீதி மன்றத்தின் தலைமை நீதிபதியாவதற்கு பெற்றிருக்க வேண்டிய தகுதிகள் யாவை?

8. உச்ச நீதி மன்றத்தின் செயற்பாடுகள் யாவை?

9. நீதி மன்றத் தீர்ப்பில் தாமதம் ஏற்படுவதை எப்படித் தடுக்கலாம்?

10. நீதித்துறைகளுக்குக் கூடுதலான அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டுமா ? வழங்கப்படக் கூடாதா?

செயல்பாடுகள்.

- உங்கள் பள்ளிகளில் 'சட்ட விழிப்புணர்வு' நிகழ்ச்சியை ஏற்பாடு செய்யவும்.
- உள்ளூர் வழக்கறிஞர்களைப் பள்ளிக்கு அழைத்து சட்டத்தைப் பற்றி விரிவாக அறிந்ததுக் கொள்ளவும்.
- பள்ளயில் நீதிமன்ற அறையின் மாதிரி காட்சியை ஏற்பாடு செய்யவும்.
- அருகிலுள்ள நீதிமன்றத்திற்குச் சென்று எங்கு நடைபெறும் விவாதங்களைக் கேட்கவும்.
- 'நான் உச்ச நீதி மன்றத்தின் முக்கிய நீதிபதியானால்' இந்த தலைப்பைப் பற்றி மாணவர்கள் ஓரிரு நிமிடங்கள் பேசுதல்.

@KTBS
NOT TO BE REPUBLISHED

***

பாடம் 23	நமது பாதுகாப்புப் படைகள்

W1H6Y5

சுதந்திரத்திற்கு முன்பு இந்தியா பல தாக்குதல்களுக்கு உள்ளானது என்பது உங்களுக்குத் தெரியும். சுதந்திரத்திற்கு பிறகு இந்நிலை மாறியுள்ளது. இதற்கு காரணங்கள் தெரியுமா?

பாடத்தின் அறிமுகம் :

இப்பாடப்பகுதியில் பாதுகாப்பின் உட்பிரிவுகள், செயல்கள், பயிற்சி மையங்கள், அண்மைக்காலத்து (நவீன) படைக் கருவிகள் மைய அலுவலகம் போன்ற தலைப்புகள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன. மேலும் பாதுகாப்புப் படைகள், துணை பாதுகாப்புப் படைகள் மற்றும் வாதுரைப் பாதுகாப்பு படை (சிவில் பாதுகாப்பு) பற்றிய அறிமுகம் இப்பாடத்தில் இடம்பெறுகிறது.

@KTBS NOT TO BE REPUBLISHED

திறன்கள்:

1. நமது பாதுகாப்புப் படைகளைப் பற்றி அறிதல்
2. இராணுவப்படை, கப்பற்படை மற்றும் விமானப்படை பற்றி அறிதல்.
3. பாதுகாப்புப் படைகளின் திறனை அறிதல்
4. நமது பாதுகாப்புப் படைகளின் செய்திறன்களை அறிந்து பெருமித மடைதல்.
5. துணைப் பாதுகாப்புப் படைகளின் தன்னார்வச் செய்திறன்களைப் பற்றி பெருமிதம் அடைந்து கருத்து வெளிப்படுத்துதல்.

அன்னிய படையெடுப்பில் இருந்து (ஆக்ரமிப்பு) நாட்டைப் பாதுகாப்பதே ஒரு நாட்டின் முதல் கடமையாகும். பாதுகாப்புப் படைகளுக்கு/படைக்கருவிகள் ஏந்திய படைகளுக்கு மேற்குறித்த கடமையாகிய பணிகள் ஒதுக்கப்பட்டுள்ளன. எனவே பாதுகாப்புப் படைகளின் பணிகள் இன்றியமையாததாகும்.

இப் படத்தில் நீங்கள் என்ன பார்க்கிறீர்கள்?

இந்தியா ஒழுங்கான திறம்படைத்த மற்றும் வலிமைமிகுந்த பாதுகாப்புப் படைகளை பெற்றுள்ளது என்பதில் நாம் பெருமிதம் கொள்ளலாம். நாம் சுதந்திரம் பெற்ற பின்னர் நம்முடைய தேசிய ஒருமைப்பாட்டிற்கு அச்சுறுத்தலும் தொல்லைகளும் ஏற்பட்ட நேரங்களில் எல்லாம் மிகச்சிறப்பான திறன் வாய்ந்த பல சவால்களை நாம் சந்தித்துள்ளோம் எகா : சீனா, பாகிஸ்தான் வன்தாக்கங்கள். கார்கில் போரில், படை வீரர்கள் தாய்நாட்டைப் பாதுகாப்பதற்காக தமக்குரிய எல்லாவற்றையும் தியாகம் செய்ய தயாராக இருந்தனர்.

© KTBS NOT TO BE REPUBLISHED

* இந்தியா ஏறத்தாழ 15,200 கி.மீ. நிலப்பரப்பையும் 7516.5கி.மீ. நீர் பரப்பையும் பெற்றுள்ளது.

* இந்திய பாதுகாப்புப் படைகளுக்கு பட்ஜெட்டில் ஓர் ஆண்டிற்கு சுமார் 25-30% வரையில் பணம் ஒதுக்கப் படுகிறது.

நமது பாதுகாப்பு படைகளின் பொறுப்புணர்வுகள்:

* நமது நாட்டின் எல்லைப்பகுதிகளைப் பாதுகாக்கின்ற தொடர் செயலில் ஈடுபடுதல்
* நாட்டின் ஒருமையைப் பாதுகாத்தல்.
* கள்ளக்கடத்தல் மற்றும் பிற தேசவிரோத செயல்களைத் தடுத்தல்.

இந்தியாவின் குடியரசுத் தலைவருக்கு மட்டுமே பாதுகாப்புப் படைக்குக் கட்டளையிடும் உயர்ந்த அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. பாதுகாப்புப் படைகளின் அமைப்பு முறை மூன்று உட்பிரிவுகளால் ஆனது-அவை தரை, கடல், வான் படைகள் ஆகும். இந்தியாவின் பாதுகாப்பு படைகள், இந்தியாவின் சுதந்திர நாள் மற்றும் குடியரசு நாளின் போது நடைபெறும் அணிவகுப்பு (பரேட்களில்) படைகளின் வலிமைகளை வெளிப்படுத்தும் சிறப்பு நிகழ்வுகள் நடைபெறுகின்றன.

தேசிய பாதுகாப்புக் கல்லூரி (புதுடில்லி),

பாதுகாப்புப் பணி பயிற்சி மையம் (உதகமண்டலம்)

இந்திய இராணுவக் கழகம் (Indian Military Academy) டேராடூன் மற்றும் தேசிய பாதுகாப்புக் கழகம் (National Defence Academy காடக்வாஸ்லா புனே (Khadak Vasla Pune)

NOT TO BE REPUBLISHED ©KTBS

இந்தியத் தரைப்படை



தரைப்படை சின்னம்

இந்தியத் தரைப்படை உலகத்திலேயே இரண்டாவது பெரிய படையாகும். அவையாவன, தரைப்படை, காலாட்படை, குதிரைப்படை, (Cavalry), பீரங்கிப்படை பிரிவு (Tank Regiment) , ஒட்டகப்படை (Camel corps), ஆயுதப் பட்டாளப் பிரிவு (Armed Corps) பீரங்கியாளர் பிரிவு (Gunners Regiment) அல்லது பீரங்கிப்படை (Artillery).

தரைப்படையில் 12,37,117 வீரர்களும், 9,60,000 ஆயுத இருப்புக் காவலர்கள் (Armed Reserve Forces) உள்ளனர்.

தரைப்படையின் தலைமைத் தளபதியை ஜெனரல் என்று அழைப்பர். அவர்தான் அப்படையின் கடமைகளைக் கண்காணிக்கும், கட்டுப்படுத்தும் மற்றும் இயக்கும் செயல்பாடுகளை புது டில்லியின் தலைமை அலுவலகத்திலிருந்து செய்வார்.

நாட்டின் எல்லைகளைப் பாதுகாப்பதோடு, இயற்கை பேரிடர்களான நிலநடுக்கம், வெள்ளப் பெருக்கு, பஞ்சம், நிலச்சரிவு, கடும்புயல்கள் முதலிய சூழ்நிலைகளில் மனிதநேய பணிகளைத் தரைப்படை செய்கிறது. உளவுப் பணிகளையும் செய்கிறது.

இந்தியக் கடற் படை

கப்பற் படை
சின்னம்

கப்பற்படை என்ற அமைப்பு ஒரு நாட்டின் தீவுகளையும், கடற்கரைப் பகுதிகளையும் பாதுகாக்க கடற்படை இன்றியமையாது செயல்களைச் செய்வதே அதன் கடமையாகும். இந்திய கடற்படை உலகத்தில் ஆறாவது பெரும்படையாய்க் கருதப்படுகிறது. அதன் தலைமைத் தளபதி அட்மிரல் என்று அழைக்கப்படுவார், இதன் தலைமை அலுவகமும் புதுடில்லியில் உள்ளது.

இந்தியக் கடற்படை நவீன ஏவுகனைகள் மற்றும் நீர்மூழ்கிக் கப்பல்ளைப் பெற்றுள்ளது. INS விபூதி மற்றும் INS கோதாவரி இத்தகைய முக்கியமான கப்பல்களாகும். கடற்படையில் INS விராட் மற்றும் INS சிவாலிக் எனப்படும் விமானத் தாங்கி கப்பல்களும் பொருத்தப்பட்டுள்ளன. 'சீபர்ட் என்று அழைக்கப்படும் கடற்படைத் தளம் கருநாடகத்தில் கார்வாரில் உள்ளது.

©KTBS NOT TO BE REPUBLISHED

ஐ.என்.எஸ், விராட்

இந்திய விமானப்படை

விமானப்படையின் சின்னம்

போர் விமானம்

இந்திய விமானப்படை உலகில் நான்காவது பெரிய படையாக உள்ளது, இதன் தலைமைத் தளபதி, விமான முதன்மை தளவாய் (ஏர் சீஃப் மார்ஷல்) (Air Chief Marshal) என்று அழைக்கபடுவார். இதன் தலைமை அலுவலகம் புது டில்லியில் அமைந்து உள்ளது. இதன் நிர்வாக இயல்பு வசதிக்காக ஏழு ஆணைய நிலையங்களை அமைத்து வகுத்துள்ளது.

பெங்களூரு, ஹைதராபாத், (தெலங்கானா) மற்றும் திண்டுக்கல் (தமிழ்நாடு) முக்கியமான விமானப் படை பயிற்சி மையங்களாகும். தமிழ்நாட்டில் திண்டுக்கல்லிலுள்ள கழகம் (Academy) ஏவுகணை செலுத்துவதில் பயிற்சியளிக்கிறது. மிக அண்மைக்காலத் தொழில் நுட்பங்களைக் கொண்ட அநேக புதிய போர் விமானங்களைப் பெற்று திறம் வாய்ந்ததாக விளங்குவது நமது விமானப் படை ஆகும்.

NOT TO BE REPUBLISHED @KTBS

மிக் போர் விமானம்

நமது விமானப்படை ஜாக்வார், ரஃபேல் போன்ற நவீன போர் விமானங்களைக் கொண்டுள்ளது, மொத்தம் 1,00,000 போர் விரர்கள் மற்றும் 1330 போர் விமானங்களைப் பெற்றுள்ளது. நமது விமானப்படையின் ஆற்றலைக்கண்டு நாம் பெருமிதம் கொள்ள வேண்டியுள்ளது.

துணை-இராணுவப் படைகள்
(Para military forces)

பாதுகாப்புப்படைகளுக்குமட்டுமல்லாமல் நெருக்கடியான சூழ்நிலைகளில் உதவியாய் இருக்க பாதுகாப்புப் படைகள் செயல்படுகின்றன.

எல்லை பாதுகாப்பு வீரரர்கள்

* எல்லைப் பாதுகாப்பு படை **(Border Security Force)** : எல்லைப் பாதுகாப்புப்படை என்பது நமது தேசிய எல்லைகள் முழுவதிலும் காவலாக இருந்து பாதுகாப்பதே அதன் முக்கியக் கடமையாகும். கார்கிலில் இராணுவப் படையின் போர்முறை நடவடிக்கையின் போது இவ்எல்லைப்படையினர் தரைப்படையுடன் இணைந்து போர் முனைப்பில் ஈடுபட்டு நம்மை அப்படியே திகைப்பில் உறயவைக்க கூடியனவே. தரைப்படைக்கு உயிர் துறக்கும் வரை போர்க்கடன் (Duty Until Death) ஆற்றுவது என்பதே அதன் தாரக மந்திரமாகும்.

எல்லை சாலைகள் அமைப்பு : இது அடைக்கப்பட்ட சாலைகளை சுத்தம் செய்து இராணுவ நடவடிக்கைகளுக்கு உடனடி உதவி வழங்குதிறது. சாலை கட்டுமானம், பாலம் அமைத்தல் மற்றும் வடிகால் அமைக்கும் பணிகளை இந்நிறுவனம் செய்கிறது.

NOT TO BE REPUBLISHED

*** கடலோரக் காவல் படைகள்** (The Coastal Guards): கடலோரக் காவல் படையை சார்நிலை இராணுவப்படை (Para military forces) என்றும் அழைக்கலாம். இதன் தலைமை அலுவலகம் புதுடில்லியில் அமைந்துள்ளது. கடலோர எல்லையைப் பாதுகாப்பது இதன் பொறுப்பாகும். புயல், சூறாவளி மற்றும் சுனாமி போன்ற இயற்கைப் பேரழிவுகளின் போது மீட்புப் பணிகளை இது மேற்கொள்கிறது. சட்டவிரோத ஊடுருவல், கள்ளக் கடத்தல் முதலியவற்றைத் தடுப்பது இதன் முக்கிய செயல்பாடாகும். நம் நாட்டின் கடலோரக் காவல் வீரர்களின் படைக்கு இதுவே முதன்மையான பெரிய பொறுப்பாகும்.

கடற்படை வீரர்கள்

© KTBS NOT TO BE REPUBLISHED

> கடற்படை, 1402 அதிநவீன படகுகள் மற்றும் 381 விமானங்கள், மற்றும் 60 எலிகாப்டர்களைப் பெற்றுள்ளது. 12, 585 போர் வீரர்கள் விமானப்படையில் உள்ளனர்.

*** நடுவண் தொழிலியல் பாதுகாப்புப்படை** (Central Industrial Security Force): உலகிலேயே மிகப் பெரிய தொழிலியல் பாதுகாப்பு படை நம்முடைய (CISF) படையாகும். அடிப்படையில் 1,45,000 படை வீரர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளார்கள் இந்தியாவில் 300க்கும் அதிகமான அரசு தனியார் தொழில் நிறுவனங்களையும், அவற்றிற்கான ஆய்வுக் கூடங்களை நிறுவும் வசதிகளையும், ஏற்பாடுகளையும் வழங்கியுள்ளது.

மேலும் இப்படை விமானதளங்கள், துறைமுகங்கள் இரயில் நிலையங்களுக்கு பாதுகாப்பு கொடுக்கிறது.

துணை பாதுகாப்புப்படைகள்

துணை பாதுகாப்புப் படைகள் : நாடு முழுவதும் இளைஞர்களில் தொண்டு மற்றும் நாட்டுப் பற்றை வளர்க்க, பள்ளி மற்றும் கல்லூரிகளில் பல செயல்பாடுகளை நிறை வேற்றுகிறது. இவற்றில் என்.சி.சி. ஒரு முக்கிய செயல்பாடாகும்.

என். ஸி. ஸி

தேசிய மாணவர் படை (NCC - National Cadet Carps)

இத்தேசிய மாணவர்படையின் குறிப்பிட்ட சில நல்ல உயர்பண்புகள், சமுதாய நலவாழ்வு மற்றும் தலைமைப் பண்பு போன்றனவாகும். இப்பயிற்சி எடுத்தவர்களுக்கு இந்திய இராணுவப்படைப் பிரிவுகளில் சேர்ந்திட முன்னுரிமை அளிக்கப் படுகிறது. மேலும் உயர் கல்வியில் சேர்த்திடவும் முன்னுரிமை அளிக்கப்படுகிறது, பள்ளி, கல்லூரிகளில் படிக்கும் மாணவர்கள் இப்படிபட்ட பயிற்சிகளில் ஈடுபட வேண்டும். நமது நாட்டின் பாதுகாக்கும் பொறுப்புணர்வை அவர்களில் ஊட்டுவதே தேசிய மாணவர் படையின் முக்கியமான நோக்கமாகும் மற்றும் முயற்சியில் இதுவும் ஒன்றாகும். இதன் மூதுரை 'ஒழுக்கமும் ஒற்றுமையும்' ஆகும்.

செங்சிலுவைச் சின்னம்

இந்திய செஞ்சிலுவைச் சங்கம் (Indian Red Corss) இந்தியா முழுவதும் **1100** மாவட்டங்களில் கிளைகளாக பிரிந்து செயலாற்றும் ஓர் சிறந்த அமைப்பாகும். இதற்கு தலைவராக நம் இந்திய நாட்டுக் குடியரசு தலைவரே இருப்பார். இதன் முதன்மைப் பணியாவது மனித நேயமும், சுய தொண்டும் ஆகும்.

வாதுரைப் பாதுகாப்புப் படை (Civil Defence) :

இக் காவற்படைகள் நடுவண் மற்றும் மாநில அளவில் உள்ளன நாட்டின் வாதுரைப் பாதுகாப்புப் படையின் எல்லையாவது மாநிலத்திற்கு உட்பட்டது. நடுவண் அரசு தனக்கே உரிய காவற்படைகளைக் கொண்டுள்ளது.

தேசிய பாதுகாப்பு படை : தேசிய பாதுகாப்புப் படை முக்கிய பிரமுகர்களுக்கு பாதுகாப்பினை அளிக்கும் ஓர் அமைப்பு ஆகும். இது உள்நாட்டு பாதுகாப்பு மற்றும் பயங்கரவாத எதிர்ப்பிற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கிறது. வெடிகுண்டு செயலிழப்புப் படை இதற்கு துணையாக உள்ளது.

* **ஊரகப்படைகள்** (Home Guards) : ஊரகப்படைகள் காவல் துறைக்கு (Co-ordinate Functions) இதன் பணியாவது உள்நாட்டுப் பாதுகாப்புப் பணியில் உதவுவது. அவசர காலத்திலும் இயற்கை பேரிடர்களின் போதும் உதவிகள் செய்வதாகும்.

நீவிர் தெரிந்து கொண்டிருக்க வேண்டிய ஒன்று

தரைப்படை வீரர்களில் உயர் அலுவலர்களின் பதவிப் பெயர்கள் ஆவன. ஜெனரல், லெப்டினட் ஜெனரல், மேஜர் ஜெனரல், பிரிகேடியர், கர்னல், லெப்டினன்ட் கர்னல், மேஜர் கேப்டன் மற்றும் லெப்டினன்ட. இது போலவே இந்திய கப்பல் படைத்துறையிலும், இந்திய விமானப் படைத் துறையிலும் பதவிகள் உள்ளன. மூன்று பாதுகாப்புப் படைகளின் தலைவர்கள் பாதுகாப்புப் படைத் தலைவர்கள் என அழைக்கப்படுவர்.

NOT TO BE REPUBLISHED @KTBS

பயிற்சிகள்

I. ஏற்ற சொற்களால் விடுப்பட்ட இடங்களை நிரப்புக.

1. பாதுகாப்பபடைக்கு கட்டளையிடும் உயர்ந்த அதிகாரம் கொண்டவர் ________
2. தரப்படையின் தலைமைத் தளபதியை ________ என்று அழைப்பர்.
3. தரப்படையின் தலைமை அலுவலகம் ________ யில் உள்ளது.
4. தேசிய மாணவர் படையின் மூதுரை ________ ஆகும்.

II. கீழ் கண்ட வினாக்களுக்கு விடை எழுதுக.

5. பாதுகாப்புப் படைகளின் உட்பிரிவுகள் யாவை?
6. தரைப்படையின் முக்கியமான செயல்கள் யாவை?
7. எல்லைப் பாதுகாப்புப் படையின் பணிகள் யாவை?
8. இந்தியச் செஞ்சிலுவைச் சங்கத்தின் நோக்கம் என்ன?
9. பாதுகாப்புப் படைகளில் நீ பணி செய்ய விரும்புகின்றாயா? இவ்வாறாயின் காரணங்கள் சிலவற்றை எழுதுக.

III. கலந்துரையாடல்:

10. 6 பாதுகாப்புப் படைகளின் பொறுப்புணர்வுகள் கூறுக.
11. நாம் பாதுகாப்புப் படைகளில் சேர்ந்து பணியாற்ற வேண்டும் என்ற நோக்கத்தை ஏன் பெற்றிருக்க வேண்டும்.

NOT TO BE REPUBLISHED @KTBS

செயல்பாடுகள்

- படைவீரர் ஒருவரை (கிராமத்தில்) சந்தித்து அவரை உம் பள்ளிக்கு ஓர் விழாவிற்கு அழைக்கவும்.
- பாதுகாப்புப் படைகளின் சில குறியீடுகளை சேகரிக்கவும்'
- அருகிலிருக்கும் பள்ளி மற்றும் கல்லூரிகளில் உள்ள தேசிய மாணவர் படையைக் கண்டு வருக.

*****

பாடம் 24	இந்தியா மற்றும் அண்டை நாடுகள்

P9Y8V3

பாட அறிமுகம்

ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கு அதன் வெளியுறவு கொள்கை முக்கிய பங்களிக்கின்றது. இந்த அடிப்படையில் இந்தியா எவ்வாறு தனது அண்டை நாடுகளுடன் உறவு வைத்துக் கொண்டு உள்ளது என்பதை இப்பாடத்தில் அறிவோம்.

திறன்கள்.

1. இந்தியாவின் அயல் நாட்டு அரசியல் உறவுகளைப் பற்றி அறிதல்.
2. அண்டை நாடுகளுடன் இந்தியா சமாதான உறவை வைத்துள்ளது என்று பெருமிதம் கொள்ளுதல்.
3. இந்தியா தனது அண்டை நாடுகளுடன் பெற்றுள்ள பொருளாதாரம், கல்வி மற்றும் கலாசச்சார உறவைப் பற்றி தெரிந்து கொள்ளுதல்.
4. அண்டை நாடுகளுடன் உள்ள எல்லை பிரச்சனைகள், போர்கள், பயங்கரவாதம் போன்ற நடவடிக்கைகள் வகுப்புவாத பிரச்சனை, நீர் பிரச்சனை போன்றவற்றை பற்றி அறிந்துக் கொள்ளுதல்.
5. அண்டை நாடுகளின் மீது அன்பு காட்டும் மனப்பான்மையை வளர்த்து கொள்ளுதல்.

©KTBS NOT TO BE REPUBLISHED

தென் ஆசியாவின் பொருளாதார வியாபாரத்தில் இந்தியா முக்கிய பங்கு வகிக்கிறது. இந்தியா தனது இருப்பிடம், அளவு, பொருளாதாரம், பாதுகாப்புப் படை சக்தியால், தென் ஆசிய, விவகாரங்களில் முக்கிய பங்குவகிக்கிறது.

இந்தியாவின் வடக்கே சீனா, நேபாளம் மற்றும் பூடான் நாடுகள் உள்ளன. கிழக்கே வங்காளதேசம் மற்றும் மியான்மார், தென் மேற்கே பாகிஸ்தான், தெற்கே ஶ்ரீலங்கா (இலங்கை) உள்ளது. இவை நமது நாட்டின் ஏழு அண்டை நாடுகள் ஆகும். இதனை வரைப்படத்தில் கவனி.

சமாதானம், நட்பு, சகோதரத்துவம், ஒத்து போகுதல் போன்ற குணங்களை இந்தியா பெற்றுள்ளது. சில அண்டை நாடுகளுடன் கருத்து வேறுபாடு உள்ளது. இவ்வேறுபாட்டை பேச்சு வார்த்தையின் மூலம் தீர்த்து கொள்ளவே இந்தியா விரும்புகின்றது. ஆகையால் இந்தியாவின் அண்டை நாடுகளுடன் உள்ள உறவை இப்போது நாம் அறியலாம்.



இந்தியா மற்றும் அண்டை நாடுகள்

@KTBS NOT TO BE REPUBLISHED

இந்தியா மற்றும் பாகிஸ்தான்

பாகிஸ்தான் இந்தியாவின் ஒரு பகுதியாக இருந்தது. சுத்தந்திரத்திற்கு பிறகு (1947)ல் வேறு நாடாக பிரிந்தது, இரண்டு நாடுகளும் கருத்து வேறுப்பாட்டால் பிரிந்ததால் இந்நாடுகளின் இடையே சமாதானம் ஏற்படவில்லை. ஆகையால் இவ்விரண்டு நாடுகளுக்கிடையே உள்ள பிரச்சனைகள் அப்படியே நிலைத்துள்ளது.அவைகளில் முக்கியமானவை.

1. காஷ்மீர் பிரச்சனை
2. பாதுகாப்புப் படையின் ஆக்கிரமிப்பு
3. பயங்கரவாதம்
4 நீர் பிரச்சனை
5. சிறுபான்மையினர் பாதுகாப்பு.
6 வியாபார (வணிகம்) வளர்ச்சி, முதலியன.

இந்தியா பாகிஸ்தானிடையே நல்லுறவுகளை மேம்படுத்துவதில் காஷ்மீர் பிரச்சனையானது தடையாகவே உள்ளது. இதுவரை இவ்விரண்டு நாடுகளிடையே நான்கு முறை போர் நடத்துள்ளது. (1947, 1965, 1971 மற்றும் 1999). 1948 பாகிஸ்தான் இராணுவம் காஷ்மீரை முற்றுகையிட்டு பாதிஸ்தானின் சில பாகங்களை ஆக்கிரமித்தது. அப்பகுதி 'பாகிஸ்தான் ஆக்கிரமித்த காஷ்மீர்' (Pakistan Occupied Kashmeer) என்று அழைகப்படுகிறது. காஷ்மீர் இந்தியாவின் ஒரு பகுதி என்று ஆரம்பத்தில் இருந்து இந்தியா நினைத்துள்ளது.

1962 இந்தியா - சீனா போரிற்குப் பிறகு பாகிஸ்தான் சீனாவுடன் இராணுவ தொடர்பு வைத்துள்ளது. ஜம்மு காஷ்மீரின் சுமார் 2, 700 அடி சதுர கி.மீ. இடத்தினை பாகிஸ்தான் சீனாவிடம் கொடுத்துள்ளது.

1965 இல் இந்தியா - பாகிஸ்தான் போரில் இந்தியா சிறைப்பிடித்த 80,000 க்கும் அதிகமான பாகிஸ்தான் இராணுவ வீரர்களை சொந்த நாட்டிற்கு ஒப்படைத்தது. காஷ்மீர் பிரச்ச னையை அமைதி உரையாடலின் மூலம் மட்டுமே தீர்வு காண முடியும் என்று ஒப்புக்கொண்டனர்.

பாகிஸ்தான் இராணுவ படை மற்றும் இந்தியாவிற்கு ஆதரவாக இருந்த கிழக்கு பாகிஸ்தானுக்கு (வங்காள தேசம்) நடுவே பயங்கரமான போர் (சண்டை) நடைபெற்றது. பொதுவாக

NOT TO BE REPUBLISHED ©KTBS

இப்போரை இந்திய பாகிஸ்தானின் மூன்றாவது போர் என்றே கருதலாம்.

* *1971*இல் இந்தியா-பாக் போர் நடைபெற்றது. *1972* இல் சிம்லாவில் உச்சிமாநாடு நடைப்பெற்றது. அச்சமயம் திருமதி இந்திரா காந்தி அவர்கள் இந்தியாவின் பிரதம மந்திரியாக இருந்தார். இந்த உச்சிமாநாட்டில் காஷ்மீர் உள்பட எல்லா பிரச்சனைகளிலும் பேச்சு வார்த்தையின் மூலமாக தீர்த்து கொள்ள ஒப்பந்தம் செய்யப்பட்டது. இந்த ஒப்பந்தம் சிம்லா ஒப்பந்தம் எனப்பட்டது.

கார்கில் போரில் நம் நாட்டு இராணுவ வீரர்களின் வெற்றி

1999 இல் அந்நாள் பிரதமரான ஸ்ரீ அட்டல் பிஹாரி வாஜ்பாய் அவர்கள் கார்கில் போரிற்கு பிறகு அம்ரித்சரிலிருந்து லாகூருக்கு இடையே பேருந்து வசதி ஏற்படுத்தினார். இதன் மூலமாக இரண்டு நாடுகளுக்கிடையே நல்லுறவை ஏற்படுத்த முயற்சித்தார். பிறகு ஆக்ரா உச்சிமாநாட்டில் இரண்டு நாட்டின் நடுவே சாமாதானம் ஏற்பட முயற்சி செய்யப்பட்டது. ஆனால் இம்மாநாடு தோல்வியில் முடிந்தது. இதன் காரணமாக பாகிஸ்தான் பயங்கரவாதத்தை ஆதரித்தது.

இதன்படி பாகிஸ்தானின் தீவிரவாதிகள் டிசம்பர் *31, 2001* அன்று இந்தியாவின் பாராளுமன்றத்தின் மீது தாக்குதல் நடத்தினர். இச்சம்பவத்தினால் இந்தியா பாகிஸ்தான் உறவின் பலங்குறைந்தது.

NOT TO BE REPUBLISHED

தம்முடைய இராணுவத்தின் பலத்தை நிரூபிக்க இவ்விரண்டு நாடுகளும் போட்டியிடுகின்றன. ஆயினும் எல்லா கருத்து வேறுபாடுகளையும் மறந்து இந்தியா பாகிஸ்தானுடன் நட்பு கொள்ளவே விரும்புகிறது.

செயல்பாடுகள்: இந்தியா - பாகிஸ்தான் இடையே உள்ள ஆயுத போரைப் பற்றி விவாதிக்கவும்.

இந்தியா மற்றும் சீனா

சீனா இந்தியாவின் மிக முக்கியமான அண்டை நாடாகும். ஏனென்றால் இந்தியா-சீனா எல்லை விவகாரம் நீண்ட வரலாறு கொண்டது. இந்தியா-சீனாவிற்கு ஐக்கிய நாடுகள் அவையில் இடம் ஒதுக்க சிபாரிசு செய்துள்ளது. இந்தியா ஆரம்பத்திலிருந்தே சமாதான உறவை விரும்பியுள்ளது.

திபெத் மற்றும் அருணாச்சலப் பிரதேசத்தின் பிரச்சனை இந்தியா-சீனா நடுவே உள்ள போரின் மிக முக்கியமான காரணம் ஆகும்.

1950 இல் சீனப் படை திபெத்தை ஆக்கிரமித்தது இது இந்தியாவிற்கு பெரும் ஏமாற்றத்தை அளித்தது. திபெத்தின் இறையாண்மையில் (ஆட்சித் தலைமை உரிமையில்) சீனா தலையிட்டது. இதனை கண்டித்து இந்தியா திபெத் மக்களுக்கு உத்வேகம் கொடுத்தது மற்றும் மனித நேயத்தை கடைப்பிடித்தது. ஆனால்' சீனா இச்செயலை கண்டித்து தனது உள்நாட்டு விவகாரத்தில் இந்தியா தலையிடுகிறது என்று கடுமையாக கண்டித்தது.

@KTBS NOT TO BE REPUBLISHED



தலாயலாமா

பௌத்த கோயில் பைலுகுப்பே

1950 இல் சீன இராணுவம் திபெத்தை தன் கட்டுப்பாட்டிற்குள்

கொண்டு வந்த போது திபெத்தின் சமய குருவான தலாய் லாமா மற்றும் அவருடன் சுமார் 80,000 பேர் இந்தியாவிற்கு அகதிகளாக வந்தனர். அப்போது இந்தியா இவர்களுக்கு பத்து மாநிலங்களில் இடவசதி (முகாம்கள்) அமைத்துக் கொடுத்தது. மண்டுகோடா (உத்திர கண்டை) மற்றும் பைலு குப்பே (மைசூர்) யில், திபெத் குடியிருப்பு முகாம்கள் கருநாடகத்தில் உள்ளன. இந்நிகழ்வினால் சீனா இந்தியாவின் கிழக்கு எல்லைப் பகுதியின் அநேக பிரதேசங்களை தன் வயப் படுத்தி கொள்ள முயற்சி செய்தது, இதற்கு இந்தியா கண்டனம் தெரிவித்துள்ளது.

செயல்பாடு : ஆசிரியரோடு சுற்றுலா சென்று முண்டகோடா, பைலுகுப்பேவில் திபெத்தியரின் வாழ்க்கை முறையைப் பற்றி பட்டியல் தயாரிக்க அல்லது திபெத்தினரின் பழக்க வழக்கம், சமயம் பற்றிய செய்தியை சேகரிக்கவும்.

சீனாவின் பிரதம மந்திரி சௌ-என்-லாய் இந்தியாவிற்கு வருகை தந்த போது நேருவோடு 1954 இல் பஞ்சசீல ஒப்பந்தத்தில் கை எழுத்து இட்டார்.

சீனாவின் பாடப்புத்தகத்தில், இந்தியாவின் சில பகுதிகள் சீனா வரைப்படத்தில் சேர்த்துள்ளனர் இதனை திருத்துமாறு இந்தியா அறிவுறுத்தியும் சீன பிரதம மந்திரி ஒப்பு கொண்ட பின்னரும், எந்த விதமான மாறுதல்களையும் செய்யவில்லை.

திபெத்தின் பிரச்சனையின் காரணமாக சீனா, இந்தியாவின் மேல் 1962 இல் வட கிழக்கு எல்லையின் லடாக் (ஜம்மு காஷ்மீர் பாகம்) வரையிலும் 14,671 சதுர. கி.மீ. வரை ஆக்கிரமிப்பு செய்து ஒரு தலை பட்சமாக செயல்பட்டது. இச்செயலை கண்டு பஞ்சசீல ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட நேரு வருத்தினார். இன்றளவும் இந்த எல்லைப் பிரச்சனை நிலுவையில் உள்ளது. (Line of Actual Control - LAC)

சீனா பாகிஸ்தான் இடையே உள்ள ஒப்பந்த நீதி, சீனா மற்றும் இந்தியா நடுவே உள்ள நெடுஞ்சாலை வசதி இவை இந்தியாவிற்கு அச்சுறுத்தலாக இருக்கிறது.

© KTBS NOT TO BE REPUBLISHED

இந்தியாவின் மீது சீனாவின் ஆக்கிரமிப்பு

❖ இந்தியா மற்றும் சீனாவிற்கு நடுவே உள்ள 3440 கி.மீ. நீண்ட சர்வதேச எல்லையை பிரிட்டிஷ், இந்தியா வெளியுறவு செயலாளர் சர் மேக்மகோன் அவரால் நிர்ணயிக்கப்பட்டது. ஆகையால் இதனை மேக்மகோன் எல்லை'' என்று அழைக்கிறார்கள்.

❖ சீனா 1962 இல் கிழக்கு லடாக்கை (ஆஸ்கி-சின்) ஆக்கிரமித்து இந்தியாவின் 14,671 சதுர கி.மீ. நிலப்பகுதியை தன் வயப்படுத்திக் கொண்டுள்ளது.

❖ இது மட்டுமல்லாமல் இந்தியாவின் அருணாச்சல பிரதேசத்தில் 90,000 சதுர, கி.மீ. நிலப் பகுதியை தன்னுடையது என்று சாதிக்கின்றது.

இந்தியா மற்றும் நேபாளம்

நேபாளம் இந்தியாவின் வடக்குப் பகுதியில் இமயமலைத் தொடரை எல்லையாகக் கொண்டுள்ளது. ஆரம்பத்திலிருந்தே இந்தியா - நேபாளம் நெருங்கிய உறவைக் கொண்டுள்ளது. இரண்டு நாடுகளும் எவ்வித எல்லைப் பிரச்சனையும் இல்லாமல், மனிதப் போக்குவரத்து, வணிகம் போன்ற தடைகள் இல்லாமல் நடைபெறுகிறது.

நேபாளம் நிலத்தால் சூழப்பட்ட நாடு மற்றும் இந்தியாவின் வழியாக மட்டுமே மற்ற நாடுகளுடன் தொடர்பு வைத்துகொள்ள முடியும். அதை ஒன்றியுள்ள இன்னொரு நாடு சீனாவாகும். ஆனால் அந்நாட்டிற்கு கடல்வழி இல்லாததால் தொடர்பு கடினமாகிரது. நேபாளம் ஒரு அயல்நாடு என்பதால், இந்தியாவுடன் நல்லுறவைப் பேண விரும்புகிறது, 1950 ஆம் ஆண்டின் நட்பு மற்றும் அமைதி ஒப்பந்தத்தின் அடிப்படையில் அமைந்ததாகும். போக்குவரத்து, தகவல் தொடர்பு, நீர் பாசனம், மின்சாரம், காடு கல்வி போன்ற பல்வேறு துறைகளில் இந்தியா நேபாளத்திற்கு குறிப்பிடத்தக்க வகையில் உதவி செய்து வருகிறது.

இந்தியா, 1971இல் இண்டோநேபாள ஒப்பந்தத்தில் கை எழுத்திட்டுள்ளது. இதன்படி 'பொருட்களின் மீது விதிக்கும் வரியை, செலுத்தாமல் இந்தியாவிற்கு எடுத்து கொண்டு வரலாம்.

NOT TO BE REPUBLISHED @KTBS

இந்தியா மற்றும் பூடான்

1949 இல் இந்தியா மற்றும் பூடான் செய்து, கொண்ட ஒப்பந்தத்தின் படி, இரண்டு நாடுகளும் தங்களுடைய, உள்நாட்டு விவகாரத்தில் தலையிடுவதில்லை என்றும் பூடான் வெளி நாடுகளுடன் தொடர்பு கொள்ளும் போது இந்தியாவின் வழிகாட்டுதலுடன் செயல்படும் என்றும் பூடான் ஒப்பு கொண்டுள்ளது.

இந்தியாவின் முயற்சியால், பூடான் ஐக்கிய நாடுகள் சபையில் உறுப்பினராக சேர்க்கப்பட்டுள்ளது. *1961* லிருந்து *1981* வரை இந்தியா பூடானுக்கு பொருளாதார ஆதரவு அளித்தகோடு, அநேக திட்டங்களுக்கு பண உதவியும் செய்துள்ளது. பூடான் ''சார்க்'' மாநாட்டிஸ் உறுப்பினராக உள்ளது.

இந்தியா மற்றும் ஸ்ரீலங்கா (இலங்கை) : ஸ்ரீலங்கா இந்தியாவின் தெற்கே உள்ள தீவு நாடாகும். இராமாயண காலத்தில் இருந்தும் இந்தியா மற்றும் ஸ்ரீலங்கா நடுவே அன்பு உறவு உள்ளது. அசோக அரசர் பௌத்த மத பிரச்சாரத்திற்காக தன் பிரதிநிதிகளை அந்நாட்டிற்கு அனுப்பி வைத்தார். அதன் மூலமாக இந்தியா மற்றும் பூடானின் கலாச்சார உறவு மேலும் வலுவடைந்தது.

ஸ்ரீலங்காவில் முக்கியமாக இரண்டு முக்கிய பிரிவு மக்கள் உள்ளனர்; அவர்கள் சிங்களர் மற்றும் தமிழர்களாவர். சிங்களர்கள் ஸ்ரீலங்காவின் மூல பரம்பரையை சேர்ந்தவர்கள், தமிழர்கள் தமிழ்நாட்டில் இருந்து இடம் பெயர்ந்தவர்கள் இவர்களுக்கிடையே நிரந்தரமான பிரச்சனை உள்ளது.

ஸ்ரீலங்காவில் தமிழர்கள் தங்களுடைய உரிமைக்காகவும் தனி மாநிலம் வேண்டுமென்றும் நிரந்தரமாக போராடி வருகின்றனர். இரண்டு தசாப்தங்களாக இப்போராட்டம் நடைபெறுகிறது, இருந்தாலும் இந்தியா ஸ்ரீலாங்காவுடன் நட்புறவை விரும்புகிறது. கருத்து வேறுப்பாட்டை நீக்க இந்தியா பல சமாதான யோசனைகளை அளித்து வருகிறது.

பாக் கொல்லி (Pak Strait) இன் நடுவில் உள்ள கட்ச தீவவின் உரிமை (kachativ) ஸ்ரீலங்காவிற்கே உரியது என்று (*1974-76*) இல் ஸ்ரீலங்கா இந்தியா உடன் ஒப்பந்தம் செய்துக்கொண்டது, மேலும் கடல் வணிகத்தின் மீது ஒப்பந்தம் செய்யப்பட்டது.

© KTBS NOT TO BE REPUBLISHED

*1987*ல் ஸ்ரீலங்காவில் தமிழர்களின் போராட்டத்தை சமதானம் செய்வதற்காக இந்திய அரசிடம் உதவி கேட்டது, அதன் தொடர்பில் *1988* இல், இந்தியாவின் பிரதம மந்திரியாக இருந்த ராஜீவ் காந்தி மற்றும் ஸ்ரீலங்காவின் அதிபர் ஜெயவர்தனே இவர்களிடையே ஒப்பந்தம் செய்யப்பட்டது. இந்த ஒப்பந்தத்தின் படி இந்தியா அமைதி காக்கும் படையை (Indian peace keeping force) (I.P.K.F) ஸ்ரீலங்காவிற்கு அனுப்பியது.

இந்தியா கடைப்பிடிந்த இவ்வொப்பந்தத்தால், ஸ்ரீலங்கா வாழ் தமிழர்கள் ஸ்ரீலங்காவிற்கு இராஜீவ் காந்தி வந்த போது எதிர்ப்பு தெரிவித்து கொலை முயற்சி செய்தனர். இம்முயற்சி தோல்வி அடைந்தது. ஆயினும் தமிழ் விடுதலைப் புலிகள் (Liberation of Tamil Tiger Elam (LTTE) ராஜீவ் காந்தியை *1991* மே *21* அன்று அவரைக் கொலை செய்தனர். இவ்வளவு நடந்தும் இந்தியா ஸ்ரீலங்காவுடன் நட்புறவையே விரும்புகிறது. ஆனால் LTTE இன் தலைவரான வேலுப்பிள்ளை பிரபாகரனின் கொலைக்குப் பிறகு, விடுதலை புலிகளின் போராட்டம் முடிவுக்கு வந்தது. இலங்கை அரசாங்கம், இப்பிரச்சனைக்கு தனது அரசியலமைப்பின் கட்டமைப் பிற்குள் ஒரு தீர்வைக் காண விழைகிறது.

இந்தியா மற்றும் வங்காள தேசம்

வங்காள தேசம் பாகிஸ்தானின் ஒரு பகுதியாகும். அதனை கிழக்கு பாகிஸ்தான் என அழைப்பர். *1960* ஆம் ஆண்டிலிருந்தே ஒரு தனி நாடாக வேண்டும் என்று போராட்டம் நடத்தியது. ஷேக் முஜாபுர் ரெஹமான் தலைமையில் அவாமி லீக் விமோசன போராட்டம் நடத்தியது. கிழக்கு பாகிஸ்தான் மக்களின் உரிமை மீறல் பின்னணியில் *1971*ல் இந்திய இராணுவம் தலையிட வேண்டியதாயிற்று. மேற்கு பாகிஸ்தானுக்கும், கிழக்கு பாகிஸ்தானுக்கும் இடையே நடந்த போரில் மேற்கு பாகிஸ்தான் தோல்வியுற்றது. கிழக்கு பாகிஸ்தான் வங்காளதேசம் எனும் பெயரால் புதிய நாடாக மாறியது.

@KTBS NOT TO BE REPUBLISHED

1972 இல், இந்தியா மற்றும் வங்காள தேசத்தின் பிரதமர்கள் ஒன்று கூடி, நட்பு, ஒத்துழைப்பு மற்றும் சமாதானம் போன்றவற்றிற்கு 25 வருட காலத்திற்கு ஒப்பந்தம் செய்தனர். இதன் காரணமாக இரு நாடுகளுக்கு இடையே உள்ள பிரச்சனைகளுக்கு தீர்வு காணப் பட்டது.

சீத்தாகாங்க் மலைப் பிரதேசங்களிலிருந்து இந்தியாவிற்கு அகதிகளாக வரும் ஜக்மா அகதிகளின் பிரச்சனை, போதைப் பொருள் கடத்தல், இன்னும் தீர்க்கப்படவில்லை. அதுமட்டுமல்லாமல் லட்சக் கணக்கான அகதிகள் அத்துமீறி இந்திய எல்லைக்கு நுழைவது பெரும் பிரச்சனையாக உள்ளது. இந்தியாவின் கிழக்குப் பகுதியில் உள்ள நக்ஸலைட்களுக்கு வங்காள தேசம் அடைக்கலம் கொடுப்பது கவலைக்கிடமானது. ஆயினும் வங்காள தேசம் இந்தியாவின் நட்பு நாடாக உள்ளது.

செயல்பாடு : வங்காள தேசத்தின் சுதந்திரப் போராட்டத்தில் இந்தியாவின் பங்கு குறித்து உரையாடுக.

@KTBS NOT TO BE REPUBLISHED

சார்க் (SAARC)

தென் ஆசிய நாடுகளுக்கு இடையே ஒற்றுமை நிலை நாட்டுவதற்கு ஒரு அமைப்பு நிறுவப்பட்டது. இதன் விளைவாக *1985* இல் பிராந்திய ஒத்துழைப்புக்கான தென்னாசிய சங்கம் (South Asian Association for Regional Cooperation) (SAARC) சார்க் உருவானது. சார்க் ஏழு நாடுகள் கொண்டது. அதற்கு பிறகு ஆப்கானிஸ்தான் (*2007, 14* ஆம் மாநாடு புது டில்லி) சார்க்கின் உறுப்பு நாடாக சேர்த்து கொள்ளப்பட்டது.

இந்தியா, வங்காளதேசம், பூடான், மால்டிவ்ஸ், நேபாளம், பாகிஸ்தான், ஸ்ரீலங்கா மற்றும் ஆப்கானிஸ்தான் இந்த எட்டு நாடுகள், சார்க்கின் எட்டு உறுப்பு நாடுகளாகும்.

கல்வித் துறைக்குத் தொடர்பான செய்தி பரிமாற்றத்திற்கு தனிக் கோளை ஏவி இதன் பயன்பாட்டினை அனைத்து சார்க் நாடுகளுக்கும் இந்தியா கொடுத்த அன்பளிப்பாகும்.

சார்க்கின் நோக்கங்கள்

* தெற்கு ஆசிய நாடுகளுக்கு இடையே பரஸ்பர நம்பிக்கை மற்றும் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவது.
* தென் ஆசிய மக்களின் நலனைக் காப்பது.
* பொருளாதாரம், கலாச்சாரம், தொழில்நுட்ப அறிவியல் துறையில் ஒத்துழைப்பு மற்றும் சகோதரத்துவம் கொள்வது.
* முன்னேற்றமடைந்த நாடுகளுடன் பலமான நட்பை ஏற்படுத்துவது.

சார்க் உறுப்பு நாடுகளின் இந்தியா பற்றிய ஒருதலைப்பட்ச எதிர்பார்ப்புகளும் இந்தியாவை சந்தேத்துடனும் அச்சத்தோடும் பார்க்கும் அவர்களின் பார்வையும் அதன் வளர்ச்சிக்கு ஒரு தடையாக மாறியுள்ளது.

©KTBS NOT TO BE REPUBLISHED

பயிற்சிகள்

I. ஏற்ற சொற்களால் விடுப்பட்ட இடங்களை நிரப்புக :

1. கார்கில் போர் நடைப்பெற்ற வருடம் ________ ஆகும்.
2. திபெத்தின் சமய குரு ________ ஆவார்.
3. அவாமி லீக் விமோசனா போராட்டம் ________ தலைமையில் நடைப்பெற்றது.
4. சார்க் மாநாடு ________ ஆண்டு உருவானது.
5. சீத்தாகாங் மலைப் பிரதேசங்களிலிருந்து இந்தியாவிற்கு ________ அகதிகளாக வருகிறார்கள்.

II. இரண்டு அல்லது மூன்று வாக்கியங்களில் விடையளி:

6. இந்தியாவின் அண்டை நாடுகள் யாவை?
7. இந்தியா மற்றும் பாகிஸ்தானிற்கு இடையே உள்ள நல்லுறவிற்கு தடையாக உள்ள அமசங்களைப் பட்டியல் செய்க.

8. சீனா மற்றும் இந்தியாவிற்கு இடையிலான போர்களுக்கு முக்கிய காரணங்கள் யாவை?

9. வங்காள தேசம் சுதந்திரம் பெற இந்தியாவின் பங்களிப்பைப் பற்றி எழுதுக?

10. 1962இல் சீனா - இந்தியா போரின் முடிவு என்ன?

11. சார்க் மாநாட்டின் முக்கிய நோக்கங்கள் யாவை?

செயல் பாடுகள் :

- இந்தியாவின் அண்டை நாடுகளின் தேசியக் கொடியைப் பற்றிய செய்தியைத் திரட்டுக.
- உலக வரைப்படத்தில் இந்தியாவின் அண்டை நாடுகளை வரைப்படத்தில் குறிப்பிடுக.

@KTBS NOT TO BE REPUBLISHED

***

பாடம் 25	ஐக்கிய நாடுகள் அமைப்பு (U.N.O)

S7J5R6

பாட அறிமுகம்

வரலாற்றிலேயே மிகக் கொடிய இரண்டாம் மகா போர், ஐரோப்பிய நாடுகளிடையே தொடர்ந்து ஆறு வருட காலம் நடைப்பெற்றது (1939-1945). சுமார் நான்கு கோடி மக்கள் மற்றும் அதிகபட்ச சொத்துக்கள் நாசமாயின.

வன்முறையால் அவதிப்பட்ட மக்கள் நிரந்தர அமைதிக்காக ஏங்கினர். இந்த முக்கியமான கட்டத்தில் 51 நாடுகளின் பிரதிநிதிகள் அமெரிக்காவின் சான்பிரான்ஸிஸ்கோ நகரில் ஒன்று கூடி 1945 அக்டோபர் 24 அன்று நிரந்தர அமைதிக்காக ஐக்கிய நாடுகள் அமைப்பை (U.N.O) நிறுவினர்.

இப்பாடத்தில் ஐக்கிய நாடுகள் அமைப்பின் பின்னணி', அடிப்படை நோக்கங்கள். முக்கிய உறுப்புக்கள், சிறப்பு முகவர் (Specialied agenies) மற்றும் அவைகளின் சாதனைகள் விவரிக்கபட்டுள்ளன. ஐக்கிய நாடுகள் அமைப்பில் இந்தியாவின் பங்கும் விவரிக்கப்பட்டுள்ளது.

திறன்கள்

1. ஐக்கிய நாடுகள் அமைப்பின் முக்கிய நோக்கங்கள் மற்றும் அதன் இலட்சியங்களை அறிந்துகொள்ளுதல்.
2. ஐக்கிய நாடுகள் அமைப்பின் உறுப்புகளின் செயல்பாடுகளை அறிதல்.
3. ஐக்கிய நாடுகள் அமைப்பு, உலக நாடுகளுக்கு இடையே அமைதி, சகோதரத்துவத்தை நிலைநாட்டச் செய்ய சாதனைகளைப் பற்றி பெருமிதம் கொள்ளுதல்.
4. உலக அமைதிக்காக இந்தியாவின் முயற்சிகள் மற்றும் செயல்பாடுகளைப் பற்றி தெரிந்து கொண்டு பெருமிதம் கொள்ளுதல்.

இங்கு கொடுக்கப்பட்டுள்ள சின்னத்தைக் கவனி, சின்னத்தின் நடுவில் கண்டங்கள் உள்ளன. சின்னத்தின் இரண்டு பக்கங்களிலும் ஆலிவ் கிளைகள் உள்ளன. இவை எதைக் குறிப்பிடும்?

NOT TO BE REPUBLISHED ©KTBS

சின்னத்தில் காண்பிக்கப்பட்டுள்ள கண்டங்கள் உலகின் எல்லா நாடுகளையும் ஆலிவ் கிளைகள் நட்பு மற்றும் அமைதியையும் குறிக்கிறது. இது ஐக்கிய நாடுகள் அமைப்பின் முக்கிய அடிப்படை நோக்கம் மற்றும் இலட்சியத்தின் சின்னமாக அமைந்துள்ளது.

ஐக்கிய நாடுகள் அவையின் சின்னம்

ஐ.நா.அவையின் (U.N.O) தோற்றம்

ஐக்கிய நாடுகள் அமைப்பு என்றால் என்ன? அது எதற்காக அமைக்கப்பட்டது தெரியுமா?

சுமார் 70 ஆண்டுகளுக்கு முன்பு ஐரோப்பிய நாடுகளுக்கு இடையே மிகக் கொடிய போர் ஒன்று தொடங்கியது. குறுகிய காலத்திலேயே பிறகண்ட நாடுகளும் இப்போரில் கலந்து கொண்டன. இதுவே இரண்டாம் உலகப்போர் ஆகும். இப்போரின் காரணமாக எண்ணிலடங்கா உயிர்கள், சொத்துக்கள் நாசமாயின. போரிட்டால் வாடிய மனித குலம் நிரந்திர அமைதியான உலகத்தை விரும்பியது. இச் சூழலில் அமெரிக்க அதிபர் ரோஸ் வேல்ட் பிரிட்டிஷ் பிரதமர் சர்ச் ஹில் (Churchill) மற்றும் ரஷ்யாவின் சர்வாதிகாரியான ஸ்டாலின் (Stalin,) போன்றோரின் முன்னணியில் 51 தேசங்களின் பிரதிநிதிகள் கூடிய சபையில் உலகின் நிரந்தர அமைதியை நிலைநாட்ட தீர்மானம் கைகொள்ளப்பட்டது. இதனை செயல்படுத்த கொண்டுவந்த அமைப்பே ஐக்கிய நாடுகள் அமைப்பு அல்லது ஐக்கிய நாடுகள் அவை (U.N.O) ஆகும். இது 1945 அக்டோபர் 24 அன்று நிறுவப்பட்டது.

©KTBS NOT TO BE REPUBLISHED

UNO ஒரு அமைப்பு அல்ல என்ற காரணத்தால், முன்பு UNO என்று அழைக்கப்பட்டதற்கு பதிலாக இப்பொழுது UN என்று அழைக்கப்படுகிறது. UN என்பது உலக நாடுகளை மட்டும் குறிக்கின்றது. UN என்பது யுனைட்டட் நேஷன்ஸ் (ஐக்கிய நாடுகள்) என்பதாகும்.

ஐக்கிய நாடுகள் அமைப்பின் முக்கிய நோக்கங்கள்

* போர்களை நிறுத்தி, உலகத்தில் நிரந்திர அமைதி பாதுகாப்பை உருவாக்குதல்.

* உலக நாடுகளுக்கிடையே நட்பு மற்றும் சமத்துவத்தை ஏற்படுத்துவது.
* உலக நாடுகளுக்கு இடையே பொருளாதாரம், சமூக, கலச்சார மற்றும் மனிதகுல பிரச்சனைகளை தீர்க்க ஒத்துழைப்பு அளித்தல்.
* மனித உரிமைக்கு கௌரவம் (மரியாதை) அளித்தல்.
* மேற்கண்ட நோக்கங்களை நிறைவேற்ற உகந்த அமைப்பாக செயல்படுத்துதல்.

ஐக்கிய நாடுகளின் நோக்கங்களை நிறைவேற்ற ஐக்கிய நாடுகள் அவை எந்தெந்த உறுப்புகளை உருவாக்கியது?



@KTBS NOT TO BE REPUBLISHED

1. பொதுக் குழு (The General Assembly)

இதனுடைய வருடாந்திர கூட்டம் செப்டம்பர் மாதம் நடைபெறும். அனைத்து உறுப்பு நாடுகள் பொதுக்குழு சபையில் பங்குகொள்வர். ஒவ்வொரு உறுப்பு நாடுகளில் ஐந்து பிரதிநிதிகள் இருந்தாலும், ஒரே ஒரு ஓட்டு மட்டுமே போடும் உரிமை உள்ளது பொதுக் குழு பாராளுமன்றத்தை போல செயல்படும். நடப்பு ஆண்டில் (2022) 193 உலக நாடுகள் ஐக்கிய அமைப்பின் உருப்பு நாடுகளாக உள்ளன. சுடான் குடியரசு 193 வது உறுப்பு நாடாகும்.

பாதுகாப்பு சபை

பாதுகாப்பு சபை ஐக்கிய நாடுகள் அமைப்பின் நிர்வாக அமைப்பாக உள்ளது. பொதுக்குழு கை கொள்ளும் முடிவுகளைக் குறித்து பரிந்துரைகள் கொடுப்பது, உறுப்பு நாடுகளுக்கு ஆலோசனை கூறுவது, உலக அமைதி மற்றும் பாதுகாப்பு அளிப்பது, இதனுடைய முக்கிய செயல்பாடுகள் ஆகும்.

பாதுகாப்பு சபையில் 15 உறுப்பு நாடுகள் உள்ளன. அமெரிக்கா, ரஷ்யா, பிரிட்டன் பிரான்ஸ் மற்றும் சீனா ஐந்து நிரந்திர நாடுகளாகும். மீதிமுள்ள பத்து உறுப்பு நாடுகள் பொதுக்குழுவால் இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை தாற்காலிகமாக தேர்ந்தெக்கப்படுகிறார்கள்.

பாதுகாப்பு அவையின் என்ன முடிவாக இருந்தாலும் அது அங்கீகரிக்கப்பட ஒன்பது உறுப்பு நாடுகளின் ஒப்புதல் அவசியம். நிரந்திர நாடுகளின் வரிசையில், ஒரு நாடு இம் முடிவினை அங்கீகரிக்க மறுத்தாலும் (எதிர்த்தாலும்), அம்முடிவை அங்கீகரிக்க முடியாது. நிரந்திர உறுப்பு நாடுகளின் இந்த எதிர்ப்பு அதிகாரத்தை ''வீட்டோ'' (veto) அதிகாரம் என்று அழைப்பர்.

செயல்பாடு: பொதுக்குழுவின் பெரும்பான்மை முடிவு இறுதியானதா? அல்லது பாதுகாப்பு சபையின் வீட்டோ அதிகாரம் இறுதியானதா? என்று கலந்துரையாடுக.

© KTBS NOT TO BE REPUBLISHED

3. பொருளாதாரம் மற்றும் சமூக அமைப்பு

எல்லா உலக நாடுகளும் பொதுவாக எதிர்கொள்ளும் பல பிரச்சனைகள் உள்ளன. நிறம், மொழி, சமயம், எல்லை போன்ற அடிப்படையில் மனித உரிமைகளின் மீறல், பிரச்சனைக்கு முடிவு காணும் பொறுப்பு இவ்வமைப்பிற்கு உள்ளது.

படிப்பறிவின்மை, ஏழ்மை, பசி, ஆதரவற்ற அகதிகளுக்கு இடவசதி, ஆரோக்கியம், பெண்களுக்கு சம உரிமை, குழந்தை பாதுகாப்பு, போதைப்பொருள் கடத்தலை தடுப்பது போன்ற விடயங்களுக்குத் தொடர்பான பரஸ்பர ஒத்துழைப்பு மற்றும் உதவியை பொருளாதாரம் மற்றும் சமூக அமைப்பு அளிக்கின்றது.

4. அனைத்துலக நீதிமன்றம்?

அனைத்துலக நீதிமன்றம் நெதர்லாண்டின் ஹேக் நகரில் உள்ளது. இந்த நீதி மன்றத்தில் 15 நீதிபதிகள் உள்ளனர்.

பாதுகாப்பு சபை மற்றும் பொதுக்குழுவின் உறுப்பினர்கள் இந்த நீதிபதிகளை தேர்ந்தெடுப்பர். சகநாடுகளின் இடையே நடக்கும் விவாதங்களை தீர்த்து வைப்பது அனைத்துலக நீதிமன்றத்தின் வேலையாகும்.

5. தலைமை செயலகம் (secretariat)

நியுயார்க்கின் 'லேக் சக்ஸஸ்' (Lak Success) நகரத்தில் ஐக்கிய நாடுகள் அமைப்பின் செயலகம் உள்ளது.

தலமை செயலகத்தை நிர்வாகம் செய்யும் பொறுப்பு முக்கிய அதிகாரியான பொதுச் செயலாளருக்கு உண்டு. உலக அமைதியை கெடுக்கும் எந்த செய்தியாக இருந்தாலும் அதனை உடனே ஐக்கிய நாடுகள் அமைப்பிற்குத் தெரிவிக்கும் பொறுப்பு பொது செயலாளருக்கு உள்ளது.

NOT TO BE REPUBLISHED @KTBS

ஐக்கிய நாடுகள் அமைப்பின் தலைமை செயலகம்

தற்போதைய ஐக்கிய நாடுகள் அமைப்பின் பொது செயலாளர் அந்தோனியோ குட்டேரஸ் (போர்ச்சுகல்) பொதுக்குழுவால் தேர்ந்தெடுத்த உறுப்பினராவார். பாதுகாப்பு சபையின் ஒப்புதல் பெற்று ஐக்கிய நாடுகள் அமைப்பின் பொது செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

திரு. ஆன்டோனியோ குட்டேரஸ் (போர்ச்சுகல்)

6. அறங்காவலர் சபை :

ஐக்கிய நாடுகள் அமைப்பு உருவான காலத்தில் பதினொரு பிரதேசங்களில் சுயாட்சி நிர்வாகம் இல்லை. இப் பிரதேசங்களின் நலனைக் காப்பாற்றுவதற்காக ஐந்து உறுப்பு நாடுகளின் அமைப்பை ஐக்கிய நாடுகள் அமைப்பு அடிப்படை உறுப்பாக உருவாக்கியது. இந்த அறங்காவலர் சபை 1994 இல் இந்த எல்லா பிரதேசங்களை சுதந்திரம் அடையச் செய்தது.

ஐக்கிய நாடுகள் அமைப்பின் கொடி மற்றும் நிர்வாக மொழி

ஐக்கிய நாடுகள் அமைப்பிற்கு தன்னதே ஆன கொடி உள்ளது. வெளிர் நீலப்பின்னணியைக் கொண்டுள்ள கொடியின் நடுவில் ஐக்கிய நாடுகள் அமைப்பின் சின்னம் உள்ளது. ஒவ்வொரு வருடமும் அக்டோபர் 24ஐ ஐக்கிய நாடுகள் அமைப்பு தினமாகக் கொண்டாடப்படுகிறது.

ஐக்கிய நாடுகள் அமைப்பின் கொடி

ஐக்கிய நாடுகள் அமைப்பில் ஆங்கிலம், ரஷ்யன், ஸ்பானிஷ், சீனம், பிரஞ்ச், அரபிக், போன்ற நிர்வாக மொழிகள் உபயோகத்தில் உள்ளன.

UNO வின் சிறப்பு முகவர்கள் (Specialized Agencies of UNO)

சேவை தரத்தை மேம்படுத்த, ஐக்கிய நாடுகள் அமைப்பின் கீழ் பல நிறுவனங்கள் பணி புரிகின்றன. சில முக்கிய நிறுவனங்கள்.

* ஐக்கிய நாடுகள் கல்வி அறிவியல் பண்பாட்டு வளர்ச்சிக் கழகம்-யுனெஸ்கோ (United Nations Educational, Scientific and Cultural Organisation-UNESCO)
* இதன் தலைமை செயலகம் பிரான்ஸின் பாரிஸில் உள்ளது.
* உணவு மற்றும் விவசாய அமைப்பு : (FAO) (Food and Agricultural Organisation) இதன் தலைமை செயலகம் இத்தாலியின் ரோம் நகரத்தில் உள்ளது.
* உலக ஆரோக்கிய அமைப்பு (World Heath Organization -WHO): இதன் தலைமை செயலகம் ஸ்விட்ஸ்ர்லாந்தின் (Switzerland) ஜெனிவாவில் உள்ளது.

@KTBS NOT TO BE REPUBLISHED

* ஐக்கிய நாடுகள் சர்வதேச குழந்தைகள் நல நிறுவனம் (United Nations International Children's Emergency Fund-UNICEF) : இதன் தலைமை செயலகம் அமெரிக்காவின் நியூயார்க் நகரத்தில் உள்ளது.

ஐக்கிய நாடுகள் அமைப்பின் சாதனைகள் மற்றும் அதனுடைய வரம்புகள்

* **பொருளாதார கொடைகள் :** ஆரோக்கியம், செய்தித் தொடர்பு, போக்குவரத்து, உணவு அறிவியல், கல்வி போன்ற களங்களில் அபார பொருள் உதவி ஐக்கிய நாடுகள் அமைப்பு கொடுத்துள்ளது.

* **சமூக பங்களிப்பு :** ஐக்கிய நாடுகள் அமைப்பு கோடிக்கணக்கான ஆதரவற்றவர்களுக்கு (அகதிகள்) இடவசதிகள் செய்து கொடுத்துள்ளது. சிறு குழந்தைகள், தாய்மார்கள் மற்றும் பலஇன பிரிவு மக்களுக்குக் தேவையானவற்றை நிறைவேற்றி கொடுத்திருப்பது பெருமித்திற்குரியது.

* **மனித உரிமைகளின் உலகளாவிய பிரகடனம்** (Universal declaration of human rights) மனித உரிமைகளின் உலகளாவிய பிரகடனம் ஒரு சாதனையாக உள்ளது. (டிசம்பர் 10, 1948)

* **புதிய தேசங்கள் விடுதலை பெற உதவி :** வெளி நாடுகளின் ஆட்சிக்கு உட்பட்டிருந்த பல நாடுகளின் சுதந்திரத்திற்காக ஐக்கிய நாடுகள் அமைப்பு பாடுபட்டுள்ளது.

* **அமைதி நிலைநாட்டம் :** இரண்டு மகா போர்கள் சந்தித்த உலகத்திற்கு சமாதானம், அமைதியின் நம்பிக்கையைக் கொடுப்பதன் மூலம் மற்றொரு மகா போர் நடைபெறாமல், ஐக்கிய நாடுகள் அவை பாதுகாத்து வருகிறது. 1945 க்கு பிறகு அணு ஆயுதங்கள் பயன்படுத்துவதை ஐக்கிய நாடுகள் அமைப்பு தடை செய்தது, மிகச் சிறந்த சாதனையாகும்.

உலக நாடுகளுக்கிடையே பல போர்கள் நடந்த போதிலும், ஐநா அவற்றைக் கட்டுப்படுத்த, வெற்றிகரமான வழிமுறைகளைக் கையாண்டு வருகிறது.

NOT TO BE REPUBLISHED
© KTBS

ஐ.நா.வின் வரம்புகள் (கட்டுப்பாடுகள்) Limitations of U.N.O.

* சோவியத் ரஷ்யாவின் பனிப்போர் அந்நாட்டின் சிதைவிற்கு பிறகு முடிவுக்கு வந்தது. ஆனால் இச்சூழ்நிலையில் அமெரிக்கா, தானே உலகில் உள்ள எல்லா நாடுகளின் தலைவன் என்று பெரிய மனப்பான்மையைக் காட்டியது. பலதர கலாச்சார வாழ்க்கை முறைகளுக்கு இச்செயல் அச்சுறத்தலை ஏற்படுத்தியுள்ளது.
* ஐநாவிற்கு தான் எடுத்த பல முடிவுகளை நடைமுறைப்படுத்த முடியாது, ஏனெனில் ஐநா தனது உறுப்பு நாடுகளின் இராணுவப்படைகளின் மூலமே உலகில் அமைதியை நிலைநாட்ட முடியும். ஆனால் சில நாடுகள் ஐநாவின் அமைதி காக்கும் நடவடிக்கைகளுக்கு தமது இராணுவப் படைகளை அனுப்ப மறுத்த போது சிக்கல்கள் தொடங்கின. உலக நாடுகளுக்கிடையே பல போர்கள் நடந்த போதிலும், ஐநா அவற்றைக் கட்டுப்படுத்த வெற்றிகரமான பல வழிமுறைகளைக் கையாண்டு வருகிறது.
* நிரந்திர உறுப்பு நாடுகளின் ஒப்புதல் கட்டாயமாக உள்ளது, ஏதாவது ஒரு நிரந்திர நாட்டின் ஒப்புதல் இல்லை என்றால் எந்த முடிவும் எடுக்க இயலாது.

இந்திய மற்றும் ஐக்கிய நாடுகள் அமைப்பு,

1945 இல் ஐக்கிய நாடுகள் அமைப்பின் அரிசியலமைப்பில் கை எழுத்திட்ட நாடுகளில் இந்தியாவும் ஒன்று. இந்தியா சுதந்திரம் அடைந்த பிறகு சர்வதேச விவகாரங்களில் முக்கிய பங்கு அளித்துள்ளது.

* ஆரம்பத்திலிருந்தே இந்தியா நிற வேற்றுமையை எதிர்த்துள்ளது.
* காலனிகளை ஒழிப்பதில் இந்தியாவின் பங்கு முக்கியமானது.
* அணு ஆயுத சோதனை நிறுத்தலை அறிவுறுத்திய நாடுகளில் இந்தியா முதன்மையானது. அதுமட்டுமல்லாமல் இந்தியா நிராயுதக் கொள்கையையும் சர்வதேச அமைதியையும் நிலைநாட்டி வருகிறது.

©KTBS NOT TO BE REPUBLISHED

* நாடுகளுக்கு இடையே போர்கள் நடக்கும் போது அமைதியை காப்பாற்ற, இந்தியா தனது இராணுவப்படையை ஐக்கிய நாடுகள் அமைப்பின் உதவிக்காக அனுப்பி உள்ளது.
* திருமதி விஜயலட்சுமி பண்டித் ஐக்கிய நாடுகள் அமைப்பின் பொதுக்குழுவின் முதல் பெண் தலைவர் ஆவார்.
* பெனகல் நரசிங்கராவ் அனைத்துலக நீதிமன்றத்தின் நீதிபதியாகவும், டாக்டர் நாகேந்திர சிங் முக்கிய நீதிபதியாகவும் மறக்க முடியா சேவையை அளித்துள்ளனர்.
* ஜெனரல் கே.எஸ், திம்மைய்யா மற்றும் பல இந்திய இராணுவ தலைவர்கள் இந்திய ஐக்கிய நாடுகள் அமைப்பின் அமைதியைக் காக்க சர்வதேச படையில் கண்ணியமான சேவை செய்துள்ளனர்.

ஐநா தனது பாதுகாப்பு மன்றத்தின் நிரந்தர உறுப்பினர் நிலையை தன்னலன் கருதி ஐந்து நாடுகளுக்கு மட்டுமே வழங்க முடிவு செய்துள்ளது. இந்தியா போன்ற வளரும் நாடுகள் ஐநாவில் நிரந்தர இடம் பெற்றுக்கொள்ள முடியாதது முரண்பாடாகும்.

@KTBS NOT TO BE REPUBLISHED

பயிற்சிகள்

I. கோடிட்ட இடங்களில் தகுந்த விடையை நிரப்புக:

1. ஐக்கிய நாடுகள் அமைப்பின் தலைமை செயலகம் ________நகரில் உள்ளது.
2. உலக அமைதி மற்றும் பாதுகாப்பு அளிப்பது ஐக்கிய நாடுகள் அமைப்பின் ________ உறுப்பின் முக்கிய செயல்பாடாகும்.
3. பாதுகாப்பு சபையின் மொத்த உறுப்பினர் பலம் ________
4. அனைத்துலக நீதிமன்றம் நெதர்லாந்தில் ________ நகரில் உள்ளது.

II. ஒரு வார்த்தையில் அல்லது ஒரு வாக்கியத்தில் விடை யளிக்க.

5. ஐக்கிய நாடுகள் அமைப்பு எப்போது ஆரம்பமாயிற்று?

6. ஐக்கிய நாடுகள் அமைப்பு நிறுவப்பட முக்கிய காரணமானவர் யார்?

7. உலக பாராளுமன்றம் என்று எதனை அழைப்பர்?

8. பாதுகாப்பு சபையின் நிரந்திர உறுப்பு நாடுகள் யாவை?

9. ஐக்கிய நாடுகள் அமைப்பில் பணியாற்றிய இரண்டு இந்திய மகான்களின் பெயரைக் கூறு?

10. ஐக்கிய நாடுகள் அமைப்பு மனித உரிமை பிரகடனம் செய்ய ஒரு காரணத்தைக் குறிப்பிடுக?

III. இரண்டு அல்லது மூன்று வாக்கியங்களில் விடையளிக்க.

11. ஐக்கிய நாடுகள் அமைப்பின் முக்கிய அடிப்படை நோக்கங்கள் யாவை?

12. ஐக்கிய நாடுகள் அமைப்பின் பாதுகாப்பு சபையின் முக்கிய பணிகளை விவரிக்க?

13. ஐக்கிய நாடுகள் அமைப்பின் நான்கு சாதனைகளைப் பட்டியலிடுக?

14. ஐக்கிய நாடுகளின் சிறப்பு முகவர்களின் (சிறப்பு சேவை கிளைகள்) பெயர்களை எழுதுக?

15. 'வீட்டோ' அதிகாரம் என்றால் என்ன?

16. ஐக்கிய நாடுகள் அமைப்பின் இரண்டு வரம்புகளைக் (கட்டுபாடுகளை) குறிப்பிடுக.

NOT TO BE REPUBLISHED @KTBS

செயல் பாடுகள்

- ஐக்கிய நாடுகள் அமைப்பின் சிறப்பு முகவர் (விஷேச சேவா) அங்கங்களின் சின்னங்களை விவரங்களுடன் சேகரிக்க.
- ஐக்கிய நாடுகள் அமைப்பின் வெவ்வெறு அங்கங்களில் சேவை செய்த இந்தியரின் படங்களை செய்தியுடன் சேகரிக்க.

***

Q6U5A9

பாடம் 26 ஆஸ்திரேலியா

பாட அறிமுகம்

இப்பாடத்தில் ஆஸ்திரேலியா கண்டத்தின் இருப்பிடம் மற்றும் இயற்பியல் அமைப்பு, அதன் இயற்கைப் பிரிவுகள் மற்றும் நதியமைப்பு, தட்ப வெப்ப நிலை, இயற்கை தாவரங்கள், வேளாண்மை, கால்நடை வளர்த்தல், கனிமங்கள் மற்றும் தொழிற்சாலைகள், மக்கள் தொகை வளர்ச்சி, பரப்பு மற்றும் அடர்த்தி அறிமுகப்படுத்தப்படுகிறது.

திறன்கள்

1 உலகத்தில் ஆஸ்திரேலியா கண்டத்தின் இருப்பிடம் அமைப்பு பற்றி அறிந்து கொள்ளுதல்.
2 ஆஸ்திரேலியாவின் மேற்பரப்பு அம்சங்கள் நதியமைப்பு, தட்பவெப்ப நிலை மற்றும் தாவரங்களைப் பற்றி அறிந்துக்கொள்ளுதல்.
3 இக்கண்டத்தில் நடைபெறும் விவசாயம் மற்றும் கால்நடை வளர்த்தலைப் பற்றி அறிதல்.
4 பலவகை கனிமங்கள் மற்றும் கைத்தொழில்களைப் பற்றி அறிமுகம் செய்தல்.
5 மக்கட்தொகை அடர்த்தி, வளர்ச்சி பற்றி அறிந்து கொள்ளுதல்.

NOT TO BE REPUBLISHED ©KTBS

இருப்பிடம், பரப்பு மற்றும் இயற்பியல் அமைப்பு

இருப்பிடம் : ஆஸ்திரேலியா கண்டம் முழுவதும் தெற்கு மற்றும் கிழக்கு அரை கோளத்திலுள்ளது. இது தெற்கே 10^0, 45^0 இலிருந்து 43^0,39^0 தென் அட்ச ரேகை மற்றும் கிழக்கே 113^0,9^0 இலிருந்து 153^0, 39^0 கிழக்கு தீர்க்க ரேகைகளின் நடுவே பரந்துள்ளது. மகர ரேகை ஏறக்குறைய இக்கண்டத்தின் நடுவே கடந்து செல்கிறது.

பரப்பளவு : பரப்பளவு மற்றும் மக்கட் தொகை இரண்டிலும் ஆஸ்திரேலியா உலகிலேயே மிகச்சிறிய கண்டமாகும். டாஸ்மேனியா தீவும் சேர்ந்து இதனுடைய மொத்த பரப்பளவு 76.82 இலட்சம் ச.கி.மீ.கள். இது அமெரிக்க ஐக்கிய நாடுகளை

விட சிறியது மற்றும் இந்தியாவை விட இரண்டு மடங்கு பெரியது. உலகத்தின் ஏழாம் கண்டமான இது தெற்கே 3940 கி.மீ. நீளம் மற்றும் கிழக்கே 4,350 கி.மீ அகலத்தைப் பெற்றுள்ளது. 9310 கி.மீ. கடலோரப் பிரதேசத்தைப் பெற்றுள்ளது.



ஆஸ்திரேலியா - அரசியல் நிலப்படம்

@KTBS NOT TO BE REPUBLISHED

"ஆஸ்திரேலியா" என்ற சொல் தெற்கு என்று பொருள் படும். ஆஸ்டரில்(லேடின்) என்ற சொல்லால் இப்பெயர் வெளிச்சத்திற்கு வந்தது.

மத்திய மற்றும் தென் பசுபிக் பெருங்கடலில் உள்ள சுமார் 10ஆயிரம் தீவுக் கூட்டங்களை 'ஓஷியானியா' என்பர். இதில் ஆஸ்திலேரலியா கண்டம் முக்கியமாகும்.

இயற்பியல் அமைப்பு : ஆஸ்திரேலியா இந்து மகா சமுத்திரம் மற்றும் பசிபிக் பெருங்கடலினிடையே நிலைப்பெற்றுள்ள

தீவுக்கண்டாகும். இக்கண்டத்தின் வடமேற்கு பகுதியில் தைமோர் அராஃபுரா கடல், வடகிழக்கில் டோரெஸ் ஜலசந்தி மற்றும் தென்கிழக்கில் டாஸ்மேனியா சமுத்திரமுள்ளது. தெற்கில் கிரேட் ஆஸ்திரேலியன் பைட் (Great Australion Bight) உள்ளது.

2 இயற்கைப் பிரிவுகள் மற்றும் நதி அமைப்பு

இயற்கைப்பிரிவுகள்: ஆஸ்திரேலியாவின் மொத்த பரப்பளவில், சுமார் 94% பாகம் கடல் மட்டத்திலிருந்து 600 மீட்டர்கள் கீழுள்ளது மற்றும் தட்டையாக உள்ளது. எனவே அதை மிகத்தட்டையான கண்டம் என்று அழைக்கிறோம்.



ஆஸ்திரேலியா (இயற்கை)

அமைப்பின் அடிப்படையில் ஆஸ்திரேலியா கோண்ட்வானா, நிலப்பகுதியின் ஒரு பகுதியாகும் மற்றும் அது மிகவும்

பழமையானதுமாகும். நில அமைப்பின் அடிப்படையில், மூன்று இயற்கை பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

1 கிழக்கு மேட்டு நிலங்கள் *2 மத்திய தாழ்நிலை சமவெளி*

3 மேற்கு பீடபூமி.

> *பதினேழாம் நூற்றாண்டில் ஐரோப்பாவின் ஜேம்ஸ் குக் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்ட இந்த ஆஸ்திரேலியாவை புதிய கண்டமென்பர்.*

1) கிழக்கு மேட்டு நிலங்கள் : இது கண்டத்தின் கிழக்கு பகுதியிலுள்ளது மற்றும் வடக்கில் யோர்க் முனையிலிருந்து தெற்கில் டாஸ்மோனியாவின் பாஸ் ஜலசந்தி வரையிலும் பரந்துள்ளது. இந்த மலைத்தொடர் ஏறக்குறைய ஆஸ்திரேலியாவின் கிழக்கு கடற்கரைக்கு இணையாக அமைந்துள்ளது. கிழக்கு பகுதியில் அதிகமான சரிவும், மேற்குப் பகுதியில் குறைவான சரிவும் பெற்றுள்ளது. முன்பு கிழக்கு கடலோரத்தில் இருந்து நுழைவதற்கு ஒரு வலிமை மிக்க தடுப்பு சுவர் போல திகழ்ந்ததால், இது கிரேட் டிவைடிங்க் ரேன்ஜ் என்று அழைக்கப்பட்டது. இத்தொடர் சௌத்வேல்ஸில் மிக உயரமாகவும் மிகச் சரிவாகவும் உள்ளது. இவற்றை ஆஸ்திரேலியாவின் ஆல்ப்ஸ் மற்றும் நியூ இங்கிலாந்து தொடர் என்று அழைப்பர். உயரமான சிகரங்கள் குளிர்காலத்தில் பனியால் மூடப்பட்டுள்ளன. கொசியுஸ்கோ மலை (2230 மீ) இக்கண்டத்தின் மிக உயரமான சிகரம் ஆகும்.

> *ஆஸ்திரேலியாவின் கிழக்கு எல்லைக்கு வெளியே தெற்கில் கிரேட் பேரியர் ரீஃப் என்னும் பவளப் பாறைகள் (2000 கி.மீ) பரந்துள்ளன.*

2) மத்திய தாழ்நிலங்கள் : வடகிழக்கு கார்பென்டேரியா வளைகுடாவிலிருந்து தெற்கு முர்ரே சமவெளிகள் வரை இச்சமவெளிகள் பரந்துள்ளன. கிழக்கு மேட்டுப் பகுதியிலிருந்து ஐர் ஏரிக்கு அருகே நதிகள் பாய்கின்றன. உலகத்தின் புகழ்பெற்ற ஆர்டீஷியன் ஊற்று நீர் கிணறுகள் இங்குள்ளன.

NOT TO BE REPUBLISHED @KTBS

ஆர்டீஷியன் ஊற்றுகள்

இத்தாழ்நிலங்களை மூன்று பாகங்களாகப் பிரிக்கலாம்:

1. முர்ரே டார்லிங் சமவெளி
2. ஐர் ஏரி சமவெளி
3. கார்பென்டேரியா சமவெளி

முர்ரே நதி

டார்லிங் நதி

முர்ரே மற்றும் டார்லிங் நதி சமவெளிகள் வடக்கிலிலுள்ள ஐர் ஏரியிலிருந்து பிரிந்துள்ளன. தேவையான நீரை நதி தருவதால் இது ஆஸ்திரேலியாவின் வளமான விவசாயப் பகுதியாகும். இதனால் கிழக்கே இருக்கும் ஐர் ஏரி சமவெளி பரந்ததாகவும் குட்டை வடிவத்திலும் (சாஸர்) உள்ளது. இங்குள்ள பல ஏரிகள் உப்பு ஏரிகளாகும். இதன் பெரும்பாலான பகுதி தரிசு நிலமாகும் மற்றும் குறைவான மக்கட் தொகையைப் பெற்றுள்ளன. ப்லின்டர்ஸ் மற்றும் மிச்சேல் நதிகள் பாய்கின்ற கார்பென்டேரியா சமவெளி தட்டையாக உள்ளது. இதை ஐர் நதி சமவெளியிலிருந்து பர்க்லி பீடபூமி பிரிக்கிறது.

NOT TO BE REPUBLISHED KTBS

3 . மேற்கு பீடபூமி : இது கார்பென்டேரியா வளைகுடாவிலிருந்து ஆன்ஸ்லோ, பெர்த் மற்றும் ஆல்பேனியா வரை பரந்துள்ளது. இது ஆஸ்திரேலியாவின் மூன்றில் இரண்டு பகுதியை சூழ்ந்துள்ள பல மேடு பள்ளங்களைப் பெற்றுள்ள மேட்டுநிலங்களாகும். கிரேட் சாண்டி டெஸர்ட், கிப்சன் மற்றும் விக்டோரியா பாலைவானங்களை உள்ளடக்கிய பகுதியாகும் மற்றும் இந்தியாவின் தக்காணப் பீடபூமியை போலவே பழமையானதாகும். ஆங்காங்கே சிறிய தனிக் குன்றுகள் உள்ளன. கண்டத்தின் மத்தியப் பகுதிகளிலுள்ள மெக்டோனல் மற்றும் மஸ்கிரேவ் தொடர்கள் அவற்றில் உயரமானவை.

நதியமைப்பு : அதிக வறட்சி மற்றும் வெப்பத்தின் காரணமாக ஆஸ்திரேலியாவின் பெரும்பாலான பகுதி பாலைவனங்களால் சூழப்பட்டுள்ளது. பெரும்பாலான நதிகள் குட்டையானவை மற்றும் ஏரிகளுக்குள் பாய்வன ஆகும் மற்றும் கடலைச் சேரும் நதிகளைவிட அதிகமானவையாகும். ஆஸ்திரேலியாவின் பெரும்பாலான நதிகள் கிழக்கு மேட்டு நிலங்களில் உற்பத்தியாகி கிழக்கு நோக்கி பாய்கிறது.



ஆஸ்திரேலியா - நதிகள்

NOT TO BE REPUBLISHED @KTBS

முர்ரே ஆஸ்திரேலியாவின் முக்கிய நதியாகும் இது நியு சௌத்வேல்ஸின் தென் கிழக்கில் உள்ள கொசியுஸ்கோ மலைப் பகுதியில் பிறக்கிறது. பிறகு தென் மேற்கே (2590 கி.மி.) பாய்ந்து என்கொளன்டர் விரிகுடாவைச் சேருகிறது. டார்லிங், லாச்லன், முரம்பீச்கள் இவற்றின் துணை நதிகளாகும். வருடத்தின் சில காலங்களில் மட்டும், இந்த நதியின் மூலம் நீர் வழிச் செலவு சாத்தியம்.

கிழக்கு நோக்கிப் பாயும் நதிகள் சிறியவை மற்றும் வேகமாகப் பாய்கின்றவை. அவை ஹன்டர், கிழக்கு ஃபிலிட்ஸ்ராய் மற்றும் பெலியான்டோ. வட கிழக்கே மிட்சல், கில்பர்ட் மற்றும் ஃபிலின்டர்ஸ், வட மேற்கே பாய்ந்து கார்பென்டேரியா வளைகுடாவிற்குள் பாய்கிறது. டாலி விக்டோரியா, மேற்கு ஃபிலிட்ஸ்ராய் மற்றும் பிற நதிகள் வடக்கேயும் வட மேற்கேயும் பாய்ந்து திமோர் கடலை சேருகிறது.

கூப்பர் கிரிக், (Cooper Creek), டையமண்ட்டினா மற்றும் முக்கும்பா நதிகள் ஐர் ஏரி வந்தடைவனவாகும். மார்ச்சிஸன், ஏவன், பிலாக் வுட் போன்ற நதிகள் இந்துமகாக் கடலை சேரும்.

ஆஸ்திரேலியாவில் சில ஏரிகள் உள்ளன. அவை சிறியவை மற்றும் உப்பு நீர் ஏரிகளாகும். எ.கா.ஐர், டாரென்ஸ், கையரட்னர் முதலியவை. இவற்றில் ஐர் ஏரி மிகப் பெரியது மற்றும் கண்டத்தின் தாழ்பகுதியில் உள்ளது. இதன் மேற்கே உலகத்தின் மிகப்பெரிய ஒற்றைக்கல் பாறையான அயர்ஸ் கற்பாறை உள்ளது.



அயர்ஸ் (கற்பாறை)

ஐர் ஏரி

©KTBS NOT TO BE REPUBLISHED

தட்ப வெப்ப நிலையும் இயற்கைத் தாவரங்களும்

தட்டவெப்பநிலை : ஆஸ்திரேலியாவின் மையப்பகுதியில் மகர ரேகை பாய்கிறது. எனவே ஆஸ்திரேலியாவின் பெரும்பாலான பகுதியில் வருடம் முழுவதும் அதிகமான வெப்பம் உள்ளது. மேற்கு கடற்கரையில் குளிர் கடல் நீரோட்டம் வீசுகின்றது. இதனால் ஆஸ்திரேலியாவின் மேற்குப்பகுதியில் பாலைவன மற்றும் வறட்சி மிகுந்த தட்ப வெப்ப நிலை உள்ளது. வடக்கே மான்சூன் மற்றும் தென் கடற்கரைப் பிரதேசத்தில் மெடிட்ட ரேனியன் மாதிரி தட்பவெப்பம் நிலவுகிறது.

குளிர்காலம் : ஆஸ்திரேலியா கண்டம் தென் அரைக்கோளத்திலிருப்பதால் பருவங்கள் வட அரைக் கோளத்திற்கு எதிரான காலத்தில் உண்டாகிறது. அதாவது வட அரைக் கோளத்தில் கோடைக்காலம் நிலவும் போது இங்கு குளிர்காலம் நிலவும். எ.கா. ஜுனிலிருந்து ஆகஸ்ட் வரை வெப்பம் குறைவு. அது வடக்கிலிருந்து தெற்குகே குறைகிறது. ஆனால் அழுத்தம் அதிகமாகிறது. காற்றுகள் உள்நாட்டிலிருந்து கடல் நோக்கி வீசுகின்றன. அவை அதிக மழையைக் கொண்டு வருவதில்லை. வறட்சியும் வெப்பமும் கூடிய தட்ப வெப்ப நிலை உள்ளது. டாஸ்மேனியாவில் வித்யாசமான தட்ப வெப்ப நிலை காணப்படுகிறது.

கோடைக்காலம் : இது டிசம்பரிலிருந்து பிப்ரவரி வரை நிலவுகிறது. இக்காலத்தில் வெப்பம் அதிகம். கண்டத்தின் கிழக்கு பகுதியை விட மேற்கு பாலைவனங்களில் அதிகபட்ச வெப்பளவு உள்ளது. தெற்கு, தென் கிழக்கு பகுதிகள் மற்றும் டாஸ்மேனியா தீவுகளில் சாதாரண வெப்பநிலை உள்ளது. உள்நாட்டில் குறைவான அழுத்தமுள்ளது. சமுத்திரத்திலிருந்து காற்றுகள் வீசும் போது சிறிதளவு மழையைக் கொண்டு வருகிறது. கண்டத்தின் தெற்கு மற்றும் தென் கிழக்குப் பகுதிகளில் மழை அதிகம்.

ஆஸ்திரேவியாவின் சூறாவளி காற்றை ‘வில்லி வில்லிஸ் (Willy Willies) என்று அழைப்பர்.

சாதாரணமாக, ஆஸ்திரேலியாவின் மழை பருவ மழையாக (Mansoon type) உள்ளது. மற்றும் இது நேரம் மற்றும் இடத்தின் அடிப்படையில் நம்பத்தகாத தென்கிழக்கு, மழையாகும்.

©KTBS NOT TO BE REPUBLISHED

வடக்கு மற்றும் தென்மேற்கு கடலோரப் பகுதிகளில் வருடாந்திர மழை 75 செ.மீ. ஆகும். இது ஆஸ்திரேவியாவின் மிகப்பெரிய உள்நாட்டு பாலைவனம் ஆகும் மற்றும் அங்கு மழைப்பொழிவு 25 cm ஐ விட குறைவாக உள்ளது.

4. இயற்கைத் தாவரங்களும் விலங்குகளும்

இயற்கை தாவரங்கள் : ஆஸ்திரேலியாவில் குறைந்தளவு அடர்ந்த காடுகள் இருப்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும். கண்டத்தின் பெரும்பாலான பகுதி புல்வெளிகள், குறுஞ்செடிகள் மற்றும் குறைவான மரங்களாலும் சில தாவர வகைகளாலும் ஆனது. இது கண்டத்தின் தட்பவெப்ப நிலையை பிரதிபலிக்கிறது. ஆஸ்திரேலியா கண்டத்தின் வெவ்வேறு இயற்கைத் தாவரங்கள் கீழ் வருமாறு.



ஆஸ்திரேலியாவின் இயற்கை தாவரங்கள்

NOT TO BE REPUBLISHED @KTBS

1) வெப்ப மண்டலக் காடுகள் : அதிக மழை பெய்யும் வடக்கு மற்றும் வடகிழக்கு கடற்கரைப் பிரதேசத்தில் இப்படிப்பட்ட காடுகளுள்ளன. ஆங்காங்கு சிதறப்பட்டுள்ளது போல காணப்படும் மிகச் சிறிய நிலப்பரப்பை இது உள்ளடக்கும். இங்கு வளரும் முக்கிய மரங்கள் ஆஷ், சிடார், லீச் மற்றும் பாம் ஆகும்.

2) மித வெப்ப மண்டல காடுகள் : இத்தகைய காடுகள் மலைகள் மற்றும் குன்றுப்பகுதிகளில் காணப்படுகின்றன. எனவே இவற்றை குன்று காடுகள் என்றும் அழைப்பர். அவை அதிகமாக குவீன்ஸ்லான்ட், நியூ சௌத்வேல்ஸ், விக்டோரியா மற்றும் டாஸ்மேனியாவில் பரந்துள்ளன. அங்குள்ள முக்கிய மரங்கள் நீலகிரி, பைன் முதலியன. இது தைலம் மற்றும் காகித தயாரிப்பிற்கு அதிகமாக பயன்படுகிறது.

3) புல்வெளிகள் : ஆஸ்திரேலியா புல்வெளிகளில் இரண்டு வகைகள் உள்ளன:

(i) வெப்ப மண்டல சமவெளிகள் (சவன்னா);

(ii) மித தட்ப வெப்ப சமவெளிகள் அல்லது டௌன்ஸ்.

முதலாவது, கிழக்கு மேட்டு நிலங்களிலிருந்து மேற்கு பகுதிகளான குவீன்ஸ்லேன்ட், வட ஆஸ்திரேலியாவின் மத்திய மற்றும் மேற்கு ஆஸ்திரேலியாவின் வடப் பகுதியாகும். இவை 'சாவன்னா புல்லிவெளிகள், என்றழைக்கப்படுகின்றன. இரண்டாம் வகை புல்வெளிகள் முர்ரே டார்லிங்க் சமவெளிகளில் பரந்துள்ளன. இது கால்நடை வளர்த்தலுக்கு அதிகமாகப் பயன்படுகிறது. மிததட்ப வெப்ப புல்வெளிகளில் புதர்புல் (ஆடுகள் வளர்த்தலுக்கு), மிச்செல் மற்றும் அஸ்ட்ரீபல் புல்வகை காணப்படுகின்றன.

NOT TO BE REPUBLISHED

சவண்ணா புல்வெளி

டௌன்ஸ் புல்வெளி

4) புதர்நிலத் தாவரங்கள் : இது மேற்கு ஆஸ்திரேலியாவின் தெற்கு மற்றும் மேற்குப் பகுதிகளிலும், தென் ஆஸ்திரேலியா மற்றும் குவீன்ஸ்லேண்ட்டின் சில பகுதிகளிலும் காணப்படுகின்றன. குறைவான மழையினால் குறுஞ்செடிகள் வளர்கின்றன. ஆங்காங்கு நீலகிரி மரங்கள், கற்றாழை மற்றும் முட்செடிகள் அதிகமாக வளர்கின்றன.

ஆஷ்

சிடார்

தால்

நீலகிரி

5) பாலைவனத் தாவரங்கள் : மேற்கு ஆஸ்திரேலியாவின் மத்திய மற்றும் கிழக்குப் பகுதிகளில் இத்தாவரங்கள் பரவியுள்ளன. இங்கு கள்ளிச் செடிகள், சால்ட்புஷ், எளிமையான புல் மற்றும் வெவ்வேறு வகையான முட்செடிகள் வளர்கின்றன. அவை வறண்ட பாலைவனத் தட்பவெப்பத்தை தாங்கக்கூடிய சிறந்த குணநலன்களைப் பெற்றுள்ளன.

6) விலங்குகள்: ஆஸ்திரேலியாவில் வேறெங்கும் காணமுடியாத அபூர்வ விலங்குகளும் பறவைகளும் உள்ளன. பிலாடிபஸ் என்னும் நீர் வாழ் விலங்கு தன் குட்டிகளுக்குப் பாலூட்டுகிறது. உடல் முழுவதும் ஒட்டுத்துண்டுகளிடப்பட்டுள்ளது போன்ற தோல் போர்வையைப் பெற்றுள்ளது. இவை தமது குட்டிகளை வயிற்றுக்கு வெளியில் உள்ள பையில் வளர்க்கின்றன. எமு ஆஸ்திரேலியாவின் மிகப் பெரிய பறவை,லயர் என்பது மயிலைப் போன்ற அழகான பறவையாகும். குயில் போலக் கூவும் கூக்கபுரா, கருமைநிற அன்னம் முதலான பறவைகளும் இங்கு உள்ளன. கங்காரு தேசிய விலங்காகும். டிங்கோ, ஓநாயைப் போல காணப்படும் காட்டு நாயாகும். வால்லபி ஈக்களை உண்ணும் எகிட்னா, மரம் ஏறக்கூடிய சிறிய உருவமுள்ள கோலா ஊர்வன விலங்குகள் உள்ளன. விலங்குகள் மற்றும் விஷப் பாம்புகள் பொதுவாகக் காணப்படுகின்றன.

கங்காரு

வல்லபி

டிங்கோ

கோலா கரடி

எமு

கறுப்பு அன்னம்

ஆஸ்திரேலியா 'அரிய விலங்கு மற்றும் பறவைகளின் நாடு' ஆகும். இங்கு காணப்படும் சுமார் 60% விலங்குகளும் பறவைகளும் உலகில் வேறெங்கும் இல்லை.

NOT TO BE REPUBLISHED

விவசாயமும் கால்நடை வளர்த்தலும் :

வேளாண்மை : ஆஸ்திரேலியாவில் நடைபெறும் தொழில்களில் வேளாண்மையும் ஒன்று. அங்குள்ள பயிர் நிலங்கள் குறைவு. இக்கண்டத்தின் பரப்பளவில் இது மட்டுமே வேளாண்மைக்கு உகந்தது. கடலோரங்களிலும் நதிக்கரைகளிலும் காணப்படுகின்றன. மொத்த மக்கட் தொகையில் 44% மட்டும் வேளாண்மையில் ஈடுபடுகின்றனர். வெள்ளையர்கள் இத்தொழிலில் ஈடுப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

குறைவான மற்றும் அகால மழைப் பங்கீட்டினால் செழிப்பற்ற மணல் மண், விவசாயப் பகுதியின் தகுதியற்ற தன்மை மற்றும் நீர்பாசன குறைபாடுகளினால் இங்கு வேளாண் நிலங்கள் குறைவு. ஆயினும் ஆஸ்திரேலியா தனக்குத் தேவையான உணவுப் பொருட்களின் தயாரிப்பில் தன்னிறைவைப் பெற்றுள்ளது.

ஆஸ்திரேலியா சிறப்பான வேளாண் முறைகளைக் கடைப்பிடிக்கிறது. வயல்பகுதிகளின் பரப்பு அதிகம் மற்றும் நவீன விவசாய முறைகளைக் கடைபிடிக்கிறார்கள். ஏற்றுமதிக்காக வணிகப் பயிர்களை விளைவிப்பதற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது மற்றும் பலவகை பயிர்களும் விளைவிக்கப்படுகின்றன.எ.கா. கோதுமை, கரும்பு, பருத்தி, புகையிலை, மக்காச்சோளம், பலவகை பழங்கள் மற்றும் காய்கறிகள்.

©KTBS NOT TO BE REPUBLISHED

கோதுமை

கரும்பு

புகையிலை

பருத்தி

கொய்யா

கோதுமை : இது ஆஸ்திரேலியாவின் முக்கிய உணவுப் பயிராகும். இது தென் ஆஸ்திரேலியா, குவீன்ஸ்லேன்ட், நியூசௌத்வேல்ஸ் மற்றும் விக்டோரியாவில் விளைவிக்கப் படுகிறது. முர்ரே டார்லிங்க் சமவெளி பிரதேசம் கோதுமைக்குப் புகழ்பெற்றது. ஆஸ்திரேலியா தனது கோதுமை விளைச்சலில், 70% ஏற்றுமதி செய்கிறது.

மக்காச்சோளம் : மக்காச்சோளம் மற்றொரு உணவுப் பயிராகும். இதை கால்நடைகளின் தீவன தயாரிப்பிற்காக விளைவிக்கிறார்கள். இது குவீன்ஸ்லேன்ட் மற்றும் நியூ சௌத்வேல்ஸ்களில் அதிகமாக விளைவிக்கப்படுகிறது. முர்ரே டார்லிங் சமவெளியில் சிறிய அளவில் நெல் பயிரிடப் படுகிறது.

கரும்பு : இது ஆஸ்திரேலியாவின் முக்கிய வணிகப் பயிராகும்.இதை அதிகமாக கிழக்கு கடற்கரைப் பகுதிகளிலிருந்து குவீன்ஸ்லேன்ட் வரையுள்ள பகுதிகள் வரை விளைவிக்கப் படுகிறது. பல வகை பழங்கள் மற்றும் காய்கறிகள் டாஸ்மேனியா, விக்டோரியா மற்றும் நியூ சௌத்வேல்ஸில் விளைவிக்கப்படுகின்றன. ஆப்பிள், திராட்சை, கொய்யா, ஆரஞ்சு ஆகியவை அதிக அளவில் பயிரிட்ப்படுகின்றன.

கால்நடை வளர்த்தல் : இது ஆஸ்திரேலியாவின் முக்கியத் தொழிலாகும். ஆகையால் ஆஸ்திரேலியா 'ஆயர் நாடு' (pastoral country) என்று அழைக்கப்படுகின்றது. பால் உற்பத்தி, மாமிசம்,

©KTBS NOT TO BE REPUBLISHED

உரோமம், மற்றும் தோல் பொருட்களுக்காக கால்நடைகள் செம்மறி ஆடு, மாடு கன்றுகள் வளர்க்கப்படுகின்றன.

ஆடு வளர்ப்பு

கால் நடை வளர்ப்பு : இது ஆஸ்திரேலியாவின் மிக முக்கியமான பொருளாதார தொழிலாகும். அதிகளவு ஆடுகளை வளர்ப்பதால் இக்கண்டம் கம்பளி தயாரிப்பு மற்றும் தோல் ஏற்றுமதி செய்வதிலும் முதன்மையாக உள்ளது. பரந்த புல்வெளிகள், ஆர்டீசியன் கிணறுகளிலிருந்து கிடைக்கும் நீர், குளிர்ந்த மற்றும் வறண்ட தட்ப வெப்பம், நவீன முறையில் கால்நடைகளை வளர்த்தல், பரந்த சந்தை வசதிகள் போன்றவற்றால் செம்மறி ஆட்டு வளர்ப்பு ஊக்கம் பெற்றுள்ளது.

இங்கு வளர்க்கப்படும் செம்மறி ஆடுகளில் 75% மெரினோ வகையைச் சேர்ந்தவை. அவை தரமான கம்பளியை அளிக்கின்றன. செம்மறி ஆடு வளர்த்தலுக்கு பயன்படும் பகுதிகளை வளர்ப்பு நிலையங்கள் (stations) என்பர்.

கால்நடைகளை முக்கியமாக மாமிசம் மற்றும் பால் உற்பத்திக்காக வளர்க்கப்படுகின்றன. சவன்னா பிரதேசத்தில் மாட்டிறைச்சிக்காகவும், மித வெப்ப மண்டலத்தின் டௌன்ஸ் புல்வெளிப் பகுதிகளில் பால் உற்பத்தி பொருட்களுக்காகவும் கால்நடைகள் வளர்க்கப்படுகின்றன.

கனிமங்களும் தொழிற்சாலைகளும்

கனிமங்கள் : ஆஸ்திரேலியாவில் அதிகளவு கனிமச் செல்வம் உள்ளது. இரும்புத்தாது, பாக்சைட்(அலுமினியம் தாது), ஈயம், துத்தநாகம், தாமிரம், வன்வெள்ளி (nickel),

© KTBS NOT TO BE REPUBLISHED

தகரம் மற்றும் யுரேனியம் முக்கிய கனிமங்களாகும். மேலும் ஆற்றல் மூலங்களான நிலக்கரி பெட்ரோலியம் மற்றும் இயற்கை வளங்கள் கிடைக்கப்பெறுகின்றன. இக்கனிமங்களில் பல ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

ஆஸ்திரேலியா ஒரு முக்கிய இரும்புத் தாது உற்பத்தி செய்யும் நாடாகும். அதிகளவு இரும்புத்தாது ஜப்பானுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

உலகத்திலேயே அதிக பாக்ஸைட் புதையல் ஆஸ்திரேலியாவில் மட்டுமே உள்ளது. மேற்கு ஆஸ்திரேலியாவின் கல்கூர்லி மற்றும் கூலிகார்டி சிறந்த தங்கம் உற்பத்தி மையங்களாகும். விக்டோரியா, நியூசௌத்வேல்ஸ் மற்றும் குவீன்ஸ்லேண்டின் சில பகுதிகளிலும் தங்கம் கிடைக்கிறது.

நியூ சௌத்வேல்ஸில் அதிகமாக தாமிரம் உற்பத்தி செய்யப்படுகிறது. அதுபோல கார்பென்டேரியா வளைகுடா பிரதேசம் மாங்கனீஸ் உற்பத்தியில் முதன்மையானது. ஆஸ்திரேலியா அதிகளவு யூரேனியம் புதையலைப் பெற்றுள்ளது. அது வட பிரதேசம்(60%) மேற்கு ஆஸ்திரேலியா மற்றும் தென் ஆஸ்திரேலியாவில் கிடைக்கிறது.

©KTBS NOT TO BE REPUBLISHED

தொழிற்சாலைகள் : ஆஸ்திரேலியா, வெவ்வேறு தொழில் வளர்ச்சிகளில் முக்கிய இடத்தைத் தற்போது பெற்றுள்ளது. கனிமச் செல்வம், வேளாண்மை வளர்ச்சி, விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சி, அயல்நாட்டவரின் பண முதலீடு மற்றும் பெரிய சந்தைகள் தொழில் வளர்ச்சிக்கு உதவி செய்கின்றன. தொடக்கத்திலிருந்தே அயல்நாட்டவரின் உதவியை ஆஸ்திரேலியா சார்ந்துள்ளது. அதிலும் ஜப்பானியரின் கொடை அபாரம். முக்கிய தொழிற்சாலைகள் மற்றும் உற்பத்தி மையங்கள் கீழ்வருமாறு.

- இரும்பு மற்றும் எஃகு
- தானியங்கி வாகனம்
- கப்பல் கட்டுதல்
- மின் இயந்திரங்கள்
- ஜவுளி
- காகிதம், அட்டை மற்றும் மரக்கூழ்
- எண்ணெய் சுத்திகரிப்பு

சிட்னி, தொழிற்சாலை நகரம்

விமானம் கட்டுதல் (சிட்னி, மெல்பர்ன்) மாவு மில், மீன் மற்றும் பழப்பதனிடல், வேதிப் பொருட்களைத் தயாரித்தல் முதலியவை மற்ற தொழில்களாகும்.

மக்கட்தொகை

வளர்ச்சி : ஆஸ்திரேலியா பரப்பளவில் மட்டுமல்ல மக்கட் தொகையிலும் சிறியது. இதன் மொத்த மக்கட் தொகை 20.0 மில்லியன் (2012).இது உலகத்தின் மொத்த மக்கட்தொகையில் 0.31% மட்டுமே ஆகும். இக்கண்டத்தின் மக்கட்தொகை 1860ல் 1.15 மில்லியனாக இருந்தது. 1960ல் 10 மில்லியனாகவும் 1980 ல் 14.8 மில்லியனாகவும், கடந்த நூற்றாண்டை விட இந்நூற்றாண்டில் மக்கள் தொகை பெருகி உள்ளது குறிப்பிடத்தக்கது.

பங்கீடு : ஆஸ்திரேலியாவின் மக்கட்தொகைப் பங்கீட்டில் குறைவான மற்றும் ஒழுங்கற்ற நிலைமை காணப்படுகிறது. கண்டத்தின் உள்நாட்டு பகுதிகள் பலவற்றில் மக்களேயில்லை. நியூ சௌத்வேல்ஸ் ($\frac{1}{3}$) மக்கட்தொகை உள்ள மாநிலமாகும். விக்டோரியா இரண்டாம் ($\frac{1}{4}$)நிலையில் உள்ளது. குவீன்ஸ்லேண்ட், தென் ஆஸ்திரேலியா மற்றும் டாஸ்மேனியா பிறகு வருகின்றன. வட பிரதேசத்தில் மிகக் குறைந்த மக்கட் தொகையுள்ளது. மக்கட் தொகையில் 50% விட அதிகமான மக்கட் தொகை பின்வரும் ஆறு நகரங்களில் உள்ளன. அவை சிட்னி, மெல்பர்ன், பிரிஸ்பேன், அடிலெய்ட், பெர்த் மற்றும் நியுகியாசல் ஆகும்.

©KTBS NOT TO BE REPUBLISHED

மக்களடர்த்தி : உலகின் மிகக் குறைந்த மக்களடர்த்தியுள்ள நாடுகளில் ஆஸ்திரேலியாவும் ஒன்று. இதன் சராசரி மக்களடர்த்தி ஒவ்வொரு சதுர கிலோமீட்டருக்கு மூன்று மக்கள் மட்டுமே ஆகும். இது ஒவ்வொரு பிரதேசத்திலும் மாறுபடுகிறது. எல்லா நகரப் பிரதேசங்களில், தலைநகரத்தில் மற்றும் தொழிற்சாலை மையங்களில் மக்களடர்த்தி அதிகம். எ.கா. விக்டோரியா, நியூசௌத்வேல்ஸ் டாஸ்மேனியா, குவீன்ஸ்லேன்ட் முதலியன. இக் கண்டத்தின் தென் கிழக்குப் பகுதிகளில் மக்களடர்த்தி இடைநிலையில் உள்ளது. ஆனால் 80% பாலைவனங்கள் மற்றும் பகுதி பாலைவனங்கள் உள்ளன அதில் மக்களடர்த்தி மிகக்குறைவு. ஆஸ்திரேலியாவின் கிராமப்புற மக்கட்தொகையைவிட (15%) நகர மக்கட் தொகை(85%)அதிகம்.



ஆஸ்திரேலியா மக்கள் தொகை அடர்த்தி

@KTBS NOT TO BE REPUBLISHED

புதிய சொற்கள்

தீவுக்கண்டம், கோன்ட்வானா, தட்டை வடிவம், ஒற்றைக்கல் பாறை, பவள பாறை திட்டு, கங்காரு, லயர், டிங்கோ, கூக்கபுரா, வல்லபி, எகிட்னா கோலா மற்றும் மக்கள் அடர்த்தி.

பயிற்சிகள்

I. விடுப்பட்ட இடங்களை சரியான சொற்களால்நிரப்புக.

1. முர்ரே மற்றும் டார்லிங் நதி சமவெளிகள் வடக்கிலுள்ள ________ ஏரியிலிருந்து பிரிந்துள்ளது.
2. ஆஸ்திரேலியாவின் சூறாவளி காற்றை ________ என்று அழைப்பர்.
3. ஆஸ்திரேலியாவின் வெப்ப மண்டல புல்வெளிகளை ________ புல்வெளிகள் என்று அழைப்பார்.
4. ஆஸ்திரேலியாவின் மிகப் பெரிய பறவை ________ ஆகும்.
5. ஆஸ்திரேலியாவின் நீர் வாழ் பாலூட்டும் விலங்கு ________ ஆகும்.

II. இரண்டு அல்லது மூன்று வாக்கியங்களில் விடையளிக்கவும்.

6. ஆஸ்திரேலியா மிகத்தட்டையான கண்டம் என்று ஏன் அழைக்கப்படுகிறது?
7. ஆஸ்திரேலியா கண்டத்தின் இருப்பிடம் மற்றும் பரப்பளவைக் குறிப்பிடவும்?
8. ஆஸ்திரேலியாவின் முக்கிய இயற்கைப் பிரிவுகள் யாவை?
9. ஆஸ்திரேலியாவின் நதியமைப்பைப் பற்றிக் கூறவும்.
10. ஆஸ்திரேலியாவின் முக்கியப் பயிர்கள் யாவை?
11. ஆஸ்திரேலியா கண்டத்தின் முக்கிய கனிமங்கள் யாவை?
12. ஆஸ்திரேலியாவின் முக்கிய தொழிற்சாலைகளைக் குறிப்பிடவும்

@KTBS NOT TO BE REPUBLISHED

13. ஆஸ்திரேலியாவிலிருந்து ஏற்றுமதியாகும் பொருட்களைக் குறிப்பிடவும்.

14. ஆஸ்திரேலியாவில் மக்கட் தொகை குறைவாக உள்ளது. ஏன்?

15. ஆஸ்திரேலியாவின் புல்வெளிகளைக் குறிப்பிடவும்.

செயல்பாடு

- அட்லஸ் புத்தகத்தின் உதவியுடன் ஆஸ்திரேலியாவின் முக்கிய மலைகள் நதிகள், மற்றும் ஏரிகளைவரைப்படத்தில் குறிப்பிடவும்.
- நீங்கள் வசிக்கும் இடத்தின் அக்கம் பக்கத்து இடங்களைக் கவனிக்கவும். அங்குள்ள பயிர்கள், தாவரங்கள், விலங்குகள் பறவைகள், குன்றுகளைப் பட்டியலிடவும்.

@KTBS NOT TO BE REPUBLISHED

***

பாடம் 27	அண்டார்டிகா

I8S3Z1

பாட அறிமுகம்

இப்பாடத்தில் அண்டார்டிகா கண்டத்தின் இருப்பிடம், பரப்பளவு மற்றும் இயற்பியல் அமைப்பு மேற்பரப்பு அம்சங்கள் இயற்கை தாவரங்கள் மற்றும் விலங்கு செல்வம், கண்டுபிடிப்புகள், அண்டார்டிகா ஒப்பந்தம் மற்றும் முக்கிய ஆராய்ச்சி கூடங்களைப் பற்றி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

திறன்கள்

1 அண்டார்டிகா கண்டத்தின் இருப்பிடம், பரப்பளவு, நிலவியல் அமைப்புகளைப் பற்றி அறிந்து கொள்ளுதல்.
2. அண்டார்டிகா கண்டத்தின் மேற்பரப்பு அம்சங்கள் நிலம் மற்றும் நீர்பரப்புகளைப் பற்றி அறிதல்.
3. இயற்கை தாவரங்கள் மற்றும் விலங்கினங்களைப் பற்றி அறிதல்
4. அண்டார்டிகாகண்டத்தின்கண்டுபிடிப்பு, ஒப்பந்தம் மற்றும் ஆராய்ச்சி கூடங்களைப் பற்றி அறிதல்

NOT TO BE REPUBLISHED @KTBS

இருப்பிடம், பரப்பளவு மற்றும் நிலவியல் அமைப்பு

இருப்பிடம் : அண்டார்டிகா தென்துருவத்தை சுற்றிலும் பரந்துள்ள கண்டமாகும். அண்டார்டிகா வட்டத்தின் அல்லது $66^{o}30'$ தென் அட்சரேகையின் இடையே பரந்துள்ள கண்டமாகும். வட துருவத்தில் இருக்கும் ஆர்ட்டிக் பெருங்கடலுக்கு எதிரே இருப்பது இக்கண்டத்தின் தனிச்சிறப்பாகும்.

பரப்பளவு : அண்டார்டிகா உலகத்திலேயே ஐந்தாம் பெரிய கண்டமாகும். அதனுடைய மொத்த பரப்பளவு 14.2 மில்லியன் சதுர கி.மீ களாகும். இது இந்திய மற்றும் சீன நாடுகளின் பரப்பளவுகளை விடப் பெரியது. அமெரிக்க ஐக்கிய நாடுகளின் பரப்பளவில் ஒன்றரை மடங்கு உள்ளது.

நிலவியல் அமைப்பு : அண்டார்க்டிகா கண்டம் நீர்ப்பரப்பினால் சூழப்பட்டுள்ளது. இந்த நீர்ப்பரப்பை தென்கடல் என்றே அழைக்கிறார்கள். ஆனால் இது தனியான நீர்ப்பரப்பல்ல. மாறாக இது இந்து மகா சமுத்திரம் மற்றும் பசிபிக் பெருங்கடல் ஒருங்கிணையும் பகுதியாகும். இலத்தீன் அமெரிக்காவின் தென் நுனியில் உள்ள கேப்ஹார்ன் இக்கண்டத்தின் அருகேயுள்ள நிலப்பகுதியாகும். இது 990 கி.மீ தொலைவில் உள்ளது. இக்கண்டத்தின் கிழக்கே இந்து மகாசமுத்திரம், மேற்கே பசிபிக் பெருங்கடல்கள் உள்ளன.



©KTBS NOT TO BE REPUBLISHED

அண்டார்க்டிகா கண்டம்

மேற்பரப்பு அம்சங்கள்

அண்டார்க்டிக் கண்டத்தின் 98சதவீதம் பனியால் சூழப்பட்டுள்ளது. இதன்மேற்பரப்பு அம்சங்கள் பெரும்பாலும் பனித்தகடுகளினால் சூழப்பட்டுள்ளது. உயரமான மலைச் சிகரங்கள் மற்றும் பீடபூமிகள் மட்டுமே இங்கு காணப்படுகின்றன.

பனிக்கட்டிகளின் கவசம் சுமார் 2,200 மீட்டர்களை விட அதிக திண்மமாக காணப்படுவதால் எங்கும் வெண்மையாகவே காணப்படுகிறது. எனவே இக்கண்டம் வெண்மைக்கண்டம்', 'பனிப்பாலைவனம்' என்றும், மிகவும் குளிர்ச்சியாக இருப்பதால் 'குளிர்ச்சியான கண்டம்' என்றும் அழைக்கப்படுகிறது.

அண்டார்க்டிகா கண்டத்தில் மலைகள், பீடபூமி, பள்ளத் தாக்குகள் மற்றும் பாறை இடுக்குகள் போன்ற நிலப்பரப்புகள் உள்ளன. கடல் மட்டத்தில் இருந்து சராசரி 2,300 மீட்டர் உயரத்தில் உள்ள அண்டார்க்டிகா, பூமியின் உயரமான கண்டமாகும். டிரான்ஸ், அண்டார்டிக் மலைத் தொடர்கள் இக்கண்டத்தை இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கின்றன. (1) கிழக்கு அண்டார்க்டிகா மற்றும் (2) மேற்கு அண்டார்க்டிகா.

@KTBS NOT TO BE REPUBLISHED

பனிப்பாறை குன்று (நீர்க்கல்)

1) கிழக்கு அண்டார்க்டிகா : கிழக்கு அண்டார்க்டிகா தென் அட்லாண்டிக் பெருங்கடல் மற்றும் இந்து மகா சமுத்திரங்களை நோக்கியபடி உள்ளது. இது இக்கண்டத்தின் அரை பாகத்தை விட அதிக பகுதியை சூழ்ந்துள்ளதால், இதை 'கிரேட்டர் அண்டார்டிக்' என்பர். இதன் கடற்கரைப் பகுதியில் மலைகள், பள்ளத்தாக்குகள் மற்றும் பனிநதிகள் உள்ளன. இப்பகுதியின் மையப்பகுதி பீடபூமியாகும். அங்கு தென்துருவம் உள்ளது.

2) மேற்கு அண்டார்க்டிகா : பசுபிக் அண்டார்க்டிகா பசிபிக் கடலை நோக்கியபடி உள்ளது. இதன் பெரும்பாலான பகுதி, கடல் மட்டத்தை விட கீழுள்ளது. இந்நிலவியல் பகுதியின் அண்டார்க்டிக் தீபகற்பப் பகுதி, மலைகளாலும், அதனுடைய 's' வடிவ முனை, தென் அமெரிக்காவை நோக்கி சுட்டிக் காட்டுகிற படியும் உள்ளது. இதற்கு அருகில் பல தீவுகள் உள்ளன. அது மட்டும் அல்லாமல் மலைசிகரங்களும் எரிமலைகளும் உள்ளன. இப்பகுதியின் எல்ஸ்வார் மலைத் தொடர்கள் இருக்கும் வின்சன் மாசிப் (5140 மீ) சிகரம் அண்டார்க்டிக் கண்டத்திலேயே மிகப்பெரியது. ரோஸ் தீவில் இருக்கும் மௌன்ட் எரெபஸ் என்பது அண்டார்க்டிகா கண்டத்தின் மிக முக்கிய ஆற்றல் வாய்ந்த எரிமலையாகும். பிரின்ஸ் சார்லஸ் இன்னொரு மலையாகும். டிரான்ஸ் அண்டார்க்டிக் மலைத் தொடர்களுக்கு எதிரேயுள்ள முனைகளில் இரண்டு பெரிய வளைகுடாக்கள் உள்ளன அவை ரோஸ் சமுத்திரம் மற்றும் வெட்டல் சமுத்திரமாகும்.

தாவர மற்றும் விலங்குச் செல்வம்

முதலில் குறிப்பிடப்பட்டுள்ளது போல இக்கண்டம் பனியால் மூடப்பட்டுள்ளது. தட்ப வெப்பம் மிகவும் குளிர்ச்சி மற்றும் வாழ்க்கைக்கு அனுகூல மற்றது. இங்கு உயிரிகள் வாழ்வது கடினம். கற்பாசி, பாசி இங்கு காணப்படும் முக்கிய தாவரங்களாகும். அது திறந்த பகுதிகளிலுள்ள பாறைகளின் மீது காணப்படுகிறது.

இத்தகைய கடுமையான தட்பவெப்ப நிலையை சமாளிக்கக் கூடிய சில பிராணிகள் மட்டுமே இங்கு வாழ்கின்றன. ஆனால் நீர்ப்பகுதிகளைச் சுற்றிலும் உள்ள பிரதேசங்களில் பலவகையான விலங்குகளைக் காணலாம். (எ-டு) பெங்குவின், திமிங்கலம், சீல், கிரில் மீன் மற்றும் பலவகைப் பறவைகள். விந்தையான வடிவத்தை பெற்றுள்ள கிரில் என்னும் மீன்கள் பலவற்றை இங்கு காணலாம். அவை குழுக்களாக நீந்தி வாழ்கின்றன. இத்தகைய சிறிய உயிரிகள், பெரிய விலங்குகள் மற்றும் மீன்களுக்கு முக்கிய உணவாகின்றன.

NOT TO BE REPUBLISHED @KTBS

கடலோரங்களில் பல பெங்குவின்கள் வாழ்கின்றன. அவை பறக்க இயலாத பறவைகள் ஆகும். எம்பரர் மற்றும் சின் ஸ்ட்ராப் இங்குள்ள பென்குவின் வகைகளாகும். பனியால் சூழப்பட்டுள்ள இக்கண்டத்திற்கு வருகைபுரியும் கப்பல்களுக்கு வரவேற்பு அளிப்பன பறவைகள் ஆகும் அவற்றிலும் முக்கியமானவை பெங்குவின்களாகும். இக்கண்டத்தின் அருகே உள்ள தீவுகள் மற்றும் கடற்கரைகளில் சீல்களின் சந்ததிகள் அதிகம். ஆறுவகை சீல்கள் உள்ளன. தொடர் வேட்டைகளின் காரணமாக சீல் அழிந்து போகும் நிலையில் உள்ளன.

பெங்குவின்

சீல்கள்

NOT TO BE REPUBLISHED

* பெங்குவின்கள் இனப்பெருக்கத்திற்காக பாறை இடுக்குகளில் அமைத்துக் கொள்ளும் கூண்டுகளை ரூகரி என்பர்

* தென்துவருவத்திற்கு அருகே இருக்கும் இக்கண்டத்தின் ‘வோஸ்டாக்’ உலகத்திலேயே மிகக் குறைந்த வெப்ப அளவை பதிவு செய்யும் இடமாகும். (-89^{0} செல்சியஸ்).

அண்டார்க்டிக் பயணம்-அண்டார்க்டிக் ஒப்பந்தம்

அண்டார்க்டிக் பயணம் பதினெட்டாம் நூற்றாண்டின் கடைசி காலத்தில் இருந்தே அண்டார்க்டிக் கண்டத்தை பற்றிய ஆராய்ச்சி தொடர்ந்து நடத்தப்பட்டு வருகிறது. பல மாலுமிகள் துணிச்சலுடன் இக்கண்டத்திற்கு பயணம் செய்துள்ளனர். அவர்களில் பிரிட்டனின் ஜேம்ஸ் கிலார்க் ரோஸ் பொ.ச. 1841

இல் (இவருடைய பெயரைக் கொண்டு அழைக்கப்படும்) இக்கண்டத்தின் ரோஸ் கடலைக் கண்டுபிடித்தார். இங்கிலாந்தின் ராபர்ட் எப்-ஸ்காட் இக்கடலை கடந்து சாதனை புரிந்தார். அறிவியலாளர்கள் கோடையின் இறுதியில்கடல் வழியாக இக்கண்டத்திற்குள் நுழைந்தனர். பிறகு குளிர்கால முகாம்குள்குக வசதிகள் செய்து கொண்டார்கள்.

ஸ்காட்

அமன்ட்சன்

@KTBS NOT TO BE REPUBLISHED

அண்டார்க்டிக் கண்டத்தின் விரிவான கண்டுபிடிப்பு 20ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் நடைபெற்றது. பொ.ச. 1909இல் இங்கிலாந்தின் ஷாகல்பன் தென் துருவத்தை கண்டுபிடித்தார். நார்வேயின் ரோல்ட், அமன்ட்சன் பொ.ச. 1911ல் தென் துருவத்தை சென்றடைந்தார். திரும்பி வரும்போது பொ.ச. 1912 இல் காலமானார். அவருடைய நாட்குறிப்பேட்டில் கிடைத்த விவரங்கள் மற்ற ஆராய்ச்சிகளுக்கு பயன்படுத்தப்பட்டன. அமெரிக்காவின் கடற்படையினர் அட்மிரல் ரிச்சர்ட் பையர்ட் இக்கண்டத்தை ஆய்வு செய்வதற்கு விமானம் மூலம் (பொ.ச. 1929) சென்றடைந்தார். பிறகு மற்ற நாடுகளும் இக்கண்டத்தைப் பற்றிஆராய்ச்சி செய்யத் தொடங்கின.

அண்டார்க்டிக் ஒப்பந்தம் : இந்த ஒப்பந்தத்தின்படி இக்கண்டம் விஞ்ஞான ஆராய்ச்சிக்காக மட்டுமே ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளது. எனவே இக்கண்டம் ''விஞ்ஞானக் கண்டம்'' என்று அழைக்கப்படுகிறது. பன்னிரண்டு நாடுகளின் பிரதிநிதிகள் வாஷிங்டன் டிசி (யு.எஸ்.ஏ)யில் சபை கூடி 1 டிசம்பர் 1959 ல் அண்டார்டிக் ஒப்பந்தத்திற்கு கையொப்பம் இட்டனர். 23 ஜூன் 1961 அன்று அமல்படுத்தப்பட்டது. இந்த ஒப்பந்தம் 60^{0} தென் அட்சரேகை பிரதேசத்திற்கு பொருந்தும். உறுப்பு நாடுகள்: அர்ஜென்டைனா, ஆஸ்திரேலியா, பெல்ஜியம், சிலி, பிரான்ஸ், ஜப்பான், நியூசிலாண்ட், நார்வே, தென் ஆப்பிரிக்கா, ரஷ்யா, இங்கிலாந்த் மற்றும் அமெரிக்கா ஐக்கிய நாடுகள் ஆகியவை உறுப்பு நாடுகள் ஆகும்.

@KTBS NOT TO BE REPUBLISHED



நவீன ஆய்வு கூடங்கள்

ஒப்பந்த்தின் முக்கிய குறிக்கோள்கள் : அண்டார்க்டிகாவை அமைதி நோக்கங்களுக்காக மட்டுமே பயன்படுத்தலாம் மற்றும் அங்கு இராணுவ நடவடிக்கைகளுக்கு அனுமதி இல்லை. அங்கு அணு பரிசோதனைக்கு அனுமதியில்லை. யாரும் நீர் அல்லது நிலத்தை சொந்தமாக்கிக் கொள்ள முடியாது. இங்குள்ள சூழலை மாசுபடுத்த முடியாது. இக்கண்டத்தின் ஆராய்ச்சிகாக வருபவர்கள் எந்த அந்நிய உயிரிகளையும் கொண்டு வர முடியாது. அதுமட்டும் அல்லாமல் திமிங்கிலங்களை வேட்டையாடுவதும் தடை செய்யப்பட்டுள்ளது. விஞ்ஞான ஆராய்ச்சி மற்றும் கண்டுபிடிப்பிற்காக இக்கண்டம் ஒதுக்கப்பட்டுள்ளது. இங்குள்ள

வளமூலங்களைப் பாதுகாக்கப் பட வேண்டும். இக்கண்டம் சமாதான குறிக்கோள்களுக்கு மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளது.



பனிக் கண்டத்தில் உள்ள ஆய்வு மையங்கள்

> அண்டார்க்டிக் கண்டத்தில் உலகத்தின் 90 சதவீத நன்னீர், பனிக்கட்டி வடிவத்தில் உள்ளது.

முக்கிய ஆராய்ச்சிக் கூடங்கள்.

பல காரணங்களினால் அண்டார்க்டிக் கண்டம் பல விஞ்ஞான ஆராய்ச்சிக்கான ஆர்வத்தை பிறப்பிக்கிறது. இக்கண்டத்தின் பிறப்பு மற்றும் நில அமைப்பு, தட்ப வெப்பநிலை, உயிரிகளின் சூழல் அமைப்பு, உயிரி வகைப்பாடு மற்றும் பாதுகாப்பு, சுற்று சூழல் மாசு, மாசுப்பொருட்களின் அகற்றம் மற்றும் நிர்வாகம், எண்ணெய் கசிவுகளினால் ஏற்படும் விபத்துகள் மற்றும் இதன் தொடர்பாக எடுக்கப்பட வேண்டிய கடுமையான நடவடிக்கைகள் ஆகியவை ஆராய்ச்சிக்கு உட்பட்டவை. இதைப் பற்றிய ஆராய்ச்சிகளை மேற்கொள்ள இங்கு உலகின் 30 க்கும் அதிகமான நாடுகள் தங்கள் ஆராய்ச்சி மையங்களை நிறுவியுள்ளன.

இந்தியாவும் தன்னுடைய ஆராய்ச்சிக் கூடத்தை இக்கண்டத்தில் நிறுவியுள்ளது. பொ.ச. 1981 டிசம்பர் 6 ஆம் தேதி எஸ்.ஜெட். காசிம் அவருடைய மேற்பார்வையில், விஞ்ஞானிகளின் குழுப் பயணம் கோவாவில் இருந்து தொடங்கியது. இக்குழுவினரைக் கொண்டு வந்த போலார் சர்க்கிள் கப்பல், பொ.ச. 1982 ஜனவரி 9ம் தேதியன்று அண்டார்க்டிக் கண்டத்தை சென்றடைந்தது. இந்தியக் குழு

NOT TO BE REPUBLISHED
© KTBS

நிறுவிய முதல் ஆராய்ச்சிக் கூடத்தின் பெயர் ‘‘தென் கங்கோத்ரி’’ ஆகும். இது 1983ல் நிறுவப்பட்டது, ஆனால், 1989ல் பெயர் சூட்டப்பட்டது. இப்பொழுது இது மனிதனற்ற சரக்கு அறையாக மட்டுமே பயன்படுகிறது.

‘மைத்ரி’ இந்தியாவின் ஆய்வு கூடம்

‘‘பாரதி’’ இந்தியாவின் மற்றொரு ஆய்வு கூடம்

தென் கங்கோத்ரி : முதல் கப்பல் பயணச் சாதனைக்கு பிறகு இதுவரை இந்திய ஆராய்ச்சி குழுக்கள் சுமார் 50 முறை அண்டார்க்டிக் கண்டத்திற்குச் சென்று வந்துள்ளன. ‘‘மைத்ரி’’ இரண்டாவது ஆராய்ச்சிக் கூடமாகும். இது ஷிர்மாசர் ஒயசிஸ்ஸின் மீது அமைக்கப்பட்டுள்ளது (பொ.ச. 1988-89). இது 26 பேர்கள் ஒன்று கூடி செயல் படுவதற்கு அனுகூலமானது. இங்கிருந்து 255 கிமீ தொலைவில் நன்னீரை பெறுவதற்காக ’’பிரியதர்ஷினி’’ என்னும் ஏரியை இந்தியா அமைத்துள்ளது. மைத்ரி ஆராய்ச்சி கூடத்தில் நிலவியல், புவியியல் மற்றும் மருத்துவம் பற்றி ஆராய்ச்சிகள் நடத்தப்படுகின்றன.

“பாரதி” என்னும் மற்றொரு ஆராய்ச்சி கூடத்தை அண்டார்க்டிகாவில் நிறுவ இந்தியா திட்டமிட்டுள்ளது. இது விஷேசமாக பெருங்கடல்களை ஆராய்ச்சி செய்யும் குறிக்கோளின் அடிப்படையில் நிறுவியுள்ளது. தேவையான ஆய்வும் முடிவு பெற்றுள்ளது.

புதிய சொற்கள்

வெண்மை கண்டம், குளிர்ச்சியான கண்டம், வின்சன் மாசிஃப், எரெபஸ், ஹாவசே, பெங்குவின், திமிங்கலம், சீல், ஆதிலே, சின்ஸ்ட்ராப், கிரில், தென் கங்கோத்ரி, மைத்ரி, பாரதி.

பயிற்சிகள்

I. கோடிட்ட இடங்களில் சரியான விடையை நிரப்புக:

1. அண்டார்டிக்கா கண்டத்தின் அருகே உள்ள நிலப்பகுதி _______ ஆகும்.
2. ஆண்டார்டிக்கா கண்டத்தைக் கண்டுபிடித்தவர் _______ ஆவார்.
3. தென் துருவத்தை கண்டுபிடித்தவர் _______ ஆவார்.
4. இந்தியக் குழு நிறுவிய முதல் ஆராய்ச்சிக் கூடத்தின் பெயர் _______ ஆகும்.

II. இரண்டு அல்லது மூன்று வாக்கியங்களில் விடையளிக்கவும்.

5. அண்டார்க்டிக் கண்டத்தின் இருப்பிடம் மற்றும் பரப்பளவைக் குறிப்பிடவும்.
6. அண்டார்க்டிக் கண்டத்தின் இயற்பியல் அமைப்பை பற்றி குறிப்பிடவும்.
7. அண்டார்க்டிகா கண்டத்தின் முக்கிய மலைகள் மற்றும் சிகரங்களைக் குறிப்பிடவும்.

@KTBS NOT TO BE REPUBLISHED

8. அண்டார்க்டிகா கண்டத்தின் தாவரங்கள் மற்றும் விலங்குகளைப் பெயரிடவும்.

9. அண்டார்க்டிக்காவில் இந்திய ஆராய்ச்சிக் கூடங்களின் பெயர்களைக் குறிப்பிடவும்.

செயல்பாடுகள்.

- அண்டார்க்டிகா கண்டத்தில் அமைக்க ப்பட்டுள்ள வெவ்வேறு நாடுகளின் ஆராய்ச்சி க் கூடங்களின் படங்களை சேகரித்து அதன் பட்டியலைத் தயாரிக்கவும்.
- அண்டார்க்டிக் கண்டத்தின் வெவ்வேறு தாவரங்கள் மற்றும் விலங்குகளை பட்டியலிடவும். அவற்றின் படங்களைச் சேகரிக்கவும்.

@KTBS NOT TO BE REPUBLISHED

***